அந்ததரமிசிரம் anta-tara-micram, n. <*andha-tara* + *miśra*. A hell; நரகவகை. (சி. போ. பா. 2, 3, பக். 204.)

அந்தந்தலை antan-talai, n. <அந்தம் +. End and beginning; முடிவும் தொடக்கமும். (W.)

அந்தப்பர்வகம் anta-p-parvakam, n. <*antar* + *parvan*. (Anat.) Inner tuberosity; அகக்கணு. (W.)

அந்தப்போதிகை anta-p-pōtikai, n. <*andu* +. Chain fastening the hind-leg of an elephant; யானையின் பின்னங்கால் சங்கிலி. அந்தப்போதிகை யிடைபரிந் தழிய (பெருங். உஞ்சைக். 44, 78).

அந்தம்[1] antam, <*anta*. n. 1. (Gram.) Suffix; விகுதி. (நாநார்த்த.) 2. Certainty; நிச்சயம். (நாநார்த்த.) 3. Destruction; நாசம். (நாநார்த்த.) 4. Limb; அவயவம். (நாநார்த்த.) 5. Nearness; சமீபம். (நாநார்த்த.) 6. Nature; சுபாவம். (நாநார்த்த.)—*adv*. As far as, up to, till; வரைக்கும். சேவப்ப நாயக்கர்முதல் விசயராகவ நாயக்கரந்தம் (தஞ். சரசு. i, 319).

அந்தம்[2] antam, n. cf. *antas*. Secrecy; இரகசியம். அந்தக்கோட்டி (பெருங். உஞ்சைக். 54, 91).

அந்தம்[3] antam, n. Refined camphor; பச்சைக்கர்ப்பூரம். (வை. மூ.)

அந்தம்[4] antam, n. <*andha*. Darkness; இருட்டு. (நாநார்த்த.)

அந்தர்தர்பார் antar-tarpār, n. <*antara* +. Public office notoriously ill-conducted; maladministration; முறைதவறி நடக்கும் இராசரீகம். *Colloq.*

அந்தர்யாகம் antar-yākam, n. <*antar-yāga*. (Śaiva.) See அந்தரியாகபூசை.

அந்தரங்கத்தியானி antaraṅka-t-tiyāṉi, n. <*antaraṅga* +. Tortoise; ஆமை. (வை. மூ.)

அந்தரதர்பார் antara-tarpār, n. See அந்தர்தர்பார்.

அந்தரதுந்துமி antara-tuntumi, n. <*antara* + *dundubhi*. The drum of the celestials; தேவதுந்துபி. ஆர்ப்பன பல்லியமோ வந்தரதுந்துமியுமே (தக்கயாகப். 112).

அந்தரப்பல்லியம் antara-p-palliyam, n. <id. +. See அந்தரதுந்துமி. அந்தரப்பல்லியங் கறங்க (திருமுரு. 119).

அந்தரம் antaram, n. <*antara*. 1. Outside, exterior; புறம்பு. (நாநார்த்த.) 2. Limit, boundary; எல்லை. (நாநார்த்த.) 3. Neighbourhood; அயலானது. (நாநார்த்த.) 4. Distinction; விசேஷம். (நாநார்த்த.) 5. See அந்தராத்மா. (நாநார்த்த.) 6. Hiding, concealment; மறைவு. (நாநார்த்த.) 7. Hole; துளை. (நாநார்த்த.) 8. Pit; குழி. (நாநார்த்த.) 9. Cloth; ஆடை. (நாநார்த்த.) 10. Passage next to the entrance of a house; இடைகழி. (சம். அக. Ms.) 11. See அந்தரவாண்டு. (W.) 12. Interval; அவகாசம். (நாநார்த்த.) 13. Occasion, time; அவசரம். (நாநார்த்த.) 14. Impediment; இடையூறு. அந்தரம் புகுந்த திண்டென (கம்பரா. நிந்தனை. 4). 15. Cloud; மேகம். (பொதி. நி.) 16. Standard measure, normal form; அளவு. (பொதி. நி.)

அந்தரமத்திமபுத்தி antara-mattima-putti, n. <id. +. (Astron.) Difference between the mean and the true daily motions of planets; கிரகங்களின் நித்தியகதியில் உண்மைக்கும் மத்திமத்துக்குமுள்ள வேறுபாடு.

அந்தரவனசம் antara-vaṉacam, *n.* <id. +. A kind of moss; கொடிப்பாசிவகை. (பச். மூ.)

அந்தரவனம் antara-vaṉam, *n.* <id.+. Uninhabited desert; மக்களில்லாக் காடு. (W.)

அந்தரவாண்டு antara-v-āṇṭu, *n.* <id.+. The period of time between any two given dates; குறித்த நாளெல்லைகளுக்கு இடைப்பட்ட காலம். (W.)

அந்தரவினியோகம் antara-viṉiyōkam, *n.* A tax; வரிவகை. (S. I. I. i, 136.)

அந்தரவீச்சுக்காரன் antaravīccu-k-kāraṉ, *n.* <அந்தரவீச்சு+. Fraudulent man, cheat; மோசக்காரன். (W.)

அந்தரவுலகம் antara-v-ulakam, *n.* <*antara*+. Svarga; சுவர்க்கம். அந்தரவுலகத் தமரர்கோமான் (பெருங். உஞ்சைக். 37, 96).

அந்தராயப்பாட்டம் antarāya-p-pāṭṭam, *n.* <*antara*+*āya*+. Certain taxes collected in cash; பணமாகத் தண்டும் வரிவகை. (I. M. P. Cg. 1070.)

அந்தரான்மா antarāṉmā, *n.* <*antarātmā* nom. sing. of *antarātman*. 1. God, as immanent; கடவுள். (விவேக. சூடா. 152.) 2. (Śaiva.) Soul when it is associated with the four *vākku;* நான்கு வாக்குக்களோடும் கூடிச் சஞ்சரிக்கும் உயிர். (சி. போ. பா. 6, 2, பக். 317.)

அந்தரிப்பு antarippu, *n.* <அந்தரி-. Helplessness; கதியின்மை. (W.)

அந்தரியாகபூசை antar-iyāka-pūcai, *n.* <*antas*+*yāga*+. (Śaiva) Mental worship; மானசபூசை. அறைந்தவை மூர்த்திசேர்க்கி லந்தரியாகபூசை (ஞானபூசா. 14).

அந்தரிலம்பம் antar-ilampam, *n.* <id. +*lamba*. Acute-angled triangle; கூர்க் கோணங்கள் கொண்ட முக்கோணம். (W.)

அந்தரிலயம் antar-ilayam, *n.* <id.+ *laya*. (Phil.) The transcendent fifth state of the soul; துரியாதீதம். (சிந்தா. நி. 165.)

அந்தரீபம் antarīpam, *n.* <*antarīpa*. Island; தீவு. (சிந்தா. நி. 162.)

அந்தரீயம் antarīyam, *n.* <*antarīya*. Waist cloth, dist. fr. *uttarīyam;* அரையிற் கட்டும் வேஷ்டி. *Brāh.*

அந்தரேணம் antarēṇam, *n.*<*antarēṇa*. Intermediate space; நடுவிடம். (சிந்தா. நி. 164.)

அந்தரை antarai, *n.* A title of Paravas; பரவர் பட்டப்பெயர். (T. A. S. vi, 179.)

அந்தளம் antaḷam, *n.* <*āndōla*. [T. *antalamu*.] Palanquin; பல்லக்கு. (சிவந்தெழுந்த பல்லவராயனுலா Ms.)

அந்தா antā, *adv.* There; அதோ. *Loc.*

அந்தாக antāka, *n.* <*antu*. An expression meaning 'Let it be so'; அப்படியாதக என்னும் பொருளில் வருஞ் சொல். அந்தாக வென்று வந்தையனும் (கம்பரா. நிகும்பலை. 100).

அந்தாதி antāti, *n.* <*anta*+*ādi*. 1. Beginning and end; முதலும் முடிவும். 2. The limbs from head to foot; தலைமுதல் பாதம்வரை யுள்ள உறுப்பு. உருக்கோதை மேனிக்கந்தாதியைத் தீட்டில் (குலோத். கோ. 131).

அந்தாதியாக antāti-y-āka, *adv.* <அந்தாதி+. Without intermission; இடைவிடாமல். அநாதிகாலம் அந்தாதியாக ஸம்ஸரித்துப்போந்த வடியேனுக்கு (ரஹஸ்ய. 1329).

அந்தாதியுவமை antāti-y-uvamai, *n.* <id.+. (Rhet.) A figure of speech in which the last word of a line is repeated at the beginning of the next line and made the *uvamāṉam;* அந்தத்துச்சொல்லையே மடக்கி ஆதியாகக்கொண்டு உவமைபெறக் கூறும் அணி. (மாறனலங். 101, உரை.)

அந்தாளிக்குறிஞ்சி antāḷi-k-kuṟiñci, *n.* <அந்தாளி+. (Mus.) An ancient melody-type; குறிஞ்சியாழ்த்திறவகை. (தேவா.)

அந்தான் antāṉ, *n.* A small board nailed over a leak in a ship or boat to keep water out; கப்பலிலுண்டாகுஞ் சிறுதுளைவழியே தண்ணீர் உட்புகாதபடி அடைக்கும் பலகை. (R.)

அந்தாஜ்பட்டி antāj-paṭṭi, *n.*<U. *andāz* +. Estimate of the value of a standing crop; அறுவடைக்குமுன் இடும் பயிரின் விலைமதிப்பு. (R. T.)

அந்தி[1]-த்தல் anti-, *11 v. intr.* <*anta*. To fit in; பொருந்துதல். (அக. நி.)

அந்தி[2] anti, *part.* <அந்தில். An expletive; ஓர் அசைச்சொல். (பொதி. நி.)

அந்திக்காப்பு anti-k-kāppu, *n.*<அந்தி+. Evening service performed in a temple; கடவுட்கு மாலைக்காலத்துச் செய்யுஞ் சடங்கு. (மதுரைக். பக். 389, கீழ்க்குறிப்பு.)

அந்திகாசிரயம் antikācirayam, *n.* <*antika*+*ā-śraya*. Plants and other immoveable objects; தாவரம். (சிந்தா. நி. 162.)

அந்திகூப்பு-தல் anti-kūppu-, *v. intr.* <அந்தி+. To perform *cantiyā-vantaṉam;* சந்தியாவந்தனஞ் செய்தல். *மந்திரத் தந்திகூப்பி* (பெருங். உஞ்சைக். 55, 8).

அந்திகை[1] antikai, *n.* <*andhikā.* (நாநார்த்த.) 1. Deceit, cunning; கபடம். 2. Night; இரவு. 3. Mind; சித்தம்.

அந்திகை[2] antikai, *n.* <*antikā.* (நாநார்த்த.) 1. Indian chickweed; பம்பந்திராய். 2. Oven; அடுப்பு.

அந்திமந்தி anti-manti, *n.* Redupl. of *அந்தி.* Evening twilight; மாலை மங்கற்பொழுது. *அந்திமந்தி நேரத்திலே வெளியே போகாதே. Colloq.*

அந்திமலர்ந்தான் anti-malarntāṉ, *n.* <அந்தி+மலர்-. Four o'clock flower; அந்திமந்தாரை. (பச். மூ.)

அந்தியதீபம் antiya-tīpam, *n.* <*antya* +. (Rhet.) The figure of speech known as *kaṭainilai-viḷakku;* கடைநிலைவிளக்கு என்னும் அணி.

அந்தியன் antiyaṉ, *n.* <*antya.* Person of the lowest caste; கடைக்குலத்தான். *அந்தணரந்திய ரெல்லையிலரின்ற வினைத்துலகும்* (ரஹஸ்ய. 390).

அந்தியுழவு anti-y-uḻavu, *n.* <அந்தி+. Tilling the soil in the evening time during summer; கோடையில் அந்திநேரத்தில் உழுகை. *Nāñ.*

அந்திரட்டை antiraṭṭai, *n.* Corr. of அந்தியேஷ்டி. *Loc.*

அந்திரர் antirar, *n.* <*āndhra.* The Āndhras; ஆந்திரர். *அந்திரர் முதலிய வரசர்* (பெருந்தொ. 783).

அந்திரன் antiraṉ, *n.* <*andhra.* Hunter; வேடன். (சிந்தா. நி. 160.)

அந்திரி antiri, *n.* <*antarī.* (பொதி. நி.) 1. Pārvatī; பார்வதி. 2. Kāḷī; காளி.

அந்தில் antil, *n.* 1. Place; இடம். (அக. நி.) 2. Two; இரண்டு. (பொதி. நி.)

அந்து[1] antu, *n.* <*andu.* Anklet; பாதகிண்கிணி. (நாநார்த்த.)

அந்து[2] antu, *n.* perh. ஐந்தொகை. Total, aggregate; மொத்தங்கூடிய தொகை. *Loc.*

அந்து[3] antu, *n.* <*andhu.* Well; கிணறு. (நாநார்த்த.)

அந்துகம் antukam, *n.* <*anduka.* Chain for an elephant's leg; யானைச்சங்கிலி. (R.)

அந்துவாசம் antuvācam, *n.* cf. *அந்தரவாசம்.* A kind of moss; கோட்டைப்பாசி. (வை. மூ.)

அந்தூல்பல்லக்கு antūl-pallakku, *n.* <*āndōla*+. A kind of palanquin; பல்லக்குவகை. (தக்ஷிண. இந். சரித். 444.)

அந்தேசாலம் antēcālam, *n.* Clearing nut tree; தேற்று. (பச். மூ.)

அந்தேஷ்டி antēṣṭi, *n.* <*anta*+*iṣṭi.* Funeral rites; அந்தியேஷ்டி. (தஞ். சரசு. ii, 91.)

அந்தோ antō, *adv.* There; அதோ. *அந்தோ பார்.*

அந்நாட்குளி-த்தல் annāṭ-kuḷi-, *v. intr.* <அந்நாள்+. To bathe on the fifth day after menses; பூப்புக்குப் பின் ஐந்தாநாள் தலைமுழுகுதல். *Loc.*

அந்நாள் annāḷ, *n.* <ஐந்து+நாள். The fifth day after menses; பெண்டிர் மாதப்பூப்புக்குப்பின் ஐந்தாநாள். *Loc.*

அந்நியாயகாரி anniyāya-kāri, *n.* <*a-nyāya-kārin.* Treacherous person, as sinner; துரோகியான பாவி. *அந்நியாய காரிகளாய்ப் போந்த இவர்கள்* (S. I. I. iv, 140).

அந்நிலை a-n-nilai, *n.* <அ+. That moment; அப்பொழுது. *மற்றையோரு மந்நிலை யயின்றனர்* (பரிபா. 5, 45).

அந்நின்று a-n-niṉṟu, *adv.* <id.+நில்-. From there; அவ்விடத்திணின்றும். *அந்நின்றுவணங்கிப்போய்த் திருவூற லமர்ந்நிறைஞ்சி* (பெரியபு. ஏயர்கோன். 283).

அநநுபாடணம் ananupāṭaṇam, *n.* <*an-anubhāṣaṇa.* (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று (செந். iii, 13.)

அநயம் anayam, *n.* <*a-naya.* (நாநார்த்த.) 1. Evil karma; தீவினை. 2. Danger; ஆபத்து. 3. Anything inauspicious; அசுபம். 4. Gambling; சூது முதலியன.

அநாதை[1] anātai, *n.* <*a-nātha.* Poor, helpless man; திக்கற்றவன். (W.)

அநாதை[2] anātai, *n.* <*a-nāthā.* 1. Poor, helpless woman; திக்கற்றவள். *Colloq.* 2. (Šaiva.) A Šiva-šakti; சிவசத்திபேதம். (சதாசிவ. 22.)

அநித்தம் anittam, *n.* <*a-nityā.* (Šaiva.) A Šiva-šakti; சிவசத்திபேதம். (அக. நி.)

அநிதம் anitam, *n.* <*a-nitya.* That which is transient or unstable; நிலையற்றது. *அநிதவுடற்பூதமாக்கி* (திருமந். 1854).

அநியதபோக்கியம் aniyata-pōkkiyam, *n.* <*a-niyata*+. (Śaiva.) Effect of actions once considered lawful but subsequently considered sinful; முதலில் நல்லதாகக் கருதப்பட்டுப் பின் தகாததெனத் தள்ளப்பட்ட கர்மத்தின் பலன். (சி. சி. 2, 39, ஞானப்.)

அநியாயதண்டம் aniyāya-taṇṭam, *n.* <*a-nyāya*+. 1. Illegal tax; அநியாயவரி. *Pond.* 2. Wasteful expenditure; வீண்செலவு. *Colloq.*

அநிர்த்தேசியம் anirttēciyam, *n.* <*a-nirdēśya*. That which is indescribable; இத்தன்மைத்தென்று கூறொணாதது.

அநிர்வசனீயக்கியாதி anirvacanīya-k-kiyāti, *n.* <*anirvaacanīya*+. Error consisting in the cognition of what is not determinable either as real or unreal; சத்தெனவும் அசத்தெனவும் நிர்ணயிக்கலாகாத வொன்றை உணருந் திரிபுணர்வு.

அநிருத்தன் aniruttaṉ, *n.* <*a-ni-ruddha*. (நாநார்த்த.) 1. One who is irresistible; தடையற்றவன். 2. One who is irrepressible; அடங்காதவன். 3. Spy; ஒற்றன்.

அப்காரி apkāri, *n.* <U. *ābkāri*. (W. G.) 1. Abkari, manufacture or sale of spirituous liquors; சாராய முதலியவை இறக்கி விற்பனை செய்கை. 2. Revenue derived from abkari; ஆப்காரி வருமானம்.

அப்தாள் aptāḷ, *n.* <அப்பத்தாள். Sister; உடன்பிறந்தவள். *Madr.*

அப்பச்சக்காணம் appaccakkāṇam, *n.* <*apratyākhyāna*. (Jaina.) Faults like anger, miserliness, etc.; கோபம் லோபம் முதலிய குற்றங்கள். (மேருமந். 363.)

அப்பச்சி appacci, *n.* <அப்பன். Paternal uncle; சிற்றப்பன். *Loc.*

அப்பட்டம் appaṭṭam, *n.* That which is plain; வெளிப்படையானது. *Loc.*

அப்பணை appaṇai, *n.* <*ājñāpanā*. [K. *appaṇē*.] (J.) 1. Security, bail; பிணை. 2. Prop, support; ஆதாரம்.

அப்பத்தாள் appattāḷ, *n.* cf. அப்பாத்தை. 1. Elder sister; தமக்கை. (J.) 2. Father's mother; தந்தையின் தாய். *Nāñ.*

அப்பப்போ appappō, *adv.* <அவ்வப்போது. From time to time; அவ்வப்பொழுது.

அப்பம் appam, *adv.* Corr. of அப்பொழுது.

அப்பன் appaṉ, *n.* cf. Pkt. *appa*. 1. Benefactor; உபகாரி. (சம். அக. Ms.) 2. Father's elder brother; பெரிய தகப்பன். *Ādidrāviḍa.*

அப்பாகம் appākam, *n.* Climbing staff plant; வாலுளுவை. (பச். மூ.)

அப்பாசி appāci, *n.* The famous minister of the Vijayanagar king Krishnadevarayar; கிருஷ்ணதேவராயரின் பேர்பெற்ற மந்திரி. அப்பாசியுகி . . . இவர்களினும் மெய்ப்பான புத்தி விதரணமும் (தெய்வச். விறலி. 82).

அப்பி appi, *n.* A term of endearment; அருமைகுறித்தற்கு வழங்குஞ் சொல். *Loc.*

அப்பிச்சன் appiccaṉ, *n.* prob. அப்பன் + அச்சன். Father; தகப்பன். *Nāñ.*

அப்பிதம் appitam, *n.* <*abda*. Cloud; மேகம். (சிந்தா. நி. 186.)

அப்பியசூயகன் appiyacūyakaṉ, *n.* <*abhyasūyaka*. Jealous, envious person; பொறாமையுடையோன். (சிந்தா. நி. 181.)

அப்பியந்தரபரிக்கிரகம் appiyantara-parikkirakam, *n.* <*abhyantara*+*pari-graha*. (Jaina.) The fourteen mental defects, such as anger, pride, etc.; மனத்தைப்பற்றி வரும் குரோதம் மானம் முதலிய பதினான்குதோஷங்கள். (மேருமந். 1207, உரை.)

அப்பியமிதம் appiyamitam, *n.* <*abhyamita*. Distress; துன்பம். (சிந்தா. நி. 187.)

அப்பியவகாரம் appiyavakāram, *n.* <*abhyavahāra*. Eating; தின்கை. (சிந்தா. நி. 179.)

அப்பியாகதி appiyākati, *n.* <*abhyāgata*. Familiar guest; அப்பியாகதன். வரப்பட்ட அதிதி அப்பியாகதிகளுக்கு உண்டாகும் பசியைத் தணிப்பதற்கும் (ஜீவப்பிரம்மைக்ய. பக். 554).

அப்பியாசி-த்தல் appiyāci-, 11 *v. tr.* <*abhyāsa*. To practise; பயிலுதல். ஞானமாத்திரம் அப்பியாசித்தவனிடத்திலே (பஞ்சதசப். 93).

அப்பியுதயம் appiyutayam, *n.* <*abhyudaya*. Prosperity, welfare; மங்களகரம்.

அப்பிரகசிந்தூரம் appiraka-cintūram, *n.* <அப்பிரகம்+. Red oxide of talc or mica; அப்பிரகத்தாலான மருந்துவகை. (W.)

அப்பிரகநவநீதம் appiraka-navanītam, *n.* <id.+. Mica made into an ointment; அப்பிரகத்தாற் செய்த களிம்பு. (W.)

அப்பிரகாசம் appirakācam, *n.* <*a-prakāśa*. Matter, as insentient; அசித்து. அவை தாம் . . . அப்பிரகாசமாய் நிற்றலான் (சி. போ. 4, 1).

அப்பிரகிருட்டம் appirakiruṭṭam, *n.* <*ā-pra-kṛṣṭa*. Crow; காக்கை. (சிந்தா. நி. 187.)

அப்பிரசாதை appiracātai, *n.* <*aprajātā*. Barren woman; மலடி. (சிந்தா. நி. 187.)

அப்பிரத்தியாக்கியானம் appirattiyākkiyāṉam, *n.* <*apratyākhyāna*. (Jaina.) See அப்பச்சக்காணம். (மேருமந். 1378, உரை.)

அப்பிரதானி appiratāṉi, *n.* <*a-pradhana*. Insignificant person; சிறியோன். (W.)

அப்பிரதிபை appiratipai, *n.* <*a-pratibhā*. (Log.) A fault in argumentation; தோல்வித் தானத் தொன்று. (செந். iii, 13.)

அப்பிரதிரூபகதை appratirupakatai, *n.* <*a-prati-rūpa-kathā*. See அப்பிரதிபை. (செந். iii, 16.)

அப்பிரபுட்பம் appiraputpam, *n.* <*abhra-puṣpa*. Water; நீர். (சிந்தா. நி. 169.)

அப்பிரபுத்தன் appiraputtaṉ, *n.* <*a-prabuddha*. Person without acute intellect; கூர்த் துணர்வில்லாதவன். (திருக்களிற்றுப். 57, உரை.)

அப்பிரம் appiram, *n.* <*abhra*. (நாநார்த்த.) 1. Svarga; தேவலோகம். 2. Sky; ஆகாயம்.

அப்பிரமாணஐதிகம் appiramāṇa-aitikam, *n.* <*a-pramāṇa*+. (Log.) Unattested tradition; சான்றுந்தோன்றினை உளதாகக் கூறும் உலகவுரை. (சி. சி. அளவை, 1, மறைஞா.)

அப்பிரமாணிக்கன் appiramāṇikkaṉ, *n.* <*a-prāmāṇika*. Liar; பொய்யன். (W.)

அப்பிரமாதங்கம் appiramātaṅkam, *n.* <*abhra-mātaṅga*. Indra's elephant; இந்திரனது யானை. (சிந்தா. நி. 169.)

அப்பிராத்தகாலம் appirātta-kālam, *n.* <*a-prāpta*+. (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று. (செந். iii, 13.)

அப்பிராமாணிக்கம் appirāmāṇikkam, *n.* <*a-prāmāṇika*. Untrustworthiness, unreliability; உறுதியாகக் கொள்ளத்தகாதது. (W.)

அப்பிரு appiru, *n.* cf. *abhraka*. A kind of mineral, turquoise; பேரோசனை. (R.)

அப்பு[1] appu, *n.* <*ap*. Sea; கடல்.

அப்பு[2] appu, *n.* See அப்புண்டு. *Loc.*

அப்பு[3] appu, *n.* *Veḷḷai-p-pāṣāṇam*, a mineral poison; வெள்ளைப்பாஷாணம். (வை. மூ.)

அப்புக்காத்து appukkāttu, *n.* <E. Advocate, supreme-court pleader; வக்கீல். (J.)

அப்புசம் appucam, *n.* <*ab-ja*. (நாநார்த்த.) 1. Chank; சங்கு. 2. Lotus; தாமரை. 3. Water cadamba; நீர்க்கடம்பு.

அப்புசன் appucaṉ, *n.* <*ab-ja*. (நாநார்த்த.) 1. Moon; சந்திரன். 2. Tanvantiri, the physician of the gods; தன்வந்திரி.

அப்புட்டுச்சரக்கு appuṭṭu-c-carakku, *n.* prob. அப்பட்டம்+. Best goods; உயர்ந்த பண்டம். (P. N.)

அப்புண்டு appuṇṭu, *n.* Dolt, idiot; முட்டாள். *Tinn.*

அப்புத்திரட்டி appu-t-tiraṭṭi, *n.* perh. அப்பு+. A kind of creeper; கட்டுக்கொடி. (பரி. அக.)

அப்புதம் apputam, *n.* prob. *abja*. A sedge; கோரைவகை. (பச். மூ.)

அப்புப்போடு-தல் appu-p-pōṭu-, *v. tr.* prob. T. *appu*+. To deceive by evading payment; வாங்கின கடனைத் தீர்க்காது ஏமாற்றுதல். அவன் பதினைந்துரூபாய் அப்புப்போட்டுக்கொண்டான். *Loc.*

அப்புமேழி appu-mēḻi, *n.* perh. அப்பு+. A kind of plough; வயல் உழுதற்குரிய மேழிவகை. *Loc.*

அப்புராத்தூணி appurāttūṇi, *n.* <அம்புருத்தூணி. *Carakāṇṭa-pāṣāṇam*, a mineral poison; சரகாண்டபாஷாணம். (வை. மூ.)

அப்புறக்கடல் a-p-puṟa-k-kaṭal, *n.* <அ+புறம்+. The mythical outermost sea; பெரும் புறக்கடல். அப்புறக்கடலுஞ் சுவையற்றன (கம்பரா. சேது. 60).

அப்பூச்சி appūcci, *n.* [T. *appacci*.] The game of hiding and suddenly appearing; bo-peep; ஒளித்துநின்று திடீரென்று தோன்றி மகிழ்விக்கும் விளையாட்டு. *Loc.*

அப்பெண்டு a-p-peṇṭu, *n.* <அ+. Woman; பெண்டு. (தொல். சொல். 163, உரை.)

அப்போ appō, *adv.* Corr. of அப்போது. *Colloq.*

அப்வாப் apvāp, *n.* <U. *abwab*. Miscellaneous heads of taxation, in addition to the regular land assessment; நிலத்தீர்வையுடன் ஏற்படுஞ் சில்லறைத் தீர்வை. (R. T.)

அப்ஜூத் apjut, *n.* <Persn. *afzūd*. Excess, increase; மிகுதி. (P. T. L.)

அபக்குரோசம் apakkurōcam, *n.* <*apākrōśa*. Treating with contempt; இகழ்கை. (சிந்தா. நி. 181.)

அபகம் apakam, *n.* <*apa-ga*. Death; மரணம். (சிந்தா. நி. 170.)

அபகாதம் apakātam, n. <*apa-ghāta*. Killing; கொல்லுகை. (சிந்தா. நி. 169.)

அபகுண்டனம் apakuṇṭaṉam, n. prob. *ava-kuṇṭhana*. Circling, revolving; சுற்றுகை. (சிந்தா. நி. 172.)

அபங்கன் apaṅkaṉ, n. <*a-bhaṅga*. God, as undivided whole; [கண்டிக்கப்படாதவன்] கடவுள். (ஞானா. 48.)

அபங்குரன் apaṅkuraṉ, n. <*a-bhaṅgura*. One who is firm or unshakable; திண்ணியன். *அபங்குர செங்கோ செங்கீரை* (குலோத். பிள்ளைத். 22).

அபச்சாயை apaccāyai, n. <*apacchāyā*. (W.) 1. Shadowless being, as a deity or celestial being; நிழலற்றது. 2. A sign of death; ஓர் மரணக்குறி. 3. Deduction from the length of one's shadow, varying with the time of the year, made in calculating the hour of the day; நிழலை அளந்து நாழிகை கணிப்பதில் மாதத்திற்குரிய தள்ளுபடியளவு.

அபசங்கம் apacaṅkam, n. <*apa-jaṅgha*. Leg; கால். (சிந்தா. நி. 174.)

அபசயம் apacayam, n. <*apa-jaya*. (நாநார்த்த.) 1. Taking by force; பறிக்கை. 2. Defeat; தோல்வி.

அபசவ்வியம் apacavviyam, n. <*apa-savya*. (நாநார்த்த.) 1. Right side; வலப்புறம். 2. Unfavourableness; பிரதிகூலம்.

அபசற்பன் apacaṟpaṉ, n. <*apa-sarpa*. (நாநார்த்த.) 1. Messenger; தூதன். 2. Spy; ஒற்றன்.

அபசாரசக்தி apacāra-cakti, n. <*apa-cāra*+. Centrifugal force; மையநூக்கம். *Mod.*

அபசித்தாந்தம் apacittāntam, n. <*apa-siddhānta*. (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று. (செந். iii, 13.)

அபத்தியதோஷம் apattiya-tōṣam, n. <*a-pathya*+. Relapse caused by violation of dietary rules; நோயுற்ற காலத்தில் உட்கொண்ட தகுதியற்ற உணவால் திரும்பிய நோய். (சீவரட். 30.)

அபத்தியம் apattiyam, n. <*apatya*. 1. Child; பிள்ளை. (சிந்தா. நி. 168.) 2. Human being; மக்கட்பொது. (நாநார்த்த.)

அபதேசம் apatēcam, n. <*apa-dēśa*. (நாநார்த்த.) 1. Fame; பிரசித்தி. 2. Cause, motive; நிமித்தம். 3. Pretext; வியாஜம். 4. Mark, butt; குறி. 5. Place; இடம்.

அபந்தலம் apantalam, n. cf. அமந்தலம். False peacock's foot tree; மயிலடிக்குருந்து. (பச். மூ.)

அபநிரியாணம் apaniriyāṇam, n. <*apa-niryāṇa*. March of troops; படையெழுச்சி. (சிந்தா. நி. 182.)

அபபாத்திரிதன் apapāttiritaṉ, n. <*apa-pātrita*. One who is excommunicated; சாதிப் பிரஷ்டன். *Cm.*

அபமம் apamam, n. <*apama*. (Astron.) Declination; வானமத்தியரேகைக்குங் குறிப்பிட்ட நட்சத்திரம் முதலியவற்றிற்கும் இடைப்பட்ட வளைவி னளவு. (W.)

அபமானம் apamāṉam, n. <*ava-māna*. Dishonour; disgrace; அபகீர்த்தி. (சிந்தா. நி. 173.)

அபயகரம் apaya-karam, n. <*a-bhaya*+*kara*. See அபயாத்தம். *ஆசை யளிக்கு மபயகரம் பாரேனோ* (பட்டினத். 209).

அபயம்[1] apayam, n. <*a-bhaya*. Cuscus grass; இலாமிச்சம். (நாநார்த்த.)

அபயம்[2] apayam, n. Pepper; மிளகு. (வை. மூ.)

அபயன் apayaṉ, n. <*a-bhaya*. Fearless man; பயமில்லாதவன். (நாநார்த்த.)

அபயாத்தம் apayāttam, n. <id.+*hasta*. Hand raised in token of dispelling fear and assuring protection; பயந்தீர வமைக்குங் கை. (சிந்தா. நி. 174.)

அபயாஸ்தம் apayāstam, n. See அபயாத்தம். (W.)

அபர்யாப்தகம் aparyāptakam, n. <*a-paryāptaka*. Insufficiency; போதாமை. (மேரு மந். 713, உரை.)

அபரசன் aparacaṉ, n. <*apara-ja*. Younger brother; பின்னோன். (சிந்தா. நி. 166.)

அபரதரன் aparataraṉ, n. Saltpetre; வெடியுப்பு. (வை. மூ.)

அபரதி aparati, n. <*ava-rati*. Delay; தாமதிக்கை. (சிந்தா. நி. 167.)

அபரநாதம் apara-nātam, n. <*a-para*+. A *civatattuvam*; சிவதத்துவங்களு ளொன்று. (W.)

அபரபோகம் apara-pōkam, n. <id.+. Pleasures enjoyed in this world and the next; இம்மை மறுமைகளில் அனுபவிக்கத்தக்க போகங் கள். (சி. சி. 8, 18.)

அபரம் aparam, *n.* <*a-para.* The hind part of an elephant; யானையின் பின்புறம். (நாநார்த்த.)

அபரராத்திரி apara-rāttiri, *n.* <id.+. The last watch of the night, small hours of the morning; நள்ளிரவுக்கடுத்த சாமம். *Loc.*

அபரவாக்கியம் apara-vākkiyam, *n.* <id. +. (Astron.) A resulting equation or correction following a calculation; கணித்தில் பிழைதீர்க்க ஏற்பட்ட எண்மானவகை. (W.)

அபரவாகீசுவரர் apara-vākīcuvarar, *n.* <id +. A form of Śiva; சிவபேதங்களுள் ஒன்று.

அபரவாகீசுவரி apara-vākīcuvari, *n.* <id.+. A form of divine energy; விந்துசத்தி. (சி. போ. பா. 2, 4, பக். 222.)

அபரவிந்து apara-vintu, *n.* <id.+. See அபரவாகீசுவரி. (சி. போ. 2, 4, பக். 223.)

அபராசி aparāci, *n.* <*aparājitā. Viṭṭuṇu-k-kirānti*, a medicinal plant; விட்டுணுக்கிராந்தி. (நாமதீப.)

அபராசிதன் aparācitaṉ, *n.* <*a-parājita.* (நாநார்த்த.) 1. Śiva; சிவன். 2. Viṣṇu; திருமால்.

அபராசிதை aparācitai, *n.* <*a-parājitā.* (நாநார்த்த.) 1. Durgā; துர்க்கை. 2. A medicinal plant. See அபராசி.

அபரிக்கிரகம் aparikkirakam, *n.* <*a-pari-graha.* 1. The vow of not receiving anything from another; பிறர்பால் ஏற்காமையாகிய விரதம். 2. (Jaina.) Renouncing property; உரிமைச் சொத்துக்களை நீக்கிவிடுகை. (மேருமந். பாயி. xv.)

அபரிசரம் aparicaram, *n.* <*a-parisara.* Distance; தூரம். (சிந்தா. நி. 173.)

அபருஷவாக்கியம் aparuṣa-vākkiyam, *n.* <*a-paruṣa*+. Agreeable speech; கொடுமையற்ற சொல். (தக்கயாகப். 664, உரை.)

அபலம்[1] apalam, *n.* <*a-phala.* 1. Tree which is past fruit-bearing; காய்ப்புமாறிய மரம். (R. T.) 2. Loss; நஷ்டம். *Pond.*

அபலம்[2] apalam, *n.* Whale; திமிங்கிலம். (வை. மூ.)

அபலம்[3] apalam, *n.* <*apala.* Ploughshare; கொழு. (நாநார்த்த.)

அபலாடிகை apalāṭikai, *n.* <*apalāṣikā.* Thirst; தாகம். (சிந்தா. நி. 178.)

அபலி apali, *n.* White mustard; வெண்கடுகு. (பச். மூ.)

அபவர்க்கம் apavarkkam, *n.* <*apa-varga.* Bounty, gift; தியாகம். (நாநார்த்த.)

அபவிருத்தம் apavaruttam, *n.* <*apa-vṛtta.* Destroying; அழிக்கை. (சிந்தா. நி. 172.)

அபவாதசூத்திரம் apavāta-cūttiram, *n.* <*apa-vāda*+. A sūtra whose import is opposed to that of another sūtra; ஒரு சூத்திரத்தால் விதிக்கப்பட்டதற்கு முற்றும் மாறுபாடாக விதிக்கும் வேறு சூத்திரம்.

அபவிருத்தி apa-virutti, *n.* <*apa-vṛddhi.* Decrease; குறைவு. (சிந்தா. நி. 172.)

அபஸ்மாரகரோகம் apasmāraka-rōkam, *n.* <*apasmāra-ka*+. Epilepsy; காக்கை வலிப்பு. (சு. வை. ர. 611.)

அபஸ்மாராசுரன் apasmārāsuraṉ, *n.* <*apasmāra*+. An Asura over whose body Naṭarāja dances; முயலகன். (தென். இந். க்ஷேத். பக். 252.)

அபாகசாகம் apākacākam, *n.* <*apāka-śāka.* Ginger; இஞ்சி. (பரி. அக.)

அபாங்கம் apāṅkam, *n.* <*apāṅga.* Sectarian mark on the forehead; நெற்றிக்குறி. (நாநார்த்த.)

அபாசிரயம் apācirayam, *n.* <*apāśraya.* Pandal, pavilion; பந்தர். (சிந்தா. நி. 183.)

அபாசீனம் apācīṉam, *n.* <*apācīna.* South; தெற்கு. (சிந்தா. நி. 183.)

அபாடம் apāṭam, *n.* <*a-pāṭha.* Mistake; தவறு. உலகபாட மனுவெனு வுலாவுவன (தக்கயாகப். 27).

அபாதானம் apātāṉam, *n.* <*apā-dāna.* (Gram.) The sense of the ablative case; ஐந்தாம் வேற்றுமைப்பொருள். (தொல். சொல். குறிப்பு, பக். 115.)

அபாம்பதி apāmpati, *n.* <*apām-pati.* Sea; கடல். (சேதுபு. சேதுயாத். 13.)

அபாயகரம் apāya-karam, *n.* <*apāya* +*kara.* Dangerous condition; ஆபத்துநிலை. *Colloq.*

அபாயதந்திரம் apāya-tantiram, *n.* <id.+. Artifice, trick; ஏமாற்றுந் தந்திரம். (R.)

அபார்த்தகம் apārttakam, *n.* <*apārtha-ka.* (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று. (செந். iii, 13.)

அபாரணை apāraṇai, *n.* <*a-pāraṇā.* Fasting; உண்ணாமை. (சிந்தா. நி. 185.)

அபாவம் apāvam, n. <a-bhāva. Ruin, destruction; நாசம். (நாநார்த்த.)

அபானம் apāṉam, n. cf. அபானியம். Chebulic myrobalan; கடுக்காய்மரம். (பச். மூ.)

அபானியம் apāṉiyam, n. perh. a-pānīya. Chebulic myrobalan; கடுக்காய். (சித். அக.)

அபிக்கியை apikkiyai, n. <abhi-khyā. (நாநார்த்த.) 1. Name; பேர். 2. Fame; கீர்த்தி. 3. Beauty; அழகு.

அபிகதம் apikatam, n. <abhi-gata. Nearing; சமீபிக்கை. (சிந்தா. நி. 179.)

அபிகாதசுரம் apikāta-curam, n. <abhi-ghāta+. Fever due to wounds, over-exertion, etc.; இரணநோவு அதிக உழைப்பு முதலிய காரணங்களால் உண்டாகுஞ் சுரம். (ஜீவரட்.)

அபிகாதி apikāti, n. <abhi-ghātin. Enemy, foe; சத்துரு. (சிந்தா. நி. 173.)

அபிகாயம் apikāyam, n. 1. Atrophy; சூம்புகை. *Pond.* 2. A pulmonary complaint; காசநோய்வகை. (W.)

அபிகாரம் apikāram, n. <abhihāra. (W.) 1. Robbery; கொள்ளை. 2. Attack; தாக்குகை. 3. Rising in arms; படையெழுச்சி.

அபிகிதத்துவம் apikitattuvam, n. <abhi-hita-tva. Authority; மேற்கோள். (சிந்தா. நி. 173.)

அபிசந்தாபம் apicantāpam, n. <abhi-santāpa. Fight; போர். (சிந்தா. நி. 179.)

அபிசரன் apicaraṉ, n. <abhi-cara. Friend; தோழன். (சிந்தா. நி. 167.)

அபிசவம் apicavam, n. <abhiṣava. Gruel, conjee; கஞ்சி. (சிந்தா. நி. 179.)

அபிசனம் apicaṉam, n. <abhi-jana. (நாநார்த்த.) 1. Birth-place; ஜனனபூமி. 2. Family; குலம். 3. Insignia of a family or dynasty; குலவிருது. 4. Attendants, retinue; பரிவாரம். 5. Fame; கீர்த்தி.

அபிசாதன் apicātaṉ, n. <abhi-jāta. 1. Worthy person; தக்கோன். 2. Wise man; அறிஞன். (நாநார்த்த.)

அபிசாபனம் apicāpaṉam, n. <abhi-śāpana. Cursing; சபிக்கை. (சிந்தா. நி. 171.)

அபிசாரசுரம் apicāra-curam, n. <abhi-cāra+. Fever supposed to be caused by death-invoking incantations at a sacrifice; மாரணமந்திரங்களால் ஓமஞ்செய்து உண்டாக்குவதாகக் கருதப்படும் ஒருவகைச்சுரம். (ஜீவரட்.)

அபிசாரி apicāri, n. <abhicārī. (W.) 1. Unchaste woman; வியபிசாரி. 2. Courtezan; வேசி.

அபிசாரிகை apicārikai, n. <abhicāri-kā. See அபிசாரி. (W.)

அபிடங்கம் apiṭaṅkam, n. <abhiṣaṅga. Curse; சாபம். (சிந்தா. நி. 181.)

அபிடேகி-த்தல் apiṭēki-, 11 v. tr. <abhi-ṣēka. To bathe; to anoint; அபிஷேகஞ்செய்தல். ஆசிலாப் பொன்னினீரா லமலனுக் கபிடேகித்தோர் (திருவாட்போக்கிப்பு. மாணிக்கமலைச்சிறப். 36).

அபித்தியை apittiyai, n. <abhi-dhyā. Wish, desire; இச்சை. (சிந்தா. நி. 181.)

அபிதம் apitam, n. prob. அபிதா. Protection; இரட்சிக்கை. (சிந்தா. நி. 177.)

அபிதா apitā, n. <avidhā. Exclamation used in calling for help; ஆபத்தில் முறையிட்டுக் கூறுஞ் சொல். கிரியெட்டும் அபிதா வபிதாவென (திருப்பு. 1140).

அபிதானம் apitāṉam, n. <apidhāna. Covering; மறைவு. (நாநார்த்த.)

அபிதேயம் apitēyam, n. <abhi-dhēya. That which is denoted by *ceñ-col;* செஞ்சொற்கு விடயமானது. (தருக்கசங். 249.)

அபிநயக்கை apinaya-k-kai, n. <abhi-naya+. Gesture by hand; கையாற் செய்யும் அபிநயம்.

அபிநயசிரம் apinaya-ciram, n. <id.+. Pose of the head; தலையாற் செய்யும் அபிநயம்.

அபிநயவிடுகதை apinaya-viṭu-katai, n. <id.+. Acted charade; ஒரு சொல்லின் பல பிரிவுகளை அபிநயத்தாற் காட்டும் பிதிர். *Pond.*

அபிநயன் apinayaṉ, n. <abhi-naya. Dancer; கூத்தன். (சிந்தா. நி. 166.)

அபிநாசசன்னி apināca-caṉṉi, n. <abhi-nāśa+. A kind of *caṉṉi;* சன்னிவகை. (R.)

அபிநிவேசம் apinivēcam, n. <abhi-ni-vēśa. Desire; ஆசை. (விசாரசங். 335.)

அபிபவம் apipavam, n. <abhi-bhava. Disgrace; அவமானம்.

அபிபவி-த்தல் apipavi-, 11 v. tr. <id. To disgrace; அவமானப்படுத்துதல். (திவ். பெருமாள்தி. 2, 5, வ்யா. பக். 33.)

அபிபூதன் apipūtaṉ, *n.* <*abhi-bhūta.* One who is concealed; மறைக்கப்பட்டவன்.

அபிமதம் apimatam, *n.* <*abhi-mata.* Agreeableness; இணக்கம். (*நாநார்த்த.*)

அபிமந்திரம் apimantiram, *n.* <*abhi-mantra.* Reciting mantras; செபிக்கை. (*சிந்தா. நி.* 182.)

அபிமபுத்தி apimaputti, *n.* prob. *ahir-bhudhnya.* A Rudra; உருத்திரருள் ஒருவர். (*தக்கயாகப்.* 443, *உரை.*)

அபிமன் apimaṉ, *n.* <*Abhimanyu.* Arjuna's son by Subhadrā; அருச்சுனனுக்குச் சுபத்திரையிடம் பிறந்த மகன். (*பெருங். உஞ்சைக்.* 56, 58, *குறிப்பு.*)

அபிமானம் apimāṉam, *n.* <*abhi-māna.* (*நாநார்த்த.*) 1. Wisdom; ஞானம். 2. Affection; நேசம். 3. Killing; கொலை.

அபியிதம் apiyitam, *n.* <*abhi-hita.* Saying, speaking; சொல்லுகை. (*சிந்தா. நி.* 182.)

அபியோகபத்திரம் apiyōka-pattiram, *n.* <*abhi-yōga*+. Petition, complaint in writing; பிறரால் செய்யப்பட்ட துன்பத்தைக்கூறி முறையிடும் பத்திரம். (*சுக்கிரநீதி,* 95.)

அபியோகம் apiyōkam, *n.* <*abhi-yōga.* Complaint, representation to the king of the wrongs done to a person; தனக்குப் பிறர்செய்த தீங்கை அரசனிடம் முறையிடுகை. (*சுக்கிரநீதி,* 262.)

அபிரேக்கு apirēkku, *n.* Fish; மீன். (*மதி. களஞ்.* ii, 38.)

அபிலாசம் apilācam, *n.* <*abhi-lāṣa.* Desire, wish, longing; விருப்பம். (*சிந்தா. நி.* 187.)

அபிலாபம் apilāpam, *n.* <*abhi-lāpa.* Talk, speech; பேச்சு. (*சிந்தா. நி.* 169.)

அபிவியஞ்சகம் apiviyañcakam, *n.* <*abhi-vyañjaka.* 1. Revealing, manifesting; வெளிப்படுத்துகை. *அது வைகரிவாக்குக்கு அபிவியஞ் சகஸ்தானம்* (*சி. சி.* 2, 62, *சிவாக்.*). 2. Brightness; பிரகாசம்.

அபின்னாசக்தி apiṉṉā-cakti, *n.* <*a-bhinnā*+. (Śaiva.) Inseparable Energy of Śiva; சிவத்தினின்றும் பிரிவுபடாத சக்தி.

அபின்னியாசம் apiṉṉiyācam, *n.* <*abhi-nyāsa.* A kind of high fever attended with convulsion; சன்னிவகை. (R.)

அபிஷங்கசுரம் apiṣaṅka-curam, *n.* <*abhiṣaṅga*+. Fever due to poison, excessive anger, fear, grief or sexual indulgence; விஷம் கோபம் பயம் துக்கம் காமம் முதலிய காரணங்களால் உண்டாகுஞ் சுரம். (*ஜீவரட்.* 31.)

அபிஷிக்தர் apiṣiktar, *n.* <*abhiṣikta.* Persons belonging to a Non-Brahmin priestly caste who had been anointed as Guru; சைவரில் குருக்கள் வகையார். (*மீனுட். சரித்.* i, 27.)

அபிஷேகக்காணி apiṣēka-k-kāṇi, *n.* <*abhiṣēka*+. A tax; வரிவகை. (S. I. I. vii, 403.)

அபிஷேகக்கூட்டு apiṣēka-k-kūṭṭu, *n.* <id.+. Macerated spices for anointing an idol; திருமஞ்சனமாட்டுதற்குரிய வாசனைக்கலவை. (W.)

அபிஷேகநாமம் apiṣēka-nāmam, *n.* <id.+. Title assumed on entering office, as of a king; அரசன் மடாதிபதி இவர்கள் பட்டம் பெறுங்காலத்துத் தரிக்கும் பெயர்.

அபிஷேகம் apiṣēkam, *n.* <*abhiṣēka.* A head ornament; தலையணிவகை. (S. I. I. iii, 474.)

அபிஷேகமண்டபம் apiṣēka-maṇṭapam, *n.* <id.+. Hall for the ceremonial bath of an idol, in a temple; திருமஞ்சனசாலை. (I. M. P. Cg. 331.)

அபிஷேகஸ்தர் apiṣēkastar, *n.* <id.+. See அபிஷிக்தர். *Loc.*

அபிஷேகி-த்தல் apiṣēki-, *11 v. tr.* <*abhiṣēka.* See அபிடேகி-.

அபீசி apīci, *n.* <*a-vīci.* A hell; நரகவகை. (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 204.)

அபீட்டிதம் apīṭṭitam, *n.* <*abhīṣṭita.* Prayer; தொழுகை. (*சிந்தா. நி.* 180.)

அபுசியன்தேசம் apuciyaṉ-tēcam, *n.* Abyssinia in Africa; ஆபிரிக்கா கண்டத்திலுள்ள ஒரு தேசம். (R.)

அபுருபம் apurūpam, *n.* Corr. of அபூர்வம். Rarity; அருமை. (W.)

அபூர்வி apūrvi, *n.* <*a-pūrvin.* Brahmin pilgrims well-versed in the Vēdas; தலயாத்திரிகரான வேதம்வல்ல பிராமணர். (I. M. P. Tj. 32.)

அபூரி apūri, *n.* See அபூர்வி. *அபூரித் திருமேனிகளுக்குக் கொடுக்க . . . அரிசி இருநாழி* (S. I. I. iv, 129).

அபூருவம் apūruvam, *n.* <*apūrva.* 1. Novelty; நூதனம். (*சிந்தா. நி.* 183.) 2. Rarity; அரியது. *Loc.*

அபேதக்கட்சி apēta-k-kaṭci, *n.* <*a-bhēda* +. Socialism. See அபேதவாதம், 2. (*பாரதி. கட்டுரை*, iv, 163.)

அபேதவாதம் apēta-vātam, *n.* <*a-bhēda-vāda*. 1. The doctrine identifying the individual soul with God; சீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றெனக் கூறுங் கொள்கை. (*சொரூப சாரம், காப்பு, உரை*.) 2. Socialism; உலகத்துச் சொத்தை ஜனங்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தல் தொழிலாளிகள் போட்டி முறையை மாற்றிக் கூடியுழைக்கு முறையைக் கையாளுதல் முதலிய கொள்கைகளை யுடைய அரசியல்வாதம். *Mod.*

அபேஸ்செய்-தல் apēs-cey-, *v. tr.* prob. E. *abase*+. 1. To prostrate; படுக்கவைத்தல். *Loc.* 2. To swallow; விழுங்குதல். 3. To misappropriate; கவர்தல். 4. To steal; திருடுதல். (*மதி. களஞ்.* i, 187.)

அபேஸ்போடு-தல் apēs-pōṭu-, *v. tr.* prob. id.+. To steal; திருடுதல். (*மதி. களஞ்.* i, 77.)

அபேஸாக்கு-தல் apēs-ākku-, *v. tr.* prob. E. *upraise*+. To heave; உயர்த்துதல். (M. Navi. 98.)

அபோக்தா apōktā, *n.* <*a-bhōktṛ*. One who does not eat or enjoy; புசியாதவன்.

அம்[1] am, *n.* Cruelty; கொடுமை. (*சம். அக.* Ms.)

அம்[2] am, *n.* <*ha*. (*நாநார்த்த.*) 1. Lustre of gems; மணியின் ஒளி. 2. Laughter; சிரிப்பு. 3. Happiness; சுகம். 4. Horripilation; புளகம். 5. God; பரப்பிரம்மம். 6. Swan; அன்னம். 7. Invitation; அழைப்பு. 8. Pride; செருக்கு. 9. Battle; போர். 10. Arrow; அம்பு.

அம்[3] am, *n.* <*am*. (*நாநார்த்த.*) 1. Command; ஆணை. 2. Obeisance with joined hands; கும்பிடு. 3. Length; நீர்க்கம். 4. Measure of the musical notes; ஏழிசையாதி யளவு. 5. Crooked sentence; வக்கிரவாக்கியம்.

அம்சபப்பளி amca-pappaḷi, *n.* <*haṃsa* +. A kind of saree; சேலைவகை. *Loc.*

அம்சம்[1] amcam, *n.* <*haṃsa*. Swan; அன்னப்பறவை.

அம்சம்[2] amcam, *n.* <*aṃśa*. Mark; பரீட்சை விடையின் மதிப்பெண். *Mod.*

அம்சாசனம் amcācanam, *n.* <*haṃsa*+*āsana*. (Yōga.) A yōgic posture; யோகாசன வகையுள் ஒன்று.

அம்பகம்[1] ampakam, *n.* Pay of an actor, in a play; நடிகருக்குரிய கூலி. (J.)

அம்பகம்[2] ampakam, *n.* cf. *ambaka* செம்பு. Indian kales; சேம்பு. (*பச். மூ.*)

அம்பட்டன் ampaṭṭaṉ, *n.* <*ambaṣṭha*. Son born to a Brahmin by a Vaiśya wife; பிராமணனுக்கு வைசியமனைவியிடம் பிறந்த மகன். (*மனு.* 284.)

அம்பட்டை ampaṭṭai, *n.* <*ambaṣṭhā*. (*நாநார்த்த.*) 1. Arabian jasmine; முல்லை. 2. Wormkiller; பங்கம்பாளை. 3. Yellow wood-sorrel; புளியாரை.

அம்படலம்[1] ampaṭalam, *n.* (*அக. நி.*) 1. Grinding stone; அம்மி. 2. Mercury; இரதம். 3. Measure; மரக்கால். 4. Lead; ஈயம். 5. Silver; வெள்ளி.

அம்படலம்[2] ampaṭalam, *n.* perh. அம்+படா-. Boat; ஓடம். (*அக. நி.*)

அம்படலம்[3] ampaṭalam, *n.* cf. *ambara*. Open space; வெளி. (*அக. நி.*)

அம்பணம் ampaṇam, *n.* 1. cf. அம்படலம். Ship; மரக்கலம். (*அக. நி.*) 2. Coral; பவளம். (*அக. நி.*) 3. Mouth; வாய். (*அக. நி.*) 4. Stem of the plantain; வாழைத்தண்டு (*நாநார்த்த.*)

அம்பரம் amparam, *n.* <*ambara*. 1. Turmeric; மஞ்சள். அம்பரமும் பொன்னு மணிக் கோடு பொருந்தி (*மான்விடு.* 70). 2. Sin; பாவம். (*நாநார்த்த.*) 3. Lip; உதடு. (*நாநார்த்த.*) 4. Ambergris, a fragrant substance; அம்பர். (*நாநார்த்த.*) 5. Hall, public place; மன்றம். (*நாநார்த்த.*)

அம்பரவதி ampara-vati, *n.* prob. id.+. The river Tāmpiravaruṇi; தாம்பிரவருணி நதி. (*நாமதீப.*)

அம்பராந்தம் amparāntam, *n.* <*ambarānta*. Horizon; அடிவானம். *Pond.*

அம்பராம்புயம் amparāmpuyam, *n.* prob. *ambara*+*ambuja*. That which is non-existent, as sky-lotus; [ஆகாசத்தாமரை] இல்பொருள். (*பச். மூ.*)

அம்பரிடம் ampariṭam, *n.* <*ambarīṣa*. A hell, one of eight *mā-narakam*, q. v.; மாநரகம் எட்டனுள் ஒன்று. (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 203.)

அம்பரீடம் amparīṭam, *n.* <*ambarīṣa*. (*நாநார்த்த.*) 1. Battle; போர். 2. A species of mango; புளிமா. 3. Pan used for parching; frying pan; வறையோடு. 4. Colt; குதிரைக்குட்டி.

அம்பரீடன் amparīṭaṉ, *n.* <*ambarīṣa*. (*நாநார்த்த.*) 1. Śiva; சிவபிரான். 2. Sūrya; சூரியன்.

அம்பலகாரன் ampala-kāraṉ, *n.* <அம்பலம்+. Chairman of a village assembly; கிராம சபைத் தலைவன். (R. T.)

அம்பலத்தார் ampalattār, *n.* <id. Members of a village assembly; கிராமப் பொதுச்சபையார். *நிலத்தை வலுக்கொண் டம்பலத்தா ரெடுத்தழுது கொண்டார்களென்று* (சரவண. பணவிடு. 185).

அம்பலநாட்டான் ampala-nāṭṭāṉ, *n.* <id.+. 1. Headman of a village; கிராமத் தலைவன். 2. See அம்பலகாரன். *கிராமமுன்சி பம்பலநாட்டா ரெவர்க்கும்* (பஞ்ச. திருமுக. 380).

அம்பலம் ampalam, *n.* cf. *ambara.* See அம்பலகாரன். (R. T.)

அம்பலமானியம் ampala-māṉiyam, *n.* <அம்பலம்+. Land held free of tax by the headman of a village, as a perquisite of his office; கிராமத்தலைவன் அனுபவிக்கும் இறையிலி நிலம். (W. G.)

அம்பலவன் ampalavaṉ, *n.* <id. Šiva at Chidambaram; தில்லைச் சிவபிரான். *குவளைக் களத் தம்பலவன்* (திருக்கோ. 33).

அம்பலவாசி ampala-vāci, *n.* <id.+. A caste in Malabar rendering service in temples; மலையாளநாட்டிற் கோயில்வேலை செய்யும் ஒரு சாதியினர். (அபி. சிந்.)

அம்பஸ்தை ampastai, *n.* cf. *ambaṣṭha.* Glacous backed triangular buckler-leaved moonseed, cl., *Stephania hernandifolia;* கொடி வகை. *Loc.*

அம்பார் ampār, *n.* <U. *ambār.* Heap of paddy or other grain; தானியக்குவியல். (P. T. L.)

அம்பாரக்கடை ampāra-k-kaṭai, *n.* <அம்பாரம்+. Store, granary, place where anything is stored; களஞ்சியம். (W. G.)

அம்பாரம்[1] ampāram, *n.* <U. *ambār.* 1. Heap; குவியல். 2. Pile; அடுக்கு. *புகையிலை யம்பாரம். Tinn.*

அம்பாரம்[2] ampāram, *n.* <U. *ambārī.* Howdah; அம்பாரி. *Loc.*

அம்பாரராசி ampāra-rāci, *n.* <அம்பாரம்+. The government's share of the gross produce of paddy; சாதுபடியான நெல்லில் அரசாங் கத்தாருக்கு உரிய பகுதி. (R. T.)

அம்பாரவாசி ampāra-vāci, *n.* <id.+. Extra quantity of grain measured by the tenant to the landlord to compensate for the loss due to shrinkage, etc.; காய்ச்சற்பாடு முதலியவற்றல் நஷ்டமேற்படாதபடி அதிகப்படியாய்க் கொடுக்கும் நெல். *அம்பாரவாசி அளைவாயிலே கழித்து* (சரவண. பணவிடு. 136).

அம்பாவணம் ampāvaṇam, *n.* <அம்பாவாணம். A mythical bird; சரபபட்சி. (W.)

அம்பி[1] ampi, *n.* <ஆம்பி. (W.) 1. Baling-basket; இறைகூடை. 2. Rope used for drawing water; தாம்பு.

அம்பி[2] ampi, *n.* Hampi, the capital of the Vijayanagar kings; விஜயநகரத்தரசர் தலை நகரான ஹம்பியென்ற ஊர். *அம்பி நகருநுகெடுக்க வந்த குலாமா* (தமிழ்நா. 224.)

அம்பிகை ampikai, *n.* <*ambikā.* (நாநார்த்த.) 1. Mother; தாய். 2. Aunt; அத்தை.

அம்பிடி ampiṭi, *n.* White sugar; சீனிச் சர்க்கரை. (பச். மூ.)

அம்பு[1] ampu, *n.* <*ambara.* Sky, firmament; விண். (பொதி. நி.)

அம்பு[2] ampu, *n.* <*ambu.* Cuscus grass; வெட்டிவேர். (நாநார்த்த.)

அம்புச்சிறகு ampu-c-ciṟaku, *n.* <அம்பு+. Feather end of an arrow; அம்பின் அடிப் பாகம். (நாமதீப.)

அம்புசம் ampucam, *n.* <*ambu-ja.* Water cadamba; நீர்க்கடம்பு. (நாநார்த்த.)

அம்புசன்மம் ampu-caṉmam, *n.* <*ambu-janman.* Lotus; தாமரை. (பச். மூ.)

அம்புடம் ampuṭam, *n.* cf. அம்படம். Worm-killer; ஆடுதின்னாப்பாளை. (பச். மூ.)

அம்புதம் amputam, *n.* 1. cf. *ambu.* Water; நீர். (வை. மூ.) 2. cf. *ambu-ja.* Lotus; தாமரை. (சம். அக. Ms.)

அம்புதி amputi, *n.* <*ambu-dhi.* Channel; கால்வாய். (சம். அக. Ms.)

அம்புநிதி ampu-niti, *n.* <*ambu-nidhi.* Ocean; கடல். (சிந்தா. நி. 205.)

அம்புநீர் ampu-nīr, *n.* perh. அம்பு+. Semen virile; விந்து. (சித். அக.)

அம்புநேசம் ampu-nēcam, *n.* <id.+. Lotus; தாமரை. (பரி. அக.)

அம்புப்பிரசாதனம் ampu-p-piracātaṉam, *n.* <*ambu-prasādana.* Clearing nut; தேற்றங்கொட்டை. (சித். அக.)

அம்புமுதுபாடன் ampu-mutu-pāṭaṉ, *n.* perh. அம்பு + முது + . A kind of pearl; முத்து வகை. (S. I. I. ii, 78.)

அம்புமுதுவரை ampu-mutu-varai, *n.* perh. id. + id. + . A kind of pearl; முத்துவகை. (S. I. I. ii, 78.)

அம்புயநூல்நாணன் ampuya-nūl-nāṇaṉ, *n.* < அம்புயம் + நூல் + நாண். Kāma, as having a bowstring of lotus-fibres; [தாமரை நூலை நாணாகவுடையவன்] மன்மதன். (நாமதீப.)

அம்புயம் ampuyam, *n.* (அக. நி.) 1. Pack, bundle; பொதி. 2. Quiver; அம்புப்புட்டில்.

அம்புராம்புயம் ampurāmpuyam, *n.* perh. *ambu-dhi* + *ambu-ja*. The plant known as *kaṭaṟṟāmarai*; கடற்றாமரை.

அம்புரோகிணி ampurōkiṇi, *n.* < *ambu-rōhiṇī*. Lotus; தாமரை. (சிந்தா. நி. 213.)

அம்புலி ampuli, *n.* cf. அம்பலி. Maize porridge; சோளக்கூழ். பட்டிநாய்களுக்கு அம்புலி காய்ச்சுமிடமும் (எங். ஊர். 40).

அம்புவாகம் ampuvākam, *n.* < *ambu-vāha*. Cloud; முகில். (சிந்தா. நி. 213.)

அம்பை ampai, *n.* < அம்பு. 1. Cuscus grass; வெட்டிவேர். *Pond.* 2. Taper-pointed mountain ebony; கொக்குமந்தாரை. (நாமதீப.)

அம்போதரங்கவொருபோகு ampō-taraṅka-v-orupōku, *n.* < அம்போதரங்கம் + . (Pros.) A variety of *ottāḻicai-k-kali* verse; ஒத்தாழிசைக்கலிப்பாவகையு ளொன்று. (பாப்பா. 105.)

அம்போதரம் ampōtaram, *n.* < *ambho-dhara*. (தக்கயாகப். 606, உரை.) 1. Cloud; மேகம். 2. Ocean; கடல்.

அம்போதி ampōti, *n.* perh. அகம் + பொதி-. The inner meaning of a stanza; பாட்டின் உட்பொருள். (சங். அக.)

அம்மட்டம் ammaṭṭam, *n.* < *ambhaṣṭhā*. Velvet leaf; வட்டத்திருப்பி. (சங். அக.)

அம்மட்டி ammaṭṭi, *n.* *Koṭṭi*, an aquatic plant; கொட்டி. (பச். மூ.)

அம்மண்டார் ammaṇṭār, *n.* prob. அம்மான் + ஆண்டார். Maternal uncle; தாய்மாமன். *Nāñ.*

அம்மணம் ammaṇam, *n.* 1. cf. அம்மணி. Waist; இடை. (திவ். பெரியாழ். 1, 6, 3, வ்யா.) 2. Lewdness; விபசாரம். (J.)

அம்மணி ammaṇi, *n.* cf. அம்மணம். Lap; மடி. (சம். அக Ms.)

அம்மாச்சன் ammāccaṉ, *n.* prob. அம்மான் + அச்சன். See அம்மண்டார். *Nāñ.*

அம்மாயி ammāyi, *n.* < அம்மா + . Maternal grandmother; தாயைப்பெற்ற பாட்டி. *Loc.*

அம்மாரம் ammāram, *n.* cf. *aśva-māra*. *Alari-c-cevi*, a plant; அலரிச்செவி. (பச். மூ.)

அம்மாலைத்தேவர் ammālaittēvar, *n.* A title of Kaḷḷars; கள்ளர்பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அம்மான்பச்சரிசி ammāṉ-paccarici, *n.* Red Indian water-lily; செங்கழுநீர். (சங். அக.)

அம்மானார் ammāṉār, *n.* < அம்மானை. 1. A girls' game; அம்மானையாட்டம். 2. A class of poem, which has the word *ammāṉai* as its refrain; அம்மானைப்பிரபந்தம். சீராமர் அம்மானார் முகிந்தது முற்றும் (தஞ். சரசு. i, 467).

அம்மியம் ammiyam, *n.* Trumpet; காளம். (W.)

அம்மிரம் ammiram, *n.* < *āmra*. Mango; மாமரம். (சங். அக.)

அம்மிலம் ammilam, *n.* < *amla*. (நாநார்த்த.) 1. Sourness; புளிப்பு. 2. Tamarind; புளி. 3. *Puḷi-vañci*, a creeper bearing sour fruits; புளிவஞ்சி.

அம்மிலிகை ammilikai, *n.* < *amlikā*. Tamarind; புளி. (சிந்தா. நி. 206.)

அம்மு-தல் ammu-, 5 *v. tr.* To press; அழுக்குதல். வல்லி யமரம மெகிழ்த்து (மருதூரந். 91).

அம்முண்டு ammuṇṭu, *n.* See அப்புண்டு. *Loc.*

அம்மைக்கொண்டை ammai-k-koṇṭai, *n.* < அம்மை + . A mode of coiffure; மகளிர் கொண்டைவகை.

அம்மையப்பன் ammai-y-appaṉ, *n.* < id. + . Lit., father and mother. [தாயும் தந்தையும்] A form of Śiva with His Śakti; உமா மகேசுரர். அம்மையப்பரே யுலகுக் கம்மையப்ப ரென்றறிக (திருக்களிற்றுப். 1).

அம்மையார்சீட்டு ammaiyār-cīṭṭu, *n.* < அம்மையார் + . A kind of card-play; ராஜா மந்திரி என்னுஞ் சீட்டாட்டம். *Loc.*

அம்மோ ammō, *int.* An interjection expressing pity; இரக்கக்குறிப்புச் சொல். (நாமதீப.)

அம்ஸஸ்வரம் amša-svaram, *n.* <*amśa* +. (Mus.) Predominant note in a *rāga*; இராகத்தில் முக்கியமாக ஒலிக்கவேண்டிய ஸ்வரம். (Mus. of Ind. 39.)

அம்ஸம் amsam, *n.* <*aṃsa.* Shoulder; தோள். (திவ். இயற். திருநெடுங். 21, வ்யா. பக். 173.)

அமங்கலைநாள் amaṅkalai-nāḷ, *n.* <*amaṅgalā* +. (Astrol.) The *nakṣatras punar-pūcam* and *pūcam;* புனர்பூசம் பூசம் ஆகிய நக்ஷத்திரங்கள். (சோதிட. சிந். 38.)

அமசடக்கம் amacaṭakkam, *n.* perh. அமை- + அடக்கம். (R.) 1. Concealing, covering; மூடுகை. 2. Protecting; காப்பாற்றுகை. 3. Quietness; அமைதி.

அமண்டலம் amaṇṭalam, *n.* prob. *amaṇḍa.* Castor plant; ஆமணக்கு. (மூ. அ.)

அமண்டலாதி amaṇṭalāti, *n.* Small Indian oak; செங்கடம்பு. (சித். அக.)

அமணழித்தோன் amaṇ-aḻittōṉ, *n.* < அமண் + அழி-. St. Tiruñāṉa-campantar; திருஞானசம்பந்தர். (நாமதீப.)

அமதி[1] amati, *n.* Corr. of அமுது. Nectar; அமிழ்து. (R.)

அமதி[2] amati, *n.* <*amati.* (நாநார்த்த.) 1. Time; காலம். 2. Moon; சந்திரன்.

அமந்தாசிகம் amantācikam, *n.* Iron-wood of Ceylon; சுருளி. (சித். அக.)

அமம் amam, *n.* <*ama.* Disease, illness; நோய். (சிந்தா. நி. 190.)

அமரகம் amarakam, *n.* <*amara-ka.* A treatise on erotics; காமசாஸ்திரத்து ளொன்று. (நெஞ்சுவிடு. 10.)

அமரகுணர் amarakuṇar, *n.* perh. *amṛta* + *guṇa.* Flower of chebulic myrobalan; கடுக்காய்ப்பூ. (சங். அக.)

அமரசயம் amaracayam, *n.* See அமராசயம். (W.)

அமரத்துவம் amarattuvam, *n.* <*amara-tva.* Indestructibility; immortality; அழியாமை. (சிந்தா. நி. 213.)

அமரநாயகம் amara-nāyakam, *n.* <*samara-nāyaka.* 1. Commandership; தண்டத்தலைமை. (M. E. R. 36 of 1928-9.) 2. Grant of land to the commander of an army; தண்டத்தலைவனுக்கு விடப்படும் நிலம். (I. M. P. Tn. 407.)

அமரபக்கம் amara-pakkam, *n.* <*apara* +. The dark fortnight; கிருஷ்ணபட்சம். (பஞ்.)

அமரபர்த்திரு amara-parttiru, *n.* <*amara-bhartṛ.* Indra; இந்திரன். (சிந்தா. நி. 188.)

அமரம் amaram, *n.* perh *apara.* Back or reverse side; பின்பக்கம். (அக. நி.)

அமரர்கற்பம் amarar-kaṟpam, *n.* <*amara-garbha.* Heaven; தேவலோகம். (R.)

அமரல் amaral, *n.* <அமர்-. (பொதி. நி.) 1. Largeness, excess; மிகுதி. 2. Excellence, grandeur; சிறப்பு. 3. Density, closeness; நெருக்கம்.

அமரன் amaraṉ, *n.* <அமர். Warrior, one who gives battle; போர்செய்வோன். (பெருங். உஞ்சைக். 37, 202.)

அமராசயம் amarācayam, *n.* prob. *āmāśaya.* 1. Stomach; இரைப்பை. (W.) 2. Womb; கருப்பை. (சிந்தா. நி. 188.)

அமராஞ்சனம் amarāñcaṉam, *n.* <*amara* +. Sandal-wood tree; சந்தனம். (சித். அக.)

அமராபகை amarāpakai, *n.* <id. + *āpagā.* The Milky Way; ஆகாயகங்கை. (சிந்தா. நி. 193.)

அமராபுரம் amarā-puram, *n.* <அமரர் +. Indra's capital, Amarāvatī; அமராவதி. உம்பராளு மமராபுரந்தவிர (தக்கயாகப். 17).

அமரிதாவிகம் amaritāvikam, *n.* A plant growing in damp places; கையாந்தகரை. (சித். அக.)

அமரிப்புல் amari-p-pul, *n.* prob. அமரி +. Sticking grass; ஒட்டுப்புல். (சித். அக.)

அமரிப்பூகம் amari-p-pūkam, *n.* prob. id. +. Red basil; செங்காந்தை. (சித். அக.)

அமரிறை amar-iṟai, *n.* <அமரர் +. Indra; இந்திரன். அமரிறை யருள்வகை (பெருங். வத்தவ. 5, 76).

அமரிஷணம் amarisaṇam, *n.* <*amarṣaṇa.* Anger; கோபம். (சிந்தா. நி. 211.)

அமருடம் amaruṭam, *n.* <*amarṣa.* (நாநார்த்த.) 1. Anger; கோபம். 2. Impatience; பொறுமையின்மை.

அமரேசம் amarēcam, *n.* <*amarēśa.* (Śaiva.) A spiritual world, one of *kuyyāṭṭaka-puvaṉam*, q.v.; குய்யாட்டகபுவனத்து ளொன்று. (சி. போ. பா. 2, 3, பக். 213.)

அமரை amarai, n. < *amarā*. (நாநார்த்த.) 1. Amarāvatī, the capital of Indra's Heaven; அமராவதி. 2. Pillar; தூண். 3. Durva grass; அறுகம்புல். 4. Gulancha; சீந்தில்.

அமல்(லு)-தல் amal-, 3 v. tr. To join; சேருதல். (நாநார்த்த.)—intr. 1. To pervade, spread; வியாபித்தல். எங்கணுந் தானினி தமலும் (ஞானா. 14). 2. To be abundant; மிகுதியாதல். (R.)

அமல்நாமா amal-nāmā, n. < U. *amal* +. Warrant or authority from a public functionary for doing a piece of work; ஒரு வேலையைச் செய்யும்படி கொடுக்கும் அதிகாரபத்திரம். (R. T.)

அமலகம் amalakam, n. < *āmalaka*. A species of gooseberry tree; அருநெல்லி. (சித். அக.)

அமலகமலம் amala-kamalam, n. < *amala* + *kamala*. Cow's urine; கோமூத்திரம். (சிந்தா. நி. 189.)

அமலம் amalam, n. < *amala*. 1. Mica; அப்பிரகம். (நாநார்த்த.) 2. cf. அமலகம். A species of gooseberry; அருநெல்லி. (சித். அக.)

அமலமஞ்சள் amala-mañcaḷ, n. Tree turmeric; மரமஞ்சள். (சித். அக.)

அமலர் amalar, n. < *amalaka*. Dried flesh of gooseberry fruits; நெல்லிமுள்ளி. (வை. மூ.)

அமலாயோகம் amalā-yōkam, n. < *amalā* +. (Astrol.) Location of auspicious planets in the tenth house from the moon or the ascendant; இலக்கினம் அல்லது சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் சுபக்கிரகங்க ளிருக்கை. (சோதிடப்.)

அமலாளி amal-āḷi, n. < அமல் + ஆள்-. Amaldar, an Indian revenue officer; அமல்தார். கட்டளையாய் நம்புமமலாளி பற்றினுனென்றும் (சரவண. பணவிடு. 187).

அமலை amalai, n. < *a-malā*. (நாநார்த்த.) 1. A woman who is pure; மாசற்றவள். 2. Pārvatī; பார்வதி. 3. A small plant; கீழாநெல்லி. 4. Soapnut tree; பூவந்தி.

அமலைதாரம் amalai-tāram, n. perh. அமலன் +. Orpiment; அரிதாரம். (சித். அக.)

அமளி amaḷi, n. Cot, bedstead; கட்டில். மணிக்காலமளி (பெருங். உஞ்சைக். 33, 106).

அமளைக்கண்ணி amaḷaikkaṇṇi, n. Horse gram; கொள்ளு. (பச். மூ.)

அமளோகிதம் amaḷōkitam, n. Cock's-comb greens; செங்கீரை. (சித். அக.)

அமனி amaṉi, n. < *amani*. Street; தெரு. (சிந்தா. நி. 204.)

அமனிதம் amaṉitam, n. Yellow wood-sorrel; புளியாரை. (சித். அக.)

அமாந்தக்காரன் amānta-k-kāraṉ, n. prob. அமாந்தம் +. 1. Cloth merchant; சவளிவித்தகன். *Pond.* 2. Hawker; தெருவில் பண்டம் விற்போன். (R.)

அமாந்தம் amāntam, n. cf. அபாண்டம். Fib, lie; பொய். *Nāñ.*

அமாந்தம்பற்றவை-த்தல் amāntam-paṟṟavai-, v. intr. < அமாந்தம் +. To fib; இல்லாததைச் சொல்லுதல். *Nāñ.*

அமாநசியம் amānaciyam, n. < *amā-nasya*. Pain; உபாதி (சிந்தா. நி. 195.)

அமாமிக்கடம்பு amāmikkaṭampu, n. Small Indian oak; செங்கடம்பு. (சித். அக.)

அமார்க்கம் amārkkam, n. cf. அபாமார்க்கம். A plant; நாயுருவி. (பரி. அக.)

அமாவசி amāvaci, n. < *amāvasī*. New moon; அமாவாசை. (W.)

அமாவசியை amāvaciyai, n. < *amā-vāsyā*. New moon; அமாவாசை. (W.)

அமானிபாஜேபாப் amāṉi-pājēpāp, n. < Arab. *amānī* +. Sundry farms under the management of a collector; கலெக்டர் ஆளுகையிலுள்ள சில்லறைச் சாகுபடி நிலங்கள். (P. T. L.)

அமிச்சை amiccai, n. perh. *a-mithyā*. Knowledge; ஞானம். (சிந்தா. நி. 212.)

அமிசகம் amicakam, n. < *aṃśaka*. Day; நாள். (சிந்தா. நி. 193.)

அமிசனம் amicaṉam, n. < *aṃśana*. Dividing, parting; பிரிக்கை. (சிந்தா. நி. 195.)

அமிசாமம் amicāmam, n. perh. *haṃsa*. Lake Manasarowar, a sacred lake at the foot of Mt. Kailas; மானசவாவி. (சிந்தா. நி. 196.)

அமிசு amicu, n. < *aṃśa*. Atom; பரமாணு. *Pond.*

அமித்தியம் amittiyam, n. < *a-mithyā*. That which is not false; பொய்யல்லாதது. (வேதாந்தசா. 84.)

அமிர்தக்கோலி amirtakkōli, n. The river Tāmpiravaruṇi; தாம்பிரவருணி நதி. (நாமதீப்.)

அமிர்தகணத்தார் amirta-kaṇattār, *n.* <*a-mṛta*+*gaṇa*. 1. Members of the committee for the management of village affairs; ஊரதிபதிகளான கணப்பெருமக்கள். (I. M. P. Cg. 1027.) 2. Members in charge of the cash receipts of a temple; கோயில் ரொக்கவரும்படிக் கணக்கிடுஞ் சபையார். (M. E. R. 90 of 1913.)

அமிர்தகிரணன் amirta-kiraṇaṉ, *n.* <id.+*kiraṇa*. Moon; சந்திரன். (W.)

அமிர்தகுணம் amirta-kuṇam, *n.* <id.+. Excellent quality; உத்தம குணம். (தெய்வச். விறலி. 147.)

அமிர்தசஞ்சீவினி amirta-cañcīviṉi, *n.* <id.+*sañjīvanī*. A medicament supposed to restore the slain to life; கொலையுண்டாரைப் பிழைக்கச்செய்வதாகக் கருதப்படும் மருந்து. (W.)

அமிர்தசாகரம் amirta-cākaram, *n.* <id. +. A medical treatise written by Mahārāja Pratāpasiṃha; பிரதாபசிம்ம மகாராஜா எழுதிய ஒரு வைத்தியநூல். (அபி. சிந்.)

அமிர்தசாமரம் amirta-cāmaram, *n.* <id.+. A variety of common sesban; செஞ்சிற்றசத்தி. (சித். அக.)

அமிர்தநிலை amirta-nilai, *n.* <id.+. (Erot.) See அமுதநிலை. அமிர்து பதினைந் தமிர்த நிலை யாராய்ந்து (விறலிவிடு. 547).

அமிர்தம் amirtam, *n.* <*a-mṛta*. (நாநார்த்த.) 1. Ghee; நெய். 2. Svarga; சுவர்க்கம். 3. Remains after a sacrifice; யாகசேடம். 4. Gold; பொன்.

அமிர்தவிந்து amirta-vintu, *n.* <id.+*bindu*. Quicksilver; இரசம். (சங். அக.)

அமிர்தன் amirtaṉ, *n.* <*a-mṛta*. Dhanvantari, the physician of the gods; தன்வந்தரி. (நாநார்த்த.)

அமிர்தை amirtai, *n.* <*a-mṛtā*. 1. Long pepper; திப்பலி. (பச். மூ.) 2. Sacred basil; துளசி. (பச். மூ.) 3. A yōginī; யோகினிகளு ளொருத்தி. (தக்கயாகப். பக். 317.)

அமிராகிதம் amirākitam, *n.* Red catechu; செங்கருங்காலி. (சித். அக.)

அமீன் amīṉ, *n.* <U. *amīn*. Confidential officer; அந்தரங்க உத்தியோகஸ்தன். (M. Sm. D. I, 278.)

அமீனதார் amīṉatār, *n.* <id.+. A subordinate revenue officer; அரசிறைக் கீழ்த்தர உத்தியோகஸ்தருள் ஒருவகையான். *Nāñ.*

அமுக்குமரம் amukku-maram, *n.* <அமுக்கு-+. Uppermost plank in the side of a boat; படகின் விலாப்பக்கத்திலுள்ள மேற்பலகை. (R.)

அமுக்குரா amukkurā, *n.* cf. அமுக்கிரா. Indian winter cherry; அமுக்கிரா. (நாமதீப.)

அமுங்காக்கொடி amuṅkā-k-koṭi, *n.* <அமுங்கு-+ஆ neg.+. Sola pith; நெட்டி. (சித். அக.)

அமுசகம் amucakam, *n.* cf. அமுசம். A diffuse prostrate herb; செருப்படை. (சித். அக.)

அமுசம் amucam, *n.* <*haṃsa*. Swan; அன்னப்பறவை. (சம். அக. Ms.)

அமுசு amucu, *n.* Soot; ஒட்டடை. (W.)

அமுசோகம்பாவனை amucōkam-pāvaṉai, *n.* <*haṃsōham*+. Contemplation of the self as a swan; அன்னமாகத் தன்னைப் பாவிக்கை. (வேள்ள. சித்தாந்தநி. சிவயோக. 11, பக். 101.)

அமுணங்கம் a-muṇaṅkam, *n.* prob. அ neg.+முணங்கு-. Want of self-restraint; அடக்கமின்மை. (சிந்தா. நி. 190.)

அமுத்தம்[1] amuttam, *n.* <*amṛta*. (வை. மூ.) 1. Emblic myrobalan; நெல்லி. 2. Nepal aconite; வச்சநாவி.

அமுத்தம்[2] amuttam, *n.* <*a-mukta*. Weapon wielded by hand; கையாயுதம். (சிந்தா. நி. 205.)

அமுத்தல் amuttal, *n.* Japanese wax-tree; கர்க்கடகசிங்கி. (பரி. அக.)

அமுத்தி amutti, *n.* prob. *a-buddhi*. Dislike; இட்டமின்மை. (சிந்தா. நி. 203.)

அமுத்திரம் amuttiram, *n.* cf. அமுதசகாம். Indian madder, manjit; மஞ்சிட்டி. (பச். மூ.)

அமுதக்கதிர்க்கடவுள் amuta-k-katir-k-kaṭavuḷ, *n.* <அமுதம்+கதிர்+. Moon; சந்திரன். (தக்கயாகப். 460.)

அமுதக்குவிகம் amuta-k-kuvikam, *n.* prob. id.+perh. *guhya*. A species of aloe; செங்கற்றாழை. (சித். அக.)

அமுதக்கொடி amuta-k-koṭi, *n.* prob. id. +. Indian birthwort; பெருமருந்துக்கொடி. (பச். மூ.)

அமுதக்கோணிகம் amutakkōṇikam, *n.* Whistling peal; செங்கிளுவை. (சித். அக.)

ஆள்வாரிலிமாடு āḷvār-ili-māṭu, n. <id. +id.+. Straying cattle; பட்டிமாடு. ஆள்வாரிலி மாடாவேனோ (திருவாச. 21, 7).

ஆளம் āḷam, n. Elaboration of a tune; ஆலாபனம். வண்டினங்கள் ஆளம்வைக்கு மரங்கமே (திவ். பெரியாழ். 4, 8, 6).

ஆளரவம் āḷ-aravam, n. <ஆள்+. Noise of people moving about; மனித சஞ்சாரத்தா லுண்டாகுஞ் சந்தடி. ஆளரவஞ் சற்றே யடங்கியபின் (பதம். தென்றல்விடு. 122).

ஆளால் āḷal, n. cf. ஆரல். A kind of fish; மீன்வகை. கோளையாளா லொஞ்சான் பஞ்சான் (குருகூர்ப்பள்ளு, பக். 7).

ஆளறுதி āḷ-a-ṟuti, n. <ஆள்+. Solitude; தனிமை. இக்காமநோய்க்குத் துணையாவதோர் ஆள றுதியிலே (கலித். 144, உரை.)

ஆளன் āḷaṉ, n. <ஆள்-. 1. Slave; அடிமை. ஆளராய்த் தொழுவாரு மமரர்கள் (திவ். திருவாய். 9, 3, 10). 2. The proprietor of a hereditary share in a village; கிராமத்தில் பரம்பரையாகப் பாகவுரிமை யுள்ளவன். (R. T.)

ஆளி[1] āḷi, n. 1. Bundle; சிறுமூட்டை. (W.) 2. Slipperiness; வழுக்கல். (நாமதீப.)

ஆளி[2] āḷi, n. <āli. (நாநார்த்த.) 1. Female companion; பாங்கி. 2. Honest thought; சுத்தக் கருத்து. 3. Row; ஒழுங்கு. 4. Bridge; பாலம். 5. Uselessness; பயனின்மை.

ஆளிட்டான்காசு āḷiṭṭāṉ-kācu, *n.* <ஆள் + இடு- +. An ancient coin; பழைய நாணய வகை. (பணவிடு. 115.)

ஆளுங்கணம் āḷuṅ-kaṇam, *n.* <ஆள்- +. Governing body, as of a village; ஊரையாளுஞ் சபை. (T. A. S. iv, 24.)

ஆளுடையதேவர் āḷ-uṭaiya-tēvar, *n.* <ஆள் +. St. Tiruñāṉa-sambandar; திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர். (I. M. P. Tp. 31.)

ஆளுடையநம்பி āḷ-uṭaiya-nampi, *n.* <id. +. St. Sundarar; சுந்தரமூர்த்திநாயனுர். ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் கேட்டருளாநிற்க (S. I. I. v, 494).

ஆளுடையவரசு āḷ-uṭaiya-v-aracu, *n.* <id. +. St. Tiru-nāvukkaracu; திருநாவுக்கரசு நாயனுர்.

ஆளெழுத்துச்சேலை āḷ-eḻuttu-c-cēlai, *n.* <id. + எழுத்து +. A kind of saree with figures worked out in it; சித்திரமெழுதிய சேலைவகை. ஆளெழுத்துச் சேலையிலே யாறேழு (விறலிவிடு. 672).

ஆளையடிச்சான் āḷai-y-aṭiccāṉ, *n.* <id. + அடி-. Tamarind; புளியமரம். (பச். மூ.)

ஆற்கந்திதம் āṟkantitam, *n.* <*āskandita*. A pace of horse; குதிரைநடைவகை. (சுக்கிரநீதி, 72.)

ஆற்பணம் āṟpaṇam, *n.* perh. அர்ப்பணம். Liking; பிரீதி. (நாமதீப.)

ஆற்பனேபதம் āṟpaṉēpatam, *n.* <*ātmanēpada*. A kind of verbs in Sanskrit; வடமொழி வினைவகை. (பி. வி. 36.)

ஆற்போடம் āṟpōṭam, *n.* <*āsphoṭa*. Mussel shell creeper; காக்கணம். (நாமதீப.)

ஆற்போதம்[1] āṟpōtam, *n.* <*āsphōta*. Maddar; எருக்கு. (நாநார்த்த.)

ஆற்போதம்[2] āṟpōtam, *n.* <*āsphōtā*. (நாநார்த்த.) 1. *Viṣṇukkirānti*, a medicinal plant; விஷ்ணுக்கிராந்தி. 2. Wild jasmine; காட்டு மல்லிகை.

ஆற்றங்கரைத்தேவை āṟṟaṅkarai-t-tēvai, *n.* <ஆற்றங்கரை +. A kind of tax; வரி வகை. (Pudu. Insc. 399.)

ஆற்றடம்பு āṟṟaṭampu, *n.* <ஆறு +. A kind of hare-leaf; அடம்புவகை. (R.)

ஆற்றல் āṟṟal, *n.* <ஆறு-. Leisure; சாவகாசம். எந்தக்காரியத்தையும் ஆற்றலிலே செய்ய வேண்டும். *Tinn.*

ஆற்றாச்சண்டி āṟṟā-c-caṇṭi, *n.* <id. + ஆ neg. +. Importunate beggar; வறுமையால் விடாது பிச்சைகேட்பவன். (W.)

ஆற்றுக்காலேரி āṟṟukkāl-ēri, *n.* <ஆற்றுக்கால் +. Tank fed by a water-course from a river; ஆற்றிலிருந்து பிரியுங் கால்வாய் நீரால் நிரம்பும் ஏரி. (W. G.)

ஆற்றுக்குலை āṟṟu-k-kulai, *n.* <ஆறு +. 1. River bank; ஆற்றின்கரை. (S. I. I. iv, 167.) 2. A petty cess; வரிவகை. (S. I. I. v, 241.)

ஆற்றுக்கொடி āṟṟu-k-koṭi, *n.* <id. +. Colocynth; பேய்க்கொம்மட்டி. (சங். அக.)

ஆற்றுப்பாட்டம் āṟṟu-p-pāṭṭam, *n.* <id. +. An ancient tax; வரிவகை. (S. I. I. v, 365.)

ஆற்றுமரி āṟṟumari, *n.* <id. +. See ஆற்றுக்கொடி. (பச். மூ.)

ஆற்றுமுள்ளங்கி āṟṟu-muḷḷaṅki, *n.* <id. +. A kind of carrot; முள்ளங்கிவகை. (சங். அக.)

ஆறு āṟu, *n.* Front, entrance, as of a house; தலைக்கடை. (அக. நி.)

ஆறுகண்டி āṟukaṇṭi, *n.* <E. *organdie*. A kind of fine cloth; மெல்லிய துணிவகை. (மதி. களஞ். iii, 130.)

ஆறுபரியான் āṟu-pariyāṉ, *n.* <ஆறு +. (நாமதீப.) 1. Ascending node; இராகு. 2. Descending node; கேது.

ஆன்மபூ āṉma-pū, *n.* <*ātma-bhū*. (நாநார்த்த.) 1. Kāma; மன்மதன். 2. Brahmā; பிரமன்.

ஆன்மயோனி āṉma-yōṉi, *n.* <*ātma-yōni*. See ஆன்மபூ. (நாநார்த்த.)

ஆன்மவீரன் āṉma-vīraṉ, *n.* <*ātma-vīra*. (நாநார்த்த.) 1. Strong man; விறலோன். 2. Brother-in-law; மைத்துனன். 3. Son; புத்திரன். 4. Learned man; கற்றோன்.

ஆன்மா āṉmā, *n.* <*ātmā* nom. sing. of *ātman*. (நாநார்த்த.) 1. Effort; முயற்சி. 2. Courage; தைரியம். 3. Mind; மனம். 4. Knowledge; wisdom; அறிவு. 5. Body; உடல். 6. Supreme soul; பரமான்மா. 7. Wind; வாயு. 8. Nature; இயல்பு. 9. Sun; சூரியன். 10. Agni; அக்கினி.

ஆன்மாதீனன் āṉmātīṉaṉ, *n.* <*ātmādhīna*. (நாநார்த்த.) 1. See ஆன்மவீரன், 2, 3, 4. 2. One who is the basis or supporter of life; பிராணதாரன்.

ஆன்றவர் āṉṟavar, *n.* < சால்-. (நாநார்த்த.) 1. Great men; பெரியோர். 2. Men of character; பண்புள்ளோர்.

ஆனகம்¹ āṉakam, *n.* Kalpaka tree; கற்பகம். (அக. நி.)

ஆனகம்² āṉakam, *n.* < *ānaka.* Rumble of a cloud; மேகமுழக்கம். (நாநார்த்த.)

ஆனதம் āṉatam, *n.* (Jaina.) A mythological world; சைனராது கற்பலோகங்களுள் ஒன்று. (தக்கயாகப். 18, உரைக்குறிப்பு, பக். 265.)

ஆனது āṉatu, *part.* < ஆ-. An expletive attached to nouns in the nominative case; எழுவாய்ச்சொல்லுருபு. வேகமானது மேற்செல்ல (பெரியபு. கண். 105).

ஆனந்தகரந்தம் āṉanta-karantam, *n.* < ஆனந்தம் +. Southern wood; மருக்கொழுந்து. (சங். அக.)

ஆனந்தகுறுவை āṉanta-kuṟuvai, *n.* perh. id. +. A kind of paddy; நெல்வகை. (A.)

ஆனந்தலகரி āṉanta-lakari, *n.* < id. +. A Sanskrit work of Śaṅkarācārya, rendered into Tamil by Vīrai-k-kavirācapaṇṭitar; சங்கராசாரியர் வடமொழியிலியற்றியதும் வீரைக்கவிராசபண்டிதர் தமிழில் மொழிபெயர்த்ததுமான ஒரு நூல்.

ஆனந்தான்மவாதி āṉantāṉmavāti, *n.* < *ā-nanda* +. (Śaiva.) Person who holds that the salvation lies in the soul attaining bliss; ஆன்மா ஆனந்தமடைவதே மோக்ஷமென்று வாதிப்பவன். (முத்திநிச்சயம்.)

ஆனந்தி¹ āṉanti, *n.* < *ānandī.* 1. Pārvatī; பார்வதி. (W.) 2. The river Tāmiraparuṇī; தாமிரபருணியாறு. (நாமதீப.)

ஆனந்தி² āṉanti, *n.* < *ānandin.* One who experiences bliss; ஆனந்த முடையவன். அங்குருவகற்றி நின்ற ஞானந்தியாக வேந்தன் (மகாராஜா துறவு, 61).

ஆனந்தி³ āṉanti, *n.* cf. ஆனந்தம். Galangal; அரத்தை. (சங். அக.)

ஆனர்த்தகம் āṉarttakam, *n.* < *ānartaka.* (நாநார்த்த.) 1. Battle; போர். 2. Theatre; நாடகசாலை. 3. A country; ஓர் தேசம். 4. The people of Āṉarttakam; ஆனர்த்தகதேசத்துச் சனம்.

ஆனவர் āṉavar, *n.* < ஆன். Shepherds; இடையர். (அக. நி.)

ஆனவாள் āṉavāḷ, *n.* [T. *ānavālu.*] State officer managing a temple; கோயிற் காரியங்களை நடத்திவைக்கும் அரசாங்க உத்தியோகஸ்தன். (S. I. I. iv, 88.)

ஆனா āṉā, *n.* cf. நுணா. Indian mulberry; மஞ்சணாறி. (பச். மூ.)

ஆனாகம் āṉākam, *n.* < *ānāha.* (நாநார்த்த.) 1. Length; நீட்சி. 2. A disease of the stomach; வயிற்றுப்பொருமல் வியாதி.

ஆனாங்குருவி āṉāṅkuruvi, *n.* A kind of bird; குருவிவகை. (T. C. M. ii, 2, 632.)

ஆனாயகலை āṉāya-kalai, *n.* < *ānāya* +. Cellular tissue; கண்ணறைத்தசை. (W.)

ஆனாயம் āṉāyam, *n.* < *ānāya.* Air-cell; வாயுக்கண்ணறை. (W.)

ஆனி āṉi, *n.* Magnesium sulphate; இந்துப்பு. (பச். மூ.)

ஆனியம் āṉiyam, *n.* Black cumin; கருஞ்சீரகம். (பச். மூ.)

ஆனு-தல் āṉu-, 5 *v. tr.* To quit, abandon; நீங்குதல். (நாமதீப.)

ஆனை āṉai, *n.* Mountain ebony; ஆத்தி. (பச். மூ.)

ஆனைக்கசடன் āṉai-k-kacaṭaṉ, *n.* prob. ஆனை +. A kind of paddy; நெல்வகை. (A.)

ஆனைக்கன்று āṉa-k-kaṉṟu, *n.* < id. +. (பச். மூ.) 1. Country fig; அத்தி. 2. Mountain ebony; ஆத்தி.

ஆனைக்குருகு āṉai-k-kuruku, *n.* *Aṉṟil* bird; அன்றில். (நாமதீப.)

ஆனைக்குழி āṉai-k-kuḻi, *n.* < ஆனை +. Kheda; யானைபிடிக்குமிடம். *Loc.*

ஆனைச்சப்பரம் āṉai-c-capparam, *n.* < id. +. Howdah; அம்பாரி. (W.)

ஆனைச்சிலந்தி āṉai-c-cilanti, *n.* < id. +. A kind of scabby disease; புண்கட்டிவகை. (W.)

ஆனைச்செவியடி āṉai-c-cevi-y-aṭi, *n.* < id. + செவி +. A prickly-leaved plant; பூடுவகை. (W.)

ஆனைசேனை āṉai-cēṉai, *n.* < id. +. Abundance; மிகுதி. (W.)

ஆனைத்தேர் āṉai-t-tēr, *n.* perh. id. +. Ashy babool; விடத்தேர். (L.)

ஆனைநெருஞ்சி āṉai-neruñci, *n.* < id. +. Bristly trifoliate vine; புளிநறளை. (சங். அக.)

ஆனையடிச்செங்கல் āṉai-y-aṭi-c-ceṅkal, *n.* < id. + அடி +. A kind of circular brick, used for pillars; வட்டமான செங்கல். தூண்கட்ட ஆனையடிச்செங்கல் வேண்டும்.

ஆனையோசை āṉai-y-ōcai, *n.* <id.+. The fourth note of the gamut; உழை. (நாமதீப.)

ஆனைவசம்பு āṉai-vacampu, *n.* <id.+. Galangal; அரத்தை. (பச். மூ.)

ஆனைவணங்கி āṉai-vaṇaṅki, *n.* <id.+. *Peruneruñci*, a small plant; பெருநெருஞ்சி. (சங். அக.)

ஆனைவேக்கட்டான் āṉaivēkkaṭṭāṉ, *n.* A kind of paddy; நெல்வகை. (A.)

ஆஸ்தானஸந்தோஷி āstāṉa-santōṣi, *n.* <*āsthāna*+. Buffoon; விகடன். (W.)

ஆஸ்திவந்தன் āsti-vantaṉ, *n.* <ஆஸ்தி +. Rich man; பணக்காரன். (மதி. கள. ii, 81.)

ஆஸ்ரவம் āsravam, *n.* <*ā-srava*. 1. Flowing; நீர்முதலியன பாய்கை. 2. (Jaina.) The inflow of Karma; கருமம் வந்தடைகை. (மேருமந். 97, உரை.)

ஆஸக்தி āsakti, *n.* <*ā-sakti*. 1. Attachment; பற்று. புண்ணியத்தில் ஆஸக்தியுமில்லை பாபத்தில் பயமுமில்லை (தென். இந். க்ஷேத். பக். 294). 2. Enthusiasm; ஊற்றம். அவனுக்குப் படிப்பில் ஆஸக்தி யில்லை.

ஆஸன்னகாலம் āsaṉṉa-kālam, *n.* <*ā-sanna*+. Hour of death; மரணசமயம். *Brāh.*

இ

இ i, *n.* (Astrol.) Letter representing owl, in *pañca-paṭci*; பஞ்சபட்சிகளுள் ஆந்தையைக் குறிக்கும் எழுத்து. (பிங.)

இக்குகந்தை ikku-kantai, *n.* <*ikṣu-gandhā*. (நாநார்த்த.) 1. Water thorn; நீர்முள்ளி. 2. Cowthorn; நெருஞ்சி. 3. Wild sugar-cane; நாணல். 4. *Veḷḷiṟil*, a plant; வெள்ளிறில்.

இக்குவாகு ikkuvāku, *n.* <*ikṣvāku*. Konkany resin; குந்துருக்கம் பிசின். (நாநார்த்த.)

இக-த்தல் ika-, *12 v. tr.* (அக. நி.) To beat; புடைத்தல்.—*intr.* 1. To become hard; to mature; காழ்த்தல். 2. To be close together, to crowd; நெருங்குதல்.

இகத்தாளம் ikattāḷam, *n.* cf. எகத்தாளம். Mockery; பரிகாசம். *Loc.*

இகன்மகள் ikaṉ-makaḷ, *n.* <இகல்+. Durgā; துர்க்கை. இகன்மக ளாயைகளிறு (தக்கயாகப். 170).

இகு-த்தல் iku-, *11 v. tr.* Caus. of இகு-. 1. To stop; to prevent; to hinder; மறித்தல். (நாநார்த்த.) 2. To leap, jump; தாண்டுதல். (நாநார்த்த.) 3. To throw; எறிதல். (நாநார்த்த.) 4. To cause pain or affliction; துன்புறுத்துதல். (நாநார்த்த.) 5. To wipe; to clean; துடைத்தல். (அக. நி.)

இகுரி ikuri, *n.* (அக. நி.) 1. Boat, ship; மரக்கலம். 2. Custom, usage; வழக்கு.

இங்கம் iṅkam, *n.* <*iṅga*. 1. Implied idea; குறிப்பு. (நாநார்த்த.) 2. Mannerism; அங்கசேட்டை. (நாநார்த்த.) 3. Moveable things; ஜங்கமப்பொருள். (நாநார்த்த.) 4. Knowledge, intelligence; அறிவு. (சேதுபு.)

இங்காலம் iṅkālam, *n.* <T. *iṅgālamu*. Carbon; கரி. (விவ. ரசா. 10.)

இங்காலாமிலம் iṅkālāmilam, *n.* <இங்காலம்+. Carbonic acid; கரிவாயு. (விவ. ரசா. 6.)

இங்கித்தை iṅkittai, *adv.* <இங்கு. cf. இங்குத்தை. Here; இவ்விடத்தில். இங்கித்தை வாழ்வும் (திருமந். 2117).

இங்கிதம் iṅkitam, *n.* <*iṅgita*. (நாநார்த்த.) 1. Going; போகை. 2. Sexual intercourse; புணர்ச்சி.

இங்கிற்றி iṅkiṟṟi, *n.* See இங்குத்தி. எல்லாந் துறந்துவிட்ட இங்கிற்றி (பஞ்ச. திருமுக. 580).

இங்குசுக்காண்டான் iṅkucukkāṇṭāṉ, *n.* <*ikṣugandhā*. White long-flowered nail-dye; நீர்முள்ளி. (W.)

இங்குத்தி iṅkutti, *n.* A term of respect; ஒரு மரியாதைச்சொல். (சரவண. பணவிடு.)

இங்குதி inkuti, *n.* <*iṅgudī*. A medicinal tree, *Terminalia catappa*; மரவகை. (சுக்கிரநீதி, 228.)

இங்குலிகம் iṅkulikam, *n.* <*hiṅgulī*. Redness; சிவப்பு. (நாநார்த்த.)

இங்குளி iṅkuḷi, *n.* <*hiṅgu*. Asafoetida; பெருங்காயம். இங்குளி வாங்குங் கலம்போல (சி. போ. 10, 2, 3).

இச்சிச்சிச்செனல் icciccicceṉal, *n.* Onom. expr. of scaring away birds, etc.; புள் முதலியவற்றை வெருட்டும் ஒலிக்குறிப்பு. காக்கைதனை யெய்யக் கோலில்லாமல் இச்சிச்சிச்சென்றானே (பெருந்தொ. 1424).

இச்சியை icciyai, *n.* <*ijyā*. (நாநார்த்த.) 1. Gift; offering; கொடை. 2. Sacrifice; யாகம். 3. Worship; பூசனை.

இச்சை iccai, *n.* (அக. நி.) 1. cf. மிச்சை. Ignorance; spiritual ignorance; அஞ்ஞானம். 2. Lying, uttering falsehood; பொய்கூறுகை.

இசடு icaṭu, *n.* < அசடு. Scab; பொருக்கு. (யாழ். அக.)

இசுசன்னி icu-caṉṉi, *n.* < இசிவு + . Convulsions, fits; இசிவுசன்னி. இசுசன்னி கண்டவரும் இம்சைகள் தான்படுவோர் (ஆதியூரவதானி. 76).

இசும்பு icumpu, *n.* < அசும்பு. *Loc.* 1. Percolation of water; நீர்க்கசிவு. 2. Sesamum seeds ground into a pulp; எட்கசிவு.

இசுமு icumu, *n.* < U. *ism.* Village servant; கிராமவேலைக்காரன். (P. T. L. 180.)

இசை¹ icai, *n.* < இசை-. Bounty, liberality; வண்மை. (அக. நி.)

இசை² icai, *n.* prob. திசை. Cardinal points, direction; திசை. (அக. நி.)

இசை³-த்தல் icai-, *11 v. tr.* To join, unite; புணர்த்தல். (நாநார்த்த.)

இசைக்கிளை icai-k-kiḷai, *n.* < இசை + . (Mus.) Modes, of five kinds, viz., *āyattam, eṭuppu, uṟkirakam, cañcāram, iṭāyam;* ஆயத்தம் எடுப்பு உற்கிரகம் சஞ்சாரம் இடாயம் என்ற ஐவகை இசை. (பெரியபு. ஆனாய. 26, உரை.)

இசைக்குரற்குருவி icai-k-kuṟaṟ-kuruvi, *n.* < id. + குரல் + . Koel, the Indian cuckoo; குயில். *Pond.*

இசைகடன் icai-kaṭaṉ, *n.* < இசை- + . Vow made to a deity; நேர்த்திக்கடன். கோயிலுக்குப்போய் இசைகடன் முடித்து (எங்களூர், 41).

இசைகேடு icai-kēṭu, *n.* < id. + . cf. இசைவுகேடு. 1. Awkward predicament; எக்கச்சக்கம். இசைகேடாகக் காரியம் நடந்துவிட்டது. 2. Wrong position; தவறான நிலை. இசைகேடாகப் படுத்துக்கொண்டேன், சுளுக்கேறிவிட்டது. 3. Disorder, irregularity; ஒழுங்கின்மை. 4. Disagreement; incompatibility; பொருத்தமின்மை. *Pond.* 5. Damage; கேடுதி. (Pudu. Insc. 609.)

இசைபேதம் icai-pētam, *n.* < id. + . See இசைகேடு, 4. *Pond.*

இசையறு-த்தல் icai-y-aṟu-, *v. intr.* < இசை + . To distinguish by intonation; ஓசை வேறுபடப் பிரித்தல். இசையறுத்து உச்சரித்துக் காண்க (நன். 91, சங்கர.).

இசையாயிரம் icai-y-āyiram, *n.* < id. + . A panegyric, not now extant, consisting of 1000 verses sung in praise of the Chetti community by Ceyaṅkoṇṭār; செயங்கொண்டார் செட்டிமார்கள்மேல் ஆயிரம் பாடல்களாற் பாடிய நூல். (தமிழ் நா. பக். 42.)

இசையின்செல்வி icaiyiṉ-celvi, *n.* < id. + . The Goddess of Fame; புகழ்மகள். இசையின்செல்வி எண்டிசைவளர்ப்ப (S. I. I. iv, 284).

இசையோர் icaiyōr, *n.* < id. The Gandharvas; கந்தருவர். இசையோர் தேய வியக்கம் (பெருங். மகத. 14, 267).

இசைவுக்குலைவு icaivu-k-kulaivu, *n.* < இசைவு + . Maladjustment; இசைவுகேடு. *Loc.*

இசைவுதீட்டு icaivu-tīṭṭu, *n.* < id. + . Deed of agreement; உடன்படிக்கைப் பத்திரம். (S. I. I. v, 371.)

இசைவுபிறழ்வு icaivu-piṟaḻvu, *n.* < id. + . (W.) 1. Disorder; ஒழுங்கின்மை. 2. Disagreement; இசைவுகேடு.

இசோப் icōp, *n.* < U. *hissāb.* Account; கணக்கு. (P. T. L.)

இஞ்சிப்பாகு iñci-p-pāku, *n.* < இஞ்சி + . A kind of ginger electuary; இஞ்சிலேகியவகை. (W.)

இஞ்சிப்பாவை iñci-p-pāvai, *n.* < id. + . Ginger, as bearing the shape of a doll; இஞ்சிக் கிழங்கு. (மலைபடு. 125, உரை.)

இஞ்சுசாரை iñcu-cārai, *n.* < *ikṣu-sāra.* Jaggery; வெல்லம். (R.)

இஞ்சே iñcē, *adv.* Here; இங்கே. (S. I. I. iii, 348.)

இட்சு iṭcu, *n.* < *ikṣu.* Sugar-cane; கரும்பு. காமதேவனது படையான . . . இட்சுசாபமும் (தக்கயாகப். 35, உரை).

இட்டகந்தம் iṭṭa-kantam, *n.* < *iṣṭa-gandha.* (நாநார்த்த.) 1. Agreeable smell; சுகந்தம். 2. A fragrant substance, *ēlavālukai;* ஏலவாலுகை.

இட்டடைச்சொல் iṭṭaṭai-c-col, *n.* < இட்டடை + . Foul word; தீச்சொல். இட்டடைச்சொல் லார்பொறுப்பார் (பெருந்தொ. பக். 609).

இட்டதிட்டம் iṭṭa-tiṭṭam, *n.* < *iṣṭa-dṛṣṭa.* (Jaina.) The six *iṣṭam*, viz., *āptēṣṭam, ākamēṣṭam, camcārēṣṭam, mōkṣēṣṭam, pirattiyapiññāṉēṣṭam, karumapala-campantēṣṭam* and the three *tiruṣṭam*, viz., *lōka-p-piravirutti-tiruṣṭam, puruṣa-p-piravirutti-tiruṣṭam, cāstira-p-piravirutti-tiruṣṭam;* ஆப்தேஷ்டம் ஆகமேஷ்டம் சம்சாரேஷ்டம் மோக்ஷேஷ்டம் பிரத்தியபிஞ்ஞா

னேஷ்டம் கருமபலசம்பந்தேஷ்டம் என்னும் ஆறு இஷ்டங்களும் லோகப்பிரவிருத்திதிருஷ்டம் புருஷப்பிரவிருத்திதிருஷ்டம் சாஸ்திரப்பிரவிருத்திதிருஷ்டம் என்னும் மூன்று திருஷ்டங்களும். இட்டதிட்டமா மொன்பதினேடும் (மேருமந். 645).

இட்டம் iṭṭam, *n.* <*iṣṭa.* (நாநார்த்த.) 1. Purificatory ceremony; ஸம்ஸ்காரம். 2. Sacrifice; யாகம். 3. Yōga; யோகம்.

இட்டம்பண்ணு-தல் iṭṭam-paṇṇu-, *v. tr.* <இட்டம்+. To emancipate; அடிமைத் தனத்தை விலக்குதல். (W.)

இட்டவை iṭṭavai, *n.* cf. இடவை. Path, way; வழி. (அக. நி.)

இட்டளம் iṭṭaḷam, *n.* Gold; பொன். (பெரியபு. எயர்கோன். 133, உரை: செந். iii, 538.)

இட்டன் iṭṭaṉ, *n.* <*iṣṭa.* Venerable person; பூச்சியன். (நாநார்த்த.)

இட்டி iṭṭi, *n.* <*iṣṭi.* (நாநார்த்த.) 1. Epigrammatic verse; சங்கிரகச்செய்யுள். 2. Gift; கொடை. 3. Worship; பூசை. 4. Desire; longing; இச்சை.

இட்டிகை iṭṭikai, *n.* <இட்டி-மை. (W.) 1. Narrow way; இடுக்குவழி. 2. A mixture of wax, resin, etc.; கூட்டு மெழுகு.

இட்டு iṭṭu, *n.* <id. Smallness; சிறுமை. இட்டுவாய்ச்சுனைய (குறுந். 193).

இட்டுக்கொடு-த்தல் iṭṭu-k-koṭu-, *v. intr.* <இடு-+. To serve meat; புலாலுணவு படைத்தல். (R.)

இட்டுக்கொண்டுவா-தல் [இட்டுக் கொண்டுவருதல்] iṭṭu-k-koṇṭuvā-, *v. tr.* <id.+கொள்-+. To bring; to take along with; உடனழைத்துவருதல். செட்டியாரையு மிட்டுக் கொண்டுவொருங்கள் (பிரதாபசந். 67).

இட்டுநீர் iṭṭu-nīr, *n.* <id.+நீர். Water poured by the donor in the palms of the donee, in making a gift; தாரைவார்க்கும் நீர். *Loc.*

இட்டுப்புகுதல் iṭṭu-p-pukutal, *n.* <id.+. A kind of step in dance; தேசிக்குரிய கால்களுள் ஒன்று. (சிலப். 3, 14 பக். 90, கீழ்க்குறிப்பு.)

இட்டுவட்டி iṭṭu-vaṭṭi, *n.* <id.+வட்டி-. Vessel for serving rice; அன்னவட்டி. *Tinn.*

இட்டுறுதி iṭṭuṟuti, *n.* <id.+. Help in times of danger; ஆபத்கால வுதவி. (யாழ். அக.)

இட்டேறி iṭṭēṟi, *n.* prob. id.+ஏறு-. Cart-track; வண்டிப்பாதை. *Cm.*

இட்டேறு-தல் iṭṭēṟu-, *v. intr.* <id.+id. *Colloq.* 1. To be achieved; கூடியதாதல். 2. To be sufficient; போதியதாதல்.

இடக்கர் iṭakkar, *n.* Being close and crowded; மிகுநெருக்கம். (நாநார்த்த.)

இடக்கரிசை iṭakkaricai, *n.* <இடக்கர்+. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றத் தொன்று. (யாப். வி. 525.)

இடக்கால்வாத்துவாதனம் iṭakkāl-vāttu-v-ātaṉam, *n.* <இடக்கால்+. (Yōga.) A kind of yōgic posture; யோகாசனவகை. (தத்துவப். 108, உரை.)

இடகன் iṭakaṉ, *n.* <இடம். One who is on the left side; இடப்பக்கத்தவன். குடகர்க்கிடகர் (பெருந்தொ. 1005).

இடங்கசாலை iṭaṅka-cālai, *n.* <*ṭaṅka*+. Mint; அக்கசாலை. வெங்கடாத்திரி தேவமகாராஜய்யனுக்குத் திருவையாறு இடங்கசாலை பாலிக்கையில் (S. I. I. v, 224).

இடங்கட்டுக்கொம்பு iṭaṅ-kaṭṭu-k-kompu, *n.* <இடம்+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட்டு. 16.)

இடங்கணம் iṭaṅkaṇam, *n.* <*ṭaṅkaṇa.* A country, one of 56 *tēcam*, q.v.; ஐம்பத்தாறு தேசங்களு ளொன்று. கன்னட மிடங்கணம் (திருவேங்கட. 97).

இடங்கணி iṭaṅkaṇi, *n.* <*ṭaṅka.* Chisel; உளி. (W.)

இடங்கம் iṭaṅkam, *n.* <*ṭaṅka.* 1. A weight of 24 *iratti*, for weighing precious stones; இரத்தினம்நிறுக்க உபயோகப்படுவதும் 24 இரத்திகொண்டதுமான நிறைகல். (சுக்கிரநீதி, 189.) 2. Shovel; மண்தோண்டும் படை. (நாநார்த்த.) 3. Scabbard; வாளினுறை. (நாநார்த்த.) 4. Ankle; கணைக்கால். (நாநார்த்த.) 5. Borax; பொரிகாரம். (நாநார்த்த.) 6. Anger; கோபம். (நாநார்த்த.) 7. Pride, arrogance; கர்வம். (நாநார்த்த.) 8. Whetstone; கற்சாணை. (நாநார்த்த.)

இடங்கரம் iṭaṅkaram, *n.* Defilement from menses; மகளிர் சூதகத்தாலுண்டாந் தீட்டு. (W.)

இடங்கெட்டவன் iṭaṅ-keṭṭavaṉ, *n.* <இடம்+. (R.) 1. Wanderer; அலைபவன். 2. Dishonest man; அயோக்கியன்.

இடங்கேடு iṭaṅ-kēṭu, *n.* <id.+. 1. Banishment; நாடுகடத்துகை. (R.) 2. Awkward predicament; எக்கச்சக்கம். இடங்கேடாய்ச் சென்று சிக்கிக்கொண்டாய் சிறுபிள்ளாய் (தெய்வச். விறலிவிடு. 373).

இடத்துய்த்தகறல் iṭattuyttakaṟal, *n.* <id.+உய்-+. (Akap.) Theme which describes the maid leaving the heroine alone to meet the hero, in the appointed place; தலைமகளை இடத்துய்த்த தோழி தலைமகன் எதிர்ப்படுவனென்று கருதித் தானீங்குதலைக் கூறும் அகத்துறை. (*களவியற்.* 73.)

இடத்துய்த்தல் iṭattuyttal, *n.* <id.+. (Akap.) Theme in which the maid indicates to the hero, the appointed place of meeting and then leads the heroine to that place; தோழி தலைமகற்கு இடங்காட்டி மீண்டுநீ தலைமகளுழைச்சென்று அவளைத் தலைமகனின்றவிடத்துச் செலவிடுக்கும் அகத்துறை. (*களவியற்.* 72.)

இடத்துறை iṭattuṟai, *n.* prob. id.+. An ancient tax in money; சுவர்ணதாயவகை. (S. I. I. i, 81.)

இடது iṭatu, *adj.* <id. Left; இடப்புறமான. *Colloq.*

இடதுகைவெட்டு iṭatu-kai-veṭṭu, *n.* prob. இடது+. A blemish in coin; நாணயக் குற்றவகை. (*சரவண. பணவிடு.* 67.)

இடபதரன் iṭapa-taraṉ, *n.* <*Ṛṣabha-dhara.* A Rudra; உருத்திரர்களுள் ஒருவர். (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 212.)

இடபதீபம் iṭapa-tīpam, *n.* <*ṛṣabha*+. A kind of lamp waved before idols; கோயில் மூர்த்தியின் முன்பு எடுக்கும் அலங்காரதீபவகை. (*தமிழ்விடு.* 233.)

இடபம் iṭapam, *n.* <*ṛṣabha.* (*நாநார்த்த.*) 1. Must elephant; மதயானை. 2. Chief object; முக்கியப்பொருள். 3. (Mus.) One of the seven notes of the gamut; ஏழுசுரத் தொன்று. 4. Ear-hole; செவித்துளை. 5. cf. இடபி. A shrub; ஓர் பூண்டு.

இடபன் iṭapaṉ, *n.* <*Ṛṣabha.* A Rudra; உருத்திரர்களுள் ஒருவர். (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 212.)

இடபி iṭapi, *n.* <*ṛṣabhī.* (*நாநார்த்த.*) 1. Cowhage; பூனைக்காலி. 2. A woman with masculine features; ஆண்வடிவப் பெண். 3. Widowhood; கைம்மை.

இடம் iṭam, *n.* <இடு-. Sign of the zodiac; இராசி. (*நாநார்த்த.*)

இடம்பகம் iṭampakam, *n.* Devil; பேய். இடம்பக மகளிவள் (*நீலகேசி*, 64).

இடம்புரி iṭampuri, *n.* <இடம்+. A medicinal plant; பூடுவகை. (W.)

இடம்பெறவிரு-த்தல் iṭam-peṟa-v-iru-, *v. intr.* <id.+. To give audience in the audience hall; ஓலக்கமிருத்தல். இடம்பெறவிருந்த நல்லிமயத்துள் (*திவ். பெரியதி.* 1, 2, 1).

இடமயக்கம் iṭa-mayakkam, *n.* <id.+. 1. (Pros.) A fault in poetry, which consists in the ascription of a wrong place of origin to natural products; ஒன்றற்குரிய உரிப்பொருளைப் பிறிதோரிடத்திற்குரியதாகக் கூறும் இடமலைவு. (W.) 2. (Gram.) A defect which consists in the wrong use of persons; ஓரிடத்திற்குரியதை மற்றோரிடத்ததாகக் கூறும் இலக்கணவழு. (*நன்.* 374, *மயிலை.*)

இடமற்றபிள்ளை iṭamaṟṟa-piḷḷai, *n.* <id. +அறு-+. Child without inheritance or fortune; பாக்கியமற்ற பிள்ளை. (W.)

இடவன் iṭavaṉ, *n.* <இட-. Anything split or cloven; பிளக்கப்பட்ட பொருள். (W.)

இடாக்குத்தர் iṭākkuttar, *n.* <E. Doctor; physician; ஆங்கில முறையைப் பின்பற்றும் வைத்தியர். (J.)

இடாதனம் iṭātaṉam, *n.* <*iḍā*+*āsana.* (Śaiva.) A yōgic posture; யோகாசனவகை. நாகத்தமிடாதனமும் (*தத்துவப்.* 107).

இடாயம் iṭāyam, *n.* (Mus.) One of five *icai-t-tuṟai*, q.v.; இசைத்துறை ஐந்தனுள் ஒன்று. (*பெரியபு. ஆனாய.* 26.)

இடால் iṭāl, *n.* <Persn. *davāl.* Sword; கத்தி. கண்டகோடாரியைப்போல் வந்து வெள்ளைப் பக்கறை யிடாலினன் (*விறலிவிடு.* 49).

இடாவு iṭāvu, *n.* <*iḍā.* *Iṭaikalai*, the breath inhaled through the left nostril; இடைகலை. இடாவு பிங்கலையா னைய (*கம்பரா. மிதிலை.* 130).

இடி[1] iṭi, *n.* <*iḍa.* Fire; அக்கினி. இடியிருந்தகட் பதினொரீசர் (*தக்கயாகப்.* 353).

இடி[2] iṭi, *n.* <இடி-. Word of admonition; உறுதிச்சொல். (*அக. நி.*)

இடி[3] iṭi, *n.* <*iḍikka.* Ram, he-goat; ஆட்டுக்கிடாய். (*அக. நி.*)

இடிக்கடை iṭikkaṭai, *n.* See இடுக்கடி. *Loc.*

இடிகொம்பு iṭi-kompu, *n.* <இடி-+. Small mortars set into a pole, used in pyrotechny; கழியில் அடித்துள்ள அதிர்வேட்டுக் குழாய். (W.)

இடிச்சக்கை iṭi-c-cakkai, *n.* <id.+. Tender jack fruit; பலாப்பிஞ்சு. *Nāñ.*

இடிச்சொல் iṭi-c-col, *n.* <இடி+. See இடி[2]. இடிச்சொற் பொருஅ விலக்கண வினையர் (*பெருங். உஞ்சைக்.* 38, 345).

இடிசல் iṭical, *n.* < இடி-. 1. Dilapidation; ruin; அழிவு. *கோயில் இடிசலாய்க் கிடக்கிறது. Loc.* 2. Broken rice; நொய்யரிசி. *Colloq.*

இடிசாந்து iṭi-cāntu, *n.* < இடி-+. Pounded mortar-lime; இடித்துத் துவைத்த சுண்ணம்பு. *Loc.*

இடிசாபம் iṭi-cāpam, *n.* < id.+. Evil hour; இடிசாமம். *இடிசாபமான குறையோ* (மஸ் தான். 124).

இடிதலைநோய் iṭi-talainōy, *n.* < id.+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 149.)

இடிப்பு iṭippu, *n.* < id. Battle-cry; வீரகர்ச்சனை. *மல்ல ரிடிப்பினை மாறுகொண்டன வந்திக ரேத்தரோ* (கம்பரா. பள்ளி. 17).

இடிபூரா iṭi-pūrā, *n.* < id.+. White sugar; வெள்ளைச்சர்க்கரை. *Mod.*

இடிம்பம் iṭimpam, *n.* < *ḍimbha.* (நாநார்த்த.) 1. Baby, small child; கைக்குழந்தை. 2. Misery; பெருந்துன்பம். 3. Spleen; மண்ணீரல். 4. Egg of birds; பறவை முட்டை. 5. Castor plant; ஆமணக்கு.

இடிமாந்தம் iṭi-māntam, *n.* < இடி-+. False accusation; பொய்யான குற்றச்சாட்டு. *Loc.*

இடிமீன் iṭi-mīṉ, *n.* prob. இடி+. A fish; மீன்வகை. *Pond.*

இடிமேலிடி iṭi-mēl-iṭi, *n.* < id.+. A defect in cattle; மாட்டுக்குற்றம். (பெரியமாட். 20.)

இடியம்பு iṭi-y-ampu, *n.* < இடி-+. See இடிகோம்பு. (W.)

இடுக்கடி iṭukkaṭi, *n.* < இடுக்கு+. Distress; துன்பம். *Colloq.*

இடுக்காஞ்சட்டி iṭukkāñ-caṭṭi, *n.* < id.+ ஆ-+. Bowl of a lamp, made of clay; விளக்குத்தகழி. *Tinn.*

இடுக்கிச்சட்டம் iṭukki-c-caṭṭam, *n.* < இடுக்கி+. Cleat; கம்பிச்சட்டம். *Mod.*

இடுக்குப்பாளை iṭukku-p-pāḷai, *n.* < இடுக்கு-+. Palmyra tree for drawing sweet toddy; பதநீர் இறக்கும் பனை. (வை. மூ.)

இடுக்குப்பொட்டணி iṭukku-p-poṭṭaṇi, *n.* < id.+. Vessel or bag carried under the armpit; கக்கப்பாளம். (யாழ். அக.)

இடுக்குமரம் iṭukku-maram, *n.* < id.+. A kind of oil-press; செக்குவகை. (W.)

இடுக்குவார்கைப்பிள்ளை iṭukkuvār-kai-p-piḷḷai, *n.* < id.+. One who is easily led by others; எடுப்பார்கைப்பிள்ளை. *Loc.*

இடுகடை iṭu-kaṭai, *n.* < இடு-+. Front of a house, where alms are given; பிச்சையிடும் வீட்டுவாயில். (W.)

இடுகளி iṭu-kaḷi, *n.* < id.+. Must caused to an elephant by feeding it with the leaves of atis, etc.; அதிமதுரத்தழை முதலியவற்றை யானைக்கு இடுதலால் அதற்கு உண்டாம் மதம். *இடுகளியானை* (பெருங். மகத. 27, 145).

இடுகறல் iṭu-kaṟal, *n.* < id.+. Fuel; விறகு. (நிகண்டு.)

இடுகுறி iṭu-kuṟi, *n.* < id.+. A document by which paddy was entrusted to private individuals, to be stored up in their houses; முற்காலத்தில் நெல்லைச் சேமித்து வைக்கும்படியாக ஒருவரிடம் ஒப்புவிக்கும் பத்திரம். (Tr. Rev. N. iv, Glossary.)

இடுப்புக்கட்டு-தல் iṭuppu-k-kaṭṭu-, *v. intr.* < இடுப்பு+. To gird up one's loins, as for a fight; சண்டை பிடிக்க முந்துதல். *நீ சண்டைக்கு இடுப்புக்கட்டாதே* (பெண்மதிமாலை. பக். 9).

இடுபலம் iṭupalam, *n.* cf. இசிபலம். Wild snake-gourd; பேய்ப்புடல். (வை. மூ.)

இடுபெயர் iṭu-peyar, *n.* < இடு-+. (Gram.) Radical or primitive noun; இடுகுறிப்பெயர். (தொல். சொல். 174, சேனா.)

இடும்பர் iṭumpar, *n.* < இடும்பு. Rākṣasas; இராக்கதர். (அக. நி.)

இடுமம் iṭumam, *n.* prob. இடு-. cf. இடவன். Clod of mud or earth on which the potter rests his wheel; குயவன்சக்கரத்தைப் பூமியிற் பொருந்தற்கு இடும் மண்கட்டி. *Loc.*

இடுலி iṭuli, *n.* < *ḍuli.* Female turtle; பெண்ணாமை. (W.)

இடுவல் iṭuval *n.* cf. இடவை. Way; வழி. *Tinn.*

இடுவை iṭuvai, *n.* cf. id. Lane; சந்து. *Loc.*

இடை[1] iṭai, *n.* prob. இடு-. 1. Time; பொழுது. (குறிஞ்சிப். 137, உரை.) 2. Equity; நடுவுநிலை. *இடைதெரிந் துணருங் . . . காட்சி* (பெரும்பாண். 445). 3. Difference; வேறுபாடு. *வாசவதத்தையொ டிடைதெரி வின்மையின்* (பெருங். வத்தவ. 6, 56).

இடை[2] iṭai, *n.* < *iḍā.* (நாநார்த்த.) 1. Svarga, heaven; சுவர்க்கம். 2. Cow; பசு. 3. Speech; வாக்கு.

இடைக்கட்டு iṭai-k-kaṭṭu, *n.* < எடை+. Balancing weight; சமன் செய்வதற்குரிய நிறை. *Loc.*

இடைக்கார் iṭaikkār, n. <இடை+. A kind of paddy; நெல்வகை. (நாநார்த்த.)

இடைக்குலநாதன் iṭai-k-kula-nātaṉ, n. <இடை+குலம்+. Kṛṣṇa; கிருஷ்ணன். (R.)

இடைகழி iṭaikaḻi, n. The Viṣṇu shrine at Tiru-k-kōvalūr; திருக்கோவலூர்த் திருமால் கோயில். நீயுந் திருமகளு நின்றாயால் . . . கோவ லிடைகழியே பற்றி யினி (திவ். இயற். முதல்திருவந். 86).

இடைச்சம்பவம் iṭai-c-campavam, n. <இடை+. Chance, accident; தற்செயல். *Pond.*

இடைச்சீலை iṭai-c-cīlai, n. <id.+. Curtain; திரை. (R.)

இடைத்தீன் iṭai-t-tīṉ, n. <id.+. Lunch, light refreshments; சிற்றுண்டி. *Pond.*

இடைதல் iṭai-tal, n. <id.+prob. தலம். Earth; பூமி. (அக. நி.)

இடைநிலை iṭai-nilai, n. <id.+. (Gram.) Occurrence of word or words as complementary to the subject or predicate in a sentence; எச்சமுதலியன கொண்டுமுடியுஞ் சொற்களினிடையில் ஏற்ற பிறசொல் வருகை. எச்சொல் லாயினு மிடை நிலை வரையார் (தொல். சொல். 237).

இடைப்பூட்டு iṭai-p-pūṭṭu, n. <id.+. Girdle, belt; அரைக்கச்சு. (W.)

இடைபாடு iṭai-pāṭu, n. <id.+. *Nāñ.* 1. Business; அலுவல். 2. Business transaction; வியாபாரமுதலிய விஷயமாக இருவரிடை நிகழுஞ் செய்தி.

இடைமடு-த்தல் iṭai-maṭu-, v. tr. <id. +. To interpolate; இடைச்சேருத்தல். புன் சொலிற் றந்திடைமடுத்த கந்தி (பரிபா. பாயி.).

இடைமுள் iṭai-muḷ, n. <id.+. (W.) 1. Small new eruption about a healing ulcer; புண்ணிலே தோன்றும் மறுமுள். 2. A kind of eruption; கரப்பான்வகை.

இடைமேடு iṭaimēṭu, n. <id.+. Field, parts of which are slightly higher in level than the surrounding parts; இடையிடையே சிறிது மேடான பாகமுள்ள வயல். (W.)

இடையறு-த்தல் iṭai-y-aṟu-, v. tr. <id. +. To cut through or divide, as an army; படை முதலியவற்றை ஊடறுத்துச்சென்று பிரித்தல். வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்து (மதுரைக். 725).

இடையன்கால்வெள்ளி iṭaiyaṉ-kāl-veḷḷi, n. perh. இடையன்+கால்+. The second *nakṣatra;* பரணி. (W.)

இடையாந்தரம் iṭai-y-āntaram, n. <இடை+அந்தரம். Intermediate space or time; இடைப்பட்ட காலம் அல்லது இடம். அந்த வேலை இடையாந்தரத்திலே கெட்டுப்போயிற்று. (W.)

இடையீடு iṭai-y-īṭu, n. <இடையிடு-. Land, the ownership of which had been transferred from the state to a person; அரசாங்க வுரிமையாயிருந்து பிறருக்கு மாற்றப்பட்ட நிலம். இக் கச்சம் பிழைப்போர் யில்லங்களுடைய இடையீடு அக நாழியைச் செலவினொடொக்கும் (T. A. S. iii, p. 193).

இடையெடு-த்தல் iṭai-y-eṭu-, v. tr. <எடை+. (ஈடு, 10, 2, 5.) 1. To weigh; நிறுத் தல். 2. To determine, settle; நிச்சயித்தல்.

இடைவட்டை iṭai-vaṭṭai, n. <இடை+. That which is in the middle; நடுவிலுள்ளது. (S. I. I. viii, 232.)

இடைவாய் iṭaivāy, n. <எடை+. Degrees or marks upon a steelyard; கழுத்துக் கோலின் அளவுக்குறி யிடம். (R.)

இடைவு iṭaivu, n. <இடை-. (யாழ். அக.) 1. Defeat; தோல்வி. 2. Interspace; gap; நீக்கம். 3. Open space; வெளி.

இடைவெட்டுப்பேச்சு iṭai-veṭṭu-p-pēccu, n. <இடை+வெட்டு+. Derision, ridicule; பரிகாசவார்த்தை. (W.)

இடோல் iṭōl, n. <Hindi. *ḍhōl.* A kind of drum; பறைவகை. (W.)

இடோலி iṭoli, n. <Hindi. *ḍōlī.* Litter; ஒருவகைச் சிவிகை. (W.)

இண்டனம் iṇṭanam, n. <*hiṇḍana.* (நா நார்த்த.) 1. Play; sport; கிரீடை. 2. Sexual intercourse; சுரதம். 3. Vehicle; வாகனம்.

இண்டிறுக்கெனல் iṇṭirukkeṉal, n. Onom. expr. of snoring; குறட்டைவிடுங் குறிப்பு. இண்டிறுக்கென்னும் அனுகரணத்தாற் கொரக்கை விடுதலால் (நீலகேசி, 375, உரை).

இண்டைச்சுருக்கு iṇṭai-c-curukku, n. <இண்டை+. Chaplet of flowers; மாலைவகை. (பெரியபு. முருக. 9.)

இணக்குப்பார்வை iṇakku-p-pārvai, n. <இணக்கு+. Decoy; பார்வைமிருகம். இணக்குப் பார்வையிட்டு மிருகம் பிடிப்பாரைப்போலே ஸஜா தீயரைக்கொண்டே காரியங்கொள்வோ மென்று (ஆசார்ய. அவ. பக். 2).

இணகு iṇaku, n. <இணங்கு-. Simile; உவமை. இணகிறந் தகன்றபாசம் (ஞானா. 45).

இணங்கற்பிஞ்சு iṇaṅkaṟ-piñcu, *n.* < இணங்கல் +. Two; இரண்டு. *Cheṭṭi.*

இணங்கு¹-தல் iṇaṅku-, *5 v. intr.* To befriend; நட்புச்செய்தல். இனிச் சிவபத்தர்களோ டிணங்குக (சி. போ. 12, 2).

இணங்கு² iṇaṅku, *n.* < இணங்கு-. Comrade; நண்பினன்-ள். அவனது துணை அவனது இணங்கு என்பன துணைக்கிழமை (தொல். சொல். 80, சேனா.).

இணர்-தல் iṇar-, *5 v. intr.* To pervade; வியாபித்தல். இணரு மவன்றன்னை யெண்ணல் (திருமந். 3035).

இணுக்கு iṇukku, *n.* Dirt, stain; அழுக்கு. (அக. நி.)

இணைக்கல்லை iṇai-k-kallai, *n.* < இணை +. A plate made of two leaves; இரண்டிலைகளால் தைக்கப்பட்ட கலம். (பெரியபு. கண்ணப்ப. 118.)

இணையடிகால் iṇai-y-aṭi-kāl, *n.* < id. +. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரிய மாட். 18.)

இத்தண்ட ittaṇṭa, *adj.* So much; இத்தனை. *Tj.*

இத்தம் ittam, *n.* < இந்தம். Tamarind; புளி. (சங். அக.)

இத்தி itti, *n.* cf. இந்தி. Cat; பூனை. (அக. நி.)

இத்துமம் ittumam, *n.* < *idhma.* (நாநார்த்த.) 1. Spring season; வசந்தம். 2. Fuel; விறகு. 3. A kind of sacrificial fuel; ஒருவகைச் சமித்து. 4. Sexual desire; காமம்.

இத்துவரம் ittuvaram, *n.* < *idvara.* Bull; எருது. (சங். அக.)

இத்வரன் itvaraṉ, *n.* < *itvara.* (நாநார்த்த.) 1. Deceitful person; கயவன். 2. Evil person; தீயோன். 3. Traveller; வழிச்செல்வோன். 4. Destitute person; வறியன்.

இதக்கை itakkai, *n.* prob. இதழ் +. Integument on the top of a palmyra fruit; பனங்காயின் தலையிலுள்ள தோடு. (அகநா. 365.)

இதடக்கு itaṭakku, *n.* A part in jewels; அணியுறுப்புவகை (S. I. I. v, 272.)

இதடி itaṭi, *n.* Water; நீர். (பிங்.)

இதநானம் ita-nāṉam, *n.* prob. *hitā* +. Bathing the body with sacred ashes; ஆக்கினேய ஸ்நானம். (தத்துவப்பி. 46, உரை.)

இதம் itam, *n.* < *ita.* Knowledge; ஞானம். (நாநார்த்த.)

இதயவாசனை itaya-vācaṉai, *n.* < *hṛdaya* +. An ornament; அணிவகை. இலைப்பெரும்பூணு மிதயவாசனையும் (பெருங். இலாவாண. 19, 117).

இதரம் itaram, *n.* < *itara.* Lowness; கீழ்மை. (நாநார்த்த.)

இதரன் itaraṉ, *n.* < *itara.* 1. Ignorant person; பாமரன். (நாநார்த்த.) 2. Man of low caste; mean person; கீழ்மகன். (அக. நி.)

இதழ் itaḻ, *n.* A pasture weed; ஓரிதழ்த் தாமரை. (வை. மூ.)

இதழகலந்தாதி itaḻ-akal-antāti, *n.* < இதழ் + அகல்- +. (Pros.) A kind of *antāti* verse without labio-dentals or labials; நிரோட்டகவந்தாதி.

இதழலர்-தல் itaḻ-alar-, *v. intr.* < id. +. To open the lips; பேச வாய்திறத்தல். இதழலர்ந்துநின் றேர்மொழி யென்னுடன் மொழிவீர் (குலோத். கோ. 14).

இதளை itaḷai, *n.* < இதலை. Navel; கொப்பூழ். (சங். அக.)

இதாசனி itācaṉi, *n.* < *hitā* + *āsana.* Person who sits at ease, cross-legged; சுகாசனத்திலிருப்பவன். இதாசனியா யிருக்தேன் (திருமந். பாயி. 56).

இதி¹ iti, *n.* perh. *iti.* End; இறுதி. (அக. நி.)

இதி² iti, *n.* perh. *īti.* Devil; பேய். (அக. நி.)

இதை itai, *n.* Italian millet; தினை. குறவர் பன்மணி யரித்திதை விளைப்பன குறிஞ்சி (பெரியபு. திருக்குறிப்பு. 7).

இந்தம்வரம் intamvaram, *n.* < *indambara.* Blue Indian water-lily; நீலோற்பலம். (சங். அக.)

இந்தளம் intaḷam, *n.* prob. இந்தனம். Chafing dish, used for warming; தூம்மட்டிச்சட்டி. இந்தளத்திலே தாமரை பூக்கையிலே (திவ். திருக்குறுந். 5, வ்யா.).

இந்தனம் intaṉam, *n.* < *indhana.* 1. See இந்தளம். (நாநார்த்த.) 2. Smoke; புகை. (அக. நி.)

இந்தி¹ inti, *n.* cf. இத்தி. Cat; பூனை. (W.)

இந்தி² inti, *n.* < Hind. *hindi.* Hindi language; ஹிந்திமொழி. *Mod.*

இந்திகை intikai, *n.* cf. இந்துகை. One of the five energies of *aparanātam*, q.v.; அபரநாத சத்திகளுள் ஒன்று. (சதாசிவரூ.)

இந்திரகாந்தச்சேலை intirakānta-c-cēlai, *n.* <*indra*+. A kind of saree; புடைவை வகை. (பஞ்ச. திருமுக. 1161.)

இந்திரகெந்தம் intirakentam, *n.* cf. இந்திரசுகந்தம். Indian sarsaparilla; நன்னாரி. (சித். அக.)

இந்திரதந்திரம் intira-tantiram, *n.* <*indra*+. Allurement; deception; இந்திர சாலம். (திருப்பு. 829.)

இந்திரதரு intirataru, *n.* <*indra-dru.* Arjuna; மருது. (சித். அக.)

இந்திரம் intiram, *n.* <*indra.* Indra's position or rank; இந்திரபதவி. *இந்திரத்தை யினி தாக வீந்தார்போலும்* (தேவா. 721, 8).

இந்திரரேயம் intirarēyam, *n.* cf. இந்திரேயம். A species of *pāvettai;* வெட்பாவட்டை. (பச். மூ.)

இந்திரலோகம் intira-lōkam, *n.* <*indra* +. The sixteen kinds of world, viz., *sautarumam, īcāṉam, saṉatkumāram, māhēntiram, piramam, piramōttaram, ilāntavam, kāpiṣṭam, cukkiram, mahācukkiram, catāram, sahasrāram, ānatam, pirāṇatam, āraṇam, accutam;* ஸௌதருமம் ஈசானம் ஸனத்குமாரம் மாஹேந்திரம் பிரமம் பிரமோத்தரம் இலாந்தவம் காபிஷ்டம் சுக்கிரம் மஹாசுக்கிரம் சதாரம் ஸஹஸ்ராரம் ஆநதம் பிராணதம் ஆரணம் அச்சுதம் எனப் பதினாறுவகை உலகங்கள். (தக்கயாகப். பக். 265.)

இந்திரவர்ணப்பட்டு intira-varṇa-p-paṭṭu, *n.* <id.+*varṇa*+. A kind of silk saree; பட்டுப்புடைவைவகை. *இழையாயிரம் விலைப்பொன் இந்திரவர்ணப்பட்டாடை* (கோவ. க. 17).

இந்திரன் intiraṉ, *n.* <*indra.* (நாநார்த்த.) 1. The inner soul; அந்தரான்மா. 2. Sun; சூரியன்.

இந்திராக்கம் intirākkam, *n.* <*indrākṣa.* A curl or mark found below the ears of horses; குதிரைச்செவியினடியிற் காணப்படுஞ் சுழிவகை. (சுக்கிரநீதி, 314.)

இந்திராணம் intirāṇam, *n.* Five leaved chaste tree; நொச்சி. (சித். அக.)

இந்திராணி intirāṇi, *n.* <*indrāṇī.* A mode of sexual enjoyment; சுரதவகை. (நாநார்த்த.)

இந்திரி intiri, *n.* cf. இந்திரகெந்தம். Indian sarsaparilla; நன்னாரி.

இந்திரியவொழுக்கு intiriya-v-oḻukku, *n.* <இந்திரியம்+. Spermatorrhoea; இந்திரியந் தானே வெளிப்படும் நோய். (சு. வை. ர. 607.)

இந்திரை[1] intirai, *n.* <*indrā.* Seville orange; கடாரை. (நாநார்த்த.)

இந்திரை[2] intirai, *n.* <*indirā.* Yellow orpiment; அரிதாரம். (சங். அக.)

இந்து[1] intu, *n.* Indian black bear; கரடி. (அக. நி.)

இந்து[2] intu, *n.* prob. *indhana.* Charcoal; கரி. (அக. நி.)

இந்துகை intukai, *n.* See இந்திகை. (திருமந். 1266.)

இந்துளம் intuḷam, *n.* cf. இந்துள். Emblic myrobalan; நெல்லி. (வை. மூ.)

இப்படி ippaṭi, *n.* [T. *ibbadi.*] Penal assessment; தண்டத்தீர்வை. (R. T.)

இப்பம் ippam, *adv.* Corr. of இப்பவும். Now, at the present moment; இப்பொழுது. *Colloq.*

இப்பியை ippiyai, *n.* <*ibhyā.* (நாநார்த்த.) 1. Konkani resin; வெள்ளைக்குங்கிலியம். 2. Female elephant; பெண்யானை.

இப்போ ippō, *adv.* Corr. of இப்போது. See இப்பம்.

இம்பரர் imparar, *n.* <இம்பர். Beings of this world; இவ்வுலகத்தவர். *இம்பர ரேக்குறு மினிய புத்தமுது* (திருவாட்போக்கிப். இந்திரன்சாப. 6).

இம்புராவேர் impurā-vēr, *n.* cf. இம்பூறல் +. A root, used for dyeing scarlet; சாயவேர். *Loc.*

இம்மி immi, *n.* (அக. நி.) 1. Lie; பொய்ம்மை. 2. Sense; புலன்.

இமம் imam, *n.* <*hima.* (நாநார்த்த.) 1. Sandalwood; சந்தனம். 2. Cold; chilliness; சீதளம்.

இமழி imaḻi, *n.* cf. இபம். Elephant; யானை. (அக. நி.)

இமாமத் imāmat, *n.* <Arab. *imāmat.* The act of leading the prayers in a mosque; பள்ளிவாசலில் தியானத்தை ஆரம்பித்து நடத்துகை.

இமிலை imilai, *n.* cf. திமிலை. A kind of drum; ஒரு வாச்சியம். *தவில்கணம் பறைகாள மோடிமிலை* (திருப்பு. 220).

இமிழ்[1] imiḻ, *n.* <இமிழ்-. (அக. நி.) 1. Sweetness, pleasantness; இனிமை. 2. Melody; இசை.

இமிழ்²-த்தல் imiḻ-, *11 v. tr.* cf. இமை-. To wink; சிமிட்டுதல். (நாநார்த்த.)

இமிழ்³-தல் imiḻ-, *4 v. intr.* To abound; மிகுதல். உண்மகிழ் மூவகை பூக்க மிமிழ (பெருங். நரவாண. 7, 3).

இமிழி imiḻi, *n.* < இமிழ்-. Melody; இசை. (அக. நி.)

இமை-த்தல் imai-, *11 v. intr.* To sleep; தூங்குதல். பூணைநோக்கி யிமையான் (கலித். 60).

இயக்கசத்துவம் iyakka-cattuvam, *n.* < இயக்கர் +. (Erot.) The natural disposition of a woman classed under the *yakṣa* type, one of *pattu-cattuvam*, q.v.; பத்துச்சத்துவங்களுள் இயக்கசாதிப் பெண்ணின் சத்துவம். (கொக்கோ. 4.)

இயக்கம் iyakkam, *n.* < இயங்கு-. *Mod.* 1. Propaganda; கிளர்ச்சி. 2. Movement; பிரசாரம். கூட்டுறவு இயக்கம்.

இயக்கன் iyakkaṉ, *n.* < இயக்கு-. Leader; தலைமையாக நின்று நடத்துபவன். (கலித். 95, உரை.)

இயக்கு-தல் iyakku-, *5 v. tr.* Caus. of இயங்கு-. To conduct; நடத்திவருதல். இயக்கக் கடவனுகவும் (S. I. I. i, 79).

இயக்குரோதம் iyakkurōtam, *n.* < *nyagrōdha.* Banyan tree; ஆல். (வை. மூ.)

இயங்கு-தல் iyaṅku-, *5 v. intr.* < இலங்கு-. To shine; ஒளிசெய்தல். (நாநார்த்த.)

இயங்குபடையரவம் iyaṅku-paṭai-y-aravam, *n.* < இயங்கு- +. (Puṟap.) Theme describing the uproar caused by the march of a besieging army; பகையரணை முற்றுதற்கெழுந்த படையின்செலவால் உண்டாம் ஆரவாரத்தைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 63.)

இயந்தா iyantā, *n.* < *yantā* nom. sing. of *yantṛ.* (நாநார்த்த.) 1. Mahout; யானைப்பாகன். 2. Driver of chariots, etc.; சாரதி.

இயந்திரம் iyantiram, *n.* < *yantra.* (நாநார்த்த.) 1. A kind of vessel or receptacle; பாண்டவகை. 2. Net; கண்ணி.

இயம் iyam, *n.* Fly; ஈ. (அக. நி.)

இயம்பல் iyampal, *n.* < இயம்பு-. (அக. நி.) 1. Word; சொல். 2. cf. அம்பல். Reproach; பழிமொழி.

இயம்பு-தல் iyampu-, *5 v. intr.* To call, as for help; கூப்பிடுதல். மடப்பிடி . . . நெடுவரை யியம்பும் (மலைபடு. 309, உரை).

இயமகாமாலை iyama-kāmālai, *n.* prob. இயமம் +. A kind of jaundice; காமாலைவகை. (தஞ். சரசு. iii, 122.)

இயமம் iyamam, *n.* < *yama.* Restraint; தடை. (நாநார்த்த.)

இயல்¹ iyal, *n.* < இயல்-. 1. Resemblance; சாயல். (நாநார்த்த.) 2. Greatness; பெருமை. இது தமிழ்முனிவன் வைகு மியறகு குன்றம் (கம்பரா. மீட்சிப். 174).

இயல்²(லு)-தல் iyal-, *3 v. tr.* To paint, draw; சித்திர முதலியன எழுதுதல். புதுவதியன்ற மெழுகுசெய் படமிசை (நெடுநல். 159).

இயல்பு iyalpu, *n.* < இயல்-. (Log.) One of ten methods of acquiring true knowledge; பிரமாணம் பத்தனுள் ஒன்று. (மணி. 27, 10.)

இயல்புகணம் iyalpu-kaṇam, *n.* < இயல்பு +. (Gram.) Vowels, nasals and semi-vowels; உயிர்க்கணம் மென்கணம் இடைக்கணங்கள். (தக்கயாகப். 602.)

இயல்புவிளி iyalpu-viḷi, *n.* < id. +. (Gram.) Vocative case in which the noun is uninflected; ஈறுதிரியாது நிற்கும் விளிவேற்றுமை. (கலித். 80, உரை.)

இயல்வாகை iyalvākai, *n.* A species of unarmed brasiletto; பெருங்கொன்றை. (L.)

இயல்வாணர் iyal-vāṇar, *n.* < இயல் +. Poets; புலவர். இயல்வாணருக் களித்தான் (பெருந்தொ. 1348).

இயலசை iyal-acai, *n.* < id. +. (Pros.) A class of metrical syllables; நேரசை நிரையசைகள். இயலசை முதலிரண்டு (தொல். பொ. 318).

இயலொழுக்கம் iyal-oḻūkkam, *n.* < id. +. (Jaina.) Right conduct; நல்லொழுக்கம். இணையில்லா வியலொழுக்க மிசைத்ததுநின் னிறைமையோ (பெருந்தொ. 167).

இயவம் iyavam, *n.* < *yava.* (நிகண்டு.) 1. A kind of grain; தானியவகை. 2. Paddy; நெல்.

இயவு iyavu, *n.* (அக. நி.) 1. cf. இயவை. Forest, jungle; காடு. 2. Village; ஊர்.

இயவுள் iyavuḷ *n,* Child; பிள்ளை. (அக. நி.)

இயவை iyavai, *n.* < *yava.* Dholl; துவரை. (பச். மூ.)

இயற்காட்சி iyaṟ-kāṭci, *n.* < இயல் +. (Jaina.) Right faith; நற்காட்சி. பேதில்லா வியற்காட்சி யருளியது நின்பெருமையோ (பெருந்தொ. 167).

இயற்குணப்பெயர் iyaṟ-kuṇa-p-peyar, *n.* <id.+. (Gram.) Noun denoting quality; தொழிலையன்றிப் பண்பேசுறிக்கும் பெயர். (நன். 269, மயிலை.)

இயற்பெயர் iyaṟ-peyar, *n.* <id.+. (Gram.) Noun common to both *uyartiṇai* and *akṟiṇai;* விரவுப்பெயர். (தொல். சொல். 174, சேனா.)

இயற்றண்டம் iyaṟṟaṇṭam, *n.* <id.+. Ordinary fine; சாதாரண அபராதம். நாலேகால் காணம் இயற்றண்ட மிடப்பெறுவதாகவும் (S. I. I. iv, 295).

இயற்றி iyaṟṟi, *n.* <இயற்று-. 1. Support; உதவி. கைநிற்கும் பரிகர முண்டாயிருக்க இயற்றி யில்லாதாரைப் போலே (திவ். பெரியாழ். 5, 3, 6, வ்யா. பக். 574). 2. Skill; சாமர்த்தியம். (ஈடு, 9, 1, 4, ஜீ.) 3. Qualification; யோக்கியதை. (ஈடு, 9, 1, 4, ஜீ.) 4. High position; உச்சாயம். (ஈடு, 9, 1, 4, ஜீ.)

இயறல் iyaṟal, *n.* <இயல்-. Final bliss; முத்தி. (அக. நி.)

இயன்ஞானம் iyaṉ-ñāṉam, *n.* <இயல்+. (Jaina.) Right knowledge; நன்ஞானம். இரு ளில்லா வியன்ஞான மியம்புவ துன் னியல்பாமோ (பெருந்தொ. 167).

இயாகதம் iyākatam, *n.* Common sesban; சிற்றகத்தி. (பச். மூ.)

இயை iyai, *n.* cf. இயைமே. Plantain; வாழை. (அக. நி.)

இயைந்துறை iyainturai, *n.* <இயை-+. (Budh.) Collection of several distinct objects; பலபொருள்களின் வரையறைப்பட்ட தொகுதி. (மணி. 30, 193.)

இயைபிலிசைக்குறி iyaipil-icai-k-kuṟi, *n.* <இயைபு+இல்+. Bracket; இடைப்பிறவரலாக வருஞ்சொற்களை யடைக்குங் குறிகள். (பாலபாடம்.)

இர் ir, *part.* 1. (Gram.) Suffix denoting second person plural; முன்னிலைப்பன்மை விகுதி. வந்தனிர். 2. (Gram.) Suffix denoting third person plural; படர்க்கைப்பன்மை விகுதி. கேளிர், பெண்டிர்.

இரக்கம் irakkam, *n.* <இரங்கு-. Absorption; state of being engrossed; ஈடுபாடு. (திவ். பெரியாழ். 3, 6, 10, வ்யா. பக். 696.)

இரங்கற்பா iraṅkaṟpā, *n.* <இரங்கல்+. Elegy; சாமகவி. *Mod.*

இரங்கு-தல் iraṅku-, *5 v. intr.* 1. To speak; கூறுதல். புலம்பெலாந் தீர்க்குவேமன் னென் றிரங்குபு (கலித். 83). 2. To be absorbed, engrossed; ஈடுபடுதல். இரங்குங் கூம்பும் (திவ். பெரியாழ். 3, 6, 10).

இரசக்கட்டி iraca-k-kaṭṭi, *n.* <இரசம்+. Cinnabar; பவளமனோசிலை. *Pond.*

இரசசுத்தி iraca-cutti, *n.* <id.+. Lead; ஈயம். (வை. மூ.)

இரசதநிமிளை iracata-nimiḷai, *n.*<*rajata* +. Bismuth of a white colour; வெள்ளிநிமிளை. (R.)

இரசதம் iracatam, *n.* <*rajata.* (நாநார்த்த.) 1. *Nakṣatra;* நட்சத்திரம். 2. Tusk of an elephant; யானைத்தந்தம். 3. Whiteness; white colour; வெள்ளை. 4. Garland of pearls; முத்துமாலை. 5. White mountain, silver mountain; வெண்மலை. 6. Gold; பொன். 7. Blood; இரத்தம்.

இரசதமணல் iracata-maṇal, *n.* <id.+. Sand containing silver; வெள்ளிகலந்த மணல். (W.)

இரசபாஷாணம் iraca-pāṣāṇam, *n.* <இரசம்+. A prepared arsenic; வைப்புப் பாஷாணவகை. (வை. மூ.)

இரசமுறி-த்தல் iraca-muṟi-, *v. intr.* <id.+. 1. To prepare mercury; பாதரசஞ் செய்தல். 2. To counteract mercurial poison in the body; உடம்பிலிருந்து பாதரச விஷத்தை நீக்குதல். (W.)

இரசல் iracal, *n.* perh. இளை-. Weakness, leanness; emaciated condition; இளைத்த தன்மை. *Loc.*

இரசவாதசாலை iracavāta-cālai, *n.* <*rasa* +*vāda*+. Laboratory; இரசாயனசாஸ்திர பரிசோதனை செய்யும் இடம். *Pond.*

இரசவைப்பு iraca-vaippu, *n.* <id.+. Any preparation of mercury, amalgam; இரசத் தாலாகிய மருந்துமுதலியன. (W.)

இரசனம்[1] iracaṉam, *n.* <*rasana.* (நாநார்த்த.) 1. Gold; பொன். 2. Silver; வெள்ளி. 3. Poison; விஷம். 4. Gum, paste; பிசின். 5. Fruit; பழம். 6. Decoction; கஷாயம். 7. Extract of leaves; இலைச்சாறு. 8. Sounding; ஒலிக்கை. 9. Food; உணவு. 10. Friendship; நேயம்.

இரசனம்[2] iracaṉam, *n.*<*radana.* Tooth; பல். (நாநார்த்த.)

இரசனி iracaṉi, *n.* <*rajanī.* Red cotton; செம்பஞ்சு. (நாநார்த்த.)

இரசனிமுகம் iracaṉi-mukam, *n.* <*rajanī-mukha.* The period of 1½ hours

before and after sunset; பிரதோஷகாலம். (வேதாரணியபு. பிரதக். 95, கீழ்க்குறிப்பு.)

இரசனை[1] iracaṉai, n. <racanā. (நாநார்த்த.) 1. A kind of array of troops; அணிவகை. 2. Stringing of garlands; மலர் முதலியவற்றைத் தொடுக்கை.

இரசனை[2] iracaṉai, n. <raśanā. A girdle of 16 strings; பதினாறுகோவையுள்ள அரைப்பட்டிகையான காஞ்சி. (நாநார்த்த.)

இரசாலம் iracālam, n. <rasāla. (நாநார்த்த.) 1. Konkani resin; குந்துருப்பிசின். 2. Gum of the myrrh tree; போளம்.

இரசாலை iracālai, n. <rasālā. (நாநார்த்த.) 1. Harialli grass; அறுகு. 2. Curds mixed with sugar and spices; சம்பாரத்தயிர். 3. Tongue; நா. 4. *Veḷḷīṟil*, a kind of plant; வெள்ளீறில்.

இரசிதம் iracitam, n. <rasita. (நாநார்த்த.) 1. Gilt; பொன்னின் பூச்சு. 2. That which makes noise; ஒலிசெய்வது. 3. Thunder-clap; இடிமுழக்கம்.

இரசேந்திரம் iracēntiram, n. <rasēndra. Philosopher's stone; பரிசவேதி. (W.)

இரசை iracai, n. <rasā. (நாநார்த்த.) 1. Worm-killer; பங்கம்பாளை. 2. Earth; பூமி. 3. Indian turnsole; ஆனைவணங்கி. 4. Italian millet; தினை. 5. Tongue; நா.

இரசோனகம் iracōṉakam, n. <rasōna. Garlic; வெள்ளுள்ளி. (சங். அக.)

இரஞ்சகம் irañcakam, n. Pan of a flint-lock gun; துப்பாக்கிக்காது. *Pond.*

இரஞ்சனம் irañcaṉam, n. <rañcana. Red sanders; செஞ்சாந்து. (நாநார்த்த.)

இரஞ்சனி irañcaṉi, n. <rañjanī. (நாநார்த்த.) 1. Manjeet; மஞ்சிட்டை. 2. Jaw; கவுள். 3. Indigo; அவுரி. 4. Wild croton, *Croton polyandrum;* கம்பிலீலம்.

இரட்சணை iraṭcaṇai, n. <rakṣaṇā. Protection; இரட்சிப்பு. *Pond.*

இரட்சாமூர்த்தி iraṭcā-mūrtti, n. <rakṣā+. Viṣṇu, as Protector; திருமால். இரட்சா மூர்த்தியான ஆமை (தக்கயாகப். 341, உரை).

இரட்டி-த்தல் iraṭṭi-, 11 v. intr. <இரட்டு-. To slight, despise; இகழ்தல். இதை நாம் இரட்டிக்கப் போகாது (தமிழறி. 43).

இரட்டுமி iraṭṭumi, n. prob. இரட்டு-. A kind of drum; பறைவகை. (W.)

இரட்டை iraṭṭai, n. perh. இரண்டு. A kind of pearl; முத்துவகை. (S. I. I. ii, 22.)

இரட்டைக்குச்சி iraṭṭai-k-kucci, n. <இரட்டை+. The art of fencing with quarter-staves in both hands; சிலம்ப வித்தைவகை. (மதி. களஞ். i, 66.)

இரட்டைக்குலுக்கி iraṭṭai-k-kulukki, n. <id.+. A kind of saree, with long stripes; நெடுங்கோடுள்ள புடைவைவகை. *Loc.*

இரட்டைக்குறுக்கு iraṭṭai-k-kuṟukku, n. <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 141.)

இரட்டைச்சின்னம் iraṭṭai-c-ciṉṉam, n. <id.+. Double clarion; இரட்டையான ஊதுகுழல் வகை. (தக்கயாகப். 344, உரை.)

இரட்டைச்சொல்லு iraṭṭai-c-collu, n. <id.+. (Gram.) Reduplicated onom. word; இரட்டையாகவருங் குறிப்புச்சொல். (தக்கயாகப். 415, உரை.)

இரட்டைத்தாளம் iraṭṭai-t-tāḷam, n. <id.+. (Mus.) A kind of *tāḷam*; தாளவகை. இரட்டைத்தாளத்திற்குப் பொருந்த ஒரு பாட்டினை யான்பேணிப் பாடுதற்கு முன்னே (பொருந. 71, உரை).

இரட்டைத்திருவுழுத்து iraṭṭai-t-tiru-v-uḻuttu, n. <id.+. A jewel; அணிவகை. (S. I. I. ii, 16.)

இரட்டைப்பூரான் iraṭṭai-p-pūrāṉ, n. <id.+. A species of large centipede; சதங்கைப்பூரான். (W.)

இரட்டைமண்டை iraṭṭai-maṇṭai, n. <id.+. Huge head; விசாலமாய்ப் பருத்த தலை. *Colloq.*

இரட்டைமணி iraṭṭai-maṇi, n. <id.+. An ornament; அணிவகை. (I. M. P. Tj. 305.)

இரட்டையாட்சி iraṭṭai-y-āṭci, n. <id. +. Dyarchy; இருதிறத்தார் பகுத்துக்கொண்டு செய்யும் அரசாட்சி. *Mod.*

இரட்டையேணி iraṭṭai-y-ēṇi, n. <id. +. 1. Fork-legged ladder; கவையேணி. 2. Long ladder formed by two ladders joined together at their ends; ஒன்றின்முன் ஒன்று வைத்துக் கட்டப்பட்ட ஏணி. *Pond.*

இரட்டைவரி iraṭṭai-vari, n. <id.+. Double taxation, as tax paid to Government and local body; ஒரேநிலத்துக்காகச் சர்க்காருக்கும் ஸ்தலஸ்தாபனங்களுக்குஞ் செலுத்தும் வரி. *Mod.*

இரட்டைவாழைப்பூ iraṭṭai-vāḻai-p-pū, n. <id.+. A kind of saree, with long stripes; நெடுங்கோடுள்ள புடைவைவகை. *Loc.*

இரண்டாங்காலம் iraṇṭāṅ-kālam, *n.* <இரண்டு+. Temple service at night, between the evening and the midnight services; கோயிலில் அந்திக்காப்புக்கும் அர்த்தசாமத்திற்கும் நடுவில் நடக்கும் பூசை. *Loc.*

இரண்டை iraṇṭai, *n.* <*raṇḍā.* (நாநார்த்த.) 1. Widow; கைம்பெண். 2. Glaucous-leaved physic nut; எலியால்.

இரணங்கொல்லி iraṇaṅ-kolli, *n.* <இரணம்+. Dead white nettle; தும்பை. (சங். அக.)

இரணம் iraṇam, *n.* <*hiraṇa.* (நாநார்த்த.) 1. Semen; சுக்கிலம். 2. Cowry; பலகறை.

இரணவாதம் iraṇa-vātam, *n.* <*raṇa*+*vāta.* A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 140.)

இரணியகர்ப்பதானம் iraṇiya-karppa-tāṉam, *n.* <*hiraṇya-garbha*+. Gift of gold pot, in religious ceremonies; பொற்குடத்தை யளிக்குந் தானம். (அபி. சிந்.)

இரணியகர்ப்பர் iraṇiya-karppar, *n.* <*hiraṇya-garbha.* The sect of the Cārvākas who hold that *ātman* is *pirāṇaṉ;* பிராணனே ஆத்துமா என்னுஞ் சார்வாகருள் ஒருசாரார். (விவேக சிந். பக். 17.)

இரணியம் iraṇiyam, *n.* <*hiraṇya.* See இரணம். (நாநார்த்த.)

இரணியமரம் iraṇiya-maram, *n.* prob. id.+. A tree; மரவகை. (T. C. M. ii, 2, 429.)

இரணியன் iraṇiyaṉ, *n.* <*Hiraṇya.* Jupiter; வியாழன். (சாதகசிந். 6.)

இரத்தக்கிட்டம் iratta-k-kiṭṭam, *n.* <*rakta*+. Buffy coat of coagulated blood; இரத்தக் கட்டியின் மேலுண்டாம் ஏடு. *Pond.*

இரத்தச்சிலந்தி irratta-c-cilanti, *n.* <id.+. Herpes; புண்கட்டிவகை.

இரத்தசாரம் iratta-cāram, *n.* <id.+. Ebony; கருங்காலி. (சித். அக.)

இரத்தசூலை iratta-cūlai, *n.* <id.+. Swelling of the abdomen, from obstruction of the menses; சூதகவாயு. (W.)

இரத்ததிருட்டி iratta-tiruṭṭi, *n.* <id.+. A kind of delirium; சன்னிவகை. (தஞ். சரசு. iii, 194.)

இரத்தநரம்பு iratta-narampu, *n.* <id.+. Vein, blood-vessel; இரத்தக்குழல். *Mod.*

இரத்தபந்தனம் iratta-pantaṉam, *n.* <id.+. Blood-relationship; இரத்தக்கலப்பு. *Pond.*

இரத்தபலை iratta-palai, *n.* <id.+*phala.* Fruit of common creeper of the hedges; கோவைப்பழம். (சங். அக.)

இரத்தபித்தம் iratta-pittam, *n.* <id.+. Malabar-nut; ஆடாதோடை. (சித். அக.)

இரத்தபூடம் iratta-pūṭam, *n.* <id.+. Red flowered silk cotton; முள்ளிலவு. (சித். அக.)

இரத்தம் irattam, *n.* <*rakta.* Copper; தாம்பிரம். (நாநார்த்த.)

இரத்தமாரணம் iratta-māraṇam, *n.* <id.+. Reddle, red ochre; காவிக்கல். (சங். அக.)

இரத்தவுதிரி iratta-v-utiri, *n.* <id.+. A disease in cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவை. சிந். 5.)

இரத்தஷ்டீவி irattaṣṭīvi, *n.* <id. A kind of delirium; சன்னிவகை. (சீவரட். 22.)

இரத்தாம்பரசாயம் irattāmpara-cāyam, *n.* <இரத்தாம்பரம்+. Red dye; சிவப்புச்சாயம். *Pond.*

இரத்தாம்பரம் irattāmparam, *n.* <*rakta*+. A tree; மரவகை. *Pond.*

இரத்திரி irattiri, *n.* cf. இரத்தி. Fig tree; இத்தி. (W.)

இரத்தினசிரசு irattiṉa-ciracu, *n.* <*ratna-śīrṣa.* Temple with 393 towers and 50 storeys; 393 சிகரங்களையும் 50 மேனிலைக் கட்டுக்களையு முடைய கோயில். (சுக்கிரநீதி, 230.)

இரத்தினம் irattiṉam, *n.* Galangal; அரத்தை. (சங். அக.)

இரத்தினி irattiṉi, *n.* <*ratni.* (W.) 1. Cubit measured with closed hand; பிடிமுழம். 2. Ulna; முன்கைப் பேரெலும்பு.

இரதம்[1] iratam, *n.* <*ratha.* (நாநார்த்த.) 1. Leg; கால். 2. Body; உடல். 3. *Vañci* tree; வஞ்சிமரம். 4. Vehicle; வாகனம்.

இரதம்[2] iratam, *n.* <*rada.* Writing; எழுதுகை. (நாநார்த்த.)

இரதம்[3] iratam, *n.* <*rasa.* 1. Desire, affection; அனுராகம். (நாநார்த்த.) 2. Water; நீர். (நாநார்த்த.) 3. Chyle, a constituent element in the human body, one of *catta-tātu,* q. v.; சத்ததாதுக்களுளொன்று. (சூடா.) 4. Strength; வலி. (நாநார்த்த.) 5. Poison; விஷம். (நாநார்த்த.)

இரதம்[4] iratam, n. cf. இரத்தி. Jointed ovate-leaved fig; இத்தி. (வை. மூ.)

இரதரேணு irata-rēṇu, n. <id.+. A measure of four atoms; பரமாணு நான்கு கொண்ட நீட்டலளவை. (சிற்பசாத். 18.)

இரதன் iratan̠, n. (அக. நி.) 1. Eye; கண். 2. Parrot; கிளி.

இரதனை iratan̠ai, n. cf. rasanā. 1. Galangal; அரத்தை. 2. Tongue; நா.

இரதாங்கம் iratāṅkam, n. <rathāṅga. (நாநார்த்த.) 1. Chariot-wheel; தேர்க்கால். 2. Cakra bird; சக்கரவாகப்புள்.

இரந்திரம் irantiram, n. <randhra. Subterraneous passage; சுருங்கை. (நாநார்த்த.)

இரம்பிகம் irampikam, n. cf. இரம்பிலம். Pepper; மிளகு. (சங். அக.)

இரம்மியம் irammiyam, n. <ramya. (நாநார்த்த.) 1. That which is lovable, desirable; விரும்பத்தக்கது. 2. That which is beautiful; அழகிது.

இரவணம் iravaṇam, n. <ravaṇa. (நாநார்த்த.) 1. Braying of a donkey; கழுதை கத்துகை. 2. Beetle; வண்டு.

இரவிகாந்தாக்கினி iravi-kāntākkin̠i, n. <ravi+. A kind of fire, one of pañcākkin̠i, q.v.; பஞ்சாக்கினியு ளொன்று. (சங். அக.)

இரவிபீஜம் iravi-pījam, n. <id.+. Camphor; சூடம். (சங். அக.)

இரவிபுடபுத்தி iravi-puṭa-putti, n. <id. +. True diurnal motion of the sun in his orbit; சூரியனது உத்தமபுடம். (W.)

இரவிமத்திமபுத்தி iravi-mattima-putti, n. <id.+மத்திமம்+. The mean daily motion of the sun in his orbit; சூரியனது மத்திமபுடம். (W.)

இரவு[1] ravu, n. perh. இரங்கு-. Mercy, compassion; இரக்கம். (அக. நி.)

இரவு[2] iravu, n. Tube-in-tube wood; பன்றிவாகை. (L.)

இரவுச்சோறு iravu-c-cōr̠u, n. <இரவு+. Supply of food at night, to government menial servants; அரசாங்கக் கீழ்த்தரப் பணியாளர்க்கு இராக்காலத்திலிடும் அன்னம். (T. A. S. ii, 65.)

இரவேசு iravēcu, n. <U. rawis. Fine, tender betel; தளிர் வெற்றிலை. Madr.

இரவைக்கு iravaikku, adv. <இரவு. To-night; for the night; இராப்பொழுதுக்கு. இரவைக்குப் புழுக்குக் கறியமுது (S. I. I. vii, 267).

இரஸ்தாளிக்கரும்பு irastāḷi-k-karumpu, n. <இரசதாளி+. A species of sugarcane; செங்கரும்புவகை.

இரஸ்து[1] irastu, n. <Persn. rasad. Stores, provisions for army; சேனைக்குரிய உணவுப் பொருள். (W.)

இரஸ்து[2] irastu, n. cf. ரஸ்தாளி. A kind of plantain; வாழைவகை. (வை. மூ.)

இரக்ஷணியம் irakṣaṇiyam, n. <rakṣaṇya. Salvation; மோட்சம். பூவலயத்துக் கிரக்ஷணியம் பொலியவரு புண்ணியப் பகலை (இரக்ஷணிய. பக். 62).

இரக்ஷணை irakṣaṇai, n. <rakṣaṇā. Salvation; மோட்சம். முதுதராதலத் திரக்ஷணை சமைத்திடு முறைமை (இரக்ஷணிய. பக். 65).

இராக்கதம் irākkatam, n. <rākṣasa. 1. A lineal measure of ten tālam; பத்துத்தாலங் கொண்ட ஒரு நீட்டலளவை. (சுக்கிரநீதி, 232.) 2. (Śaiva.) A mythical world of the Rudras; உருத்திர புவனங்களுள் ஒன்று. (சி. போ. 2, 3, பக். 214.)

இராக்கதி irākkati, n. <rākṣasī. A kind of long zedoary; சன்னக்கச்சோலம். (நாநார்த்த.)

இராகவம் irākavam, n. A large fish, capable of devouring timiṅkilakilam; திமிங்கில கிலத்தை விழுங்கவல்ல பெரியமீன். (சுக்கிரநீதி, 146.)

இராகாதனம் irākātan̠am, n. <rāga+āsana. (Yōga.) A kind of yōgic posture; யோகாசனவகை. இராகாதனமாவது பிடரியி லேறிட்டகால் முன்தொங்கக் கையிரண்டும் முன்னேயூன்றியிருக்கை (தத்துவப். 108, உரை).

இராகினி irākin̠i, n. prob. rāginī.* Betel leaf; வெற்றிலை. (T. C. M. ii, 2, 429.)

இராச்சியக்கலக்கம் irācciya-k-kalakkam, n. <இராச்சியம்+. Cataclysm; anarchy; அராசகம். Pond.

இராச்சியப்புரட்டு irācciya-p-puraṭṭu, n. <id.+. See இராச்சியக்கலக்கம். Pond.

இராச்சியவலங்கோலை irācciya-v-alaṅkōlai, n. <id.+. See இராச்சியக்கலக்கம். Pond.

இராசகம்பீரன் irāca-kampīran̠, n. <rāja-gambhīra. A title of Vīrarājendra Cōḻa; வீரராசேந்திர சோழனது பட்டப்பெயர்களு ளொன்று. இராசகம்பீரனை வாழ்த்தினவே (தக்கயாகப். 774).

இராசகரம் irāca-karam, n. <rāja-kara. Government; அரசாங்கம். (S. I. I. v, 512.)

இராசகேசரி irāca-kēcari, n. <raja-kēsari. A title assumed by certain Cōla kings; சோழமன்னர்களிற் சிலர் தரித்துவந்த பட்டப்பெயர். (கலிங். 178.)

இராசசக்கரம் irāca-cakkaram, n. <rājan +. King's command; அரசாணை. (தக்கயாகப். 2, உரை.)

இராசதம் irācatam, n. <rājatva. Kingly state; அரசபதவி. ஏடே லிராசதத்தினைப் பணித் ததும் (திருப்பு. 1132).

இராசதானம் irāca-tāṉam, n. <rāja-sthāna. Capital city; தலைநகர். Pond.

இராசபத்திரம் irāca-pattiram, n. <rājan +. Royal edict; அரசனுடைய உத்தரவு. (W.)

இராசபாதை irāca-pātai, n. <id.+. King's highway, public road; பொதுச்சாலை. (W.)

இராசபுத்தி irāca-putti, n. <id.+. Special wisdom, peculiar knowledge; விசேடித்த அறிவு. (W.)

இராசபோகம் irāca-pōkam, n. <id.+. Taxes levied for protecting property; அரசர்க் குரிய பாதுகாவல்வரி. (T. A. S. iv, 8.)

இராசமணி irāca-maṇi, n. <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

இராசரிகப்புரட்சி irācarika-p-puraṭci, n. <இராசரிகம்+. Anarchy; அராசகம். Colloq.

இராசருகம் irācarukam, n. 1. Eagle wood; அகில். 2. White dead nettle; வெள்ளைத் தும்பை. (T. C. M. ii, 2, 429.)

இராசவத்தனம் irācavattaṉam, n. <rāja-vartana. A kind of precious stone; வைடூரியவகை. (யாழ். அக.)

இராசவாசல்முதலியார் irāca-vācal-mutaliyār, n. <இராசவாசல்+. A title conferred by Ceylon Government; இலங்கையரசாங் கத்தாரளிக்கும் பட்டப்பெயர்களுள் ஒன்று. ஸ்ரீ சிற் கைலாச பிள்ளை இராசவாசல்முதலியார் அவர்களுக் கும் (மாலுமி. முகவுரை, 2).

இராசவாழை irāca-vāḻai, n. <rājan+. A kind of plantain that yields 1000 fruits to a bunch; தலையொன்றுக்கு 1000 காய்கள் காய்க்கும் வாழைவகை.

இராசவிசுவாசம் irāca-vicuvācam, n. <id.+. Loyalty; அரசபக்தி. Mod.

இராசவிபாடன் irāca-vipāṭaṉ, n. <id. +. A title of the Vijayanagara kings; விஜய நகரத்தரசர் பட்டங்களுள் ஒன்று. (S. I. I. iv, 96.)

இராசன் irācaṉ, n. <rājan. (நாநார்த்த.) 1. Indra; இந்திரன். 2. Yakṣa; இயக்கன்.

இராசாதனம் irācātaṉam, n. <rājādana. (நாநார்த்த.) 1. Palas tree; முருக்கு. 2. A shell-fish; முரள். 3. Throne; royal seat; சிங்காதனம். 4. Kiṅkiṇi-p-pālai, a tree; கிங்கிணிப்பாலை.

இராசாவர்த்தம் irācā-varttam, n. <rāja-vartana. See இராசவத்தனம். (W.)

இராசாளி irācāḷi, n. Winged serpent; பறவைமாநாகம். (நாமதீப. 261.)

இராசிகுணகாரம் irāci-kuṇākāram, n. (Astrol.) A mode of calculation; சோதிட கணன வகை. (சோதிட. சிந். 228.)

இராசிகை irācikai, n. <rājikā. (நாநார்த்த.) 1. Field, land; வயல். 2. Line, as in the palm; இரேகை. 3. Orderliness; order; ஒழுங்கு. 4. Ragi; கேழ்வரகு.

இராசிப்பொன் irāci-p-poṉ, n. <இராசி +. Pure gold; கலப்பற்ற பொன். ஒடுக்கின இராசிப்பொன் (S. I. I. iv, 133).

இராசிபாளயம்புள்ளிப்பணம் irāci-pāḷayam-puḷḷi-p-paṇam, n. A coin; நாணய வகை. (M. E. R. 185 of 1927.)

இராசியக்காரன் irāciya-k-kāraṉ, n. prob. இராயசம்+. Writer; இராயசக்காரன். (சீதக். 123.)

இராசியெழுத்து irāci-y-eḻuttu, n. <rāśi +. A kind of symbolic letter; குறியீட்டெழுத்து வகை. (யாப். வி. 536.)

இராசீவம் irācīvam, n. <rājīva. (நாநார்த்த.) 1. Carp; வரைக்கெண்டை. 2. A kind of deer; மான்வகை.

இராசை irācai, n. Śaṅkaranayiṉārkoil in the Tinnevelley District; திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள சங்கரநயினார்கோயில் என்னுந் தலம். (பெருந் தொ. 938.)

இராட்டிரம் irāṭṭiram, n. <rāṣṭra. (நாநார்த்த.) 1. Country; தேசம். 2. Towns-folk; citizens; நகரிலிலுள்ள சனம். 3. Portent; உற்பாதம்.

இராத்திரிவேதம் irāttirivētam, n. <rātri-vēda. Cock; சேவல். (சித். அக.)

இராதாரி irātāri, n. <ரஹதாரி. Customs permit; சுங்கத்தின் அனுமதிச் சீட்டு. Loc.

இராதினி irātiṉi, n. <hrādinī. (நாநார்த்த.) 1. A tree; சல்லகிமரம். 2. A river; ஒரு நதி. 3. Indra's thunderbolt; வச்சிராயுதம். 4. Lightning; மின்னல். 5. Thunder; இடி.

இராதை irātai, *n.* <*rādhā.* (நாநார்த்த.) 1. The 16th *nakṣatra;* விசாகம். 2. A medicinal plant; விஷ்ணுக்கிராந்தி. 3. Emblic myrobalan; நெல்லி. 4. Lightning; மின்னல். 5. Fostermother of Karṇa; கர்ணனது செவிலித்தாய்.

இராப்பண் irā-p-paṇ, *n.*<இரா+. Melodies to be sung at night; இராக்காலத்திற் பாடுதற் குரிய பண்கள்.

இராப்பிரமாணம் irā-p-piramāṇam, *n.* <id.+. (Astrol.) Duration of time between the setting and the rising of a planet; கிரகத்தின் அஸ்தமனத்திலிருந்து உதயம்வரையுள்ள பொழுதின் அளவு. (W.)

இராமக்கோழி irāma-k-kōḻi, *n.* prob. நாமம்+. Water fowl; நீர்க்கோழி. *Loc.*

இராமகலி irāma-kali, *n.* prob. *rāma*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இராமடாணி irāmaṭāṇi, *n.* prob. id. A gold coin; பொன்னாணயவகை. (தக்ஷி. இந். சரித். பக். 436.)

இராமநாதன்சம்பா irāmanātaṉ-campā, *n.* A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (விவசாய. 2.)

இராமப்பிரியம் irāma-p-piriyam, *n.* <*ramā*+. Lotus; தாமரை. (வை. மூ.)

இராமபாரதி irāma-pārati, *n.* The author of Āatticūṭi-veṇpā, 18th cent.; பதினெட் டாம் நூற்றண்டில் ஆத்திசூடிவெண்பாப் பாடிய புலவர். (பெருந்தொ. 1775-6.)

இராமம் irāmam, *n.* <*rāma.* (நாநார்த்த.) 1. White deer; வெண்மான். 2. Whiteness; வெண்மை. 3. Blackness; கருமை.

இராமானம் irā-māṉam, *n.* <இரா+. 1. (Astron.) Duration of the night; தினந்தோறு முள்ள இரவின் அளவு. (W.) 2. Night; இரவு. இராமானமே வந்துவிட்டான். *Tinn.*

இராமானுசன் irāmāṉucaṉ, *n.* <*Rāmānuja.* Lakṣmaṇa, brother of Rāma; இலக்கு மணன்.

இராமேசுரம்வேர் irāmēcuram-vēr, *n.* <இராமேசுரம்+. Chay-root; சாயவேர். (M. M. 160.)

இராமை irāmai, *n.* <*rāmā.* (நாநார்த்த.) 1. Woman who is an expert in erotics; மன்மத நூல் கற்றவள். 2. A kind of brinjal; சிறுவழு தலை.

இராமையன்வெட்டு irāmaiyaṉ-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பண விடு. 135.)

இராயசம் irāyacam, *n.* <T. *vrāyasamu.* Written order; ஆணைப்பத்திரம். நரசிங்க ராஜ உடையர் கட்டளை பணணி இராயசமும் கொடுக்கை யில் (S. I. I. iv, 83).

இராயசவர்த்தனை irāyaca-varttaṉai, *n.* <இராயசம்+. A tax; வரிவகை. (S. I. I. viii, 188.)

இராயணி irāyaṇi, *n.* prob. இராணி. Queen; அரசி. (W.)

இராயப்பர் irāyappar, *n.* <இராயன்+ அப்பர். St. Peter; பேதுரு என்ற கிறிஸ்தவப் பெரி யார். *Chr.*

இராயன் irāyaṉ, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 57.)

இராவணன்முழி irāvaṇaṉ-muḻi, *n.* <இராவணன்+விழி. Small lime stones resembling eye-balls, available near Rāmēśvaram; இராமேச்சுரப் பக்கத்தில் அகப்படுங் கண்விழிகள் போன்ற சிறுசோழிவகை.

இராவணன்மோவாய்ப்புல் irāvaṇaṉ-mōvāy-p-pul, *n.* <id.+. Water pink; இராவணன்புல். (காழிக்கல்.)

இராவுத்தராயன் irāvutta-rāyaṉ, *n.* <இராவுத்தன்+. Leader of horsemen; குதிரைச் சேவகரின் தலைவன். (திருவாலவா. 28, 83.)

இராஜாகரங்காணிக்கை irājā-karaṅ-kāṇikkai, *n.* <இராஜா+கரம்+. A tax; வரி வகை. (I. M. P. Sm. 5.)

இரிகம் irikam, *n.* (W.) 1. Heart; இருதயம். 2. Mind; மனம்.

இரிட்டம் iriṭṭam, *n.* <*riṣṭa.* (நாநார்த்த.) 1. Good; சுபம். 2. Sword; வாள். 3. Inauspiciousness; அசுபம். 4. End; destruction; விநாசம். 5. Sin; பாவம்.

இரீதி irīti, *n.* <*rīti.* Brass; பித்தளை. (W.)

இருக்கணை irukkaṇai, *n.* Crenulate leaved spindle tree, l. tr., *Euonymus Crenulatus;* சித்திரவேலைக்குதவும் மரவகை. (Nels.)

இருக்கம் irukkam, *n.* <*ṛkṣa.* (நாநார்த்த.) 1. *Nakṣatra;* நட்சத்திரம். 2. Bear; கரடி. 3. Zodiacal sign; இராசி.

இருக்கமாலி irukkamāli, *n.* <*ṛkṣamālī.* Temple of the width of 766 hands and of the same height, with 766 towers and 96 storeys; 766 முழ அகலமும் உயரமுமுள்ளதாய் 766 சிகரங்க

ளோடு 96 மேனிலைக்கட்டுக்கள் கொண்ட கோயில். (சுக்கிரநீதி, 229.)

இருக்குக்குறள் irukku-k-kuṟaḷ, n. prob. ṛk+. A kind of short verse; சிறிய பாவகை. ஏகபாதந் தமிழிருக்குக்குறள் சாத்தி (பெரியபு. திருஞான. 276).

இருசாதி iru-cāti, n. <இரண்டு+. Hybrid; mixed caste; கலப்புச்சாதி. இருசாதிமாடு.

இருசீர்ப்பாணி iru-cīr-p-pāṇi, n. <id.+சீர்+. (Mus.) A kind of tāḷam; இரட்டைத் தாளம். (பொருந. 71.)

இருசுகந்தப்பூண்டு iru-cukanta-p-pūṇṭu, n. prob. இரு-மை+சுகந்தம்+. Southernwood; மருக்கொழுந்து. Pond.

இருட்கண்டம் iruṭ-kaṇṭam, n. <இருள்+. A necklace; கழுத்தணிவகை. பிறங்கிருட்கண்டமும் (S. I. I. viii, 39).

இருட்கண்டர் iruṭ-kaṇṭar, n. <id.+. Śiva, as having a blue throat; சிவபெருமான். கூர்ந்த விருட்கண்டர் (பெரியபு. திருமுறை. 12).

இருடி iruṭi, n. <ṛṣi. The vēda; வேதம். (நாநார்த்த.)

இருடிகம் iruṭikam, n. See இருடீகம். பதினெ ரிருடிகமுமடைய முடியுமடி யிருடியார் (தேசிகப். 6, 19).

இருடீகம் iruṭīkam, n. <hṛṣīka. Sensory organ; இந்திரியம். இருடீகங்க ளீரைந்துஞ் சரங்களாக (தேசிகப். 2, 41).

இருண்டசெவலை iruṇṭa-cevalai, n. <இருள்-+. Dark brown colour of cattle; கருமை கலந்த மங்கல்நிறமான மாட்டுநிறவகை. (பெரியமாட். 13.)

இருண்மயபூமி iruṇ-maya-pūmi, n. <இருள்+மயம்+. The dark region round the cakravāḷa-kiri, where the ghosts of suicides are made to suffer; சக்கரவாளகிரியைச் சூழ்ந்து இருண்டுகிடப்பதும் தற்கொலைபுரிந்தோர் பேய்வடிவுடன் துன்புறுவதுமான பூமி. (சி. போ. பா. 2, 3.)

இருணி iruṇi, n. cf. இருளி. Hog; பன்றி. இருணியா யெழுந்த சோதி யிரணியாக் கனைததான் கொல்ல (வாத. பாகவத. நாரசிங்க. 5).

இருத்தி irutti, n. <ṛddhi. Interest; வட்டி. (T. A. S. viii, 15.)

இருத்து iruttu, n. <இருத்து-. 1. That which is firm, permanent; நிலையானபொருள். என்னெஞ்சத்து இருத்தாக விருத்தினேன் (திவ். திருவாய். 9, 4, 6). 2. Pressure; அமுக்குகை. அவனை ஓர் இருத்து இருத்தினான். Colloq.

இருதலைஞாங்கர் iru-talai-ñāṅkar, n. <இரண்டு+தலை+. Double-headed lance; இருதலையுங் கூருள்ள குமரன்வேல். (யாழ். அக.)

இருதலைப்பகரங்கள் iru-talai-p-pakaraṅkaḷ, n. <id.+id.+. Square brackets; எழுத்துக்களை உள்ளடக்கி நிற்கும் [ ] என்ற குறியீடுகள். Mod.

இருதலைப்பாம்பு iru-talai-p-pāmpu, n. <id.+id.+. 1. Semi-nocturnal sand-snake; இருதலைமணியன். Pond. 2. Blind snake with very short head and tail; இருதலைப்புடையன். Loc. 3. Earth-worm; மண்ணுளிப்பாம்பு.

இருதலைமூரி iru-talai-mūri, n. <id.+id.+. See இருதலைப்பாம்பு, 3. Loc.

இருதாரைக்கத்தி iru-tārai-k-katti, n. <id.+தாரை+. Double-edged sword or knife; இருபக்கமுங் கூர்மையுள்ள கத்தி. (W.)

இருந்துபோ-தல் iruntu-pō-, v. tr. <இரு-+போ. 1. To be stupefied; to be paralysed; செயலறுதல். அந்தத் துக்கத்தைக் கேட்டதும் அவன் இருந்துபோனான். 2. To sink; கீழே அழுந்துதல். அஸ்திவாரம் இருந்துபோயிற்று. 3. To remain unsold, as goods: விலைப்போகாது தங்குதல். இருந்துபோன சாமான்.

இருநிறமணிக்கல் iru-niṟa-maṇi-k-kal, n. <இரண்டு+நிறம்+மணி+. A kind of precious stone; இரத்தினவகை. Pond.

இருப்புக்கட்டி iruppukkaṭṭi, n. A tax; வரிவகை. (S. I. I. iv, 79.)

இருப்புக்கட்டை iruppu-k-kaṭṭai, n. <இரும்பு+. Hammer; சுத்தியல். Pond.

இருப்புக்கம்பை iruppu-k-kampai, n. <இரு-+. Driver's seat, at the front of the cart; வண்டி ஓட்டுபவனுக்குமுன் வண்டியில் அமைக்கப்பட்ட ஆசனம். Colloq.

இருப்புக்காய்வேளை iruppu-k-kāyvēḷai, n. A plant; இரும்புக்காய்வேளை. (W.)

இருப்புக்குழல் iruppu-k-kuḻal, n. <இரும்பு+. A kind of rocket; விருசுவகை. (T. C. M. ii, 2, 593.)

இருப்புச்சிட்டம் iruppu-c-ciṭṭam, n. <id.+. Oxide of iron; இருப்புக்கிட்டம். (W.)

இருப்புத்தொட்டிப்பாஷாணம் iruppu-t-toṭṭi-p-pāṣāṇam, n. <id.+தொட்டி+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (சங். அக.)

இருப்புநகம் iruppu-nakam, *n.* <id.+. Betel clipper; வெற்றிலைகிள்ளும் ஆயுதம். *Loc.*

இருப்புப்பாளம் iruppu-p-pāḷam, *n.* <id.+. Pig iron; இரும்புக்கட்டி. (W.)

இருபிறப்பாளன் iru-piṟappāḷaṉ, *n.* <இரண்டு+பிறப்பு+ஆள். (நாநார்த்த.) 1. The moon; சந்திரன். 2. Cukkiraṉ, as twice-born; சுக்கிரன்.

இரும்பாலை irum-pālai, *n.* <இரு-மை+. Blue-dyeing Rosebay, l. tr., *Wrightia tinctoria;* பாலைமரவகை. (L.)

இரும்பு irumpu, *n.* 1. Gold; பொன். (அக. நி.) 2. Red species of Malabar Glory-lily; செங்காந்தள். (L.)

இரும்புப்பெட்டி irumpu-p-peṭṭi, *n.* <இரும்பு+. Cash chest, iron safe; உருக்கால் அமைந்த பேழை. *Mod.*

இருமனப்பெண்டிர் iru-maṉa-p-peṇṭir, *n.* <இரண்டு+மனம்+. Prostitute; பரத்தையர். இருமனப்பெண்டிருங் கள்ளும் (குறள், 920).

இருமிமலைத்தகி irumimalaittaki, *n.* <U. *rūmimastaki.* Mastic-tree; பூனைக்கண் குங்கிலியம். (சு. வை. ர. 543.)

இருமுறி iru-muṟi, *n.* prob. இரும்பு+. Silvery-leaved indigo; இருப்புமுறி என்னுஞ் செடி. *Pond.*

இருலிங்கவட்டி iruliṅkavaṭṭi, *n.* Vermilion; சாதிலிங்கம். (வை. மூ.)

இருவருந்தபுநிலை iruvar-un-tapu-nilai, *n.* <இருவர்+தபு-+. (Puṟap.) Theme describing the death of both the besieged and the besieging kings; எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்தரிருவரும் பொருது வீழ்ந்தமை கூறும் புறத்துறை. (தொல். பொ. 68.)

இருவிள iruviḷa, *n.* 1. Palmyra leaf; பனையோலை. (தொல். எழுத். 216, உரை.) 2. A town in Vēṇāṭu; வேணாட்டகத்து ஓர் ஊர். 3. A *cēri* in Karuvūr; கருவூரினகத்து ஒரு சேரி.

இருவீடு iruvīṭu, *n.* A tree; ஒருவகைமரம். (நாநார்த்த.)

இருள்பாலை iruḷ-pālai, *n.* perh. இருள்+. Seven-leaved poon tree, m. tr., *Alstonia scholaris;* ஏழிலைம்பாலை. (Nels.)

இருள்வாசி iruḷvāci, *n.* Tuscan jasmine; இருவாட்சி. (தமிழ்விடு. முகவுரை, பக். 4.)

இருளி iruḷi, *n.* Shame; வெட்கம். (யாழ். அக.)

இரேகாம்சம் irēkāmcam, *n.* <*rēkhā*+. (Astron.) Terrestrial longitude; பூமியை வடக்குத் தெற்காக 360 சமபங்குகளாய்ப் பிரிக்கப்பட்டவற்றுள் ஒரு பாகம்.

இரேகி-த்தல் irēki-, *11 v. tr.* <*rēkhā.* To draw; to write; எழுதுதல். இரேகித்த சித்திரம். *Pond.*

இரேகுத்தி irēkutti, *n.* cf. U. *rēkhtī.* (Mus.) A specific melody-type; ஓர்ராகம். (W.)

இரேகை irēkai, *n.* <*rēkhā.* (நாநார்த்த.) 1. Unbroken series; இடையறா வொழுங்கு. 2. Deceit; wile; வஞ்சம்.

இரேசனி irēcaṉi, *n.* <*rēcanī.* (நாநார்த்த.) 1. Indian jalap; சிவதை. 2. Orange cup-calyxed brasiletto; ஞாழல். 3. Croton seed; நேர்வாளவிதை. 4. Realgar; மனோசிலை.

இரேணு irēṇu, *n.* <*rēṇu.* Fever plant; பற்படகப்புல். (நாநார்த்த.)

இரேணுகை irēṇukai, *n.* <*rēṇukā.* (நாநார்த்த.) 1. Bran; தவிடு. 2. Cubeb; தக்கோலம்.

இரேபன் irēpaṉ, *n.* <*rēpa.* (நாநார்த்த.) 1. Cruel man; குரூரன். 2. Contemptible man; நிந்திக்கத்தக்கவன்.

இரேவடம் irēvaṭam, *n.* <*rēvaṭa.* (நாநார்த்த.) 1. Whirlwind; சூறைக்காற்று. 2. Conch with right spirals; வலம்புரிச்சங்கு. 3. Bamboo; மூங்கில்.

இரேவதர் irēvatar, *n.* <*Rēvata.* A Buddha; புத்தர்களுள் ஒருவர். (மணி. பக். 369.)

இரேவை irēvai, *n.* <*rēvā.* Indigo; அவுரி. (நாநார்த்த.)

இரை irai, *n.* <*irā.* (நாநார்த்த.) 1. Earth; பூமி. 2. Water; நீர். 3. Toddy; கள். 4. Speech; வாக்கு.

இரைப்பு[1] iraippu, *n.* <இரை-. Infatuation; மோகம். புதுப்பிணைத் திரைப்புமிக்கு (தக்கயாகப். 129).

இரைப்பு[2] iraippu, *n.* Cockroach; கரப்புப்பூச்சி. *Loc.*

இரைப்பெட்டி irai-p-peṭṭi, *n.* <இரை+. Begging bowl; பிச்சைவாங்கும் பெட்டி. *Tinn.*

இரௌத்திரி irauttiri, *n.* <*Raudrī.* A Śakti of Śiva; ஒரு சிவசத்தி. (சைவபூ. சந். 219.)

இல்லவன் illavaṉ, *n.* <இன்-மை. Poor man; தரித்திரன். இல்லவ னொழுக்கம்போல் (கலித். 148).

இல்லாக்காட்டில் illā-k-kāṭṭil, *adv.* <இல்லா-மை+. If not, otherwise; இல்லாவிட்டால். *Pond.*

இல்லாக்குற்றம் illā-k-kuṟṟam, *n.* <id. +. 1. Poverty; தரித்திரம். *Loc.* 2. Calumny; அபாண்டம். *Pond.*

இல்லாங்காட்டி illāṅ-kāṭṭi, *adv.* <id.+. See இல்லாக்காட்டில். *Loc.*

இல்லாவாட்டி illā-v-āṭṭi, *n.* <id.+ஆள்-. Destitute woman; வறியவள். *Tinn.*

இல்லுனர் illuṉar, *n.* cf. ஒல்லுநர். Friends; நண்பர். (W.)

இலக்கட்சரம் ilakkaṭcaram, *n.* prob. இலக்கு+அட்சரம். Secret code; மறைபொருட்சொல். *Pond.*

இலக்கை ilakkai, *n.* <*rakṣā*. Protection; பாதுகாவல். இலக்கை யற்றதவ் விலங்கைக்கு மிராவணன் றனக்கும் (கம்பரா. கும்பகரு. 339).

இலகல் ilakal, *n.* (அக. நி.) 1. cf. *lēkha*. Letter, character; எழுத்து. 2. cf. *laghu*. Eagle-wood; அகில். 3. cf. *lēśa*. Lightness; நொய்ம்மை.

இலகு-தல் ilaku-, 5 *v. intr.* To increase; மிகுதல். (சங்கற்பநி. சங்கிராந்த. 96.)

இலகுநட்சத்திரம் ilaku-naṭcattiram, *n.* <*laghu*+. Small star; நுட்பமான நட்சத்திரம். (W.)

இலகோட்டா ilakōṭṭā, *n.* <Chi. *luh w at*. Loquat, m. tr., *Eriobotrya japonica;* மரவகை. (L.)

இலங்கனம் ilaṅkaṉam, *n.* <*laṅghana*. Transgression; கடக்கை. (நாநார்த்த.)

இலங்கிகன் ilaṅkikaṉ, *n.* <இலிங்கி. Ascetic; துறவி. (அக. நி.)

இலங்கு ilaṅku, *n.* Tank; குளம். (W.)

இலங்கோடு ilaṅkōṭu, *n.* <Hind. *laṅgōṭa*. Strip of cloth fitted to the loins; சல்லடம். மிக்கதா மிலங்கோடு கௌபீனமே (அலங்காரச்சிந்து. 16).

இலச்சி-த்தல் ilacci-, 11 *v. intr.* <*lajjā*. To be bashful, coy, shy; நாணுதல். திருவான தேவி இலச்சிப்ப (தக்கயாகப். 34, உரை).

இலச்சைக்கேடு ilaccai-k-kēṭu, *n.* <இலச்சை+. Shamelessness; வெட்கக்கேடு. (W.)

இலஞ்சி[1] ilañci, *n.* Mango tree; மாமரம். (அக. நி.)

இலஞ்சி[2] ilañci, *n.* cf. இலேஞ்சி. A towel; சவுக்கம். *Colloq.*

இலஞ்சிலி ilañcili, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (சித். வை.)

இலட்சுமிவண்டு ilaṭcumi-vaṇṭu, *n.* <*lakṣmī*+. Cockroach, as a harbinger of prosperity; கரப்பூச்சி. *Colloq.*

இலட்டை ilaṭṭai, *n.* prob. *laḍḍu*. Round cake of rice flour and sugar; அப்பம். (அக. நி.)

இலடு ilaṭu, *n.* Horse; குதிரை. (அக. நி.)

இலபனம் ilapaṉam, *n.* <*lapana*. (Anat.) Mouth; வாய். (W.)

இலம்பம் ilampam, *n.* <*lamba*. (நாநார்த்த.) 1. Height; உயரம். 2. Expanse; width; விசாலம்.

இலம்பாடு ilampāṭu, *n.* <இலம்படு-. Sorrow, grief; துக்கம். (அக. நி.)

இலம்பிதசாபலம் ilampita-cāpalam, *n.* <*lambita*+. (Astron.) An equation from the table of the moon's parallax; மந்தசாபலம். (சூடா. உள். 433.)

இலம்பிதம் ilampitam, *n.* <*lambita*. (Astron.) Parallax of moon's longitude; மந்தசா. (சூடா. உள். 433.)

இலயசக்தி ilaya-cakti, *n.* <*laya*+. (Śaiva.) Śakti of Ilaya-Civaṉ; இலயசிவனின் சக்தி. (சி. சி. 2, 75, மறைஞா.)

இலயதத்துவம் ilaya-tattuvam, *n.* <id. +. (Śaiva.) State of the Supreme Being during the *makā-caṅkāram;* மகாசங்கார காலத்துத் தன் காரியங்களெல்லா மொடுங்கிக் காரணமாத்திரையாய் நிற்கும் இறைவனிலை. (சி. சி. 6, 6, ஞானப்.)

இலயமுத்தி ilaya-mutti, *n.* <id.+. Salvation through absorption into Godhead; பரம்பொருளோடு இரண்டறக் கலக்கையாகிய முக்தி. (யாழ். அக.)

இலலிதபஞ்சமி ilalita-pañcami, *n.* <*lalita*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இலவடி-த்தல் ilavaṭi-, *v. intr.* To thresh out sheaves of corn; நெற்கதிரடித்தல். *Colloq.*

இலவம்[1] ilavam, *n.* <*lava*. 1. (Jaina.) A measure of time; ஒரு கால அளவு. தோவமில வமே நாள் (மேருமந். 94). 2. Wool; ஆடு முதலிய வற்றின் மயிர். (நாநார்த்த.)

இலவம்[2] ilavam, *n.* perh. *iḍā.* Worship; பூசை. (அக. நி.)

இலளிதம் ilaḷitam, *n.* <*lalita.* (நாநார்த்த.) 1. Longing, wish; இச்சை. 2. Lucidity of expression; பொருளின் தெளிவு.

இலளிதை ilaḷitai, *n.* <*lalitā.* A kind of pearl necklace; ஒருவகை முத்தாரம். (நாநார்த்த.)

இலாக்கை ilākkai, *n.* <*lākṣā.* (நாநார்த்த.) 1. Red cotton; செம்பஞ்சு. 2. Shell-lac; அரக்கு.

இலாகன் ilākaṉ, *n.* A kind of fish; மீன் வகை. (W.)

இலாங்கலம் ilāṅkalam, *n.* <*lāṅgala.* (நாநார்த்த.) 1. A kind of flower; பூவகை. 2. Palmyra; பனை. 3. Plough; கலப்பை. 4. Curved cornice; கொடுங்கை.

இலாங்கூலம் ilāṅkūlam, *n.* <*lāṅgūla.* Membrum virile; ஆண்குறி. (நாநார்த்த.)

இலாஞ்சலி ilāñcali, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (பச். மூ.)

இலாடம்[1] ilāṭam, *n.* <*lāṭa.* Saree; சேலை. (நாநார்த்த.)

இலாடம்[2] ilāṭam, *n.* (Astron.) The day in which the sun's position is in a specified relation to the constellation *mūlam;* மூலநட்சத் திரத்தினுக்குச் சூரியனுக்கு முள்ள தூரத்தை யொட்டி நிர்ணயிக்கும் நாள். (பஞ்.)

இலாபாந்தராயம் ilāpāntarāyam, *n.* <*lābha+antarāya.* (Jaina.) An impediment to the attainment of one's object, caused by karma; குறித்த பேற்றை இடைநின்று விலக்குங் கருமத்தடை. (சீவக. 3081, உரை.)

இலிங்கம் iliṅkam, *n.* <*liṅga.* (Phil.) Prakṛti; பிரகிருதி. (நாநார்த்த.)

இலிங்கமுத்திரை iliṅka-muttirai, *n.* <id.+. A kind of hand-pose, in worship; பூசைசெய்யும்போது காட்டும் முத்திரைவகை. (செந். x, 426.)

இலீலை ilīlai, *n.* <*līlā.* Playfulness; பரி காசம். (நாநார்த்த.)

இலீனம் ilīṉam, *n.*<*līna.* 1. Dissolution; அழிவு. 2. Involution; அடக்கம். *அப்படிப்போலப் பிரகிருதியில் ஜீவர்கள் இலீனமாயிருக்கிறார்கள்* (வாசு தேவமனனம், பக். 3).

இலேகனம் ilēkaṉam, *n.* <*lēkhana.* (நாநார்த்த.) 1. Bark of paper tree; பூர்ச்சமரத்தின் மேலுரி. 2. Cutting; வெட்டுகை.

இலேகை ilēkai, *n.* <*lēkhā.* 1. Letter; எழுத்து. *இலேகை யக்கரப்பெயர்* (பேரகத். 4). 2. Earth; பூமி. (நாநார்த்த.) 3. Cicatrice; தழும்பு. *நுதிமருப் பிலேகை நுண்ணிது தோன்ற* (பெருங். வத்தவ. 7, 184).

இலேபம் ilēpam, *n.* <*lēpa.* (நாநார்த்த.) 1. Food; போசனம். 2. Paste; சாந்து.

இலைக்கடுக்காய் ilai-k-kaṭukkāy, *n.* <இலை +. (L.) 1. Paniculate winged myrobalan; வெண்மருது. 2. Flowering mardah; பூமருது.

இலைக்கூலம் ilai-k-kūlam, *n.* <id.+ prob. கூலி. A tax; வரிவகை. (S. I. I. iii, 411.)

இலைச்சுமடன் ilai-c-cumaṭaṉ, *n.* <id.+. (யாழ். வி. பக். 512.) 1. Seller of betel leaves; வெற்றிலை விற்போன். 2. Fool, idiot; மூடன்.

இலைச்செப்பு ilai-c-ceppu, *n.* <id.+. An utensil of worship; பூசைப்பாத்திரவகை. (S. I. I. ii, 5.)

இலைசாடு-தல் ilai-cāṭu-, *v. intr.* <id.+. To grow too luxuriantly to be productive, as plants; செடிகொடிகள் மதர்த்தல். *Tinn.*

இலைத்தட்டு ilai-t-taṭṭu, *n.* <id.+. A kind of plate used in worship; பூசைத்தட்டுவகை. (S. I. I. ii, 6.)

இலைத்தொடை ilai-t-toṭai, *n.* <id.+. Decorative hangings, as garlands; அலங்காரத் தொங்கல். *சாத்தின இலைத்தொடை யாதலாம்* (திவ். பெரியாழ். 3, 4, 1, வ்யா. பக். 592).

இலையம் ilaiyam, *n.* <*laya.* A dance; கூத்தின் விகற்பம். (அக. நி.)

இலைவாழை ilai-vāḻai, *n.* <இலை+. *Loc.* 1. A kind of plantain that does not yield fruits; மலட்டுவாழைவகை. 2. A kind of plantain yielding stony fruit; கொட்டைவாழை.

இலௌகிகசாத்திரம் ilaukika-cāttiram, *n.* <*laukika*+. Treatise dealing with perceptible results, dist. fr. *vaitika-cāttiram;* கண்கூடாகப் பலனளிப்பவற்றைக் கூறுஞ் சாத்திரம். (விவேகசிந். 13.)

இவேசித்தொகையேடு ivēci-t-tokai-y-ēṭu, *n.* prob. U. *iwāz*+. A statement showing the amount of collection and balance in money or in kind; வசூலித்த பணம் தானிய முதலியவற்றின் கணக்கைக் காட்டும் விவரக்குறிப்பு. (R. T.)

இழந்தநாக்கடி-த்தல் iḻanta-nākkaṭi-, *v. intr.* prob. இழ-+நாக்கு+. cf. இளநாக்கடி-. 1. To promise or consent lightly without due consideration; முன்பின் யோசியாது உறுதியின்றி வாக்களித்தல். *Tinn.* 2. To commisserate; இரக்கப்படுதல். *Loc.*

இழவு iḻavu, *n.* <id. Bereavement, one of six *karuvuḷ-amaippu*, q. v.; கருவுளமைப்பு ஆறனுள் ஒன்றான பந்துநஷ்டம். (பிங்.)

இழவுடுப்பு iḻavuṭuppu, *n.* <இழவு+. Mourning dress; துக்கக்குறியான உடை. *Pond.*

இழித்துரை iḻitturai, *n.* <இழி-+. Word of contempt; improper language; இழிவாகக் கூறுஞ் சொல். இங்குச்சொன்ன உபசாரம் இழித்துரை (தக்கயாகப். 402, உரை).

இழிநீர் iḻinīr, *n.* <இழி-+. Outflow; வடியுநீர். கட்கடற்கு ஏறுநீர் இழிநீருளவோ என்னில் (தக்கயாகப். 122, உரை).

இழுக்கு-தல் iḻukku-, 5 *v. intr.* To die; சாதல். முள்ளினெய்தெற விழுக்கிய கானவர் (மலைபடு. 301, உரை).

இழுக்குப்பொடுக்கெனல் iḻukku-p-poṭukkeṉal, *n.* Expr. of warning; எச்சரிக்கைக் குறிப்பு. (J.)

இழுத்துப்பேசு-தல் iḻuttu-p-pēcu-, *v. tr.* <இழு-+. (W.) 1. To speak slowly, in a measured manner; நிறுத்தி மெள்ளப்பேசுதல். 2. To speak evasively; நழுவவிட்டுப் பேசுதல்.

இழுது iḻutu, *n.* Sweetness; தித்திப்பு. (நாநார்த்த.)

இழுப்பாசாமி iḻuppācāmi, *n.* <இழுப்பு + ஆசாமி. Immoral person; ஒழுங்கற்ற நடத்தையுள்ளவ-ன்-ள்.

இழுப்புத்தேர் iḻuppu-t-tēr, *n.* <id.+. Temple car to be dragged, dist. fr. *eṭuppu-t-tēr*; இழுத்துச்செல்லும் இரதம். (W.)

இழுப்புப்பறிப்பு iḻuppu-p-paṟippu, *n.* <id.+. *Colloq.* 1. Immorality; ஒழுங்கீனமான நடக்கை. அவனுக்கு இழுப்புப்பறிப்புண்டு. 2. Debt; கடன்.

இழுப்புவலை iḻuppu-valai, *n.* <id.+. A kind of fishing net; மீன்பிடிக்கும் வலைவகை. *Pond.*

இழுபறி iḻu-paṟi, *n.* <இழு-+. See இழுவை, 1, 2. *Colloq.*

இழுவல்நழுவல் iḻuval-naḻuval, *n.* <id. +. Uncertainty; நிச்சயமின்மை. (பாவலர்சரித். 11.)

இழுவை iḻuvai, *n.* <id. 1. Procrastination, dilatoriness; காரியத் தாமதம். *Loc.* 2. Inextricable difficulty; இடைஞ்சல். நற்குடிக்குத் துன்பமடா நாளும்பல விழுவை (பஞ்ச. திருமுக. 768). 3. A thorny shrub; ஓர் முட்செடி. (W.)

இழை[1] iḻai, *n.* <இழை-. Cloth; துகில். நுண்ணிழையணையென (கலித். 56).

இழை[2]**-தல்** iḻai-, 12 *v. intr.* To become emaciated, reduced; மெலிதல். குழந்தை நூலாய் இழைந்துவிட்டது.

இழைப்பு[1] iḻaippu, *n.* <இழை-. Work; செய்தொழில். உழைக்கல மகளிரு மிழைப்பிரிந் தாற்றவும் (பெருங். உஞ்சைக். 46, 334).

இழைப்பு[2] iḻaippu, *n.* cf. இளைப்பு. Asthma; காசநோய். *Loc.*

இளகல் iḷakal, *n.* <இளகு-. Love; அன்பு. (அக. நி.)

இளகிப்படி-த்தல் iḷaki-p-paṭi-, *v. tr.* <id.+. To be nicely set; அழகாகப்பதித்தல். (திவ். அமலனாதி. 3, வ்யா. பக். 48.)

இளங்காலி iḷaṅ-kāli, *n.* <இள-மை+. Calf; மாட்டுக்கன்று. (திவ். பெரியாழ். 3, 3, 1, வ்யா. பக். 560.)

இளங்கிடை iḷaṅkiṭai, *n.* <id.+. Open place where the cattle of the village gather together before being driven to the pasture; ஊர்மாடுகளெல்லாம் வரும்வரை மேய்ப்போன் மாடுகளை நிறுத்திவைக்கும் வெளியிடம். *Nāṉ.*

இளங்கூறு iḷaṅ-kūṟu, *n.* <id.+. Crown prince; இளவரசன். வேணாட்டு இளங்கூறு வாழுமவற்கு (T. A. S. ii, 64).

இளங்கோவேள் iḷaṅ-kō-vēḷ, *n.* <இளங் கோ+. Prince of Vēḷ family; வேள் குலத்து இளவரசன். (சைவசிகா. 36.)

இளஞ்சாமை iḷañ-cāmai, *n.* prob. இள-மை+. A kind of millet; சாமைவகை. (விவசா. 4.)

இளஞ்சூரியர் iḷañ-cūriyar, *n.* <id.+. The younger of the twin poets *iraṭṭaiyar*; இரட்டையருள் இளையவர். (தமிழ்நா. 103, தலைப்பு.)

இளநாக்கடி-த்தல் iḷanākkaṭi-, *v. intr.* <இளநாக்கு+. See இழந்தநாக்கடி-.

இளநீர்த்தா-தல் iḷanīrttā-, *v. intr.* <இளநீர்+. To grow lean; to be worn out and become thin; தேய்ந்துமெலிதல். (நன். 431, மயிலை.)

இளநேரம் iḷa-nēram, *n.* <இள-மை+. Evening; மாலை. இளநேரம் வீதியிலே வந்துநில்லு (தெய்வச். விறலிவிடு. 337).

இளப்பம் iḷappam, *n.* < இளை-. Disgrace; அவமானம். அவனுக்கு இது பெரிய இளப்பம். *Colloq.*

இளம்பயிர் iḷam-payir, *n.* < இள-மை+. Seedlings that have been recently transplanted; நாறுபிடுங்கி நட்டுச் சிலநாளான பயிர். *Loc.*

இளம்பாக்கு iḷam-pākku, *n.* <id.+. A kind of areca nut; பாக்குவகை. (விறலிவிடு.)

இளம்பாலாசிரியன் iḷampāl-āciriyaṉ, *n.* <id.+*bāla*+. Teacher of children, dist. fr. *pālāciriyaṉ;* இளம்பாலர்க்குக் கற்பிக்கும் ஆசிரியன். (அகநா. 102.)

இளம்பிடி iḷam-piṭi, *n.* <id.+. Beautiful woman; அழகிய பெண். இளம்பிடி யிவளுக்கென் னினைந்திருந்தாய் (திவ். பெரியதி. 2, 7, 2). (அக. நி.)

இளம்பிராயம் iḷam-pirāyam, *n.* <id.+. Youth; இளவயது. (R.)

இளமணல் iḷa-maṇal, *n.* <id.+. Quick sand; துருத்துமணல். தேரோ டிளமண லுட்பட லோம்பு (கலித். 98).

இளமணற்பாய்-தல் iḷamaṇaṟ-pāy-, *v. intr.* < இளமணல்+. To be caught, as the feet in quick-sand; இளமணலிற் காலழுந்துதற்போல அகப்படுதல். திருச்சோலையின் போக்யதையிலே இள மணற் பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும் (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 77).

இளமுறை iḷa-muṟai, *n.* < இள-மை+. Heir; பின் வாரிசு. *Loc.*

இளமை iḷamai, *n.* Madness; உன்மத்தம். (நாநார்த்த.)

இளவழிபாடு iḷa-vaḻipāṭu, *n.* < இள-மை+. Child education; சிறுபிள்ளைக் கல்வி. (யாழ். அக.)

இளவுறை iḷa-v-uṟai, *n.* <id.+. Milk not fully formed into curds; நன்றாகத் தோயாத தயிர். (யாழ். அக.)

இளிச்சகண்ணி iḷicca-kaṇṇi, *n.* < இளிச்சல்+. Woman who habitually leers; காமக் குறிப்போடு பிறரை நோக்குந் தன்மை யுடையவள். இளிச்சகண்ணிக்குப் புளிச்சகண்ணி தேவலை.

இளை[1]-த்தல் iḷai-, *11 v. intr.* To get slack; நெகிழநிற்றல். தானே யிளைக்கிற் பார்கீழ் மேலாம் (திவ். இயற். பெரியதிருவந். 24).

இளை[2] iḷai, *n.* (அக. நி.) 1. cf. மிளை. Ditch, moat; கிடங்கு. 2. Indian black bear; கரடி.

இளை[3] iḷai, *n.* < இளை-மை. Younger brother; தம்பி. இளைபுரிந் தளித்தன்மே லிவர்ந்த காதலன் (கம்பரா. கவந்த. 27).

இளையநயினார் iḷaiya-nayiṉār, *n.* <id.+. Skanda; முருகக்கடவுள். (M. E. R. 507 of 1929-30.)

இளையமரக்கால் iḷaiya-marakkāl, *n.* <id.+. A small *marakkāl;* சிறு மரக்கால். கலத்துவாய் தூணி இளையமரக்காலால் வரிசையிட்ட படி (S. I. I. iv, 30).

இளையவாசவன் iḷaiya-vācavaṉ, *n.* <id. +. Upēndra; உபேந்திரன். இளையவாசவன் விசும்பினின்றும் விழ (தக்கயாகப். 651).

இளையார் iḷaiyār, *n.* <id. Husband's younger brothers; கொழுந்தர். *Loc.*

இளையோன் iḷaiyōṉ, *n.* <id. Skanda; முருகக்கடவுள். (தக்கயாகப். 5, உரை.)

இறக்கம்[1] iṟakkam, *n.* < இற-. Death; சாவு. இறக்கமுற்றானென வேக்கமெய்தினன் (கம்பரா. சடாயுகாண். 19).

இறக்கம்[2] iṟakkam, *n.* < இறங்கு-. Swallowing, as of food; உணவு முதலியன உட்செல்லுகை. சோற்றிறக்கமு மறந்தான் (குருகூர்ப்.).

இறக்கு-தல் iṟakku-, *5 v. tr.* To compel payment; பணத்தை நிர்ப்பந்தித்து வசூலித்தல். *Colloq.*

இறக்கை iṟakkai, *n.* <T. *rekka.* Wing-wall; கண்ணாற்றின் இருபுறங்களிலுமுள்ள துணைச் சுவர். (கட்டட. நாமா.)

இறகுக்கூடு iṟaku-k-kūṭu, *n.* < இறகு+. Pen rack; பேனா வைக்குங் கூடு. *Pond.*

இறங்கல்மீட்டான் iṟaṅkal-mīṭṭāṉ, *n.* <id.+. cf. இறங்கமாட்டான். A kind of paddy; ஒருவகை நெல். போரிறங்கல்மீட்டான் புழுதிபுரட்டி (நெல்விடுதூது. 189).

இறங்கு-தல் iṟaṅku-, *5 v. intr.* To leave, abandon; விட்டுநீங்குதல். அருணோக்க மிறங்காத தாமரைக்க ணெம்பெருமான் (கம்பரா. விராதன். 50). 2. To commence, begin to act; தொடங்குதல். தருமவழியில் இறங்கியுள்ளான்.

இறங்குகிணறு iṟaṅku-kiṇaṟu, *n.* < இறங்கு- +. Well with steps leading down to the water; உள்ளிறங்கிச் செல்வதற்குப் படிவரிசையுள்ள கிணறு. *Loc.*

இறங்குசட்டம் iṟaṅku-caṭṭam, *n.* <id. +. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 18.)

இறங்குசாத்து iṟaṅku-cāttu, *n.* <id.+ A sect of the Cheṭṭi caste; செட்டிகளுள் ஒரு சாரார். (S. I. I. viii, 232.)

இறங்குநாகம் iraṅku-nākam, *n.* <id.+. A kind of curl-mark in cattle; மாட்டுச்சுழிவகை. (பெரியமாட். 21.)

இறவு iṟavu, *n.* <இற-. (யாழ். அக.) 1. Sloping roof; வீட்டிறப்பு. 2. Boundary; எல்லை.

இறவுள் iṟavuḷ, *n.* Hilly tract; குறிஞ்சி நிலம். (யாழ். அக.)

இறலிப்பை iṟali-p-pai, *n.* perh. இறலி+. Cocoon of the silk-worm; பட்டுப்பூச்சிக் கூடு. *Pond.*

இறாகு iṟāku, *n.* <Arab. *Irāq.* Arabia; அரபியாதேசம். *இறாகுதேசத்தில்* (அசுவசா. 1).

இறாட்டாணியம் iṟāṭṭāṇiyam, *n.* Distress; trouble; இடுக்கண். (யாழ். அக.)

இறு-த்தல் iṟu-, *11 v. tr.* 1. To express; சொல்லுதல். (நாநார்த்த.) 2. To stop; நிறுத்துதல். *வலஞ்செயவிடா விறுத்தனவேறு* (கலித். 104).

இறுக்கநெருக்கம் iṟukka-nerukkam, *n.* <இறுக்கம்+. Interval; இடைவேளை. *தமது உத்யோகக் கடமைகளுக்கு அடுத்த இறுக்கநெருக்கங்களில்* (மாலுமி. முக. 1).

இறுகரை iṟu-karai, *n.* <இறு-+. Eroded bank, as of a river; இடிகரை. (அக. நி.)

இறுதிநிலை iṟuti-nilai, *n.* <இறுதி+. 1. That which occurs in the end; ending; இறுதியில் நிற்பது. (கலித். 124, உரை, பக். 778.) 2. (Gram.) Termination, ending of a word; விகுதி. (நன். 134, சங்கர.)

இறுதியினற்கதி iṟutiyiṉaṟkati, *n.* <id. +. Final emancipation; நிருவாணம். *இறுதியினற்கதி செல்லும் பெருவழி* (மணி. 12, 59).

இறுபு iṟupu, *n.* <இறு-. Death; இறப்பு. *இறுபும் புலம்பும்* (பெருங். இலாவாண. 13, 12).

இறும்பு iṟumpu, *n.* 1. cf. இறும்பூது. Bee; வண்டு. (யாழ். அக.) 2. Worm; புழு. (சங்கற்பநி. 9, 15.) 3. Nature, quality; இயல்பு. (அக. நி.)

இறும்புளி iṟumpuḷi, *n.* Pulney Rowan, *Photinia notoniana,* a Kodaikanal tree; மரவகை. (Kodai.)

இறும்பூது iṟumpūtu, *n.* cf. சுரும்பு. (அக. நி.) 1. Bee; வண்டு. 2. Malabar glory lily; காந்தள்.

இறுவரையம் iṟu-varaiyam, *n.* <இறு-+ வரை. (யாழ். அக.) 1. Limit; எல்லை. 2. Present moment; தற்சமயம்.

இறை iṟai, *n.* <id. 1. Debt; கடன். (அக. நி.) 2. cf. உறை. Sheath of a sword; வாளின் உறை. *வாய்ந்த விறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப் பாய்ந்து* (கூளப்ப. 45). 3. Crowd; கூட்டம். (தக்கயாகப். 638, உரை.)

இறைக்கட்டு iṟai-k-kaṭṭu, *n.* <இறை+. Taxation; வரி. *இறைக்கட்டும் தவிர்த்து* (S. I. I. vii, 414).

இறைக்காசான் iṟai-k-k-ācāṉ, *n.* <இறை +. Skanda, as the Guru of Śiva; முருகக் கடவுள். *இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை* (பெருந்தொ. 102).

இறைகுத்து-தல் iṟai-kuttu-, *v. tr.* prob. இறை+. To estimate; மதிப்பிடுதல். (யாழ். அக.)

இறைச்சோறு iṟai-c-cōṟu, *n.* cf. எற்சோறு. A tax; வரிவகை. (S. I. I. viii, 87.)

இறைப்புணைப்படு-தல் iṟai-p-puṇai-p-paṭu-, *v. intr.* <id.+புணை+. To stand security for the payment of tax by a person; ஒருவன் இறுக்கவேண்டும் வரிக்குப் புணை கொடுத்தல். (S. I. I. v, 376.)

இறைப்பெட்டி iṟai-p-peṭṭi, *n.* <இறை- +. Ola basket for baling water; தண்ணீர் இறைக்க உதவும் ஓலைப்பெட்டி. *Tinn.*

இறைமகள் iṟai-makaḷ, *n.* <இறை+. Durgā; துர்க்காதேவி. *இறைமக ளமுதுசெய்ய* (தக்கயாகப். 751).

இறைமலை iṟai-malai, *n.* <id.+. Mt. Mēru; மேருமலை. *இறைமலை வில்லி* (தக்கயாகப். 170).

இறைமொழி iṟai-moḻi, *n.* <id.+. The Āgamas; இறைவனருளிய ஆகமம். *இறைமொழிக் கல்லது மறுதர வோதி* (சிலப். 10, 206).

இறையிறுக்குங்கோல் iṟai-y-iṟukkuṅ-kōl, *n.* <id.+இறு-+. Rod for measuring land for the purpose of fixing the tax; வரியிடுவதற்காக நிலத்தை அளக்க உபயோகிக்கும் அளவுகோல். *இவ்வூரில் இறையிறுக்குங் கோலால் இந்நிலம் ஏழுமாவரை* (S. I. I. v, 107).

இறைவனூல் iṟaivaṉūl, *n.* <இறைவன்+. The Āgamas; கடவுளருளிய ஆகமம். *இறைவனூலையும் அவனருள்வழிப்பட்டுத் தத்தமரபின்வரும் குரவர் பலர்நூலையும்* (நன். 7, சங்கர.).

இறைவைமரம் iṟaivai-maram, *n.* <இறைவை+. A boat-like wooden trough used for baling water; தண்ணீர் இறைக்க மரத்தாற் செய்த ஓடம்போன்ற கருவி. *Loc.*

இன்பசாகரமடல் inpa-cākara-maṭal, *n.* <இன்பம் + சாகரம் +. A treatise on erotics; ஒரு காமநூல். (*தத்துவப்.* 155, *உரை.*)

இன்பி-த்தல் inpi-, *11 v. tr.* <இன்பு. To cause to be happy; இன்ப மூட்டுதல். *என்னையுருக்கி யின்பித்தவடி* (*பாடு. திருவருட்.*).

இன்மணியாரம் in-maṇi-y-āram, *n.* <இனி-மை + மணி +. An ancient musical treatise; இறந்துபட்டதோர் இசைநூல். (*யாப். வி.* 540.)

இன்றி inri, *adv.* <இன்-மை. Without; இல்லாமல். *தனக்கொரு பயனின்றியிருக்க* (*கலித்.* 96, 30, *உரை*).

இன்று inru, <id. *part.* No; இல்லை.—*adv.* See இன்றி. *உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே* (*நன்.* 172, *மயிலை.*).

இன்னா innā, *int.* cf. இந்தா. Here; இதோ. *Tinn.*

இன்னாவிசை innā-v-icai, *n.* <இன்னா +. (Pros.) One of the defects in the composition of verses; செய்யுட்குற்றம் இருபத்தேழனு ளொன்று. (*யாப். வி.* 525.)

இன்னிசைமாலை innicai-mālai, *n.* <இன்னிசை +. A treatise on *akapporuḷ;* அகப்பொருள் பற்றிய ஒரு நூல். (*களா. கா.* 24.)

இன்னியம் in-n-iyam, *n.* <இனி-மை +. Musical instruments; வாச்சியங்கள். (*பெரும். வத்தவ.* 2, 30.)

இன்னியர் inniyar, *n.* <இன்னியம். Bards, singers; பாணர். (*அக. நி.*)

இனம் inam, *n.* Comparison; உபமானம். *இனனுணர் முழுநலம்* (*திவ். திருவாய்.* 1, 1, 2).

இனவரி ina-vari, *n.* <இனம் +. An ancient tax in cash; பழைய காசாயவரிவகை. (S. I. I. 1, 89.)

இனவெழுத்துப்பாட்டு ina-v-eluttu-p-pāṭṭu, *n.* <id. +. (Pros.) A kind of *cittira-kavi;* வல்லின முதலிய மூவினங்களுள் ஓரினத்தெழுத்துக் களேவரப் பாடுஞ் சித்திரகவிவகை. (*யாப். வி.* 503.)

இனன் inan, *n.* <id. 1. Kinsman; உறவினன். *இன்னா தினனில்லூர் வாழ்தல்* (*குறள்*, 1158). 2. Equal; சமானன். (*திவ். திருவாய்.* 1, 1, 2.) 3. Teacher; உபாத்தியாயர். (*யாழ். அக.*)

இனாம்நாட்கள் inām-nāṭkaḷ, *n.* <இனாம் +. Lay days; சரக்கேற்றற்காவது இறக்கற்காவது விடப்படும் நாட்கள். (M. Navi. 122.)

இனிப்புச்சேவு inippu-c-cēvu, *n.* <இனிப்பு +. A kind of confectionery; தித்திப்புச் சேர்ந்த சேவுப்பணியாரம். *Tinn.*

இனியபிரிவு iniya-pirivu, *n.* <இனி-மை + பிரிவு. Concubine's house; வைப்பாட்டி வீடு. *சம்பிருதியெல்லா மினியபிரிவுக் களந்தமென்றும்* (*சரவண. பணவிடு.* 182).

இனுக்காவலை inukkā-valai, *n.* A kind of net, used in fishing at sea; கடலில் வேலிபோற் கட்டி மீன் பிடிக்கவுதவும் வலை. *Loc.*

இஜதாசார் ijatācār, *n.* <U. *izzat-āsār* <Arab. *izzat-āthār.* Mark of respect; மரியாதையின் அடையாளம். (P. T. L.)

இஷ்டப்பிரசாதம் iṣṭa-p-piracātam, *n.* <இஷ்டம் + (R.) 1. Gift of grace; கைம்மாறு வேண்டாக் கொடை. 2. Grace of God; தேவ கிருபை. 3. Boiled rice offered to the idols; தேவப்பிரசாதம். 4. Eucharist; தேவ அப்பம்.

இஷீகாஸ்திரம் iṣīkāstiram, *n.* <*iṣī-kāstra.* A kind of missile; அஸ்திரவகை. (*கம்பரா. நிகும்.* 132, *உரை.*)

இஸ்கார் iskār, *n.* Ratlines; கப்பலில் லவுரானுக்குக் குறுக்கே ஏணிப்படிபோல இடப்பட்டிருக்குஞ் சிறு குறுக்குக்கயிறுகள். (M. Navi. 85.)

இஸ்திபா istipā, *n.* <Arab. *isti'fa.* Deed of relinquishment; விடுதலைப்பத்திரம். (R. T.)

இஸ்திங்கி istiṅki, *n.* Brails; கப்பற்பாயை ஏற்ற இறக்க உதவுங் கயிறுகள். (M. Navi. 86.)

இஸ்பேட் ispēṭ, *n.* <E. *spade.* Spades, in a pack of playing cards; விளையாட்டுச் சீட்டில் ஒரு சாதி. *Colloq.*

இஸ்பேட்ராஜா ispēṭ-rājā, *n.* <இஸ்பேட் +. Figure-head; அதிகாரமற்ற தலைவன். *Colloq.*

இஸாபா isāpā, *n.* <Arab. *izāfah.* Additional charge imposed; அதிகவரி. (R. T.)

ஈ

ஈ-தல் ī-, *4 v. aux.* An auxiliary verb; ஒரு துணைவினை. *தேறீயல்வேண்டும்* (*கலித்.* 98, 2).

ஈகு-தல் īku-, *5 v. intr.* cf. இறுகு-. To solidify; கட்டியாதல். *திரட்டுப்பாலும் ஈகினநெய்யும் கட்டித்தயிரும்* (*திவ். பெரியாழ்.* 3, 2, 6, *வ்யா. பக்.* 545).

ஈகை īkai, *n.* (*அக. நி.*) 1. Want; இல்லாமை. 2. Wind; காற்று.

ஈங்கு īṅku, *n.* Sandalwood; சந்தனம். (*சங். அக.*)

ஈச்சை īccai, *n.* <ஈந்து. Date-palm; ஈந்து. *Colloq.*

ஈச்சோப்பி ī-c-cōppi, *n.* <ஈ + சோப்பு-. Spider சிலந்தி. (யாழ். அக.)

ஈசதத்துவம் īca-tattuvam, *n.* <*īśa*+. (Śaiva.) One of five *cutta-tattuvam*, q. v.; சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று. (சிவப். கட்.)

ஈசமனோகரி īca-manōkari, *n.* <id.+ *manōharī*. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

ஈசன் īcan, *n.*<*īśa*. (அக. நி.) 1. Brahmā; பிரமன். 2. Father; தகப்பன்.

ஈசனாள் īcanāḷ, *n.* <ஈசன் + நாள். The *nakṣatra tiruvātirai;* திருவாதிரை. (W.)

ஈசுரதத்துவம் īcura-tattuvam, *n.* <*īś-vara*+. (Śaiva.) See ஈசதத்துவம். (சி. சி. 1, 65.)

ஈசுரமருந்து īcura-maruntu, *n.* <ஈசுவரன்+. cf. ஈசுரமூலி. Indian birth-wort; ஈசுர மூலி. *Pond.*

ஈசுவரக்கோவை īcuvara-k-kōvai *n.*<id. +. A kind of paddy, maturing in six months; ஆறுமாதத்திற் பயிராகும் நெல்வகை. (விவ. சா. 2.)

ஈசுவரிவிந்து īcuvari-vintu, *n.* <ஈசுவரி +. Sulphur; கந்தகம். (சங். அக.)

ஈசை īcai, *n.* <*īṣā*. Pole or shaft of a plough; ஏர்க்கால். (W.)

ஈட்டிப்பிடங்கு īṭṭi-p-piṭaṅku, *n.* <ஈட்டி +. Spear-head; ஈட்டியின் முனையுள்ள பாகம். (W.)

ஈட்டிராவுத்தன் īṭṭi-rāvuttan, *n.* <id+. Lancer; ஈட்டிப்படைவீரன். *Pond.*

ஈடணம் īṭaṇam, *n.* <*īḍaṇa*. Fame; புகழ். (யாழ். அக.)

ஈடணை īṭaṇai, *n.* prob. *īṣaṇā*. Distress, affliction; துன்பம். என்னை வேருக்கி யிந்த வீடணை யில் விட்டதுவும் முன்னைவினைதானோ (பதசாகித்தியம்).

ஈடத்து īṭattu, *n.* <*īṣat*. A little; சிறிது. (சங். அக.)

ஈடழி-த்தல் īṭaḻi-, *v. tr.* <ஈடு+. To quell one's power; வலிகெடுத்தல். இராவணனை யீடழித்த (தேவா. 350, 8).

ஈடிகை īṭikai, *n.*<*iṣikā*. Painter's pencil; எழுதுகோல். (யாழ். அக.)

ஈடு īṭu, *n.*<இடு-. 1. Fit or proper subject; ஏற்ற பொருள். நின்சோதனைக்கு நான் ஈடா (சர்வ சமய. பக். 126). 2. Turn; தடவை. இந்தத் தென்னை ஒரு ஈட்டுக்கு முப்பதுகாய் காய்க்கும்.

ஈடுகட்டு-தல் īṭu-kaṭṭu-, *v. intr.* <ஈடு+. To be durable, as a piece of cloth for wear; வஸ்திரம் முதலான பொருள்கள் பலநாள் உபயோகப் பட்டும் வன்மைகெடாது இருத்தல். *Loc.*

ஈடுசெய்-தல் īṭu-cey-, *v. tr.* <id.+. *Loc.* 1. To compensate; பிரதியுபகாரஞ்செய்தல். 2. To adjust, balance; சரிக்கட்டுதல்.

ஈடுசோடு īṭu-cōṭu, *n.* <id.+. Equal; சமானம். ஈடுசோடற்ற சிற்சத்தியாம் (மஸ்தான். 92).

ஈடை īṭai, *n.* <*iṣā*. See ஈசை. (W.)

ஈணி īṇi, *n.* cf. அகணி. Fibre of palm; பனை நார். (யாழ். அக.)

ஈது ītu, *n.* <Arab. *Īd*. 1. The festival of Id; முகம்மதியத் திருநாட்களு ளொன்று. *Muham.* 2. The festival of Bakr-īd; பக்ரீத் திருநாள். *Muham.*

ஈதுலல்ஹா ītul-alhā, *n.* <Arab. *Īd-ul-adhā*. See ஈது, 2.

ஈந்து īntu, *n.* Poison; நஞ்சு. (சங். அக.)

ஈப்பி īppi, *n.* <ஈர்ப்பி. Nit; பேன்முட்டை. (யாழ். அக.)

ஈயச்செடி īya-c-ceṭi, *n.*<ஈசை+. Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயசிந்தூரம் īya-cintūram, *n.* <ஈயம்+ Red lead; சிந்தூரவகை.

ஈயத்தண்டு īya-t-taṇṭu, *n.* <ஈசை+ Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயத்தின்பிள்ளை īyattin-piḷḷai, *n.* <ஈயம் +. cf. ஈயக்குழவி. *Nīla-pāṣāṇam*, a prepared arsenic; நீலபாஷாணம். (யாழ். அக.)

ஈயலி īyali, *n.* cf. ஈயன்மூதாய். Cochineal, scarlet moth; தம்பலப்பூச்சி. (வை. மூ.)

ஈயாப்பத்தன் īyā-p-pattan, *n.* <ஈ-+ஆ neg.+. Miser; உலோபி. (மதி. களஞ். i, 88.)

ஈயுவன் īyuvan, *n.* prob. ஈழம். Rāvaṇa; இராவணன். (அக. நி.)

ஈர்[1]-த்தல் īr-, *11 v. tr.* To saw, split; அறுத்தல். ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேபகடித மானுற்போல பொருந்திப் போரவும் ப்ராப்தம் (ரஹஸ்ய. 609).

ஈர்[2] īr, *n.* prob. எயிறு. Cheek; கதுப்பு. (அக. நி.)

ஈர்க்கு īrkku, *n.* <ஈர். Feather; இறகு. மஞ்ஞை யீர்க்கு.

ஈர்பட்டு īrpaṭṭu, *n.* See ஈர்வெட்டு. (யாழ். அக.)

ஈர்மணி īrmaṇi, *n.* <ஈர்+. The hell, *irattiṉa-p-pirapai;* இரத்தினப்பிரபை என்னும் நரகம். (சுலா. 67.)

ஈர்வாள் īr-vāḷ, *n.* <id.+. Sickle; அரிவாள். (அக. நி.)

ஈர்வெட்டு īr-veṭṭu, *n.* <ஈர்+. cf. ஈர்வாணி. Rope made of ribs of palmyra leaf; பனையீர்க்குக்கயிறு. (யாழ். அக.)

ஈரக்கையாலேதடவு-தல் īra-k-kaiyālē-taṭavu-, *v. tr.* <ஈரம்+. To console; to caress lovingly; அன்புகாட்டித் தேற்றுதல். நாட்டை ஈரக்கையாலேதடவி கம்ஸன்காலத்திற்பட்ட நோவுதீர ரக்ஷித்து (திவ். இயற். திருகுறுந், 1, வ்யா.).

ஈரங்கை īraṅ-kai, *n.* prob. ஈறு+. Curved cornice or projection; corbel; கொடுங்கை. (அக. நி.)

ஈரடி[1] īr-aṭi, *n.* <இரண்டு+. Second crop; இரண்டாம் போகம். (R. T.)

ஈரடி[2] īraṭi, *n.* See ஈராடி, 1. *Loc.*

ஈரடிப்பெட்டி īraṭi-p-peṭṭi, *n.* <ஈரடி+. Box which opens on both sides; இரண்டு பக்கமுந் திறத்தற்குரிய பெட்டி. *Pond.*

ஈரணம் īraṇam, *n.* Spurge; கள்ளி. (சங். அக.)

ஈரம் īram, *n.* prob. ஈர்-. 1. Part; பகுதி. (அக. நி.) 2. Saffron powder; குங்குமம். (சங். அக.)

ஈரமானி īra-māṉi, *n.* <ஈரம்+மானம். Hygrometer; காற்றிலுள்ள ஈரத்தையளக்குங் கருவி. *Mod.*

ஈரலுலர்த்தி īral-ulartti, *n.* <ஈரல்+உலர்-. A disease of the spleen, in cattle; மாட்டுநோய் வகை. (மாட்டுவை. சி. 41.)

ஈரற்கருகு-தல் īraṟ-karuku-, *v. intr* <id +. To be very much afraid; மிகவும் பயப்படுதல். (யாழ். அக.)

ஈரற்கல் īraṟ-kal, *n.* prob. id.+. A medicinal stone; மந்தாரச்சிலை. (யாழ். அக.)

ஈரற்றீ-தல் īraṟṟī-, *v intr.* <id.+. See ஈரற்கருகு-. (யாழ். அக.)

ஈராட்டி ir-āṭṭi, *n.* See ஈராடி. (யாழ். அக.)

ஈராடி īr-āṭi, *n.* <ஈரம்+. (யாழ். அக.) 1. Wet; dampness; ஈரம். 2. Cloudiness; மழைக்குணம்.

ஈராதிகாரணப்போதகம் īr-āti-kāraṇa-p-pōtakam, *n.* prob. இரு-மை+ஆதி+. Dualism; இருபொருண்மை. *Pond.*

ஈரிலை īrilai, *n.* Sun; சூரியன். (அக. நி.)

ஈரிறை īr-iṟai, *n.* <இரண்டு+. 1. Dyarchy; ஈரரசு. 2. Double taxation; இரண்டுமுறை பெறும் வரி. நானும் பிறந்து அவர்களும் பிறக்க வேணுமோ? ஈரிறையுண்டோ? (ஈடு, 1, 3, ப்ர.).

ஈலி īli, *n.* prob. ஈர்-. Knife; கத்தி. (J.)

ஈவிழுங்கி ī-viḻuṅki, *n.* <ஈ+விழுங்கு-. *Pond.* 1. Fly-catcher; ஈயை விழுங்கும் பறவை. 2. Fly-catching lizard; ஈத் தின்னும் பல்லி. 3. Fly-trap; ஈயுண்ணுஞ் செடி. 4. Simpleton who believes in everything; எதையும் நம்பு மூடன்.

ஈவுசோய்வு īvu-cōyvu, *n.* <ஈவு+சோர்-. Gift out of sympathy; மனம் இளகிக் கொடுக்குங் கொடை. (யாழ். அக.)

ஈழக்கருங்காசு īḻa-k-karuṅ-kācu, *n.* <ஈழம்+கரு-மை+. An old coin; பழையநாணயவகை. (M. E. R. 47 of 1925.)

ஈழம்புஞ்சை īḻam-puñcai, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. iv, 122.)

ஈழற்கடிவரி īḻaṟkaṭi-vari, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 24.)

ஈழைக்கொல்லி īḻai-k-kolli, *n.* <ஈளை+கொல்-. Yellow orpiment; அரிதாரம். (சங். அக.)

ஈளம் iḷam, *n.* Yellow-flowered fragrant trumpet-flower tree; பாதிரி. (சங். அக.)

ஈற்றுத்தாய் īṟṟu-t-tāy, *n.* <ஈற்று+. One's own mother, dist. fr. *māṟṟu-t-tāy;* பெற்ற தாய். (திவ். பெரியாழ். 3, 9, 4.)

ஈறு īṟu, *n.* <இறு-. Result; பயன். (அக. நி.)

ஈறுகடை īṟu-kaṭai, *n.* <ஈறு+. Final end; இறுதிமுடிவு. (யாழ். அக.)

ஈன் īṉ, *n.* 1. Ainee wood; மரவகை. *Loc.* 2. Sal; ஆச்சா. (சித். அக.)

ஈனசாமந்தன் īṉa-cāmantaṉ, *n.* <*hīna* +. A class of *cāmantar;* சாமந்தர்வகையினர். (சுக்கிரநீதி, 26.)

ஈனம்[1] īṉam, *n.* <*hīna.* Inclination, slope; சரிவு. (அக. நி.)

ஈனம்[2] īṉam, *n.* Hare; முயல். (அக. நி.)

உ

உ u, *n.* (Astrol.) Letter representing crow, in *pañca-paṭci;* பஞ்சபட்சிகளுள் காகங் குறிக்கும் எழுத்து. (பிங்.)

உக்கம்[1] ukkam, *n.* <*ugra.* Severity; உக்கிரம். உக்கதவர் திக்கதவர் (மேருமந். 1097).

உக்கம்[2] ukkam, *n.* <*ukṣan.* (அக. நி.) 1. Cow; பசு. 2. Fowl; கோழி.

உக்கரைத்தட்டு ukkarai-t-taṭṭu, *n.* <உள் + கரை +. The part just above the middle of the *valantarai* of a *mirutaṅkam;* மிருதங்க வலந்தரையின் நடுப்பாகத்துக்கு மேலுள்ள பாகம். (கலை மகள், xii, 400.)

உக்கா ukkā, *n.* Toddy; கள். (யாழ். அக.)

உக்காக்கம் ukkākkam, *n.* <உக்கம் +. Waist cord; அரைஞாண். (யாழ். அக.)

உக்கிட்டு ukkiṭṭu, *n.* <உள் + கட்டு. A kind of necklace; உட்கட்டு. *Loc.*

உக்கிரகந்தை ukkirakantai, *n.* <*ugra-gandhā.* 1. Sweet flag; வசம்பு. (சித். அக.) 2. Bishop's weed; ஓமம். (நாநார்த்த.)

உக்கிரநாள் ukkira-nāḷ, *n.* <உக்கிரம் +. The five *nakṣatras, paraṇi, makam, pūram, pūrāṭam, pūraṭṭāti;* பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதி ஆகிய ஐந்து நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உக்கிரமம் ukkiramam, *n.* <*ugra.* Blaze, glow; சுவாலை. *Pond.*

உக்கிரன் ukkiraṉ, *n.* <*ugra.* A manifestation of Śiva; சிவமூர்த்தங்களுள் ஒன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 15.)

உக்கு ukku, *n.* Clove; இலவங்கம். (சங். அக.)

உக்கும் ukkum, *n.* <U. *hukm.* Permission, order; உத்தரவு. (P. T. L.)

உக்கும்நாமா ukkum-nāmā, *n.* <U. *hukm-nāmā.* Written order; எழுத்து மூலமான உத்தரவு. (P. T. L.)

உக்குமத்து ukkumattu, *n.* <U. *hūkamat.* 1. Influence; செல்வாக்கு. *Loc.* 2. Arrogance; செருக்கு. *Tinn.* 3. Complicity; உடந்தை. *Tj.*

உக்குரோட்டு ukkurōṭṭu, *n.* prob. *krōṣṭu.* Jackal; நரி. (நாமதீப.)

உக்குறள் u-k-kuṟaḷ, *n.* <உ +. The shortened *u;* குற்றியலுகரம். உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும் (நன். 164).

உக்கூம் ukkūm, *n.* See உக்கும். (P. T. L.)

உகந்துடைமை ukantuṭaimai, *n.* <உக- + உடை-மை. Right of a married woman to a share of her husband's property; கணவனுடைய சொத்தில் மனைவிக்குரிய பாகவுரிமை. *Nāñ.*

உகப்பார்பொன் ukappār-poṉ, *n.* perh. id. +. A tax; வரிவகை. (S. I. I. iii, 110.)

உகம் ukam, *n.* <*yuga.* Day; நாள். (அக. நி.)

உகவை ukavai, *n.* <உக-. 1. Favour; அநுகூலம். உள்குவார்கட்குகவைகள் பலவுஞ் செய்து (தேவா. 1146, 5). 2. See உகவைப்பொன். (S. I. I. iii, 38.)

உகவைப்பொன் ukavai-p-poṉ, *n.* <உகவை +. A tax in money; காசாயவகை. (S. I. I. vii, 290.)

உகளம் ukaḷam, *n.* <உகளி-. Delight; இஷ்டம். (அக. நி.)

உகளி ukaḷi, *n.* Gum; பிசின். (நாமதீப.)

உகளு-தல் ukaḷu-, 5 *v. intr.* To turn upside down; பிறழ்தல். பொருகய லுகளிப் பாய (சீவக. 1854).

உகிர்ப்புறவன் ukir-p-puṟavaṉ, *n.* <உகிர் + புறம். A jewel for nails; நகத்தின்மேல் அணியும் அணிவகை. (S. I. I. ii, 16.)

உகுனை ukuṉai, *n.* perh. உகு- + நோய். A disease affecting paddy; நெற்பயிருக்குரிய நோய் வகை. (நீலகேசி, 366, உரை.)

உச்சட்டம் uccaṭṭam, *n.* prob. *ucca.* (W.) 1. Straightness; நேர்மை. 2. Mark, butt; இலக்கு.

உச்சடை uccaṭai, *n.* <*uccaṭā.* (நாநார்த்த.) 1. Foppishness; இடம்பாசாரம். 2. Garlic; வெள்ளுள்ளி. 3. A kind of grass; வட்டக்கோரை.

உச்சதரு ucca-taru, *n.* <*ucca* +. Cocoanut tree; தென்னை. (பச். மூ.)

உச்சநிலைநாள் ucca-nilai-nāḷ, *n.* <id. + நிலை +. The three *nakṣatras, mirukaciram, cittirai, aviṭṭam;* மிருகசிரம் சித்திரை அவிட்டம் என்ற மூன்று நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உச்சம் uccam, *n.* <*ucca.* 1. One of eight *pāṭaṟ-payaṉ,* q.v.; எண்வகைப் பாடற்பயன்களுள் ஒன்று. (சிலப். 3, 16, உரை.) 2. (Erot.) A mode

of sexual union; புணர்ச்சிவகையுள் ஒன்று. (கொக்கோ. 3, 5.)

உச்சலம் uccalam, n. <uccala. Mind; மனம். (W.)

உச்சன் uccaṉ, n. <உச்சம். (Astrol.) Planet in its exalted sign of the zodiac; இராசி சக்கரத்தில் தன் உச்சநிலையில் நிற்குங் கிரகம். (பஞ்.)

உச்சாயம் uccāyam, n. prob. ut-sāha. Energy; உற்சாகம். Pond.

உச்சாரம் uccāram, n. <ucchrāya. Height; உயர்ச்சி. (யாழ். அக.)

உச்சிசந்தி ucci-canti, n. <உச்சி+. Noon service in the temple; உச்சிக்கால பூசை. (Insc.)

உச்சிமோடு ucci-mōṭu, n. <id.+மேடு. Ridge of a roof; கூரையின் இருபக்கமுஞ் சேருகின்ற மேலிடம். Colloq.

உச்சியணி ucci-y-aṇi, n. <id.+. Pendant of a head-gear; தலைச்சீராவில் உள்ள அலங்காரத்தொங்கல். Pond.

உச்சிரேகை ucci-rēkai, n. <id.+. (Astron.) The great circle passing through a celestial body and the zenith; வானவளைவைக்குறிய பெரிய ரேகை.

உச்சினி uccini, n. The second month; இரண்டாம் மாதம். (பொதி. நி.)

உச்சுவலம் uccuvalam, n. <ujjvala. (யாழ். அக.) 1. Desire; ஆசை. 2. Gold; பொன்.

உச்சேதம் uccētam, n. <uc-chēda. Desolation; நாசம். (நீலகேசி, 657.)

உசகம் ucakam, n. Castor-plant; ஆமணக்கு. (சங். அக.)

உசரம் ucaram, adv. cf. ஓசரம். [T. kosara.] For the sake of, on account of; பொருட்டு. உனக்குசரம் வந்தேன். Loc.

உசல் ucal, n. <uṣas. Dawn; விடியல். (நாமதீப.)

உசற்காலம் ucaṟkālam, n. <உசல்+. Dawn; விடியற்காலம். (யாழ். அக.)

உசா ucā, n. Pointed-leaved hogweed; மூக்கூத்தி. (L.)

உசாவடி ucāvaṭi, n. Subdivision; உட்பிரிவு. (I. M. P. Tj. 894.)

உசி uci, n. cf. ஊசி. Sharpness; கூர்மை. (யாழ். அக.)

உசிதம் ucitam, n. (அக. நி.) 1. Bending; வளைகை. 2. Calling; கூப்பிடுகை. 3. Water; நீர்.

உசிதன் ucitaṉ, n. <ucita. The Pāṇḍya king; பாண்டியன். (இறை. 2, 32, மேற்கோட்பாட்டு.) (அக. நி.)

உசுப்பி ucuppi, n. perh. உசுப்பு-. Faeces; மலம். Tinn.

உசுலாத்திமாடு uculātti-māṭu, n. prob. Gujarat+. A kind of big cow, giving plenty of milk, as from Gujarat; அதிகமாகப் பால் கொடுக்கும் ஒருவகைப் பெரியபசு. Tj.

உசேனி ucēṉi, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

உஞ்சேனைமாகாளம் uñcēṉai-mākāḷam, n. <உஞ்சேனை+Mahā-kāla. The Śiva shrine at Ujjain; உச்சயினியிலுள்ள சிவாலயம். (தேவா. 1221, 8.)

உஞற்று uñaṟṟu, n. <உஞற்று-. Usage; வழக்கு. (அக. நி.)

உட்கழுத்துச்சரடு uṭ-kaḻuttu-c-caraṭu, n. <உள்+கழுத்து+. A close-fitting golden necklace, with a pendant; சுழுத்தோடு அணியப்படும் பதக்கஞ் சேர்ந்த பொற்சரடுவகை. Loc.

உட்கொள்(ளு)தல் uṭ-koḷ-, v. tr. <id. +. To collect, as taxes; வரிமுதலியன தண்டுதல். உட்கோளடங்க உட்கொண்டு (S. I. I. vi, 147).

உட்கோயில் uṭ-kōyil, n. <id.+. Inner shrine, the sanctum sanctorum; கோயிற் கர்ப்பக்கிருகம். உட்கோயில் புறக்கோயிலுட்பட (S. I. I. v, 328).

உட்கோள் uṭ kōḷ, n. <id.+. Tax; வரி. உட்கோளடங்க உட்கொண்டு (S. I. I. vi, 147).

உட்சேவகம் uṭ-cēvakam, n. prob. id.+. A tax; வரிவகை. (S. I. I. v, 383.)

உட்டணதுக்கம் uṭṭaṇa-tukkam, n. <உட்டணம்+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 136.)

உட்டணம் uṭṭaṇam, n. <uṣṇa. 1. Summer; முதிர்வேனில். (காசார்த்த.) 2. Pepper; மிளகு. (யாழ். அக.)

உட்டாரு uṭṭārā, n. prob. U. uṭhānā. Down-haul; கப்பலில் ஜீப்பு அல்லது சவாய்ப்பாய் களை இறக்க உதவுங் கயிறுகள். (M. Navi. 87.)

உட்டொடர் uṭṭoṭar, n. <உள்+. (Gram.) A simple sentence forming part of a com-

pound sentence; பெருந்தொடர்மொழியின் பாக மான சிறுதொடர். (தொல். சொல். 42, சேனா.)

உட்பிடி ut-piti, *n.* <id.+. cf. உடம்பிடி. Lance; கைவேல். (அக. நி.)

கல-த்தல் kala-, *12 v. intr.* To be loosely strung; to have intervening spaces; இடைவிட்டிருத்தல். *Loc.*

கலக்கடி kalakkaṭi, *n.* <கலக்கு-+அடி-. Terror, fear; அச்சம். *Loc.*

கலக்கம்[1] kalakkam, *n.* <கல-. 1. Clearness; distinctness; being clearly; spaced out; இடைவெளி யுடைமை. *எழுத்துக் கலக்கமா யிருக்கிறது.* 2. Agreement; பொருத்தம். *Loc.*

கலக்கம்[2] kalakkam, *n.* prob. கலக்கு-. cf. கலகம். Uproar, bustle; ஆரவாரம். (யாழ். அக.)

கலகம்[1] kalakam, *n.* prob. *kalaha.* 1. A hell; நரகவகை. *கலகக் கனற்கொடி* (தக்கயாகப். 457). 2. Kingfisher; கலகக்குருவி. (யாழ். அக.)

கலகம்[2] kalakam, *n.* <*kalaka.* A kind of fish; மீன்வகை. (சங். அக.)

கலகல-த்தல் kalakala-, *11 v. intr.* (யாழ். அக.) 1. To dry thoroughly; நன்றாகக்காய்தல். 2. To talk too much; மிகப்பேசுதல்.

கலகலம் kalakalam, *n.* prob. கலம்+கலம். Box for jewels; ஆபரணச்செப்பு. (யாழ். அக.)

கலகவாய்க்குருவி kalaka-vāy-k-kuruvi, *n.* <கலகம்+. See கலகம்[1], 2. (யாழ். அக.)

கலங்காப்பெருநகரம் kalaṅkā-p-peru-nakaram, *n.* <கலங்கு-+ஆ neg.+பெருமை+. Vaikuṇṭha, Viṣṇu's Heaven; வைகுந்தம். *கலங்காப் பெருநகரத்துக்குப் போலியாயிருக்கும்* (ஈடு, 10, 2, 1).

கலசபூஜை kalaca-pūjai, *n.* <*kalaśa*+. Invoking the presence of God in a pot of water and worshipping Him; நீர்நிரம்பிய கலசத்தில் தேவதையை ஆவாகித்துச் செய்யும் பூஜை. *Colloq.*

கலசம் kalacam, *n.* <*kalaśa.* 1. Pot of water consecrated during the worship of a deity; குறித்த தேவதையை ஆவாகனஞ் செய்தற்காக வைக்கும் பாத்திரம். *Colloq.* 2. Milk; பால். (நாநார்த்த.)

கலசயோனி kalaca-yōṉi, *n.* <*kalaśa-yōni.* Drōṇācārya, as born out of a pitcher; துரோணாசாரியர். கங்கைமகனும் கலசயோனியுமே கைமுகிழ்த்தார் (பாரதவெண். 163).

கலசன் kalacaṉ, *n.* perh. கலசம். Cowherd; இடையன். (யாழ். அக.)

கலடு kalaṭu, *n.* cf. கரடு. Stony ground; கற்பாங்கான நிலம். (யாழ். அக.)

கலத்தல் kalattal, *n.* <கல-. Inarticulate sound; எழுத்திலா வோசை. (யாழ். அக.)

கலத்திலிடு-தல் kalattil-iṭu-, *v. tr.* <கலம் +. To serve food; பரிமாறுதல். (J. N.)

கலத்திற்பிரிவு kalattiṟ-pirivu, *n.* <id.+. Voyage in a ship, dist. fr. *kāliṟ-pirivu;* கடல் கடந்து செல்லும் பிரிவு. (தொல். பொ. 11, உரை.)

கலதம் kalatam, *n.* <*kalata.* Bald head; வழுக்கைத்தலை. (சங். அக.)

கலதை kalatai, *n.* cf. கலதி. The Goddess of Misfortune; மூதேவி. (யாழ். அக.)

கலந்தருநன் kalan-tarunaṉ, *n.* <கலம் + தா-. 1. Goldsmith, jewel-maker; மணித் தட்டான். (சூடா.) 2. Potter; குயவன். (யாழ். அக.)

கலப்பரப்புநெல் kala-p-parappu-nel, *n.* <id.+பரப்பு-+. Paddy spread under a *kalacam,* in religious rites; கலசத்தின்கீழ் இடும் நெல். *Tinn.*

கலப்புக்கதிர் kalappu-k-katir, *n.* <கலப்பு +. The stage when ears of corn appear here and there in a field; கதிர் அங்கொன்றும் இங் கொன்றுமாகக் காணும் பருவம். *Tj.*

கலப்புறம் kalappuṟam, *n.* Chemist's stone-mortar; கலுவம். கலப்புறத்திற் றேய்த்து (பதார்த்த. i, 235).

கலப்புறுமொழி kalappuṟu-moḻi, *n.* <கலப்பு + உறு- +. (Gram.) Words which occur in both genders, *uyartiṇai* and *akṟiṇai;* இருதிணையிலும் வருஞ் சொல். (பேரகத். 139.)

கலபி kalapi, *n.* <கலாபம். cf. கலாபி. Peacock; மயில். செழுங்கலபி யாலித்து (கந்தரலங். 97).

கலம் kalam, *n.* cf. கலன். Encumbrance; வில்லங்கம். நிலத்துக்கு எப்பேர்ப்பட்ட கலமும் இறையுமில்லை (S. I. I. vii, 278).

கலம்பம் kalampam, *n.* <*kalamba.* Common Cadamba tree; கடப்பமரம். (சங். அக.)

கலமம் kalamam, *n.* <*kalama.* A kind of paddy; நெல்வகை. (சங். அக.)

கலவம்[1] kalavam, *n.* <கலம். Boat; தோணி. கலவஞ்சேர் கழிக்கானல் (தேவா. 532, 4).

கலவம்[2] kalavam, *n.* perh. கலாபம். Peacock; மயில். கலவம் புகலுங் கான்கெழு சோலை (பெருங். மகத. 14, 17).

கலவம்[3] kalavam, *n.* cf. கலுவம். Chemist's mortar; குழியம்மி. (நாமதீப.)

கலவரம் kalavaram, *n.* [T. *kalavaramu,* K. *kaḷavaḷa.*] Tumult, confusion; சந்தடி. (யாழ். அக.)

கலவாய் kalavāy, *n.* cf. கலவாசு. A kind of crackers; வெடிவகை. (சங். அக.)

கலவிகரணன் kala-vikaraṇaṉ, *n.* <*khala* +. God Vairava; வைரவமூர்த்தி. (காஞ்சிப். வயிர வீசப். 26.)

கலவிருக்கை kalavirukkai, *n.* prob. கலவு +. Sitting in state, as in an audience hall; ஓலக்கமிருக்கை. (சம். அக. Ms.)

கலவைச்சாந்து kalavai-c-cāntu, *n.* <கலவை +. Unguent of sandal paste with other aromatic ingredients; வாசனைச்சந்தனம். *Loc.*

கலவோடு kala-v-ōṭu, *n.* <கலம் +. Potsherd; மண்பாண்டச் சல்லி. (யாழ். அக.)

கலன்[1] kalaṉ, *n.* (அக. நி.) 1. Jewel; பூண். 2. Boat; நாவாய். 3. Lute; யாழ்.

கலன்[2] kalaṉ, *n.* <*khala.* (நாநார்த்த.) 1. Tale-bearer; கோட்சொல்லி. 2. Wicked person; துஷ்டன்.

கலனம் kalaṉam, *n.* <*skhalana.* Profuse discharge of blood; பெரும்பாடு. (யாழ். அக.)

கலனிலி kalaṉ-ili, *n.* <கலன் + இல் neg. Widow; விதவை. (நாமதீப.)

கலாங்கிசம் kalāṅkicam, *n.* <*kalā* + *aṃśa.* (Astrol.) Dividing a zodiacal sign into 16 parts; இராசியைப் பதினாறுகூறிடுகை. (சோதிடகிரக. 123.)

கலாசி kalāci, *n.* <*kalāci.* Forearm; முன்கை. (யாழ். அக.)

கலாதன் kalātaṉ, n. <kalāda. Goldsmith; தட்டான். (யாழ். அக.)

கலாப்பு kalāppu, n. An ear-ornament worn by Pariahs; பறையர் காதணிவகை. (E. T. vi, 97.)

கலாபம் kalāpam, n. <kalāpa. (நாநார்த்த.) 1. Collection; cluster; தொகுதி. 2. Quiver; அம்புக்கூடு.

கலாபினை kalāpiṉai, n. <கலாபனை. Disturbance; கலகம். (யாழ். அக.)

கலாம் kalām, n. <kalaha. Petulance, bouderie; ஊடல். (யாழ். அக.)

கலாயம் kalāyam, n. cf. kālaśēya. Buttermilk; மோர். (நாமதீப.)

கலாலாபம் kalālāpam, n. <kalālāpa. Bee; வண்டு. அரியமாமலர் விரியத்தேனுகர்ந் தார்த்திடுங் கலாலாபம் (அலங்காரச்சிந்து, 10).

கலாவியூகம் kalā-viyūkam, n. <kāla+. A category of things, one of nava-viyūkam, q. v.; நவவியூகத்தொன்று. (சௌந்த. 1, உரை.)

கலிக்கோடை kali-k-kōṭai, n. <கலி+. Sultriness; வெப்பம். கன்றுபிணி நெருப்பவியுங் கலிக்கோடை தீரும் (தஞ். சர. ii, 94).

கலிகம் kalikam, n. Indian mesquit; வன்னி மரம். (சித். அக.)

கலிகாரம் kalikāram, n. perh. kalhāra. cf. கலிகை. Tuscan jasmine; இருவாட்சி. (சங். அக.)

கலிகை kalikai, n. cf. கலியுஞ்சை. Black sirissa; உசில். (சங். அக.)

கலிங்கம் kaliṅkam, n. prob. kaliṅga. 1. Horse; குதிரை. (யாழ். அக.) 2. Silk cloth; பட்டாடை. மணிமுடி கலிங்கமாலெ (மேருமந். 123).

கலிங்கி kaliṅki, n. Shingle tree; மலைக் கொன்றை. (L.)

கலித்தம்[1] kalittam, n. <கலி-. (யாழ். அக.) 1. Uproar, tumult; ஆரவாரம். 2. Grand appearance; பொலிவு.

கலித்தம்[2] kalittam, n. <skhalita. (யாழ். அக.) 1. Vomiting, emitting; கக்குகை. 2. Oozing; பொசிகை. 3. Bursting; வெடிக்கை.

கலித்துரிஞ்சில் kali-t-turiñcil, n. <கலி+. cf. கலியுஞ்சை. Fragrant sirissa; கருவாகை. (L.)

கலிதம் kalitam, n. <kalita. Fitting; பொருத்தம். (யாழ். அக.)

கலிமா kalimā, n. <Arab. kalimā. Muham. 1. Prayer; விண்ணப்பம். 2. The Muslim confession of faith, beginning with lāyilāh illallāhu; இஸ்லாம் மதத்தைச் சேரும் போது 'அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை; முகம்மது அவருடைய திருத்தூதர்' என்று பொருள் படச் சொல்லும் அபிவசனம்.

கலிமிக்காவிமரம் kalimi-k-kāvi-maram, n. Mizzen-top-mast; கலிமிமரத்தின் அடிக்கட் டைக்கு மேலுள்ள பாகம். (M. Navi. 81.)

கலிமிசவர்மரம் kalimi-cavar-maram, n. Mizzen-top-gallant mast; கலிமிமரத்தின் பகுதி யான காவிமரத்துக்கு அடுத்து மேலுள்ள பாகம். (M. Navi. 81.)

கலிமிடவர்பறுவான் kalimi-ṭavar-paruvāṉ, n. Mizzen-royal yard; கலிமிடவர் மரத்தின் குறுக்கே போடப்பட்டிருக்கும் பறுவான். (M. Navi. 82.)

கலிமிடவர்மரம் kalimi-ṭavar-maram, n. Mizzen-royal mast; கலிமிமரத்தின் உச்சிப்பாகம். (M. Navi. 81.)

கலிமிமரம் kalimi-maram, n. Mizzen-mast; கப்பலின் பின்னணியத்தில் இருக்கும் பாய் மரம். (M. Navi. 80.)

கலிமோகனம் kali-mōkaṉam, n. prob. kali+mōhana. Indian fig; அத்தி. (சங். அக.)

கலியகம் kaliyakam, n. cf. கலிங்கம். Seeds of conessi bark; வெட்பாலையரிசி. (சங். அக.)

கலியுஞ்சை kaliyuñcai, n. cf. கலித்துரிஞ் சில். See கலித்துரிஞ்சில். (L.)

கலியெழுத்து kali-y-eḻuttu, n. <கலி+. A secret code; சங்கேதவெழுத்துவகை. (யாப். 536.)

கலினம் kaliṉam, n. (சங். அக.) 1. Kaṟpari-pāṣāṇam, a mineral poison; கற்பரிபாஷா ணம். 2. Palas tree; வன்னிமரம்.

கலினை kaliṉai, n. cf. கலினி. Widowhood; கைம்மை. (யாழ். அக.)

கலுக்குப்பிலுக்கு kalukku-p-pilukku, n. Redupl. of பிலுக்கு. Ostentation; ஆடம்பரம். (யாழ். அக.)

கலுக்கெனல் kalukkeṉal, n. Onom. expr. of loud, sharp sound, as when laughing; சிரிப் பில் உண்டாம் பேரொலிக் குறிப்பு.

கலுகுலுத்தல் kalukuluttal, n. Confused noise due to various low sounds; பல சிற் றொலியி லுண்டான தொனி. (யாழ். அக.)

கலும்பு kalumpu, *n.* cf. களிம்பு. Ointment; களிம்பு. *Loc.*

கலுளி kaluḷi, *n.* Wild buffalo; காட்டெருமை. (சங். அக.)

கலை[1] kalai, *n.* <*mēkhalā.* River portia tree; காஞ்சிமரம். (யாழ். அக.)

கலை[2] kalai, *n.* <*kalā.* 1. A minute division $=\frac{1}{60}$ of a degree; பாகையின் அறுபதிலொன்று. (M. Navi. 56.) 2. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

கலை[3]**-தல்** kalai-, *4 v. intr.* To be startled; to shy; மிரளுதல். *Tinn.*

கலைப்பாகி kalai-p-pāki, *n.* <கலை+ Sarasvatī, the Goddess of Learning; சரசுவதி. வெய்ய கலைப்பாகி கொண்டு (திவ். பெரியாழ். 1, 3, 9).

கலையொடுமலைவு kalaiyoṭu-malaivu, *n.* <id.+. (Pros.) A defect in poetry; செய்யுட் குற்றங்களு ளொன்று. (யாப். வி. 525.)

கவ்வம் kavvam, *n.* A mark of cattle; மாட்டுச்சுழிவகை. (பெரிய. மாட்.)

கவசம் kavacam, *n.* cf. *kavasa.* Fever plant; பற்படகம். (நாமதீப.)

கவட்டன் kavaṭṭaṉ, *n.* <கவடு. Deceitful person; வஞ்சகன். உளமழிக்குங் கவட்டர்க ளிணக்கந் தவிர்த்து (திருப்பு. 238).

கவட்டு-தல் kavaṭṭu-, *5 v. tr.* To bend; வளைத்தல். (யாழ். அக.)

கவடாவீடு kavaṭāvīṭu, *n.* Granary; களஞ்சியம். (J. N.)

கவடி kavaṭi, *n.* (சங். அக.) 1. Tin; தகரம். 2. Alum; படிக்காரம்.

கவடு kavaṭu, *n.* Section, ramification; உட்பிரிவு. கார்ப்பண்யத்தின் கவடுகளெல்லாம் (ரஹஸ்ய. 504).

கவண்டை kavaṇṭai, *n.* cf. கவணை. Sling; கவண். (கலித். பக். 242, சீழ்க்குறிப்பு.)

கவணச்சீலை kavaṇa-c-cīlai, *n.* <கவணம் +. Corrosive plaster; காரச்சீலை. (பதார்த்த. i, 231.)

கவணி kavaṇi, *n.* Lace work; சரிகை வேலை. *Pond.*

கவர் kavar, *n.* <கவர்-. Opening in a dam to let water out; அணையில் நீர்செல்லுதற்கு விடும் வழி. *Loc.*

கவர்க்கட்டை kavar-k-kaṭṭai, *n.* <கவர்+. Stocks; பட்டிமாட்டுக்கிடுங் கட்டை. *Pond.*

கவர்க்கம் ka-varkkam, *n.* <க+. (Gram.) Gutturals, in Sanskrit; தொண்டையி லிருந்து உச்சரிக்கப்படுவனவான க வ ம வ ஞ என்ற வடமொழி எழுத்துக்கள்.

கவர்வு kavarvu, *n.* <கவர்-. Harmlessness; non-violence; அஹிம்சை. (சம். அக. Ms.)

கவரிபந்தம் kavari-pantam, *n.* <கவரி+. (Jaina.) Bunch of hair; தலைமயிர்க் கற்றை. நீலத் தின் கதிரையெல்லாங் கறந்தொரு கற்றையாக்கி வைத்ததாங் கவரிபந்தம் (மேருமந். 769).

கவருகோல் kavaru-kōl, *n.* <கவர்-+. A potter's instrument; குயவ ருபகரணங்களு ளொன்று. *Madr.*

கவலை kavalai, *n.* A disease; நோய்வகை. (அக. நி.)

கவளம்[1] kavaḷam, *n.* prob. *kapōla.* (சம். அக. Ms.) 1. Cheek; கபோலம். 2. Must of an elephant; யானைமதம். (திவ். பெரியதி. 4, 8, 1, வ்யா.)

கவளம்[2] kavaḷam, *n.* cf. கவளி. Bundle of betel-leaves; வெற்றிலைக்கட்டு. (யாழ். அக.)

கவளிகை kavaḷikai, *n.* <*kavalikā.* See கவளம்[2]. (யாழ். அக.)

கவாட்சி kavāṭci, *n.* Colocynth; பேய்க் கொம்மட்டி. (சங். அக.)

கவாடக்காரன் kavāṭa-k-kāraṉ, *n.* <T. *kabādamu*+. Grass-cutter; புல்வெட்டுவோன். (யாழ். அக.)

கவாடசூரணம் kavāṭa-cūraṇam, *n.* prob. *kavāṭa*+. cf. கவாடகுளிகை. A medicinal powder or mixture in which opium is an ingredient; அபினிச்கலவைச் சூரணம். (சங். அக.)

கவாடம் kavāṭam, *n.* Conessi bark; வெட்பாலை. (சங். அக.)

கவாம்போதி kavāmpōti, *n.* (Mus.) One of the 72 primary *rāgās;* எழுபத்திரண்டு மேள கர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கவாய்[1] kavāy, *n.* <Hind. *gavaiya.* Musician; பாடகன். *Mod.*

கவாய்[2] kavāy, *n.* Tatters; கந்தை. (யாழ். அக.)

கவாரம் kavāram, *n.* <*kavāra.* Lotus; தாமரை. (சங். அக.)

கவிகச்சு kavikaccu, *n.* <*kapikacchu.* Cowhage; பூனைக்காலி. (சங். அக.)

கவிகற்றோன் kavi-kaṟṟōṉ, *n.* <கவி+ கல்-. Panegyrist, encomiast; மங்கலப்பாடகன். (யாழ். அக.)

கவித்தனம் kavi-t-taṉam, n. <கவி+. Fickleness; சஞ்சலம். (சம். அக. Ms.)

கவிதாசன்னதம் kavitā-caṉṉatam, n. <kavitā+. Poetic fervour or afflatus; poetic frenzy; கவித்துவத்தில் முனைந்து நிற்கும் நிலை. Mod.

கவிந்தி kavinti, n. Cubeb; வால்மிளகு. (சங். அக.)

கவிளம் kaviḷam, n. Buttermilk; மோர். (சங். அக.)

கவினம் kaviṉam, n. <kaviya. cf. கவி ணம். Bit; கடிவாளம். (நாமதீப.)

கவீதனம் kavītaṉam, n. Siris; காட்டுவாகை. (சங். அக.)

கவுசி kavuci, n. cf. கவுதி. Indian laburnum; கொன்றை. (சங். அக.)

கவுடு kavuṭu, n. Sacred eleocarpus bead enclosed in gold and worn round the neck; கழுத்திலணிவதும் பொற்குவளையில் அமைந்ததுமான உருத்திராக்கமணி. Loc.

கவுத்துவம் kavuttuvam, n. Guise; வேஷம். பிள்ளையார் கவுத்துவங்கொண்டாளாட (விறலிவிடு. 411).

கவுதி kavuti, n. cf. கவுசி. Indian laburnum; கொன்றை. (சங். அக.)

கவுரகாசு kavura-kācu, n. <gaura+. Conch bead; அக்குமணி. (சங். அக.)

கவுல் kavul, n. Deceit, fraud; வஞ்சனை. Colloq.

கவுளகன் kavuḷakaṉ, n. One who holds that the pirāṇaṉ is the Ātman; பிராணனே ஆன்மா வென்போன். (சங். அக.)

கவுளி kavuḷi, n. cf. கௌளிபாத்திரம். A kind of cocoa-palm; தெங்குவகை. (சங். அக.)

கவுனன் kavuṉaṉ, n. Mirutapāṣāṇam, a kind of mineral poison; மிருதபாஷாணம். (சங். அக.)

கவுனொட்டடை kavuṉoṭṭaṭai, n. A kind of oṭṭaṭai paddy; ஒட்டடன் நெல்வகை. Loc.

கவேது kavētu, n. cf. கவேதுகை. Wild species of wheat; காட்டுக்கோதுமை. (சங். அக.)

கவேதுகை kavētukai, n. See கவேது. (சங். அக.)

கவேலம் kavēlam, n. prob. kavēla. Indian water-lily; குவளை. (சங். அக.)

கவை kavai, n. 1. Need, necessity; தேவை. Pond. 2. Activity; தொழில். (சம். அக. Ms.)

கவையேணி kavai-y-ēṇi, n. <கவை+. Forked ladder; தலையில் பிணிக்கப்பட்டுக் கவராக வுள்ள இரட்டையேணி. Loc.

கழங்கு kaḻaṅku, n. (அக. நி.) 1. Vēlaṉ-āṭal, a frenzied dance; வேலனாடல். 2. Semen; இந்திரியம்.

கழஞ்சு kaḻañcu, n. A little; small quantity; சிறிது. இந்தக் கழஞ்சு மண்ணு மழிந்தால் பின்பு ஸ்ருஷ்டிக்கை அரிதாய் (திவ். திருக்குறுந். 4, வ்யா. பக். 16).

கழல்வளை kaḻal-vaḷai, n. <கழல்+. A variety of bangles; வளைவகை. என்னுடைய கழல் வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே (திவ். நாய்ச். 11, 2).

கழலிச்சிட்டு kaḻali-c-ciṭṭu, n. prob. கழல் +. cf. கள்ளிச்சிட்டு. A kind of ciṭṭu bird; சிட்டுக்குருவிவகை. (யாழ். அக.)

கழற்றுரை kaḻaṟṟurai, n. <கழறு-+உரை. Charge; rebuke; உறுதிச்சொல். (W.)

கழனிக்குளம் kaḻaṉi-k-kuḷam, n. <கழனி +. Tank lying amidst cultivable lands; நன்செய்நடுவிலுள்ள ஏரி. (S. I. I. ii, 43.)

கழனிவாரியப்பெருமக்கள் kaḻaṉi-vāriya-p-perumakkaḷ, n. <id.+வாரியம்+. Village assembly that looks after cultivation; விவசாயத்தைக் கவனிக்கும் ஊர்ச்சபையார். (S. I. I. iii, 231.)

கழாய் kaḻāy, n. cf. கழாய்வணம். A species of amaranth; சிறுகீரை. (சங். அக.)

கழாயம் kaḻāyam, n. See கழாய். (சங். அக.)

கழாறம் kaḻāṟam, n. cf. கழாய். Areca-palm; கமுகு. (சங். அக.)

கழி[1] kaḻi, n. Coir, rope; கயிறு. கழிவிடும் பரிபிளந்து (தக்கயாகப். 132).

கழி[2]-தல் kaḻi-, 4 v. tr. To be able; இயலு தல். எனக்கு இது கழியாது. Loc.

கழி[3]-த்தல் kaḻi-, 11 v. intr. 1. To perform funeral ceremonies; கருமாதிசெய்தல். C.N. 2. To keep aloof; விலக்கிக்கொள்ளுதல். அவன் தன்னைக் கழித்துக் கொண்டான். Loc.

கழிக்கோல் kaḻi-k-kōl, n. <கழி+. Bamboo; மூங்கில். Nāñ.

கழிகட்டை kaḻi-kaṭṭai, n. <கழி-+. Useless person or thing; கழிகடை. Loc.

கழிகம் kaḻikam, n. Climbing staff plant; வாலுளுவை. (யாழ். அக.)

• கழித்துக்கட்டு-தல் kaḻittu-k-kaṭṭu-, *v. tr.* <கழி-+. To give away to others what is not useful to oneself; தனக்கு உபயோகப்படாததைப் பிறனிடஞ் சேர்த்தல். இதை அவனிடம் கழித்துக்கட்ட வேண்டியதுதான்.

கழியல் kaḻiyal, *n.* <கழி. 1. Cane, stick; கழி. *Tinn.* 2. See கடைமுளை. *Nāñ.*

கழியல்மாறு-தல் kaḻiyal-māṟu-, *v. intr.* <கழியல்+. To be at loggerhead; பிணங்குதல். *Nāñ.*

கழியுடல் kaḻi-y-uṭal, *n.* <கழி-+. Carcass; corpse; பிணம். *Pond.*

கழிவட்டம் kaḻi-vaṭṭam, *n.* <id.+. Refuse; riff-raff, dregs of society; கடைப்பட்டவன்-வள்-து. *Loc.*

கழிவட்டை kaḻi-vaṭṭai, *n.* <id.+. See கழிவட்டம். *Colloq.*

கழிவாய்நஞ்சன் kaḻi-vāy-nañcaṉ, *n.* <கழி+வாய்+. A kind of snake; பாம்புவகை. (யாழ். அக.)

கழிவொற்றி kaḻivoṟṟi, *n.* <கழிவு+. Usufructuary mortgage which becomes automatically discharged by enjoyment for a fixed period in lieu of payment of principal and interest; வட்டிக்கும் முதலுக்குமாக ஒற்றிவைக்கப்பட்ட நிலத்தைக் குறித்தகாலத்துக்கு அனுபவித்துக் கொண்டு திருப்பிக் கொடுப்பதான அடைமானம். *Tranquebar.*

கழுக்கோல் kaḻu-k-kōl, *n.* See கழிக்கோல். *Nāñ.*

கழுகரிப்பரி kaḻukari-p-pari, *n.* <கழுகு+அரி+. Winged horse; hippogriff; இறக்கையுள்ள குதிரை. *Pond.*

கழுத்தகமுடையான் kaḻuttakam-uṭai-yāṉ, *n.* <கழுத்து+அகம்+. Husband; கணவன். *Loc.*

கழுத்தாரம் kaḻuttāram, *n.* <id.+. Dewlap of cattle; அலைதாடி. (யாழ். அக.)

கழுத்துப்பொருத்தம் kaḻuttu-p-poruttam, *n.* <id.+. *Maṅkaliya-p-poruttam*, an agreement between the horoscopes of the bride and the bridegroom; மங்கலியப்பொருத்தம். (W.)

கழுத்துமுறி-த்தல் kaḻuttu-muṟi-, *v. intr.* <id.+. (யாழ். அக.) 1. To obtain by force, as by ruining a person; ஒருவனை வருத்திப் பொருள்முதலியன பெறுதல். 2. To importune; தொந்தரவு செய்து கேட்டல்.

கழுதைக்கூத்து kaḻutai-k-kūttu, *n.* <கழுதை+. Ridiculous behaviour; பரிகசிக்கத்தக்க செய்கை. *Loc.*

கழுதைவிடை kaḻutaiviṭai, *n.* prob. id.+. Bloody drop ordure tree, m. tr., *Stercula guttata;* மாவசை. (Nels.)

கழுந்தி kaḻunti, *n.* (அக. நி.) 1. Pearl; முத்து. 2. Sugarcane; கரும்பு.

கழுந்துலக்கை kaḻuntulakkai, *n.* <கழுந்து+. Pestle without ferrule, used in husking paddy, as dist. fr. *tiṭṭulakkai*, q.v.; நெல்குற்றுவதற்கு உதவும் பூணில்லாத உலக்கை. *Tinn.*

கழுப்பு kaḻuppu, *n.* cf. கழப்பு-. Delay; தாமதம். (சம். அக. Ms.)

கழுமலை kaḻu-malai, *n.* <கழு+. Mound of carcasses; பிணக்குன்று. கண்டவிடமெல்லாம் கழுமலை யாக்குவே னென்றுரிறே (திவ். பெரியாழ். 4, 3, 7, வ்யா. பக். 941).

கழுவஞ்சம்பா kaḻuvañ-campā, *n.* <கழுவு-+. A kind of paddy, maturing in six months; ஆறு மாதங்களில் விளையும் நெல்வகை. (விவசா. நூன்மு. 2.)

கழுவெண்ணெயுருக்கி kaḻu-veṇṇey-urukki, *n.* <கழு+வெண்ணெய்+. (யாழ். அக.) 1. One who persists pertinaciously in his work; பிடித்தபிடி விடாது சோலிபண்ணுகிறவ-ன்-ள். 2. Cruel person; கொடியவ-ன்-ள்.

கள் kaḷ, *n.* (அக. நி.) 1. Region of agricultural tracts; மருதநிலச்சார்பு. 2. Tank; பொய்கை.

கள்வம் kaḷvam, *n.* <கள்-. That which is charming, attractive; கவர்ச்சியுள்ளது. கள்வப் பணிமொழி நினைதொறு மாவிவேமால் (ஈடு, 10, 3, 4, ஜீ. பக். 93).

கள்வி kaḷvi, *n.* Fem. of கள்வன். 1. Woman thief; திருடி. 2. Cunning woman; வஞ்சகி. 3. One who is able to conceal her mind; மனமடக்கமுள்ளவள். எனகள்விதான் பட்ட வஞ்சனையே (திவ். திருவாய். 2, 4, 7).

கள்ளஞானி kaḷḷa-ñāṉi, *n.* <கள்ளம்+. Hypocrite; கபடஞானி. *Pond.*

கள்ளச்சோதிப்பு kaḷḷa-c-cōtippu, *n.* <id.+. See கள்ளவணி. *Pond.*

கள்ளத்திருக்கை kaḷḷa-t-tirukkai, *n.* <id.+. A kind of fish; மீன்வகை. கள்ளத்திருக்கை மீன் சிவந்த திருக்கை (பருளை. பள்ளு. 16).

கள்ளத்திறவுகோல் kaḷḷa-t-tiṟavukōl, *n.* <id.+. Picklock; திருட்டுச்சாவி. (W.)

கள்ளத்தீன் kaḷḷa-t-tīṉ, *n.* <id.+. Comestibles other than regular food eaten secretly; இடையிடையே திருட்டுத்தனமாக உண்ணுந் தின்பண்டம். (W.)

கள்ளப்படி kaḷḷa-p-paṭi, *n.* <id.+. [M. *kaḷḷappaṭi.*] False measure; முத்திரையில்லாத அளவுப்படி. *Loc.*

கள்ளப்பருந்து kaḷḷa-p-paruntu, *n.* <id. +. Common kite; பருந்துவகை. *Tinn.*

கள்ளப்பாட்டை kaḷḷa-p-pāṭṭai, *n.* <id. +. Jungle track known only to thieves; கள்ளருக்குத் தெரிந்த காட்டுவழி. *Loc.*

கள்ளப்பெண்சாதி kaḷḷa-p-peṇcāti, *n.* <id.+. Concubine; வைப்பாட்டி. (W.)

கள்ளமயிர்த்தொப்பி kaḷḷa-mayir-t-toppi, *n.* <id.+மயிர்+. Wig; பொய்ம்மயிர்முடி. (W.)

கள்ளமாப்பிள்ளை kaḷḷa-māppiḷḷai, *n.* <id.+. Paramour; சோரநாயகன். *Loc.*

கள்ளயுத்தம் kaḷḷa-yuttam, *n.* <id.+. The art of using a quarterstaff, fencing; சிலம்பப்போர். *Pond.*

கள்ளவணி kaḷḷa-v-aṇi, *n.* <id.+. False dress; mask; disguise; பிறர் அறியாதவண்ணம் கொள்ளும் வேஷம். *Pond.*

கள்ளவழி kaḷḷa-vaḻi, *n.* <id.+. Sally-port; secret passage; இரகசியமாய்ச் செல்லுதற்குரிய வழி. (கட்டடநாமா. 8.)

கள்ளவாளி kaḷḷa-v-āḷi, *n.* <id.+. Thief; திருடன். *Tinn.*

கள்ளவிழி kaḷḷa-viḻi, *n.* <id.+. Sly, furtive look; வஞ்சகப்பார்வை. *கள்ளவிழி விழிப்பர்* (தேவா. 55, 5).

கள்ளன் kaḷḷaṉ, *n.* <கள்ளம். 1. False coin; கள்ளநாணயம். (பணவிடு. 139.) 2. Covering of the stone in jack fruits; பலாக்கொட்டையின்மேலுள்ள சவ்வு.

கள்ளாடு-தல் kaḷḷāṭu-, *v. intr.* <id.+. To deceive; வஞ்சித்தல். *கள்ளாடு மைம்பொறிகளடக்கல்* (குற்றா. தல. வடவருவி. 50).

கள்ளிச்சிட்டு kaḷḷi-c-ciṭṭu, *n.* <கள்ளி+. cf. கள்ளிக்குருவி. A bird; பறவைவகை. (யாழ். அக.)

கள்ளுணி kaḷ-ḷ-uṇi, *n.* <கள்+. Drunkard; குடிகாரன். (W.)

கள்ளுத்தொந்தி kaḷḷu-t-tonti, *n.* <id.+. Corpulence due to heavy drinking; கட்குடியாற் பருத்த உடல். *Loc.*

கள்ளூண் kaḷ-ḷ-ūṇ, *n.* <id.+. Beetle, bee; வண்டு. (W.)

களகண்டமாலை kaḷa-kaṇṭamālai, *n.* <களம+. A kind of scrofula; கண்டமாலை வகை. (பராசசே. i, 254.)

களகளாவெனல் kaḷakaḷā-v-eṉal, *n.* Onom. expr. of gurgling, as of a person drowning, or of a person drinking water; தமிழ்மிழெனும் ஒலிக்குறிப்பு. *திருக்கை முழுத்தும்படியான ஆபத்தாய் களகளா சப்தம் தோன்ற க்லேசிக்கிறவளவிலே* (திவ். பெரியாழ். 2, 1, 9, வ்யா. பக். 240).

களச்செலவு kaḷa-c-celavu, *n.* <களம்+. Payment in grain, given on the threshing-floor to village watchmen and other servants; நெற்களத்தில் தலையாரி முதலிய கிராமவூழியக்காரர்க்குக் கொடுக்குந் தானியம். *Colloq.*

களஞ்சியப்பாடுவாசி kaḷañciya-p-pāṭu-vāci, *n.* <களஞ்சியம்+. Loss or wastage in storing grain in a granary; களஞ்சியத்திற் கட்டிய நெல்லின் அளவிலுண்டாங் குறைவு. (P. T. L.)

களத்திரம் kaḷattiram, *n.* <*kalatra.* (நாநார்த்த.) 1. Hip; அரைப்புறம். 2. Citadel, stronghold; அரணிடம்.

களத்துவிலை kaḷattu-vilai, *n.* <id.+. Price of fresh paddy sold at the threshing floor; களத்திற் கிடக்கும் புது நெல்லின் விலை. *Loc.*

களத்தொனி kaḷa-t-toṉi, *n.* <*kala-dhvani.* (நாநார்த்த.) 1. Indian cuckoo; குயில். 2. Dove; புறா. 3. Peacock; மயில்.

களதௌதம் kaḷatautam, *n.* <*kaladhauta.* (நாநார்த்த.) 1. Gold; பொன். 2. Dulcet sound; இனிய மெல்லோசை.

களப்பன்னை kaḷa-p-paṉṉai, *n.* prob. களம்+. A shrub; செடிவகை. (W.)

களப்பு kaḷappu, *n.* prob. களை-. Levelling a field for cultivation after removing the grass; பயிரிடுவதற்காகப் புல்வெட்டி நிலத்தைச் சீர்ப்படுத்துகை. (W.G.)

களபம் kaḷapam, *n.* Glass; கண்ணாடி. (யாழ். அக.)

களம்[1] kaḷam, *n.* Shed; கொட்டகை. (P. T. L.)

களம்[2] kaḷam, *n.* Tuskless elephant; கொம்பில்லா யானை. (நாநார்த்த.)

களம்விடு-தல் kaḷam-viṭu-, *v. intr.* <களம் +. To sell in one lot the grain scattered on the threshing-floor; நெல்லடித்த களத்திலுள்ள சிந்து மணி சிதறுமணிகளைக் குத்தகை விடுதல். *Loc.*

களமெழுத்து kaḷam-eḻuttu, *n.* <id.+. Drawing the image of the Goddess and singing Her praises, in Bhagavatī temples; பகவதியம்மன் கோயிலில் அம்மன் உருவம் வரைந்து துதிக்கை. *Nāñ.*

களர்ப்பாழ் kaḷar-p-pāḻ, *n.* <களர் +. Brackish waste; உப்புப்படிந்த பாழ்நிலம். *முதுநிலத்தரிசான களர்ப்பாழாய்* (S. I. I. viii, 109).

களர்மேடு kaḷar-mēṭu, *n.* <id.+. High land unfit for cultivation; சாகுபடிக்கு உதவாத மேட்டுநிலம். *Loc.*

களரி kaḷari, *n.* cf. *gala.* Throat; மிடறு. (*யாழ். அக.*)

களவடி kaḷa-v-aṭi, *n.* <களம் +. Sweepings of grain of a threshing-floor; களத்திற் சிதறிய தானியம். *Loc.*

களவாரம் kaḷa-vāram, *n.* <id.+. Grain given at the threshing-floor to the labourers; நெற்களத்தில் வேலைக்காரர்களுக்குக் கொடுக்குஞ் சுதந்திரம். (W.)

களவாளன் kaḷa-v-āḷaṉ, *n.* <களவு + ஆள்-. Thief; களவாளி. *களவாளனுவதூஉங் காண்டும்* (*நீலகேசி*, 338, *உரை, மேற்.*).

களவுகொள்(ளு)-தல் kaḷavu-koḷ-, *v. intr.* <id+. To steal; திருடுதல். *களவு கொண்டாபரணம் பூண்டாற்போலே* (*ரஹஸ்ய.* 13, 48).

களவுபூசல் kaḷavu-pūcal, *n.* <id.+. Irregular fight; guerilla warfare; நேர் முறையின்றி நடத்தும் போர். *களவுபூசல் செய்வார்க்கு ஒதுங்க நிழலான பையலே* (*ஈடு*, 10, 6, 8, *பக்.* 205).

களவேற்று-தல் kaḷavēṟṟu-, *v. tr.* <id. +. To charge with theft; திருட்டுக் குற்றஞ் சாட்டுதல். *என்பிள்ளையைக் களவேற்றுதே* (*திவ். பெரியாழ்.* 2, 1, 5, *வ்யா. பக்.* 225).

களாநிதி kaḷā-niti, *n.* (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (*பரத. ராக.* 55.)

களி[1] kaḷi, *n.* <களி-. Cruelty; குரூரம். (*யாழ். அக.*)

களி[2]**-த்தல்** kaḷi-, 4 *v. tr.* To enjoy; அனுபவித்தல். *பொற்கொடிமாதரைக் களிப்பதினும்* (*பாரதி. பாஞ்சாலி.* 34).

களிநெஞ்சன் kaḷi-neñcaṉ, *n.* <களி +. (*யாழ். அக.*) 1. Proud man; செருக்கன். 2. Cruel man; கொடியன்.

களிநோய் kaḷi-nōy, *n.* <id.+. Disease due to excessive drinking; கட்குடியாலுண்டாகும் நோய். *கட்கொண்டாங்குக் களிநோய் கனற்ற* (*பெருங். உஞ்சைக்.* 35, 51).

களிங்கம் kaḷiṅkam, *n.* prob. *kaliṅga.* (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (*பரத. ராக.* 533.)

களிப்புச்சுண்ணாம்பு kaḷippu-c-cuṇṇāmpu, *n.* <களிப்பு +. Lime mortar, ground and left for sometime before using; புளித்த சுண்ணாம்பு.

களிமண்சுண்ணாம்பு kaḷimaṇ-cuṇṇāmpu, *n.* <களிமண் +. A kind of mortar mixed with clay; களிமண் கலந்த சுண்ணாம்புவகை. (*கட்டட. சாத்.*)

களியடைக்காய் kaḷi-y-aṭaikkāy, *n.* <களி +. Arecanut boiled and dried, for chewing; களிப்பாக்கு. *Loc.*

களியலடி kaḷiyal-aṭi, *n.* <கழியல் +. A kind of *kummi* dance; கும்மியாட்டம். *Nāñ.*

களிவாய்நிலம் kaḷi-vāy-nilam, *n.* <களி +. Clayey soil; களிமண்பூமி. *Loc.*

களிற்றுயிர் kaḷiṟṟuyir, *n.* <களிறு + உயிர். See களிற்றுயிர்த்தூம்பு. *களிற்றுயிர் தொடுமின்* (*புறநா.* 152).

களிற்றுயிர்த்தூம்பு kaḷiṟṟuyir-t-tūmpu, *n.* <களிற்றுயிர் +. A kind of blow-pipe; பெருவங்கியம். (*புறநா.* 152.)

களிற்றுவட்டம் kaḷiṟṟu-vaṭṭam, *n.* <பெருகளிற்றுவட்டம். A hell; நரகவகை. (*சூடா.*)

களுகொளெனல் kaḷu-koḷ-eṉal, *n.* Onom. expr. of being soft and slippery, as jelly; நொளுநொளுத்தற் குறிப்பு. (*யாழ். அக.*)

களை[1] kaḷai, *n.* <களை-. Cut with hoe; களைக்கோலால் வெட்டிய வெட்டு. (*அக. நி.*)

களை[2] kaḷai, *n.* prob. *kalā.* A linear measure of 80 fingers breadth or *viraṟkaṭai;* 80 விரற்கடையளவு. (*சிற்பரத்.* 16.)

களைக்கொத்து kaḷai-k-kottu, *n.* <களை +. Weeding hook; களைக்கொட்டு. *Pond.*

களைகண் kaḷai-kaṇ, *n.* <களை- +. Master; lord; நிர்வாககன். (*சம். அக.* Ms.)

களைசோபம் kaḷai-cōpam, *n.* <id.+. Fatigue, exhaustion; களைப்பு. *களைசோபந்தான் தெளிந்து* (*கோவல. கதை.* i, 48).

களையான் kaḷaiyāṉ, *n.* Skylark; வானம்பாடி. *Loc.*

கற்கசம் karkacam, *n.* <*karkaša.* Sugar-cane; கரும்பு. (நாநார்த்த.)

கற்கசி-த்தல் karkaci-, *11 v. intr.* <*karkaša.* To be hard or unyielding; to be firm; கடுமையாயிருத்தல். வில்லைகொடுக்கும் பொழுது கற்கசிப்பார்க்குக் கொடாதும் (நீலகேசி, 337, உரை).

கற்கடககரம் karkaṭaka-karam, *n.* <கற்கடகம்+. prob. கரம். Scorpion; தேள். (யாழ். அக.)

கற்கடகவைரி karkaṭaka-vairi, *n.* Monkey; குரங்கு. (யாழ். அக.)

கற்கண்டம் karkaṇṭam, *n.* cf. கற்காரு. Eaglewood; அகில். (சங். அக.)

கற்கண்டு karkaṇṭu, *n.* prob. கல்+. A kind of ornament; ஆபரணவகை. கற்கண்டு ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு இரண்டு (S. I. I. ii, 413).

கற்கம்[1] karkam, *n.* <*kalka.* (நாநார்த்த.) 1. Sin; பாவம். 2. Dung of animals; விட்டை. 3. Iron ore; இரும்புக் கிட்டம்.

கற்கம்[2] karkam, *n.* <*karka.* (நாநார்த்த.) 1. Water jar; நீர்க்குடம். 2. White horse; வெள்ளைக் குதிரை. 3. Fire; தீ. 4. Mirror; கண்ணாடி.

கற்கம்[3] karkam, *n.* Forest; காடு. (நாநார்த்த.)

கற்கரம் karkaram, *n.* <*gargara.* Churn; மத்து. (யாழ். அக.)

கற்கரிகை karkarikai, *n.* <*gharghariká.* Tinklers; சதங்கை. (யாழ். அக.)

கற்கலிங்கி kar-kaliṅki, *n.* <கல்+. Shingle tree; மலைக்கொன்றை. (L.)

கற்காரு karkāru, *n.* Ash-gourd; சாம்பற்பூசணி. (சங். அக.)

கற்கிடை kar-kiṭai, *n.* <கல்+. Brick-kiln; செங்கற் சூளை. (S. I. I. ii, 54.)

கற்சத்து kar-cattu, *n.* <id.+. Asbestos; கல்நார். (யாழ். அக.)

கற்சவளை kar-cavaḷai, *n.* <id.+. Asbestos; கல்நார். (யாழ். அக.)

கற்சாலர்வேலை kar-cālar-vēlai, *n.* <id. +சாலர்+. Honey-comb brick-work; தேன்கூடுபோற் செய்யப்பட்ட செங்கற்கட்டட வேலை. (கட்டடசாமா.)

கற்சிலை kar-cilai, *n.* <id.+. Statue, stone image; உருவம் வகுத்த கல். *Mod.*

கற்சேம்பு kar-cēmpu, *n.* <id.+. A kind of Indian kales; சேம்புவகை. *Loc.*

கற்பகம் karpakam, *n.* cf. கற்பம். Yellow wood-sorrel; புளியாரை. (சங். அக.)

கற்பகன் karpakaṉ, *n.* <*kalpaka.* Barber; நாவிதன். (சங். அக.)

கற்பசு kar-pacu, *n.* <கல்+. Useless thing, as a cow made of stone; பயனற்றது. கழியகின் றூர்க்கொரு கற்பசுவாமே (திருமந். 308).

கற்பதி-த்தல் kar-pati-, *v. intr.* <id.+. To inscribe on stone; சிலாசாஸனம் வரைதல். கற்பதித்தான் சொன்ன கவி (சாச. தமிழ்க். 34).

கற்பயறு kar-payaṟu, *n.* <id.+. A kind of greengram; பயறுவகை. (பெரிய. மாட். 34.)

கற்பரம் karparam, *n.* (சங். அக.) 1. Blue vitriol; துருசு. 2. Sacred basil; துளசி.

கற்பள் karpaḷ, *n.* <கற்பு. Chaste woman; கற்புடையவள். பொலிவுறு கற்பள் (நீதிசாரம், 27).

கற்பாஞ்சான் kar-pāñcāṉ, *n.* <கல்+. Asafoetida; பெருங்காயம். (சங். அக.)

கற்பி-த்தல் karpi-, *11 v. tr.* <*kalp.* To instal, as a deity in a temple; பிரதிஷ்டித்தல். கந்தனைக் கற்பித்தான் (Insc.)

கற்பிதம் karpitam, *n.* <*kalpita.* Order; சட்டளை. *Pond.*

கற்பு karpu, *n.* Fort wall; புரிசை. (அக. நி.)

கற்புரம் karpuram, *n.* <*karbūra.* Gold; பொன். (யாழ். அக.)

கற்பூரசத்து karpūra-cattu, *n.* <கற்பூரம் +. Foliated crystallized gypsum; கர்ப்பூரசிலா சத்து. (யாழ். அக.)

கற்பூரணி karpūraṇi, *n.* Aloe; கற்றாழை. (சங். அக.).

கற்பூரத்தட்டு karpūra-t-taṭṭu, *n.* <கற்பூரம் +. A kind of temple-lamp; கோயிலில் உபயோகிக்குந் தீபவகை. கற்பூரத்தட்டிற் கனல்வாய்ப்ப (தமிழ்விடு. 238).

கற்பூரவிலை karpūra-vilai, *n.* <id.+. Very low price, as of articles sold to temples; மிகக் குறைந்த விலை. *Loc.*

கற்றடிவிரியன் karraṭi-viriyaṉ, *n.* prob. கல்+தடி+. A snake; பாம்புவகை. (யாழ். அக.)

கற்றளிப்புறம் karrali-p-puram, *n.* <கற்றளி+. Endowment made to a temple; கோயிற்குவிட்ட இறையிலி நிலம். (M. E. R. 45 of 1928-29.)

கறங்குமங்கல் karanku-mankal, *n.* Arnotto; சாப்பிரா. (Nels.)

கறட்டுழந்தான் karattulantān, *n.* A curl-mark in cattle; மாட்டுச்சுழிவகை. (பெரிய. மாட். 22.)

கறடு karatu, *n.* <கறள்-. 1. cf. கரடு. That which is dwarfish; குள்ளமானது. *கறட்டுப் பேய் தின்று களிக்க* (மான்விடு. 117). 2. Gold; பொன். (அக. நி.) *கற்கறடு வியாபாரி.*

கறணை karaṇai, *n.* A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (மாட்டுவா.)

கறவு karavu, *n.* <கற-. Milch cow; கறவைப்பசு. *கறவிடைப் பாலின்* (தேவா. 585, 5).

கறள்(ளு)-தல் karal-, *2 v. intr.* <குறள். *Tinn.* 1. To be of stunted growth; வளர்ச்சி யறுதல். 2. To burn low, as a wick for want of oil; எண்ணெயின்மையால் திரி மங்கியெரிதல்.

கறிக்காய் kari-k-kāy, *n.* <கறி+. Pepper; மிளகு. (சங். அக.)

கறுக்கட்டு-தல் karu-k-kattu-, *v. tr.* <கறு+. To entertain deep-rooted malice; தீராப் பகைகொள்ளுதல். *அவன் அதைச்செய்யக் கறுக்கட்டி விட்டான். Loc.*

கறுத்தகடப்பு karutta-kaṭappu, *n.* <கறு-+. A kind of paddy; நெல்வகை. (A.)

கறுத்தகல்லுண்டை karutta-kal-l-uṇṭai, *n.* <id.+கல்+. A kind of paddy; நெல்வகை. (A.)

கறுத்தகெளிறு karutta-keliru, *n.* <id. +. A kind of fish; மீன்வகை. *சின்னத்தாளங் கறுத்தகெளிற்று மீன்* (பருளோ. பள்ளு. 16).

கறுத்தப்பூ karutta-p-pū, *n.* <id.+. Mussel-shell creeper; கருங்காக்கணம். (சங். அக.)

கறுத்தமொச்சை karutta-moccai, *n.* <id.+. Hyacinth bean; மொச்சைவகை. (விவசா. 4.)

கறுப்பரிசி karupparici, *n.* prob. கறுப்பு+ அரிசி. A variety of coarse paddy; பெருநெல் வகை. *Loc.*

கறுப்பி karuppi, *n.* prob. id. Grey amber; மீனம்பர். (சங். அக.)

கறுப்பிறுங்கு karuppiruṅku, *n.* <id.+ இறுங்கு. A kind of millet; சோளவகை. (விவசா. 3.)

கறுப்பு karuppu, *n.* <கறு-. Minus mark against the defeated party, in cards, etc.; சீட்டாட்டத்தில் தோற்றவர் பெறுங் குறியீடு. *Colloq.*

கறுப்புக்காலிநெல் karuppu-k-kāli-nel, *n.* <கறுப்பு+. A kind of paddy; நெல்வகை. (A.)

கறுப்புச்சர்க்கரை karuppu-c-carkkarai, *n.* <id.+. Unrefined sugar; சுத்தஞ்செய்யாத சர்க்கரை. *Pond.*

கறுப்புப்பிசானம் karuppu-p-picāṉam, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

கறுப்பூனம் karuppūṉam, *n.* <id.+ ஊனம். A flaw in emeralds; பச்சைமணியி லுள்ள குற்றவகை. *பச்சை கறுப்பூனமாய்* (சரவண. பணவிடு. 206).

கறுவாலன் karu-vālaṉ, *n.* prob. கரு-மை +. A kind of paddy; நெல்வகை. (A.)

கறுவியம் karuviyam, *n.* <கறுவு-. Rancour, implacable hatred; தீராப்பகை. (யாழ். அக.)

கறைக்கணி-த்தல் karai-k-kaṇi-, *11 v. tr.* <கறை+. To pray for redress of grievances; குறைவேண்டித் துதித்தல். *எம்பெருமானென்று கறைக்கணித்தவர் கண்டவணக்கத்தாய்* (தேவா. 612, 2).

கறையுரல் karai-y-ural, *n.* <கறை+. Large mortar; பெரியவுரல். (சம். அக. Ms.)

கன்கூட்டு kaṉ-kūṭṭu, *n.* prob. கன்+. Cave, cavern; கற்குகை. *கன்கூட்டெய்தி கறந் தன னிருப்ப* (பெருங். இலாவாண. 17, 17.)

கன்மசாதாக்கியம் kaṉma-cātākkiyam, *n.* <*karma*+. (Śaiva.) Manifestation of Śiva in *ilinkam, pīṭam,* and *pirapañcam;* இலிங்கமும் பீடமும் பிரபஞ்சமுமாகப் பிண்டீகரிக்குஞ் சிவரூபம். (தத்துவப். 191, உரை.)

கன்மடி kaṉ-maṭi, *n.* <கல்+. Hard udder of cows, yielding milk with difficulty; பசுவின் காம்மடி. (யாழ். அக.)

கன்மத்தியாகம் kaṉma-t-tiyākam, *n.* <*karma*+. Expiation of the evil done in former births; முன்செய்தவினை தீர்க்கை. (W.)

கன்மநிட்டன் kaṉma-niṭṭaṉ, *n.* <id.+. One who adheres to his ordained duties; கருமானுட்டானத்திற் பற்றுள்ளவன். *கன்மநிட்டா சிறு பிள்ளாய் நீ* (தாயு. உடல்பொய். 52).

கன்மயாகம் kaṉma-yākam, *n.* <id.+. Performing daily the rites appropriate to each

varuṇācciramam, one of *pañca-yākam*, q.v.; பஞ்சயாகத்துள் வருணாச்சிரமங்களுக்குரிய நித்தியக் கிரியைகளாகிய யாகம். (சி. சி. 8, 23, சிவாக்.)

கன்மாதிகாரி kaṉmātikāri, *n.* <id.+ *adhikārin*. 1. Superintendent; minister; காரியத் தலைவன். 2. (Phil.) One who is qualified to perform a specific act; குறிப்பிட்ட காரியஞ் செய்தற்குரியவன். ஆசையுடன் கூடினவன் கன்மாதிகாரி (வேதாந்தசாரம், பக். 21).

கன்முரிசு kaṉmuricu, *n.* East Indian satinwood; புரசு. (சங். அக.)

கன்றுகால்மாறு-தல் kaṉṟu-kālmāṟu-, *v. intr.* <கன்று+கால்-+. (திவ். பெரியாழ். 3, 8, 2, வ்யா. பக். 740-1.) 1. To substitute stealthily one's bad calves for another's good calves; தீயனவாயுள்ள தங்கன்றுகளை மாற்றிவைத்து நல்லன வாயுள்ள பிறர்கன்றுகளை எடுத்துக்கொள்ளுதல். 2. To steal away calves; கன்றுகளைக் களவிலே நிலை பேர்த்துக் கொண்டுபோதல்.

கன்றுமேய்பாழ் kaṉṟu-mēy-pāḻ, *n.* <id.+மேய்-+. Village pasture land; கிராமத் தில் கால்நடை மேயும் பொதுநிலம். (S. I. I. iii, 305.)

கன்றுரம் kaṉṟuram, *n.* Camphor; கற்பூரம். (சங். அக.)

கன்றுவீசு-தல் kaṉṟu-vīcu-, *v. intr.* <கன்று+. To miscarry, as a cow; பசுமுதலி யன அகாலத்தில் ஈனுதல். *Tinn.*

கன்னக்கனி-தல் kaṉṉa-k-kaṉi-, *v. intr.* Redupl. of கனி-. To be over-ripe; மிகமுதிர்தல். கன்னக்கனியு மிருடன்னையும் (கம்பரா. மாரீசன். 137).

கன்னக்காணன் kaṉṉa-k-kāṇaṉ, *n.* <கன்னம்+. Brazier; கன்னான். (M. E. R. 1915, p. 108.)

கன்னக்கிருமி kaṉṉa-k-kirumi, *n.* prob. கன்னம்+. A kind of disease; நோய்வகை. உளையும் வெப்புறுத்தங் கன்னக்கிருமி யென்றுரைக்கு நோயர் (கடம்ப. பு. இலீலா. 99).

கன்னக்குருகு kaṉṉa-k-kuruku, *n.* prob. id.+. A kind of disease; நோய்வகை. (பதார்த்த. i, 236.)

கன்னகுப்பியம் kaṉṉa-kuppiyam, *n.* cf. கன்னோசி. A kind of *caṉṉi*; சன்னிவகை. (தஞ். சரசு. iii, 194.)

கன்னபுஷ்பம் kaṉṉa-puṣpam, *n.* <*karṇa* +. A jewel for the ear; கர்ணப்பூ. (S. I. I. iii, 173.)

கன்னம்[1] kaṉṉam, *n.* <*karṇa*. *Mod.* 1. Diagonal; சதுரத்தின் ஒருமூலையினின்று அதற்கு நேர்மூலைவரையுள்ள குறுக்கு. 2. Hypotenuse; நேர்கோண முக்கோணத்தில் நேர் கோணத்திற்கு எதிரிலுள்ள கை.

கன்னம்[2] kaṉṉam, *n.* 1. cf. கன். Goldsmith; பொற்கொல்லன். (அக. நி.) 2. cf. கனம். Gold; பொன். (வை. மூ.)

கன்னி kaṉṉi, *n.* Fragrant basil; கரந்தை. (சங். அக.)

கன்னிக்காய் kaṉṉi-k-kāy, *n.* <கன்னி+. First fruits of a plant; முதன்முதலாகக் காய்க்குங் காய். *Nāñ.*

கன்னிக்குடம் kaṉṉi-k-kuṭam, *n.* <id.+. Amnion; பன்னீர்க்குடம். *Tinn.*

கன்னிக்கொம்பு kaṉṉi-k-kompu, *n.* prob. id.+. Roxburgh's five-leaved tree of beauty; சோக்கலைமரம். (L.)

கன்னிப்பழி kaṉṉi-p-paḻi, *n.* <id.+. Sin of deflowering a virgin; கன்னியைக் கற் பழித்த பாவம். (யாழ். அக.)

கன்னிப்பறவை kaṉṉi-p-paṟavai, *n.* <id.+. A disease of children, believed to be caused by the shadow of birds being cast over them in the evening twilight; பக்ஷிதோஷவகை. (பதார்த்த. ii, 214.)

கன்னிப்பூ kaṉṉi-p-pū, *n.* <id.+. The harvest in the month of Puraṭṭāci, dist. fr. *kumpa-p-pū*; காரறுவடை. *Nāñ.*

கன்னிப்பூமலர்-தல் kaṉṉi-p-pū-malar-, *v. intr.* <id.+பூ+. To attain puberty; இருதுவா தல். *Loc.*

கன்னிப்பை kaṉṉi-p-pai, *n.* <E. *gunny*. <*gōṇī*+. Gunny bag; கோணிப்பை. *Loc.*

கன்னிமாங்காய் kaṉṉi-māṅkāy, *n.* <கன்னி+. Tender mango, used in pickles; வடுமாங்காய். *Loc.*

கன்னிமார்பொங்கல் kaṉṉimār-poṅkal, *n.* <id.+. A festival on the first day of Tai, celebrated with *poṅkal*, by unmarried girls; பெண்குழந்தைகள் கொண்டாடுந் தைப்பொங்கல். (எங்களூர், 94.)

கன்னிவெறி kaṉṉi-veṟi, *n.* <id.+. The heat of Puraṭṭāci; புரட்டாசியில் அடிக்கும் வெயில். *Nāñ.*

கன்னீகம் kaṉṉīkam, *n.* A kind of delirious fever; சன்னிநோய்வகை. (யாழ். அக.)

கன்னெஞ்சி kaṉṉeñci, *n.* Indigo; அவுரி. (யாழ். அக.)

கன்னோசி kaṉṉōci, *n.* cf. கன்னகுப்பியம். A kind of disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 96.)

கனகதப்பட்டை kaṉaka-tappaṭṭai, *n.* perh. கனகம்+. A small tabor; வாத்தியவகை. (W.)

கனகபுஷ்பராகம் kaṉaka-puṣparākam, *n.* <*kanaka*+. Yellow topaz; மஞ்சள்நிறமுள்ள புருடராகவகை. *Loc.*

கனகம்பரேகை kaṉa-kampa-rēkai, *n.* perh. கனம்+. (Palmistry.) A line in palm of hand; கைரேகைவகை. (திருவாரூ. குற. Ms.)

கனகரேகை kaṉaka-rēkai, *n.* <*kanaka* +. (Palmistry.) A line in palm of hand; கைரேகைவகை. (திருவாரூ. குற. Ms.)

கனகவர்ஷம் kaṉaka-varṣam, *n.* <id.+. (Jaina.) Shower of gold, one of *pañcāccariyam*, q.v.; பஞ்சாச்சரியத்துள் ஒன்றன பொன்மழை.

கனகன் kaṉakaṉ, *n.* A blemish, in coins; நாணயக்குற்றவகை. (சரவண. பணவிடு. 67.)

கனகாங்கி kaṉakāṅki, *n.* <*kanakāṅgī*. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கனகாம்பரம் kaṉakāmparam, *n.* <id.+ *ambara*. [T. *kanakāmbram*.] Unarmed orange nail dye, m. sh., *Crossandra-undulaefolia;* செடிவகை. *Madr.*

கனகு kaṉaku, *n.* <*kanaka*. Gold; பொன். *Loc.*

கனத்தி kaṉatti, *n.* perh. கனம். A kind of prepared arsenic; வைப்பரிதாரம். (W.)

கனநயதேசியங்கள் kaṉa-naya-tēciyaṅkaḷ, *n.* <கனம்+நயம்+. (Mus.) The three groups of rāgas, *kaṉam, nayam* and *tēciyam;* கனம் நயம் தேசியம் என்னும் மூவகைப்பட்ட இராகங்கள். (W.)

கனநாள் kaṉa-nāḷ, *n.* <*ghana*+. (Astrol.) Unpropitious day considered as exerting evil influence, on sick person, etc.; கனத்த நாள். *Loc.*

கனப்பாடு kaṉa-p-pāṭu, *n.* <கனம்+. 1. Massiveness, weight; கனமாயுள்ள தன்மை. (திவ். பெரியாழ். 3, 5, பிர. பக். 626.) 2. Expanse; அகற்சி. கனப்பாட்டிற் காயமே (நீலகேசி, 288).

கனபுடம் kaṉa-puṭam, *n.* <id.+. Calcination by using 50 or 100 cakes of dried cow-dung; ஐம்பது அல்லது நூறு எருமுட்டையாலான புடம். (யாழ். அக.)

கனம் kaṉam, *n.* <*ghana*. (Mus.) Singing in subdued tones, a mode of singing; இசை பாடும் வகைகளுள் ஒன்று. (கனம் கிருஷ்ணையர். 7.)

கனல்பேதி kaṉal-pēti, *n.* prob. கனல்+. A kind of ochre; சகஸ்ரபேதி. (W.)

கனலி kaṉali, *n.* <id. 1. Spurge; கள்ளி. (யாழ். அக.) 2. Apple bladder-nut; பம்பவேட்டி. (L.)

கனவியன் kaṉaviyaṉ, *n.* <கனம். One who is deeply immersed; one who is attached; பற்றுமிக்கவன். ஸம்ஸாரத்தில் நம்மிலும் கனவியரா யிருப்பர்கள் (ஈடு, 10, 4, 2, பக். 3).

கனவு-தல் kaṉavu-, *5 v. intr.* <கனவு. To be charmed, allured; மயங்குதல். சிந்தைமாத்திரங் கனவலின் (ஞானா. 41, 9).

கனவுடல் kaṉavuṭal, *n.* <id.+. Body of a person who is sleeping; தூங்கும் நிலையிலுள்ள சரீரம். (சி. போ. சூர்ணி.)

கனற்கண் kaṉaṟ-kaṇ, *n.* <கனல்+. A kind of snake whose look is considered fatal; basilisk; திட்டிவிடம். மஞ்சுடுவேலைக் கொளுத்துங் கனற்கண் (தக்கயாகப். 554).

கனற்கொடி kaṉaṟ-koṭi, *n.* <id.+. Comet; தூமகேது. கலகக் கனற்கொடிகள் (தக்கயாகப். 457).

கனனஞ்செய்-தல் kaṉaṉañ-cey-, *v. tr.* <கனனம்+. To bury, as a corpse; சவம் முதலியன புதைத்தல். *Colloq.*

கனனம் kaṉaṉam, *n.* <*khanana*. Digging; குழிமுதலியன கல்லுகை. கனனவபூரண சேசனமும் (தத்துவப். 69).

கனிசவஸ்து kaṉica-vastu, *n.* <*khani-ja* +. Mineral product; சுரங்கத்திலிருந் தெடுக்கப்படும் பொருள். *Mod.*

கனிஷ்டமாத்திரை kaṉiṣṭa-māttirai, *n.* <*kaniṣṭha*+. Small-sized medicinal pill; சிறிய மருந்துமாத்திரை. (சாரங்க. 251.)

கனை kaṉai, *n.* <*kanā*. (Erot.) Stout, short-statured woman of a golden complexion; பருத்துக் குறுகின வடிவும் பசும்பொன்னிறமு முள்ள பெண். தரித்தபேர் கனையென்றே தும் (கொக்கோ. 4, 5).

கஜ்ஜட்டிகை kajjaṭṭikai, *n.* <கஜ்ஜை+அட்டிகை. A kind of necklace; அட்டிகைவகை. *Colloq.*

கஜ்ஜி kajji, *n.* <Arab. *hāji*. Pilgrimage to Mecca; மெக்காயாத்திரை. *Muham.*

கஜ்ஜை kajjai, *n.* [T. K. *gajje*.] Tinkling anklet; காலணிவகை. காலில் கஜ்ஜைகட்டி யாடினுர் களானல் (பிரதாபசந். பக். 52).

கஜ்ஜைக்கொலுசு kajjai-k-kolucu, *n.* <கஜ்ஜை+. Anklet made in the pattern of

silver bells strung together; கோலுசுவகை. (பிரதாபசந். பக். 18.)

கஜகர்ணம் kaja-karṇam, *n.* <*gaja*+. A kind of arrow; அம்புவகை. (கம்பரா. நாகபாச. 113, உரை.)

கஜல் kajal, *n.* (Mus.) A kind of song; இசைப்பாட்டு வகை. (மதி. களஂ. i, 140.)

கஷ்டாளி kaṣṭāḷi, *n.* <*kaṣṭa*+. One who works hard; அரும்பாடுபடுபவன். உண்மைக் கஷ்டாளி ஓட்டாண்டியாகவே நிற்கிறான் (மதி. களஂ. ii, 81).

கஷாயம் kaṣāyam, *n.* <*kaṣāya*. One of the obstacles to *nirvikaṟpa-camāti;* நிர்விகற்ப சமாதிக்கு நேரும் விகாதங்களு ளொன்று. (வேதாந்த சா. 103.)

கஸ்தூரி kastūri, *n.* 1. A kind of tree, m. tr., *Acacia farnesiana;* வேலமரவகை. (Nels.) 2. A kind of saree; சேலைவகை. கஸ்தூரிமடி. 3. Ass's milk; கழுதைப்பால். *Madr.*

கஸ்தூரிக்கொடிச்சேலை kastūri-k-koṭi-c-cēlai, *n.* <கஸ்தூரி+கொடி+. A kind of saree; சேலைவகை. கஸ்தூரிக்கொடிச்சேலை சோடி ரெண்டு (விறலிவிடு. 724).

கஸ்தூரிச்சேலை kastūri-c-cēlai, *n.* A kind of saree; சேலைவகை. (பஞ்ச. திருமுக. 1162.)

கஸலிக்கீரை kasali-k-kīrai, *n.* cf. காசிலிக் கீரை. A kind of greens; கீரைவகை. (விவசா. நான்மு. 5.)

கா

கா[1] kā, *n.* <காவு-. Load or pack, hung at either end of a pole and carried on the shoulders; தோட்சுமை. (அக. நி.)

கா[2] kā, *n.* <கா-. The Kalpaka tree; கற்பக மரம். (அக. நி.)

காக்கடா kākkaṭā, *n.* Flambeau; தீப் பந்தம். *Md.*

காக்கணத்தி kākkaṇatti, *n.* Mussel-shell creeper; காக்கட்டான். (இங். வை.)

காக்கரட்டான் kākkaraṭṭāṉ, *n.* See காக்கணத்தி. *Loc.*

காக்கறைமூக்கறை kākkaṟai-mūkkaṟai, *n.* Redupl. of மூக்கறை. Nincompoop; அசடன். *Loc.*

காக்காய்க்கால் kākkāy-k-kāl, *n.* <காக்கை +. Caret; எழுத்து வரிப்பிளப்பைக் குறிக்கும் புள் ளடி. *Loc.*

காக்காய்க்கொள் kākkāy-k-koḷ, *n.* <id.+. A plant, *Cocculus indicus;* காக்காய் கொல்லி. *Loc.*

காக்காய்நீர் kākkāy-nīr, *n.* <id.+. Clear, limpid water; தெளிவான தண்ணீர். *Colloq.*

காக்காய்ப்பிசின் kākkāy-p-piciṉ, *n.* <id.+. Gum exuding from the black babul tree; கருவேலம்பிசின். *Tinn.*

காக்காய்மூக்கு kākkāy-mūkku, *n.* prob. id.+. *Karumukiṟ-pāṣāṇam,* a prepared arsenic; கருமுகிற்பாஷாணம். (யாழ். அக.)

காக்காவல்லி kākkā-valli, *n.* prob. id.+. A plant; கொடிவகை. (விவசா. நான்மு. 7.)

காகசத்துவம் kāka-cattuvam, *n.* <காகம் +. (Erot.) The natural disposition of a woman, classed under the crow type, one of *pattu-cattuvam,* q.v.; ஸ்திரீகளின் பத்துசத்து வத்துள் ஒன்று. (கொக்கோ. 4, 26.)

காகதந்தம் kāka-tantam, *n.* <*kāka*+. Lit., crow's tooth. [காக்கையின் பல்] That which is non-existent; இல்பொருள். (நீலகேசி, 393, உரை.)

காகபாதம் kāka-pātam, *n.* <id.+. See காக்காய்க்கால். (W. G.)

காகம் kākam, *n.* (அக. நி.) 1. Mongoose; கீரி. 2. Kalpaka tree; கற்பகம்.

காகிபெல்லம் kāki-pellam, *n.* perh. காக்கி+. Crude jaggery; பழுப்பு வெல்லம். (மதி. களஂ. ii, 112.)

காங்கி kāṅki, *n.* <E. *Gang.* Company of workmen; வேலையாளர் தொகுதி. *Loc.*

காங்கியாள் kāṅki-y-āḷ, *n.* <காங்கி+. Gang cooly; வேலைக்கூட்டத்தாருள் ஒருவன். *Loc.*

காங்கு kāṅku, *n.* [K. *kāgu.*] 1. Dark blue colour; கருநீல நிறம். காங்கிட்ட கச்சையுமாய்க் கானவர்கள் வந்துகண்டு (கூளப்ப. 66). 2. A kind of dark-blue saree; கருநீலப் புடைவைவகை. *Loc.*

காங்கேயபூஷணி kāṅkēya-pūṣaṇi, *n.* <*gāṅgēya-bhūṣaṇi.* (Mus.) A primary *rāga;* எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

காச்சிக்கிழங்கு kācci-k-kiḻaṅku, *n.* <காய்- +. A kind of tuberous plant; கிழங்குச்செடி வகை. *Nāñ.*

காசரிமுத்திரை kācari-muttirai, *n.* (Yōga.) A posture in which the gaze is fixed steadily on a spot in front about three inches from the eyes; மூன்றங்குல தூரத்தில் கண்ணுக்கு நேராகப் பார்வையை நாட்டி அசைவற்றிருக்கும் நிலை. (யோகஞானு. 34.)

காசறை kācarai, *n.* <காசு+. Gem, precious stone; மணி. (அக. நி.)

காசா[1] kācā, *n.* <Hind. *kaccha.* A kind of cloth; துணிவகை. *காசா கச்சா. Loc.*

காசா[2] kācā, *n.* prob. Persn. *khwājā.* Master, proprietor; எசமானன். *Loc.*

காசாரி kācāri, *n.* See காசுதாரி. *Loc.*

காசாவர்க்கம் kācā-varkkam, *n.* <Arab. *khāss*+. Occupying the *maṉaikkaṭṭu* of a village, free of rent, in return for common village service; ஊர்ப்பொதுவேலை செய்வதென்னும் நிபந்தனையின்மேல் கிராமமனைக்கட்டிற் குடியிருக்கை. *Tj.*

காசாவில்லை kācā-villai, *n.* <id.+. Sandal paste with special fragrant ingredients; விசேஷச் சந்தனக்கூட்டு. (யாழ். அக.)

காசிக்கிருட்டி kāci-k-kiruṭṭi, *n.* A bird; புள்வகை. (யாழ். அக.)

காசிச்சம்பா kāci-c-campā, *n.* <காசி+. A kind of paddy; நெல்வகை. (A.)

காசிடு-தல் kāciṭu, *v. intr.* <காசு+. To remit; பணஞ்செலுத்துதல். (S. I. I. vii, 499.)

காசியரளி kāci-y-araḷi, *n.* <காசி+. See காசியலரி. *Loc.*

காசியலரி kāci-y-alari, *n.* <id.+. A kind of oleander; அலரிவகை. *Loc.*

காசிலிக்கீரை kācili-k-kīrai, *n.* cf. கலவிக்கீரை. Indian brown hemp; புளிச்சைக்கீரை. (சு. வை. ர. 448.)

காசுக்கள்ளன் kācu-k-kaḷḷaṉ, *n.* <காசு+. Miser; உலோபி. *Loc.*

காசுகொள்ளாவிறையிலி kācu-koḷḷā-v-irai-y-ili, *n.* <காசு+கொள்-+ஆ neg.+. Land granted free of tax; ஒருவகை வரியுமின்றி அளிக்கப்பட்ட நிலம். (S. I. I. v, 375.)

காசுசவாரி kācu-cavāri, *n.* <Arab. *khāss* +. Tour of a high or noble person; பெரியோரின் சுற்றுப்பயணம். (P. T. L.)

காசுதாரி kācu-tāri, *n.* <id.+Persn. *bardār.* Groom, syce, horsekeeper; குதிரைக்காரன். *Loc.*

காஞ்சான் kāñcāṉ, *n.* prob. காய்-. 1. Strict man; கண்டிப்புள்ளவன். *Nāñ.* 2. Miser; உலோபி. *Loc.*

காஞ்சான்கட்டு-தல் kāñcāṉ-kaṭṭu-, *v. intr.* To become rotten; உளுத்தல். (யாழ். அக.)

காஞ்சி kāñci, *n.* (அக. நி.) 1. Greatness; பெருமை. 2. Knowledge, wisdom; அறிவு.

காஞ்சிதம் kāñcitam, *n.* (Nāṭya.) A kind of pose; கூத்துக்குரிய பாதங்களு ளொன்று. (சிலப். பக். 81.)

காட்சம் kāṭcam, *n.* *Cōlaṅka-pāṣāṇam,* a mineral poison; சோழங்கபாஷாணம். (யாழ். அக.)

காட்சி kāṭci, *n.* <காண்-. 1. Doctrine, tenets; கோட்பாடு. *நின்காட்சி யழித்திடுவேன் (நீலகேசி, 494).* 2. Scripture; நூல். *திறவோர் காட்சியிற் றெளிந்தனம் (புறநா. 192).*

காட்சிப்பொருள் kāṭci-p-poruḷ, *n.* <காட்சி+. Presents to a great person on the occasion of seeing him; கையுறை. (குலோத். கோ. 120, குறிப்பு.)

காட்டம் kāṭṭam, *n.* 1. [T. *gāṭu.*] Anger; கோபம். *என்மீது காட்டமாயிருக்கிறார்.* 2. cf. காடு. Abundance; மிகுதி. (அக. நி.)

காட்டவீணை kāṭṭa-vīṇai, *n.* <*kāṣṭha*+. Vīṇā, as made of wood; வீணை. (தக்கயாகப். 611, உரை.)

காட்டழகியவாணன் kāṭṭaḻakiya-vāṇaṉ, *n.* <காடு+அழகு+. A kind of coarse paddy; பெருநெல்வகை. *Loc.*

காட்டாள்காசு kāṭṭāḷ-kācu, *n.* <காட்டாள்+. A tax; வரிவகை. (S. I. I. viii, 146.)

காட்டான்கரையான் kāṭṭāṉ-karaiyāṉ, *n.* <காட்டான்+. Rustic; பட்டிக்காட்டான். *Tinn.*

காட்டி kāṭṭi, *n.* cf. கிருட்டி. Pig; பன்றி. (அக. நி.)

காட்டியும் kāṭṭiyum, *part.* A case-sign, the ablative of comparison; காட்டிலும். *என்னைக் காட்டியு முண்டோ (குருகூர்ப். 96).*

காட்டில் kāṭṭil, *adv.* When; அளவில். *தவநெறி என்னுங்காட்டில் பக்தியைச் சொல்லிற்றுமோ (ஈடு, 10, 4, 1).*

காட்டிலுப்பை kāṭṭiluppai, *n.* <காடு+. East Indian star apple, l. tr., *Chrysophyllum roxburghii;* காட்டுமரவகை. (L.)

காட்டு kāṭṭu, *n.* perh. id. cf. *kāṣṭha.* Rubbish; குப்பை. *காட்டுக்களைந்து கலங்கழீஇ (ஆசாரக். 46).*

காட்டுக்கசகசா kāṭṭu-k-kacakacā, *n.* <id.+. Wild poppy; கசகசாவகை. *Pond.*

காட்டுக்கருமிளகு kāṭṭu-k-karu-miḷaku-*n.* <id.+கரு-மை+. A kind of pepper; மிளகுவகை. *Pond.*

காட்டுக்கருவேப்பிலை kāṭṭu-k-karuvēp-pilai, *n.* <id.+. Axil flowered shrubby Indian wampee, s. sh., *Clausena Wildenovii;* கறிவேப்பிலைவகை. (L.)

காட்டுக்கல்லுண்டை kāṭṭu-k-kalluṇṭai, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

காட்டுக்காணாங்கோழை kāṭṭu-k-kāṉāṅ-kōḻai, *n.* <id.+. Calf's-grass; காணுவாழை. (மூ. அ.)

காட்டுக்காணுவாழை kāṭṭu-k-kāṉāvāḻai, *n.* <id.+. A species of calf's grass; காணுவாழைவகை. (யாழ். அக.)

காட்டுக்கிச்சிலி kāṭṭu-k-kiccili, *n.* <id.+. Indian wild lime, *Atalantia monophylla;* காட்டெலுமிச்சை. (L.)

காட்டுக்குணம் kāṭṭu-k-kuṇam, *n.* <id.+. Rudeness; savagery; மிருக குணம். (யாழ் அக.)

காட்டுக்குயின் kāṭṭu-k-kuyiṉ, *n.* <id.+. A kind of tree; மரவகை. *Pond.*

காட்டுக்குருக்கு kāṭṭu-k-kurukku, *n.* <id.+. See காட்டுநெருஞ்சி. *Pond.*

காட்டுச்சாயவேர் kāṭṭu-c-cāyavēr, *n.* <id.+. Wild chayroot; பாப்பான்பூண்டு.

காட்டுச்சிவிகை kāṭṭu-c-civikai, *n.* <id.+. Bier; பாடை. (திருமந். 153.)

காட்டுச்சேங்கொட்டை kāṭṭu-c-cēṅ-koṭṭai, *n.* <id.+. Glabrous marking-nut; தேன்சேரான். (L.)

காட்டுநெருஞ்சி kāṭṭu-neruñci, *n.* <id.+. A species of cowthorn; நெருஞ்சிவகை. *Pond.*

காட்டுப்பயிர் kāṭṭu-p-payir, *n.* <id.+. Dry crop; புன்செய்ப் பயிர். *Loc.*

காட்டுப்பூவாணன் kāṭṭu-p-pū-vāṇāṉ, *n.* <id.+பூ+. A kind of paddy; நெல்வகை. (A.)

காட்டுப்பெண்சாதி kāṭṭu-p-peṇ-cāti, *n.* <id.+. Concubine; வைப்பாட்டி. வீட்டுப் பெண்சாதி வேம்பும் காட்டுப்பெண்சாதி கரும்பும். (W.)

காட்டுமாடு kāṭṭu-māṭu, *n.* <id.+. Bison; காட்டா. *Loc.*

காட்டுமிருகாண்டி kāṭṭu-mirukāṇṭi, *n.* <id.+மிருகம்+ஆண்டி. Rude fellow; savage; காட்டுமிறண்டி (யாழ். அக.)

காட்டுமுந்திரிகை kāṭṭu-muntirikai, *n.* <id.+. Wild vine; முந்திரிக்கொடிவகை. (யாழ். அக.)

காட்டுமுல்லை kāṭṭu-mullai, *n.* <id.+. Wild jasmine; காட்டுமல்லிகை. (சித். அக.)

காட்டுமுள்ளி kāṭṭu-muḷḷi, *n.* <id.+. 1. A thorny plant; முள்ளிவகை (சித். அக.) 2. Indian cork; மரமல்லிகை. (Nels.)

காட்டுமுன்னை kāṭṭu-muṉṉai, *n.* <id.+. A kind of firebrand teak; முன்னைவகை. (W.)

காட்டுமூரி kāṭṭu-mūri, *n.* <id.+. A kind of green beetle; நாகரவண்டுவகை. (யாழ். அக.)

காட்டுவரகு kāṭṭu-varaku, *n.* <id.+. Wild ragi; வரகுவகை. (சித். அக.)

காடகச்சக்கரம் kāṭaka-c-cakkaram, *n.* <*ghāṭaka*+. (Pros.) A kind of metrical composition; சித்திரகவிவகை. (யாப். வி. 497.)

காடாரம்பற்று kāṭāram-paṟṟu, *n.* perh. காடாரம்பம்+. Forest region; காட்டுப்புறம். (யாழ். அக.)

காடி kāṭi, *n.* Rice food; சோறு. (அக. நி.)

காடுகாட்டு-தல் kāṭu-kāṭṭu-, *v.* <காடு+. *intr.* To be desolate; வெறிதாய் விடுதல். (யாழ். அக.)—*tr.* To kill; கொல்லுதல். (யாழ். அக.)

காடுகோள் kāṭu-kōḷ, *n.* <id.+. Arable land covered with jungle growth; விளைநிலம் காடுபற்றிப்போகை. எரி உடைந்து காடுகோளாய்ப் பாழ்கிடந் தமையில் (S. I. I. iv, 9).

காடுதரிசு kāṭu-taricu, *n.* <id.+. Waste land with bushy growth; செடிகள் முளைத்தத் தரிசு நிலம். (S. I. I. v, 137.)

காடுபட்டி kāṭu-paṭṭi, *n.* <id.+. See காடுவெட்டி, 2. காடுபட்டிகள் நந்திபோத்தரையர் (S. I. I. iii, 260-1).

காடுபார்த்தகொம்பு kāṭu-pārtta-kompu, *n.* <id.+பார்-+. A defect in cattle; மாட்டுக் குற்றவகை. (பெரியமாட். 16.)

காடுபிராண்டி kāṭu-pirāṇṭi, *n.* <id.+பிறாண்டு-. Garden rake; காடுவாரி. (யாழ். அக.)

காடுமறை-தல் kāṭu-maṟai-, *v. intr.* <id.+. To die; சாதல். கொண்ட கணவரும் போய்க் காடு மறைந்தார்.

காடுமேடு kāṭu-mēṭu, *n.* <id.+. Rough, uneven waste land; மேடாயுள்ள தரிசு நிலம். *Loc.*

காடுமேய்-தல் kāṭu-mēy-, *v. intr.* <id.+. To wander uselessly, aimlessly; வீணாய்த் திரிதல். *Loc.*

காடுவெட்டி kāṭu-veṭṭi, *n.* <id.+. 1. A kind of small hoe; சிறு மண்வெட்டிவகை. (*யாழ். அக.*) 2. A title of Pallava kings; பல்லவ அரசர் பட்டப்பெயர். (I. M. P. Ct. 175.)

காடுறைநிலை kāṭuṟai-nilai, *n.* <id.+ உறை-+. The third stage of life, *vāṉap-pirattam;* வானப்பிரத்தம். (*சுக்கிரநீதி*, 219.)

காடைக்கறுப்பன் kāṭai-k-kaṟuppaṉ, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. *பொன்னுயகன் சொற் காடைக்கறுப்பன்* (*பருளை. பள்ளு.* 23).

காடைக்கொம்பன் kāṭai-k-kompaṉ, *n.* <காடை+. A kind of paddy; நெல்வகை. *Tinn.*

காண்கொடு-த்தல் kāṇ-koṭu-, *v. tr.* <காண்-+. To enable to see; பார்க்கும்படி செய்தல். *கனவினுட் காண்கொடா கண்ணும்* (*புறத்திரட்டு*, 1524).

காண்டம் kāṇṭam, *n.* perh. *காண்-.* Mind, intellect; புத்தி. (*அக. நி.*)

காண்டுமதம் kāṇṭu-matam, *n.* <காண்டு +. Pain; வருத்தம். (*யாழ். அக.*)

காணவட்டம் kāṇa-vaṭṭam, *n.* <காணம்+. A small quantity of oil, daily given, as a perquisite by the oil-mongers to the village officers and servants; கிராமாதிகாரிகளுக்குங் கிராமச்சிப்பந்திகளுக்கும் நாள்தோறுஞ் செக்கார் கொடுக்கும் எண்ணெய் வரி. (W. G.)

காணாதகண் kāṇāta-kaṇ, *n.* காண்-+ஆ neg. +. Mind's eye; ஞானக்கண். *காணாதகண்ணுடன்* (*திருமந்.* 1610).

காணாதன் kāṇātaṉ, *n.* <*kaṇāda.* Adherent of the school of *kaṇātam;* கணாதமதத்தினன். *கண்டகராய்நின்ற காணாதர் வாதங் கழற்று வமே* (*தேசிகப்.* 5, 30).

காணி-த்தல் kāṇi-, 11 *v. tr.* Caus. of *காண்-.* To show; காட்டுதல். *Nāñ.*

காணிக்கல் kāṇi-k-kal, *n.* <காணி+. Boundary stone; எல்லைக்கல். *காணிக்கல்லின்கீழே இரண்டு செப்புத்தவலை அகப்பட்டது* (*மதி. களஞ்.* i, 177).

காணிக்கை kāṇikkai, *n.* <காணி-. Debt, loan; கடன். *காணிக்கையானேன் . . . . மாலையை வைத்து நான் காணிக்கை தீர்ந்த மறுமாதம்* (*விறலிவிடு.* 296).

காணிக்கைச்சாசனம் kāṇikkai-c-cā-caṉam, *n.* <காணிக்கை+. Document conferring a right to properties; உரிமைச்சாசனம். *இம்முடிக் காணிக்கைச்சாசனந் தந்தனனே* (*பெருந்தொ.* 1338).

காணிப்பிடிபாடு kāṇi-p-piṭipāṭu, *n.* <காணி+. Deed of lease for cultivation; நிலச்சாகுபடிப் பத்திரம். (M. E. R. 66 of 1916, p. 123.)

காணிப்பேறு kāṇi-p-pēṟu, *n.* <id.+. The dignity of a land-holder, a term used in conveyances of mirasi rights; பூஸ்திதி படைத்திருப்பதால் உண்டாகும் பெருமை. (W. G.)

காணிமாறு-தல் kāṇi-māṟu-, *v. intr.* <id.+. To dispossess a person of his land; உரிமைநிலத்தை இழக்கச்செய்தல். *துரோகம்செய்தாரைக் காணிமாறின நிலமும்* (S. I. I. v, 298).

காணிமேரை kāṇi-mērai, *n.* <id.+. A portion of produce claimed extra by mirasdars as their customary perquisite; மிராசுதார்கள் மாமூலை அனுசரித்து அதிகப்படியாகப் பெற்றுக்கொள்ளும் மாசூலின் பகுதி. (W. G.)

காணியாண்மை kāṇi-y-āṇmai, *n.* <id+. Hereditary right to land, etc.; காணியாட்சி. (Pd. Insc. 745.)

காணியாளன் kāṇi-y-āḷaṉ, *n.* perh. id. +. A kind of fish; ஒருவகை மீன். *வயலினுதிக்குங் காணியாளனும்* (*பருளை. பள்ளு.* 16).

காணிவெட்டி kāṇi-veṭṭi, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. v, 383.)

காணிஸ்தானம் kāṇi-stāṉam, *n.* <id. +. Unit place, in numbers; எண் வரிசையின் முதல் ஸ்தானம். *அவர்கள் முந்துற காணிஸ்தானத்திலே வைத்து* (*திவ். திருவாய்.* 1, 2, 2, *அரும்.*).

காணும்பொழுது kāṇum-poḻutu, *n.* <காண்-+. Sunrise; சூரியோதயம். *படுத்திருந்து காணும்பொழுதி லெழுந்து* (*தெய்வச். விறலி.* 44).

காத்தடி kā-t-taṭi, *n.* <கா+. Pole for carrying burdens; காவடித்தண்டு. (W.)

காத்தய்யன் kāttayyaṉ, *n.* <கா-+அய்யன். A village deity; ஒரு கிராமதேவதை. *பாரிய காத்தய்யா* (*பஞ்ச. திருமுக.* 655).

காத்தவராயன் kāttava-rāyaṉ, *n.* <id.+. **Watchman, guard; காவல்புரிபவன். (W. G.)**

காத்திரம் kāttiram, n. perh. *kādravēya*. Snake; பாம்பு. (அக. நி.)

காத்திரன் kāttiraṉ, n. cf. *gātra*. Strong man; வலியோன். (யாழ். அக.)

காதம் kātam, n. (யாழ். அக.) 1. Toddy; கள். 2. cf. *khāta*. Small, square well; நாற் சதுரமான துரவு.

காதவம் kātavam, n. Turkey; வான்கோழி. (யாழ். அக.)

காந்தாரிமிளகாய் kāntāri-miḷakāy, n. <காந்த- +. A kind of chilly, *Capsici fructus;* சீமைமிளகாய். (சு. வை. ர. 509.)

காந்தி kānti, n. <*kānti*. (Rhet.) A figure of speech; அணிவகை. (யாழ். அக.)

காப்பன் kāppaṉ, n. <கா-. Guard; காவலாளன். கடையருங் கணக்கருங் காப்பரு முளப் பட (பெருங். உஞ்சைக். 32, 82).

காப்பி kāppi, n. <E. Copy; நகல். *Colloq.*

காப்பியடி-த்தல் kāppi-y-aṭi-, v. tr. <காப்பி +. To copy improperly; to plagiarise; பிறர் எழுதியதைத் திருட்டுத்தனமாய்ப் பார்த்தெழுதல். *Colloq.*

காப்பியன் kāppiyaṉ, n. <*kāpya*. Person belonging to the *kāpya-gōtra;* காப்பியகோத்தி ரத்தைச் சார்ந்தவன். வெள்ளூர்க் காப்பியனார்.

காப்புவாவரிசி kāppuvā-v-arici, n. perh. கார்புகா +. Seed of scurfy pea; கார்போகரிசி. (சு. வை. ர. 227.)

காம்பு kāmpu, n. The feather end of an arrow; அம்புச்சிறகு. (நாமதீப.)

காம்புக்கிண்ணம் kāmpu-k-kiṇṇam, n. <காம்பு +. Ladle; அகப்பை. (யாழ். அக.)

காம்வார் kām-vār, n. <Hind. *gām* +. Village settlement; கிராமத்தீர்வைத்திட்டம். (P. T. L.)

காமக்காணி kāma-k-kāṇi, n. <காமம் +. See காமக்கிழவு. (சாச. தமிழ்க். 147.)

காமக்கிழவு kāma-k-kiḻavu, n. <id. + கிழ-மை. Proprietary right to a village; கிராம வுரிமை. (சாச. தமிழ்க். 21, 2.)

காமக்கிழான் kāma-k-kiḻāṉ, n. <id. +. Proprietor of a village; கிராமக்காணியாளன். (சாச. தமிழ்க். 147.)

காமணி kāmaṇi, n. Nitre; நவச்சாரம். (யாழ். அக.)

காமபோகி kāmapōki, n. cf. காம்போகி. Crab's eye; குன்றி. (யாழ். அக.)

காமம்[1] kāmam, n. <Pkt. *gāma* <*grama*. (அக. நி.) 1. Village; ஊர். 2. Inhabitant; குடி.

காமம்[2] kāmam, n. prob. Persn. *khām*. Tax; இறை. (அக. நி.)

காமரம் kāmaram, n. prob. காமம் + மருவு-. Beetle; வண்டு. (யாழ். அக.)

காமலை kāmalai, n. Kamela dye; கபிலப் பொடி. (L.)

காமவர்த்தனி kāma-varttaṉi, n. <*kāma* +. (Mus.) A primary *rāgā;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

காமவின்னிசை kāma-v-iṉṉicai, n. <காமம் +. (Pros.) A kind of *centurai* verse; செந்துறைப் பாட்டின்வகை. (யாப். வி. 538.)

காமாடு-தல் kāmāṭu-, v. intr. <id. + ஆடு-. To indulge in sexual pleasures; காம வின்பம் நுகர்தல். காமாடார் காமியார் (ஏலா. 58).

காமில் kāmil, n. <Arab. *kāmil*. (R. T.) 1. Completeness, entirety; முழுமை. 2. The total land revenue realised from a village; ஊரி லிருந்து இறையாக வசூலிக்கும் மொத்தத்தொகை.

காமில்பேரிஜ் kāmil-pērij, n. <காமில் +. (R. T.) 1. Standard assessment; வரித்திட்டம். 2. See காமில், 2.

காமுகா kāmukā, adv. <U. *khā-ma-khāh*. Certainly, positively; நிச்சயமாக. (P. T. L.)

காமுருகி kāmuruki, n. Wicked woman; கொடியவள். (யாழ். அக.)

காமூச்சு kāmūccu, n. Distance which would take 18 minutes to walk; முக்கால்நாழிகை வழி. (யாழ். அக.)

காய்-த்தல் kāy-, 11 v. intr. To be of ripe experience; அனுபவமுதிர்தல். உணருமாண் பிறை காய்த்தவர் (கம்பரா. விபீஷண. 95).

காய்ச்சல்வெள்ளம் kāyccal-veḷḷam, n. <காய்ச்சல் +. Water let into a field after sowing in a dry condition; புழுதிப்பருவத்தில் விதைத்தபின் வயலிற் பாய்ச்சும் பாசனநீர். *Nāñ.*

காய்ச்சிக்கிழங்கு kāycci-k-kiḻaṅku, n. <காய்- +. See காச்சிக்கிழங்கு. *Nāñ.*

காய்ச்சிரங்கு kāycciraṅku, n. cf. காய்ச் சிரக்கு. See காசிலிக்கீரை. (சு. வை. ர. 448.)

காய்ச்சுப்பால் kāyccu-p-pāl, n. <காய்ச்சு- +. Boiled milk, one of *mu-p-pāl,* q. v.; முப்பால்களுள் ஒன்றான காய்ச்சிய பால். (யாழ். அக.)

காய்ச்சுரை kāy-c-curai, *n.* <காய்+. A kind of greens, *Hibiscus suratensis;* கீரை வகை. *Pond.*

காய்ப்ப kāyppa, *part.* <காய்-. A particle of comparison; ஓர் உவமவுருபு. (தொல். பொ. 286.)

காய்ப்புளிச்சை kāy-p-puḷiccai, *n.* <காய்+. See காய்ச்சுரை. *Pond.*

காய்மடை kāy-maṭai, *n.* <காய்-+. Light repast; சிற்றுண்டி. *Pond.*

காயக்கம் kāyakkam, *n.* <T. *kāyakamu.* Artfulness; தந்திரம். (விறலிவிடு. 507.)

காயக்கி kāyakki, *n.* <id. Woman of slender build; மெல்லியள். நளினைக் கண்டு மணமாலையிட்ட காயக்கி நீர்தாமோ (கூளப்ப. 173).

காயக்கோல் kāya-k-kōl, *n.* <காயம்+. A surgical instrument; இரணவைத்தியக் கருவி வகை. (தஞ். சர. iii, 40.)

காயகப்பிரியா kāyakappriyā, *n.* <*gāyaka-priyā.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

காயப்பத்திரி kāya-p-pattiri, *n.* <*kāya*+. Cinnamon; ஞாழல். (நாநார்த்த.)

காயம்பௌனாகவுல் kāyam-paunā-kavul, *n.* <Arab. *qāim*+Hind. *pauna*+. A cowle, according to the terms of which three-quarters of the original assessment is permanently payable; ஏற்பட்ட நிலத்தீர்வையில் முக்கால்வாசி நிரந்தரமாய்ச் செலுத்துங் குத்தகை யுடன்படிக்கை. *Loc.*

காயம்ஜமாபந்தி kāyam-jamāpanti, *n.* <id.+. Permanent settlement; சாசுவத நிலவரித்திட்டம். (P. T. L.)

காயவேகம் kāya-vēkam, *n.* <காயம்+. 1. Anger, spleen, fretfulness; சினம். (W.) 2. Hunger; பசி. (யாழ். அக.)

காயா kāyā, *n.* (L.) 1. Lanceolate cuneate-based leaved tree bilberry, l. sh., *Memecylon heyneanum latifolia;* செடிவகை. 2. Coromandel Eugene myrtle; பீக்கொஞ்சி.

காயாகாயம் kāyā-kāyam, *n.* <காயம்+. Scar; உடற்றழும்பு. (யாழ். அக.)

காயாபுரி kāyā-puri, *n.* <*kāyā-purī.* Body; உடல். (யாழ். அக.)

காயீ kāyī, *n.* <E. Guy; பாய்மரத்திற்கு ஆதாரமாகக் கட்டப்படுங் கயிறு. (M. Navi. 84.)

28

கார்[1] kār, *n.* (யாழ். அக.) 1. Rat; எலி. 2. cf. காறு. Ploughshare; கொழு.

கார்[2]**-த்தல்** kār-, 11 *v. tr.* cf. காறு-. To hate; வெறுத்தல். பாலர்கள் கார்ப்பார் (ஏலா. 54).

கார்க்கோன் kārkkōṉ, *n.* <Persn. *kār-kun.* A subordinate revenue officer under a Tahsildar; தாசில்தாரின் கீழுள்ள ஓர் அரசிறை உத்தியோகஸ்தன். (P. T. L.)

கார்காரெனல் kār-kār-eṉal, *n.* Redupl. of காறு-. Expr. of seething with anger; சினமிகுதற் குறிப்பு. *Loc.*

கார்கோள் kār-kōḷ, *n.* <கார்+. Saturn; சனி. (யாழ். அக.)

கார்த்தபசத்துவம் kārttapa-cattuvam, *n.* <*gārdabha*+. (Erot.) The natural disposition of women of the donkey-class, one of *pattu-cattuvam,* q. v.; ஸ்திரீகளுக்குரிய பத்து சத்துவங்களு ளொன்று. (கொக்கோ. 4, 28.)

கார்த்திகைக்கார் kārttikai-k-kār, *n.* <கார்த்திகை+. A kind of paddy; நெல்வகை. (S. I. I. vii, 51.)

கார்த்திகைவரட்டி kārttikai-varaṭṭi, *n.* Cowdung cakes given to the pial school teacher, as a perquisite, on the eve of the monthly *kārttikai;* மாதக் கார்த்திகைதோறுந் திண்ணைப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்குக் கொடுக்கும் எருமுட்டை. *Loc.*

கார்நிறம் kār-niṟam, *n.* <கார்+. *Māmica-c-cilai,* a kind of black stone; மாமிசச்சிலை. (யாழ். அக.)

கார்ப்படிகன் kārppaṭikaṉ, *n.* <*kārpaṭika.* Pilgrim; யாத்திரைக்காரன். (யாழ். அக.)

கார்பாலை kār-pālai, *n.* perh. கார்+. East Indian star-apple. See காட்டிலுப்பை. (L.)

கார்புரவு kār-puravu, *n.* <id.+. Cultivation of the paddy for *kār* harvest; கார்நெற் சாகுபடி. சுந்தரபாண்டியனுலே அளந்து கார் புரவுக்கு முன்பு இறக்கும் கடமைக்கு (S. I. I. viii, 79).

கார்மலி kār-mali, *n.* prob. id.+மலி-. Sea; கடல். (W.)

கார்மறுநிலம் kār-maṟu-nilam, *n.* <id.+மறு+. Double crop land; இருபோக நிலம். (S. I. I. iv, 125.)

கார்மேகசாரம் kār-mēka-cāram, *n.* perh. id.+மேகம்+. *Kāciccāram,* a mineral salt; காசிச்சாரம். (யாழ். அக.)

காரக்கட்டி kāra-k-kaṭṭi, *n.* <காரம்+. Nitrate of silver, lunar caustic; காடிக்காரம். *Loc.*

காரகில் kār-akil, *n.* <கரு-மை+. A kind of eagle-wood, used as incense; அகில்வகை. (சிலப். 14, 108, உரை.)

காரச்சேர்வை kāra-c-cērvai, *n.* <காரம்+. Cauteriser; தீப்பற்றுள்ள மருந்தின் சேர்க்கை. *Pond.*

காரச்சேவு kāra-c-cēvu, *n.* <id.+. A kind of comestibles; காரமுள்ள சேவுப்பணியாரம். *Tinn.*

காரட்டு kāraṭṭu, *n.* <E. Carrot; மஞ்சள் முள்ளங்கி. (சு. வை. ர. 482.)

காரண்டவம் kāranṭavam, *n.* <*kāraṇḍava.* A kind of crane; நாரைவகை. *Pond.*

காரணசிவதத்துவம் kāraṇa-civa-tattuvam, *n.* <*kāraṇa*+. (Śaiva.) A *civa-tattuvam;* சிவதத்துவங்களு ளொன்று. (சி. சி. 1, 66, ஞானப்.)

காரணமறிநிலை kāraṇam-aṟi-nilai, *n.* <காரணம்+அறி-+. (Rhet.) A figure of speech; அணிவகை. (யாழ். அக.)

காரணவன் kāraṇavaṉ, *n.* <id. 1. Accountant; கணக்கன். சுந்தரபாண்டியநல்லூர்க் காரணவரோம் (S. I. I. v, 105). 2. Head of a family; குடும்பத்தலைவன். *Nāñ.*

காரணவாக்கியம் kāraṇa-vākkiyam, *n.* <*kāraṇa*+. Motto, emblem; விருதாகக் கொள்ளும் மொழி. *Pond.*

காரணவிலக்கணை kāraṇa-v-ilakkaṇai, *n.* <காரணம்+. (Rhet.) A figure of speech which states the cause as the effect; காரணத்தைக் காரியமாகக் கூறும் அணி. (W.)

காரணவொழிப்பு kāraṇa-v-oḻippu, *n.* <id.+. (Rhet.) A kind of *avanuti-y-aṇi;* அவநுதியணிவகை. (யாழ். அக.)

காரணானுமானம் kāraṇāṉumāṉam, *n.* <*kāraṇa*+. (Log.) Inference from cause to effect, *a priori* or deductive reasoning, opp. to *kāriyāṉumāṉam;* காரணத்தினின்று காரியத்தை அனுமானிக்கை. (மணி. 27, 36, உரை.)

காரணிகன் kāraṇikaṉ, *n.* <*karaṇika.* One who is the first cause; மூலகாரணமானவன். தெரிமறையிற் காரணிகனுர் (சீருப். கட. 10).

காரநீர் kāra-nīr, *n.* <காரம்+. Dyer's lye; சாயநீர்வகை. (W.)

காரப்பொடி kāra-p-poṭi, *n.* <id.+. Solder; பற்றாசு. *Loc.*

காரம்[1] kāram, *n.* <*kārya.* Act; தொழில். எண்ணுர்ந்த காரங்க ளில்லகத்தே பயின்றுயேல் (நீல கேசி, 280).

காரம்[2] kāram, *n.* <*kāra.* (நாநார்த்த.) 1. Certainty; நிச்சயம். 2. Strength; வலிமை. 3. Effort; முயற்சி.

காரவி kāravi, *n.* <*kāravī.* (நாநார்த்த.) 1. Black cumin; கருஞ்சீரகம். 2. Dill; சதகுப்பி. 3. See காயப்பத்திரி. 4. Peacock fan; மயிற்சிகை.

காரா kār-ā, *n.* <கரு-மை+ஆ. [T. *kārāvu.*] Black cow; கருநிறப் பசு. கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி (கம்பரா. குகப். 66).

காராகாரம் kārākāram, *n.* <*kārāgāra.* Prison; காராக்கிருகம். (யாழ். அக.)

காராடு-தல் kār-āṭu-, *v. intr.* <கார்-+ஆடு-. To talk with rankling hatred; கறுவிப்பேசுதல். *Tinn.*

காராடை kār-āṭai, *n.* <காரம்+. Deep-dyed cloth; சாயத்தின் உறைப்புள்ள ஆடை. காராடைபோர்த்த வெம்புத்தர் (நீலகேசி, 259).

காராண்கிழமை kārāṇ-kiḻamai, *n.* <காராண்மை+. Occupancy right in a field; உழவடைப்பாத்தியதை. (M. E. R. 103 of 1916.)

காரி[1] kāri, *n.* perh. காரம். (அக. நி.) 1. Brackish soil; களர். 2. Waste land; முதுநிலம். 3. Low-born person; கீழ்மகன்.

காரி[2] kāri, *n.* prob. *kārya.* Workshop; தொழிற்சாலை. (அக. நி.)

காரிகம் kārikam, *n.* See காரிகை[2]. (யாழ். அக.)

காரிகை[1] kārikai, *n.* <*khārikā.* A weight of 20 *arumaṇams;* இருபது அருமணங் கொண்ட ஒரு நிறை. (சுக்கிரநீதி, 105.)

காரிகை[2] kārikai, *n.* <*kārikā.* Torment; extreme suffering; torture; வாதனை. (நாநார்த்த.)

காரிடம் kār-iṭam, *n.* <கார்+. Rainy season; கார்காலம். பயில்வித்தெல்லாம் காரிடமதனிற் காட்டு மங்குரம் (சி. சி. 1, 9).

காரிதம் kāritam, *n.* <*kārita.* (Gram.) Causal verb; பிறவினை. விப்பிவரிற் காரிதமாம் (பிர யோக. 35).

காரியகாலபக்ஷம் kāriya-kāla-pakṣam, *n.* <*kārya*+*kāla*+. (Gram.) Method of interpretation in a treatise, by which the sense of several sūtras will be complete only by taking

over a word occurring in an earlier sūtra; ஓரிடத்து நின்றசொல் பலசூத்திரங்களோடுஞ் சென் றியைந்து தன்பொருளைப் பயப்பிக்கு முறை. (தொல். சூத்திரவிருத்தி. பக். 17.)

காரியசிவதத்துவம் kāriya-civa-tattuvam, *n.* <id.+. A *civa-tattuvam;* சிவதத்து வங்களு ளொன்று. (சி. சி. 1, 66, ஞானப்.)

காரியம் kāriyam, *n.* perh. id. Cow dung; சாணம். (சைவ. சந். 61.)

காரியவாசகம் kāriya-vācakam, *n.* <id.+. (Gram.) A term meaning action in general; செய்தல் என்னுஞ் சொல்லால் விரிந்து காரியத்தைக் குறிக்குஞ் சொல். (தொல். சொல். 112, உரை.)

காரியவிலக்கு kāriya-vilakku, *n.* <காரியம் +. (Rhet.) A kind of *vilakkaṇi:* விலக்கணி வகை. (யாழ். அக.)

காரியவேது kāriya-v-ētu, *n.* <id.+. (Log.) Inference of a cause from an effect; காரியம் ஏதுவாய்நின்று காரணமுண்மையை விளக் குகை. (சி. சி. அளவை. 10, சிவஞா.)

காரியானுமானம் kāriyāṉumāṉam, *n.* <*kāriya*+. (Log.) Inference from effect to cause, *a posteriori* or inductive reasoning, opp. to *kāraṇāṉumāṉam;* காரியத்தினின்று காரணத்தை அனுமானிக்கை. (மணி. 27, 33-34, உரை.)

காரியிண்டு kāri-y-iṇṭu, *n.* <கார் +. Shining-leaved soap-pod; வெள்ளிண்டு. (L.)

காரிலவணம் kār-ilavaṇam, *n.* <id.+. Bitnoben; பிடாலவணம். (யாழ். அக.)

காரு kāru, *n.* <*kāru.* (நாநார்த்த.) 1. Artisan; கம்மாளன். 2. Artisanship; கம்மத் தொழில்.

காருகால் kārukāl, *n.* Pan for burning incense; இந்தளம். *காருகாலிலே கருமுகைபூத்தாற் போலே* (திவ். பெரியாழ். 3, 6, 7, வ்யா. பக். 686).

காருகோலரிசி kārukōlarici, *n.* cf. கார் போகரிசி. Seed of scurfy pea; கார்போகரிசி. (பெரிய. 33.)

காருசம் kārucam, *n.* <*kāruja.* (நாநார்த்த.) 1. Wild sesamum; காட்டெள். 2. Indian aconite; நாவி. 3. Froth; நுரை. 4. Painting; சித்திரம். 5. Red ochre; காவிக்கல்.

காருண்யபிதிர்க்கள் kāruṇya-pitirkkaḷ, *n.* <*kāruṇya*+. The manes whose names are not known and who are propitiated during the Mahālaya fortnight; மாளயபக்ஷத்திற் பூசிக்கப்படும் பெயரறியப்படாத பிதிரர் தொகுதி. *Brāh.*

காரேலம் kār-ēlam, *n.* <கார்+. A kind of cardamom; ஏலவகை. (சங். அக.)

காரொளி kār-oḷi, *n.* <id.+. Black stripe, as on cattle; கருந்தாரை. (யாழ். அக.)

காரோத்துக்கிழங்கு kārōttu-k-kiḻaṅku, *n.* <Fr. *carotte.* See காரட்டு. *Pond.*

கால்கழிகட்டில் kāl-kaḻi-kaṭṭil, *n.* <கால்+கழி-+. Bier; பாடை. *கால்கழிகட்டிலிற் கிடப்பி* (புறநா. 286).

கால்மேலுறை kāl-mēl-uṟai, *n.* <id.+ மேல்+. Gaiter, spat; கணுக்காலுறை. *Pond.*

கால்வாதம் kāl-vātam, *n.* <id.+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 129.)

கால்வார்-த்தல் kāl-vār-, *v. intr.* <id.+. To sow seeds of *akatti* in a betel garden in the month of Āṭi; கொடிக்காலில் ஆடிமாதத்தில் அகத்திவிதையை ஊன்றுதல். *Loc.*

கால்வாரி kāl-vāri, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்ற வகை. (பெரிய. 26.)

காலக்கடப்பு kāla-k-kaṭappu, *n.* <காலம் +கட-. Course of time; காலத்தின் கதி. (தக்க யாகப். 447.)

காலக்கேப்பை kāla-k-kēppai, *n.* <id.+. A species of ragi; இராகிவகை. (விவசா. 3.)

காலசங்கம் kāla-caṅkam, *n.* <id.+. Dawn, early morning; வைகறை. (யாழ். அக.)

காலத்தேவை kāla-t-tēvai, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (Pudu. Insc. 399.)

காலதோஷம் kāla-tōṣam, *n.* <id.+. Evil times, hard times; கெட்டகாலம். *Loc.*

காலப்பாடு kāla-p-pāṭu, *n.* <id.+. Condition of the times; காலநிலைமை. *கள்ளமில் காலப்பாடுங் கருமமுங் கருதேனுகில்* (கம்பரா. இரா வணன்வதை. 7).

காலப்பொல்லாங்கு kāla-p-pollāṅku, *n.* <id.+. See காலதோஷம். *காலப்பொல்லாங் கைப் பரிகரித்துக்கொண்டு* (S. I. I. vii, 496).

காலப்போக்கு kāla-p-pōkku, *n.* <id.+. See காலப்பாடு. (மீனுட். சரித். ii, 160.)

காலபுருடன் kāla-puruṭaṉ, *n.* <id.+. Time-server; சமயத்திற்கேற்ப ஒழுகுபவன். *இது காலபுருடர் நட்புத் தீதென்றது* (குறள், 819, மணக்.).

காலபைரவர் kāla-pairavar, *n.* <*kāla-bhairava.* A manifestation of Śiva; சிவமூர்த் தங்களுள் ஒன்று. (காஞ்சிப். சிவபுண். 34.)

காலமீரம் kālamīram, *n.* Crystal glass; பளிங்கு. (யாழ். அக.)

காலமுன் kāla-muṉ, *n.* <காலம்+. Priority in point of time; காலத்தால் முற்பட்டது. காலமுன்னுகச் சொல்லார், இடமுன்னுகச் சொல்லுவர் (தொல். சொல். 279, இளம்பூ.).

காலற்றநாள் kāl-aṟṟa-nāḷ, *n.* <கால்+அறு-+. (Astrol.) The three naksatras, *kārttikai, uttiram, uttirāṭam;* கார்த்திகை உத்திரம் உத்திராடம் என்னும் மூன்று நட்சத்திரங்கள். (சோதிடகிரக. 40.)

காலறு-தல் kāl-aṟu-, *v. intr.* <id.+. To become extinct, as a family; சந்ததியற்றுப் போதல். (திருக்களிற்றுப். 97, உரை.)

காலறுவான் kāl-aṟuvāṉ, *n.* <id.+. A term of abuse, meaning 'one whose line will become extinct'; 'சந்ததியற்றுப்போவான்' என்று பொருள்படும் ஒரு வசைச்சொல். எள்ளளவுங் கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் (தனிப்பா. i, 108, 47).

காலா kālā, *n.* <Arab. *khālā.* Mother's sister; தாயின் சகோதரி. *Muham.*

காலாங்கன் kālāṅkaṉ, *n. Mūrtta-pāṣāṇam,* a prepared arsenic; மூர்த்தபாஷாணம். (யாழ். அக.)

காலாவதிகபத்திரம் kālāvatika-pattiram, *n.* <*kālāvadhika*+. Document fixing a time-limit for the performance of an act; ஒன்றைச் செய்தற்குக் காலங்குறிப்பிட்டு எழுதிக் கொடுக்கும் பத்திரம். (சுக்கிரநீதி, 93.)

காலிகவிப்புருதி kālika-vippuruti, *n.* <*kālika*+. Chronic abscess; நாட்பட்ட புண் கட்டி. (இங். வை. 298.)

காலியைபாசம் kāl-iyai-pācam, *n.* prob. கால்+இயை-+. Subtle body; சூக்கும சரீரம். (சம். அக. Ms.)

காலிலி kāl-ili, *n.* <கால்+இல் neg. Fish; மீன். (யாழ். அக.)

காலீகா kālīkā, *n.* Smoky colour of the teeth of horses, when they are about seven years old; குமரர் ஏழு வயதாகும்போது குதிரைப் பற்களி லேற்படும் புகைநிறம். (அசுவசா. 5.)

காலுக்கழுத்து kālu-k-kaḻuttu, *n.* prob. id.+. Ankle; கணைக்கால். திருக்காலுக் கழுத்தின் காறை உ-ம் (S. I. I. iv, 81.)

காலுக்குக்காலாய் kālukku-k-kāl-āy, *adv.* <id.+. Hereditarily; பரம்பரையாய். *Loc.*

காலேயகம் kālēyakam, *n.* <*kālēyaka.* A kind of turmeric; அரத்தமஞ்சள். (நாநார்த்த.)

காலை kālai, *n.* A kind of fish; மீன்வகை. உறுகிழாத்தி காலைபாலை (பறாளை. பள்ளு. 75).

காலோடு kāl-ōṭu, *n.* <கால்+. Gutter tiles; கூடல்வாயோடு. *Loc.*

காவட்டு kāvaṭṭu, *n.* <காவு-. See கா[1]. *Nāñ.*

காவணம் kāvaṇam, *n.* Open hall; மண்டபம். தேவாசிரியனென்னுந் திருக்காவணம் (பெரியபு. திருக்கூட்ட. 2).

காவர் kāvar, *n.* perh. E. *gaff-spar,* Martingale, dolphin-striker, short gaff-spar. fixed perpendicularly under the cap of the bow-sprit; சர்தறவின் நுனிக்குக்கீழிருக்கும் உத்திரம். (M. Navi. 82.)

காவல் kāval, *n.* (அக. நி.) 1. A kind of drum; தம்பட்டம். 2. Water; நீர்.

காவல்புரப்பு kāval-purappu, *n.* <காவல்+பொறுப்பு. An annual tax paid by a watchman appointed in the place of another dismissed for an offence against the government; அரசாங்கத்திற்குச் செய்த குற்றத்திற்காக விலக்கப்பட்ட ஒரு காவற்காரனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட காவற்காரன் ஆண்டுதோறுஞ் செலுத்திவரும் வரி. (R. T.)

காவல்வழக்கு kāval-vaḻakku, *n.* <id.+. Customary fees paid to watchman; காவற்காரனுக்குக் கொடுக்கும் வரி. (R. T.)

காவலம் kāvalam, *n.* Bloody drop ordure tree; கழுதைவிடை. (L.)

காவற்படை kāvaṟ-paṭai, *n.* <காவல்+. Body-guard; மெய்காவற் சேனை. (யாழ். அக.)

காவற்பேறு kāvaṟ-pēṟu, *n.* <id.+. Cess collected for paying the village-watchmen; ஊர்க்காவலுக்காகக் கொடுக்கும் வரி. (M. E. R. 262 of 1925.)

காவற்றலம் kāvaṟṟalam, *n.* <id.+தலம். Prison, gaol; சிறைச்சாலை. *Mod.*

காவி kāvi, *n.* 1. Buoy; காவியாக்கட்டை. *Pond.* 2. Willow-leaved justicia; கருநொச்சி. (யாழ். அக.)

காவிந்து kāvintu, *n.* <Persn. *khawand.* Master; employer; எசமான். அதுகளைக் காவிந்தவர்கள் பார்வையிடுகிற இங்கிலீஷ் புஸ்தகத்திலும் எழுதுவித்தேன் (P. T. L. 185).

காவிப்பட்டை kāvi-p-paṭṭai, n. <காவி+. Stripes of red wash, alternating with white, made on festive occasions on walls of temples, etc.; சுவர்களிலிடுஞ் செம்மண்பட்டை. *Tj.*

காவிப்பாய் kāvi-p-pāy, n. <காவி+. Top-sail; பாய்மரத்தின் அடிக்கட்டைக்கு அடுத்த பாகத்திற் கட்டப்படும் பாய். (M. Navi. 83.)

காவிமரம் kāvi-maram, n. <id.+. Top-mast; பாய்மரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பாகம். (M. Navi. 81.)

காவிமாலை kāvi-mālai, n. <காவி+. Garland sent by a lover to his beloved, soliciting her favour; கலவியை விரும்பிய தலைவன் தலைவிக்கு அனுப்பும் மாலை. (யாழ். அக.)

காவில்லி kāvilli, n. See காவலம். (L.)

காவெட்டு kā-veṭṭu-, n. <காய்+. Unripe fruit; நன்றாய்ப் பழுக்காத பழம். *Colloq.*

காழ் kāḻ, n. Piece of wood; மரத்துண்டு. தேய்வை வெண்காழ் (புறநா. 369, 19).

காழகம்[1] kāḻakam, n. 1. cf. *kāla*. Blue cloth; நீலவாடை. கறையிடைக் கிழிந்தநின் காழகம் (கலித். 73). 2. Boiled rice; சோறு. (யாழ். அக.)

காழகம்[2] kāḻakam, n. cf. T. *gāḍidē*. Ass; கழுதை. (அக. நி.)

காளக்கவி kāḷa-k-kavi, n. <காளம்+. Poet whose presence is proclaimed by blowing a *kāḷam*, as a mark of honour; ஊதுகாளத்தை விருதாகப் பெற்ற புலவன். (தக்கயாகப். பக். 277.)

காளகண்டம் kāḷa-kaṇṭam, n. <*kāla-kaṇṭha*. (நாநார்த்த.) 1. Peacock; மயில். 2. Wagtail; கரிக்குருவி. 3. Sparrow; ஊர்க்குருவி. 4. East Indian kino tree; வேங்கைமரம்.

காளகந்தரி kāḷa-kantari, n, <*kāla*+*kandharā*. Pārvatī; பார்வதி. (W.)

காளகர்ணிமுத்திரை kāḷakarṇi-muttirai, n. (Šaiva.) A hand-pose in worship; முத்திரைவகை. (சைவா. வி. 19.)

காளகூடயோகம் kāḷakūṭa-yōkam, n. <*kālakūṭa*+. (Astrol.) An inauspicious *yōkam;* அசுபயோகங்களு ளொன்று. (சோதிடகிரக. 134.)

காளம் kāḷam, n. <*kāla*. Viṣṇu's discus; சக்கராயுதம். (ரஹஸ்ய. 65.)

காளமேடிகை kāḷa-mēṭikai, n. <*kāla-meṣikā*. (நாநார்த்த.) 1. Manjeet; மஞ்சிட்டை. 2. A kind of Indian jalap; கருஞ்சிவதை.

காளாம்பகி kāḷāmpaki, n. A winged serpent; பறவைப்பாம்பு. (நாமதீப.)

காளான்சக்களத்தி kāḷāṉ-cakkaḷatti, n. <காளான்+. *Murivettiyāṉ*, a kind of sea-fungus; முறிவெட்டியான். (W.)

காளிகம் kāḷikam, n. perh. *kāla*. Cloud; மேகம். (யாழ். அக.)

காளிங்கம் kāḷiṅkam, n. A kind of jewel; ஆபரணவகை. தென்னொளிய காளிங்கஞ் சோதி கிடப்பத் தொடுத்து (பதினொ. திருக்கை. உலா, 121).

காளிந்தம் kāḷintam, n. cf. காளிங்கன். Snake; பாம்பு. (அக. நி.)

காற்கயிறு kāṟ-kayiṟu, n. <கால்+. Fetters; கால்விலங்கு. *Pond.*

காற்சவுரம் kāṟ-cavuram, n. <id.+. Shaving the face only; முகச்சவரம். (யாழ். அக.)

காற்படை kāṟ-paṭai, n. <id.+. The portion of the basement above the ground; கட்டட அஸ்திவாரத்தில் தரைக்கு மேலுள்ள பகுதி. (M. E. R. 127 of 1926.)

காற்றடக்கி kāṟṟaṭakki, n. <காற்று+. (யாழ். அக.) 1. Bellows; துருத்தி. 2. Water-bubble; நீர்க்குமிழி.

காற்றண்டம் kāṟṟaṇṭam, n. <id.+. A kind of swelling of the scrotum, dist. fr. *nīr-aṇṭam;* வாதத்தால் வீங்கிய அண்டநோய்வகை. *Loc.*

காற்றாடி kāṟṟāṭi, n. <id.+. Fan; விசிறி. (ஞானபூசா. 25, உரை.)

காற்றுக்கறுப்பு kāṟṟu-k-kaṟuppu, n. <id.+. Evil spirits; பேய்பிசாசுகள். *Loc.*

காற்றுவிசேஷமாய் kāṟṟu-vicēṣam-āy, *adv.* <id.+. By way of rumour; பராபரியாய். நாம் காற்றுவிசேஷமாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம் (தமிழறி. 37).

காறுகாறெனல் kāṟu-kāṟeṉal, n. Expr. of seething anger; சீறுதற்குறிப்பு. இவ்வூரிலுள்ளார் என்னோடு காறுகாறென்று (திவ். பெரியாழ். 3, 1, 7 வ்யா. பக். 521).

கான்[1] kāṉ, n. <*gāna*. Music; இசை. கான்பாடல் தங்குமறையோசை (சொக்க. உலா, 9).

கான்[2] kāṉ, n. <Pkt. *kān*. <*karṇa*. (தக்கயாகப். 448, உரை.) 1. Ear; செவி. 2. Fame; கீர்த்தி.

கானககீதம் kāṉaka-kītam, n. prob. கானகம்+. Black beetle; கருவண்டு. (யாழ். அக.)

கானநாடி kāṉa-nāṭi, n. <கானம்+நாடு. Kāḷī; காளி. கானநாடி திருமுன்றில் (தக்கயாகப். 80).

கானமூர்த்தி kāṉamūrtti, n. (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கானற்பலா kāṉar-palā, n. <கானல்+. Anjeli; கல்வருக்கை. (சங். அக.)

கானா kāṉā, n. A kind of trumpet; வாத்திய வகை. வாங்காவுங் கானாவும் (மான்விடு. 239).

கானான்கோனான் kāṉāṉ-kōṉāṉ, n. Redupl. of கோனான். All and sundry; எவ்வகையாரும். (யாழ். அக.)

கானாவேளை kāṉā-vēḷai, n. perh. கானம்+. A plant; செடிவகை. (W.)

கானிமிர்த்தாதனம் kāṉimirttātaṉam, n. <கால்+நிமிர்-+. (Śaiva.) A yōgic posture; யோகாசனவகை. (தத்துவப். 108, உரை.)

கானிஷ்மாரிக்கணக்கு kāṉiṣmāri-k-kaṇakku, n. See கானேசுமாரிக்கணக்கு. *Loc.*

கானேசுமாரிக்கணக்கு kāṉēcumāri-k-kaṇakku, n. <Persn. *khāna-shumārī*+. Census; ஜனசங்கியைக் கணக்கு. (P. T. L.)

காஜா kājā, n. Deep-red colour of the teeth of horses when they are sixteen years old; குமாரி பதினாறு வயதாகும்போது குதிரைப்பற்களி லேற்படுங் கருஞ்சிவப்பு நிறம். (அசுவசா. 6.)

கி

கிங்கரன் kiṅkaraṉ, n. <*kiṅkara*. Envoy, messenger; தூதன். (அக. நி.)

கிங்கிணிப்பாலை kiṅkiṇi-p-pālai, n, prob. கிங்கிணி+. Needle-leaved swallow-wort; ஊசிப் பாலை. (நாநார்த்த.)

கிங்கிணிமாலைநெல் kiṅkiṇi-mālai-nel, n. prob. id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

கிச்சம்மாள்வெட்டு kiccammāḷ-veṭṭu, n. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 142.)

கிச்சான் kiccāṉ, n. cf. கிச்சான். Small boy; சிறுபையன். *Tp.*

கிச்சிலிச்சம்பா kiccili-c-campā, n. prob. கிச்சிலி+. A variety of small *campā* paddy; சம்பா நெல்வகை. *Loc.*

கிச்சிலிச்சோறு kiccili-c-cōṟu, n. prob. கிச்சடி+. A kind of food, served in Muhammadan feasts; முகம்மதியர் விருந்திற் படைக்கும் ஒரு வகைச் சோறு. *Colloq.*

கிச்சுடர் kiccuṭar, n. A mythical range of mountains beyond the earth; சக்கரவாளம். (அக. நி.)

கிசாலம் kicālam, n. <*kisala*. Sprout; தளிர். (யாழ். அக.)

கிசில்பூசு-தல் kicil-pūcu-, v. intr. To caulk; கப்பலிற் சந்துகளைப் பற்று வைத்தடைத்தல். *Pond.*

கிஞ்சனன் kiñcaṉaṉ, n. <*kiñcana*. Ignorant man; அறிவிலான். (யாழ். அக.)

கிஞ்சித்துவம் kiñcittuvam, n. <*kiñcit-tva*. Limited knowledge; சிற்றறிவு. (யாழ். அக.)

கிஞ்சில் kiñcil, n. <*kiñcit*. Lowness; கீழ்மை. (யாழ். அக.)

கிஞ்சு kiñcu, n. See கிஞ்சுமாரம். (அக. நி.)

கிஞ்சுகம் kiñcukam, n. prob. *śuka*. 1. Parrot; கிளி. கிஞ்சுகமென்று கிளிக்கும் பேர் (திவ். பெரியாழ். 3, 7, 7, வ்யா. பக். 716). 2. *Acuṇam*, a creature believed to possess a delicate sense of music; அசுணம். (அக. நி.)

கிஞ்சுமம் kiñcumam, n. See கிஞ்சுமாரம். (யாழ். அக.)

கிஞ்சுமாரம் kiñcumāram, n. <*śiṃśu-māra*. Crocodile; முதலை. (யாழ். அக.)

கிஞம் kiñam, n. <*jña*. Knowledge; அறிவு. (யாழ். அக.)

கிட்ட kiṭṭa, part. <கிட்டு-. Case sign of the ablative and the locative; ஐந்தாம் வேற்று மைக்கும் ஏழாம்வேற்றுமைக்கு முரிய உருபு. சுழன் மாறிகிட்ட வாங்கி வழங்குவீர் (விறலிவிடு. 901).

கிட்டடிப்பாடு kiṭṭaṭi-p-pāṭu, n. <id.+ அடிப்பாடு. Narrow path; ஒடுங்கின பாதை. (யாழ். அக.)

கிட்டத்தாள் kiṭṭa-t-tāḷ, n. perh. கிட்டம் +. Card-board; அட்டைக்காகிதம். *Loc.*

கிட்டான் kiṭṭāṉ, n. cf. கிட்டம். A piece of molten iron; உருகிய இரும்புத்துண்டு. *Loc.*

கிட்டிணம் kiṭṭiṇam, n. <*kṛṣṇa*. Antelope's skin, deerskin; மான்றோல். (யாழ். அக.)

கிட்டிமந்தாரம் kiṭṭimantāram, n. Peacock's crest; மயிற்கொண்டை. (சு. வை. ரத்.)

கிடக்கை kiṭakkai, n. <கிட-. Permanence; security; நிலைவரம். (யாழ். அக.)

கிடங்கில் kiṭaṅkil, n. <கிடங்கு+. Moat; அகழ். நீணீர்க் கிடங்கிலுட் டோணிபோக்கி (பெருங். மகத. 25, 21).

கிடாவு-தல் kiṭāvu-, *5 v. tr.* <கடாவு-. (யாழ். அக.) 1. To drive; கடாவுதல். 2. To question; வினவுதல்.

கிடுக்கட்டி kiṭukkaṭṭi, *n.* Mexican poppy; குருக்கு. *Loc.*

கிடைதலை kiṭai-talai, *n.* <கிடை+. Moment of death; மரணகாலம். (யாழ். அக.)

கிடைமாடு kiṭai-māṭu, *n.* <id.+. Herd of cattle; பசுக்கூட்டம். (யாழ். அக.)

கிடையன் kiṭaiyaṉ, *n.* <id. Old or shop-soiled goods; கிடைச்சரக்கு. (யாழ். அக.)

கிடையாடை kiṭai-y-āṭai, *n.* <id.+. Bedsheet; படுக்கைவிரிப்பு. (அக. நி.)

கிண்டல் kiṇṭal, *n.* <கிண்டு-. Ridicule; banter; பரிகாசம். *Loc.*

கிண்டு[1]-தல் kiṇṭu-, *5 v. tr.* 1. To churn; கடைதல். பாம்புகயி ற்றப்பிணித்துப் பாற்கடலைக் கிண்டாமல் (நெல்விடு. 226). 2. To cook by constant stirring over the oven; கிளறிச் சமைத்தல். உப்புமாக் கிண்டினான். (யாழ். அக.). 3. To publish; வெளிப்படுத்துதல். (யாழ். அக.) 4. To ridicule; பரிகசித்தல். *Loc.*

கிண்டு[2]-தல் kiṇṭu-, *5 v. tr.* <கீண்டு-. To tear off; கிழித்தல். (திவ். திருச்சந். 22, வ்யா.)

கிண்ணன் kiṇṇaṉ, *n.* <*kṛṣṇa.* Dark-coloured person; கருநிறமுடையான். (நீலகேசி, 76.)

கிண்ணு-தல் kiṇṇu-, *5 v. intr.* 1. To go; போதல். கேரளத்தை நோக்கி வைச்சுக் கிண்ணினனே (பஞ்ச. திருமுக. 1530). 2. To eat to the full; நிரம்ப வுண்ணுதல். கிச்சடியாம் வைச்சடிச்சுக் கிண்ணுவனும் (பஞ்ச. திருமுக. 1877).

கிண்ணெனல் kiṇṇeṉal, *n.* Expr. of being full and tight; பெருத்திறுகியிருத்தற்குறிப்பு. குழந்தையின் வயிறு கிண்ணென்றிருக்கிறது. *Loc.*

கித்தா kittā, *n.* Rubber; துடைப்பான். *Tranquebar.*

கிதவபன் kitavapaṉ, *n.* <*kitava.* Rogue; போக்கிரி. (நீலகேசி, 286, உரை.)

கியமதம் kiyamatam, *n.* Weakness; இளைப்பு. (யாழ். அக.)

கியானம் kiyāṉam, *n.* <*jñāna.* Wisdom, knowledge; ஞானம். (யாழ். அக.)

கிரகணி-த்தல் kirakaṇi-, *11 v. tr.* <கிரகணம். (யாழ். அக.) 1. (Astron.) To eclipse; கிரகணம் பிடித்தல். 2. To seize, grasp; கிரகித்தல்.

கிரகஸ்தி kirakasti, *n.* Fem. of கிருகஸ்தன். Married woman; இல்வாழ்க்கையிலிருப்பவள். (யாழ். அக.)

கிரந்தனம் kirantaṉam, *n.* <*krandana.* (யாழ். அக.) 1. Weeping; அழுகை. 2. Cry, as of birds; ஒலி.

கிரந்தித்தொய்வு kiranti-t-toyvu, *n.* <கிரந்தி+. A disease; நோய்வகை. (யாழ். அக.)

கிரந்திநையல் kiranti-naiyal, *n.* <id.+ நை-. A disease; நோய்வகை. (யாழ். அக.)

கிரமி kirami, *n.* <கிரமம். (யாழ். அக.) 1. Well-behaved person; ஒழுங்காய் நடப்பவ-ன்-ள். 2. One who conforms to orthodox rules of conduct; சாத்திரவிதிப்படி நடப்பவ-ன்-ள்.

கிரயஞ்செலுத்து-தல் kirayañ-celuttu-, *v. tr.* <கிரயம்+. To fulfil; நிறைவேற்றுதல். ப்ரஹ்லாதனுடைய ப்ரதிஜ்ஞாவாக்யத்தைக் கிரயஞ் செலுத்தி (திவ். அமலனாதி. 5, வ்யா. பக். 93).

கிராகம் kirākam, *n.* <*grāha.* Tortoise; ஆமை. (யாழ். அக.)

கிராங்கு-தல் kirāṅku-, *5 v. intr.* cf. கிரங்கு-. To fade; வாடுதல். *Loc.*

கிராந்தம் kirāntam, *n.* <*grantha.* Sanskrit verse; வடமொழிச் சுலோகம். கொள்ளைக் கிராந்தங் குதட்டி (பாடு. அப்பா, 2).

கிராமகண்டகன் kirāma-kaṇṭakaṉ, *n.* <*grāma*+. Common enemy of the village; கிராமவிரோதி. கிராமகண்டகராகப் பிணித்தோம் (S. I. I. vi, 170).

கிராமகோசம் kirāma-kōcam, *n.* <id.+. Register of village lands; கிராமத்து நிலங்களின் அடங்கற் கணக்கு. (P. T. L.)

கிராமணி kirāmaṇi, *n.* Barber; நாவிதன். (யாழ். அக.)

கிராமம் kirāmam, *n.* <*grāma.* 1. Village of 100 houses; நூறு குடியுள்ள ஊர். (யாழ். அக.) 2. A village whose extent is one *krōśa* and whose revenue can be assessed at silver coins weighing 1000 *karṣas;* ஒரு குரோச அளவுள்ளதும் ஆயிரம் கருட நிறையுள்ள வெள்ளிக்காசுகள் இறையாகப் பெறக்கூடியதுமான ஊர். (சுக்கிரநீதி, 27.)

கிராவணம் kirāvaṇam, *n.* <*grāvan.* Rocky hill; கல்மலை. (யாழ். அக.)

கிராவம் kirāvam, *n.* See கிராவணம். (யாழ். அக.)

கிராவாதி kirāvāti, *n.* Iron; இரும்பு. (யாழ். அக.)

கிரிகம்பலை kirikampalai, *n.* cf. கிரிகோலம். Confusion; அலங்கோலம். (யாழ். அக.)

கிரிசாரம் kiri-cāram, *n.* <*giri-sāra.* (நாநார்த்த.) 1. Iron; இரும்பு. 2. Mt. Potiyil; பொதியமலை.

கிரிட்டணம் kiriṭṭaṇam, *n.* perh. கிருட்டிணம். Pungency; உறைப்பு. (யாழ். அக.)

கிரிட்டம் kiriṭṭam, *n.* See கிரிட்டணம். (யாழ். அக.)

கிரிபயம் kiri-payam, *n.* perh. கிரி + பயன். Tree; மரம். (W.)

கிரியன் kiriyaṉ, *n.* <கிரி. cf. மலையன். The Cēra king; சேரன். (யாழ். அக.)

கிரியாகாண்டம் kiriyā-kāṇṭam, *n.* <*kriyā-kāṇḍa.* A section of the Vēdas dealing with rites, ceremonies and sacrifices; கருமகாண்டம். (யாழ். அக.)

கிரியாங்கக்கட்டளை kiriyāṅka-k-kaṭṭaḷai, *n.* <கிரியாங்கம்+. Ceremonials; சடங்குவிதி. *Chr.*

கிரியாதிகாரன் kiriyātikāraṉ, *n.* <*kriyādhikāra.* Gaṇēśa; விநாயகக்கடவுள். (யாழ். அக.)

கிரியாவான் kiriyā-vāṉ, *n.* <*kriyā*+. One who mentally worships God; அந்தரியாகபூசை செய்பவன். (ஞானபூசா. 14, உரை.)

கிருகபதி kiruka-pati, *n.* <*gṛha-pati.* Agni, the God of fire; அக்கினி. (யாழ். அக.)

கிருகம் kirukam, *n.* <*kṛka.* Throat; மிடறு. (யாழ். அக.)

கிருகவாகு kirukavāku, *n.* <*kṛkavāku.* (யாழ். அக.) 1. Lizard; பல்லி. 2. Peacock; மயில்.

கிருகணம் kirukaṇam, *n.* <*kṛkaṇa.* Indian partridge; கவுதாரி. (யாழ். அக.)

கிருகாங்கம் kirukāṅkam, *n.* <*gṛha*+. A kind of celestial wish-tree, which bestows mansions; அனேகவித பிராஸாத மண்டபாதிகளைக் கொடுக்குங் கற்பதரு. (தக்கயாகப். 757, கீழ்க்குறிப்பு.)

கிருசாட்சம் kirucāṭcam, *n.* <*kṛśākṣa.* Spider; சிலந்தி. (யாழ். அக.)

கிருசாணு kirucāṇu, *n.* <*kṛśānu.* (யாழ். அக.) 1. Fire; தீ. 2. Coral reef; பவளக்கொடி.

கிருட்டி kiruṭṭi, *n.* <*kṛṣṭi.* (நாநார்த்த.) 1. Wise man; அறிஞன். 2. One who has performed a sacrifice; யாகஞ் செய்தவன்.

கிருட்டிணகேளி kiruṭṭiṇakēḷi, *n.* Brazilian hogweed, l. sh., *Bougainvillea spectabilis;* கொடிவகை. (L.)

கிருட்டிணம் kiruṭṭiṇam, *n.* <*kṛṣṇa.* (யாழ். அக.) 1. Iron; இரும்பு. 2. Blue vitriol; துரிசு. 3. Crow; காகம். 4. Indian cuckoo; குயில். 5. Black antelope; மான்வகை.

கிருட்டிணன் kiruṭṭiṇaṉ, *n.* <*Kṛṣṇa.* Sage Vyāsa; வியாசன். (யாழ். அக.)

கிருத்திவாசன் kiruttivācaṉ, *n.* <*Kṛtti-vāsas.* Śiva; சிவபிரான். (யாழ். அக.)

கிருதசூடன் kirutacūṭaṉ, *n.* <*kṛta-cūḍa.* Man who has a knotted lock of hair on the crown of the head; உச்சிக்குடுமிக்காரன். (யாழ். அக.)

கிருதபலம் kirutapalam, *n.* Cubeb; தக்கோலம். (நாமதீப.)

கிருதாந்தம் kirutāntam, *n.* <*kṛtānta.* Established truth; முடிந்த தீர்மானம். (யாழ். அக.)

கிருதாந்தன் kirutāntaṉ, *n.* <*kṛtānta.* Yama; இயமன். (யாழ். அக.)

கிருபாணம் kirupāṇam, *n.* <*kṛpāṇa* Sword; வாள். (யாழ். அக.)

கிருபீடபாலம் kirupīṭa-pālam, *n.* <*kṛpīṭa-pāla.* Ocean; கடல். (யாழ். அக.)

கிருமிச்சைலம் kirumi-c-cailam, *n.* <*kṛmi* + *śaila.* Ant-hill; கறையான்புற்று. (யாழ். அக.)

கிருஷ்ணசுக்கிலை kiruṣṇa-cukkilai, *n.* <*kṛṣṇa-śuklā.* Penumbra; சூரியனைச்சுற்றிக் காணப்படும் பிரகாசமுள்ள பாகம். (செந். x, 238.)

கிருஷ்ணை kiruṣṇai, *n.* <*kṛṣṇā.* (Astron.) Umbra, round the solar disc; சூரியனைச்சுற்றிக் காணப்படுங் கருமையுள்ள பாகம். (செந். x, 238.)

கிருஷம் kiruṣam, *n.* <*kṛṣa.* (யாழ். அக.) 1. Ploughing; உழவு. 2. Plough; கலப்பை. 3. Ploughshare; கொழு.

கிரோ kirō, *n.* <Persn. *girwī.* Pledge, mortgage, pawn; அடைமானம். (P. T. L.)

கில்-தல்[கிற்றல்] kil-, *10 v. intr.* To agree, consent; சம்மதித்தல். இறைவி கிற்குமே (தக்கயாகப். 57).

கில்லத்து killattu, *n.* <Arab. *khilat.* Robe of honour conferred by the nobility or royalty; பெரியோராலாவது அரசராலாவது கொடுக் கப்படுஞ் சம்மான ஆடை. *Loc.*

கிலவம் kilavam, *n.* perh. கிரீவம். Neck; கழுத்து. (யாழ். அக.)

கிலாபத்து kilāpattu, *n.* <Arab. *khilāfat.* Caliphate; இஸ்லாம் மார்க்கத்தின் தலைமைப் பதவி. *Loc.*

கிலுசிதம் kilucitam, *n.* prob. *kliṣṭa.* Poverty; வறுமை. (யாழ். அக.)

கிலேசு kilēcu, *n.* prob. *klēśa.* Lowness; கீழ்மை. (யாழ். அக.)

கிழங்கன் kiḻaṅkaṉ, *n.* cf. கிழங்கான். A sea fish; கடல்மீன்வகை. (யாழ். அக.)

கிழடி kiḻaṭi, *n.* Fem. of கிழடன். Old woman; கிழவி. *Colloq.*

கிழத்து kiḻattu, *n.* cf. கிழாத்தி. A kind of fish; ஒருவகை மீன். (யாழ். அக.)

கிழமை kiḻamai, *n.* 1. Majesty; மாட்சிமை. (யாழ். அக.) 2. (Mus.) A kind of time-measure, consisting of four beats; நாலு தாக்குடைய தாள வகை. (பரிபா. 17, 18.)

கிழவி kiḻavi, *n.* <கிழ-மை. Main tuber or bulbous root, as of plantain; தாய்க்கிழங்கு. (யாழ். அக.)

கிழாத்தி kiḻātti, *n.* A kind of bird; புள்வகை. (யாழ். அக.)

கிழி-த்தல் kiḻi-, 11 *v. tr.* To abuse; வைதல். *Loc.*

கிழிகடை kiḻi-kaṭai, *n.* <கிழி- +. Extreme lowness, as of a person or thing; மிக இளப்பம். (யாழ். அக.)

கிழியஞ்சட்டி kiḻi-y-añ-caṭṭi, *n.* prob. குழி +. Earthen bowl; மண்ணாற் செய்த அகல். *Tinn.*

கிள்ளாக்கு kiḷḷākku, *n.* <T. *kiḷḷāku.* Bill of exchange, hundi; உண்டியற்சீட்டு. (யாழ். அக.)

கிள்ளாக்கை kiḷḷākkai, *n.* See கிள்ளாக்கு. (யாழ். அக.)

கிளத்தி kiḷatti, *n.* <கிள-. Sarasvatī, the Goddess of Speech; சரசுவதி. (W.)

கிளவி kiḷavi, *n.* <id. Letter; எழுத்து. சகரக் கிளவியு மவற்றோ ரற்றே (தொல். எழுத். 62).

கிளாச்சி kiḷācci, *n.* perh. கிளர்-. A kind of grass; புல்வகை. *Tp.*

கிளாவர் kiḷāvar, *n.* <E. *clover.* The suit of clubs, in a pack of playing cards; விளை யாட்டுச் சீட்டுக்கட்டில் ஒருசாதிச் சீட்டு. *Colloq.*

கிளிவன்னம் kiḷi-vaṉṉam, *n.* perh. கிளி + வன்னம். A plant; செடிவகை. (பச். மூ.)

கிளிவாய்க்கால் kiḷivāykkāl, *n.* <கிளை +. Surplus channel above the head sluice; அணை யில் தேங்கும் அதிகநீரைப் பிரித்து மீண்டும் ஆற்றில் போக்குவதற்காக அமைந்த வாய்க்கால். *Loc.*

கிளிவெட்டுப்பாக்கு kiḷi-veṭṭuppākku, *n.* <கிளி +. A kind of arecanut; பாக்குவகை. (யாழ். அக.)

கிளை kiḷai, *n.* <கிளை-. Caste; group; சாதி. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல (தொல். எழுத். 338).

கிளைவாய்க்கால் kiḷai-vāykkāl, *n.* <கிளை +. Channel branching from the main channel; தாய்வாய்க்காலிலிருந்து பிரியுஞ் சிறு வாய்க்கால். *Tj.*

கிற்பு kiṟpu, *n.* prob. கில்-. Slavery; அடிமைத் தனம். (யாழ். அக.)

கிற்புறு-தல் kiṟpuṟu-, *v. intr.* prob. கிற்பு +. (யாழ். அக.) 1. To rise; எழும்புதல். 2. To be bound; கட்டுப்படுதல்.

கிறாப்பிறாண்டு kiṟā-p-piṟāṇṭu, *n.* prob. கீறு- + பிறாண்டு- cf. கிள்ளாப்பிறாண்டு. A children's game; விளையாட்டுவகை. (யாழ். அக.)

கிறீச்சனம் kiṟīccaṉam, *n.* perh. *kṛcchra.* A disease; நோய்வகை. (யாழ். அக.)

கின்று kiṉṟu, *part.* 1. (Gram.) A participial suffix; ஒரு வினையெச்சவிகுதி. (ஆராய்ச்சித். பக். 305.) 2. (Gram.) An expletive; ஓர் அசை நிலை. கின்று நின்றசைநிலை (நன். 441).

கின்னம் kiṉṉam, *n.* prob. *khinna.* Lowness; கீழ்மை. (யாழ். அக.)

கின்னரி kiṉṉari, *n.* cf. கின்னரம். Owl; ஆந்தை. (யாழ். அக.)

கிஸ்மத் kismat, *n.* <Arab. *qismat.* Fate; விதி. *Muham.*

கீ

கீசா kīcā, *n.* Falsehood; பொய். (யாழ். அக.)

கீதி kīti, *n.* <*gītin.* Musician; பாடகன். (யாழ். அக.)

கீர்[1] kīr, *n.* <*gīḥ* nom. sing. of *gir.* Verse; song; பாட்டு. கீரென்று பாட்டாய் அதுக்கு நிறம் செவ்பாகி (திவ். பெரியாழ். 1, 5, அவ. பக். 86).

கீர்[2] kīr, *n.* perh. *kṣīra.* A semi-liquid food prepared with milk; பாயசவகை. வாதாம் கீர். *Mod.*

கீரணாவளி kīraṇāvaḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 104.)

கீரம் kīram, *n.* Lamp; தீபம். (அக. நி.)

கீரோமாரோ kīrōmārō, *n.* An onom. sound; ஓரொலிக்குறிப்பு. (யாழ். அக.)

கீலகம் kīlakam, *n.* <*kīlaka.* Intrigue; trouble; கலகம். எவர் கீலகத்தினால் . . . மெத்தவும் காய்கிறாய் (சிவக். பிரபந். சரபேந்திர. குற. 17, 7).

கீலகை kīlakai, *n.* cf. கிலேச. Lowness; கீழ்மை. (யாழ். அக.)

கீலம் kīlam, *n.* <*kīla.* Joint, hinge; கீல். (யாழ். அக.)

கீழ் kīḻ, *n.* Earth; பூமி. (யாழ். அக.)

கீழ்க்கட்டு kīḻ-k-kaṭṭu, *n.* <கீழ்+. Ground floor; வீட்டின் தரைமட்டப் பகுதி. *Loc.*

கீழ்க்கலனை kīḻ-k-kalaṉai, *n.* <id.+. Village artisan; கிராமத்தொழிலாளி. தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் உள்ளிட்ட கீழ்க்கலனைகளும் (S. I. I. iv, 30).

கீழ்க்காணி kīḻ-k-kāṇi, *n.* <id.+. A fraction, $\frac{1}{25600}$; ஒரு பின்னவெண்.

கீழ்க்கால் kīḻ-k-kāl, *n.* <id.+. A fraction, $\frac{1}{1280}$; ஒரு பின்னவெண்.

கீழ்க்குமிழி kīḻ-k-kumiḻi, *n.* <id.+. Syphon in the bed of a channel; ஒரு வாய்க்காலின் நீர் அதன் குறுக்கே செல்லும் மற்றொரு வாய்க்காலின் கீழாகச் செல்லும்படி அமைத்த கட்டடவேலை. *Tj.*

கீழ்க்கையொப்பம் kīḻ-k-kaiyoppam, *n.* <id.+. Counter-signature; பிறர் எழுதியதை யொப்புக்கொண்டு இடுங் கையெழுத்து. *Pond.*

கீழ்நாலுமா kīḻ-nālu-mā, *n.* <id.+. A fraction, $\frac{1}{1600}$; ஒரு பின்னவெண்.

கீழ்நீர் kīḻ-nīr, *n.* <id.+. Underground spring of water; பூமியின்கீழுள்ள நீரூற்று. (சினேந்தி. 358.)

கீழ்ப்பிள்ளை kīḻ-p-piḷḷai, *n.* <id.+. Young coco-palm reared underneath old palms; முதுமரங்களின்கீழ் நடுந் தெங்கு முதலியவற்றின் கன்று. (யாழ். அக.)

கீழ்ப்போக்கி kīḻ-p-pōkki, *n.* <id.+. See கீழ்க்குமிழி. *Tj.*

கீழ்மரம் kīḻ-maram, *n.* <id.+. Lower mast; பாய்மரத்தின் அடிப்பாகம். (M. Navi. 81.)

கீழ்முக்காணி kīḻ-mukkāṇi, *n.* <id.+. A fraction, $\frac{3}{25600}$; ஒரு பின்னவெண்.

கீழ்முக்கால் kīḻ-mukkāl, *n.* <id.+. A fraction, $\frac{3}{1280}$; ஒரு பின்னவெண்.

கீழ்மும்மா kīḻ-mummā, *n.* <id.+. A fraction, $\frac{3}{6400}$; ஒரு பின்னவெண்.

கீழ்மூன்றுவீசம் kīḻ-mūṉṟuvīcam, *n.* <id.+. A fraction, $\frac{3}{5120}$; ஒரு பின்னவெண்.

கீழ்வீசம் kīḻ-vīcam, *n.* <id.+. A fraction, $\frac{1}{5120}$; ஒரு பின்னவெண்.

கீழ்வீடு kīḻ-vīṭu, *n.* <id.+. See கீழ்க்கட்டு. (யாழ். அக.)

கீழரை kīḻ-arai, *n.* <id.+. A fraction, $\frac{1}{640}$; ஒரு பின்னவெண்.

கீழரைக்காணி kīḻ-araikkāṇi, *n.* <id.+. A fraction, $\frac{1}{51200}$; ஒரு பின்னவெண்.

கீழரைக்கால் kīḻ-araikkāl, *n.* <id.+. A fraction, $\frac{1}{2560}$; ஒரு பின்னவெண்.

கீழரைமா kīḻ-araimā, *n.* <id.+. A fraction, $\frac{1}{12800}$; ஒரு பின்னவெண்.

கீழிருமா kīḻ-irumā, *n.* <id.+. A fraction, $\frac{1}{3200}$; ஒரு பின்னவெண்.

கீழிறைப்பாட்டம் kīḻ-iṟai-p-pāṭṭam, *n.* <id.+இறை+. Petty cesses or taxes, such as *mīṉpāṭṭam, āṟṟu-p-pāṭṭam,* etc.; மீன்பாட்டம் ஆற்றுப்பாட்டம் போன்ற சிறுவரிகள். (S. I. I. v, 365.)

கீழீடு kīḻ-īṭu, *n.* <id.+. 1. Sub-tenancy, dist. fr. *iṭai-y-īṭu;* தலைமைக் குத்தகைதாரனிடமிருந்து பெறுங் கீழ்க்குத்தகை. (T. A. S. iii, 194.) 2. Subordinate or subsidiary temple; கீழ்க்கோயில். ஆச்சிராமம் கோவில் சுசீந்திரம் கோவிலுக்குக் கீழீடு.

கீழைநாள் kīḻai-nāḷ, *n.* <id.+. Small hours of the morning; விடியற்காலம். தொன்மனை

கீண்டதால் வானவே றெறியக் கிழைநாள் (கம்பரா. காட்சிப். 42).

கீற்றுவன்னம் kīṟṟu-vaṉṉam, n. <கீற்று +. A kind of saree; புடைவைவகை. Tj.

கீறிக்காட்டு-தல் kīṟi-k-kāṭṭu-, v. intr. <கீறு-+. 1. To hint; to suggest; குறிப்பாய் உணர்த்துதல். Tinn. 2. To give out plainly; வெளிப்படையாக உணர்த்துதல். அந்த விஷயத்தைக் கீறிக்காட்டிச் சொல்லுதல் சாத்தியமில்லை.

கு

குக்கிராமம் ku-k-kirāmam, n. <கு+. Small village; சிற்றூர். Loc.

குக்குடபஸ்மம் kukkuṭa-pasmam, n. <குக்குடம்+. Medicine calcined from yolk of eggs; கோழிமுட்டைக் கருவினின்று செய்யும் மருந்து வகை. Loc.

குக்குரன் kukkuraṉ, n. <kukkura. Dog; நாய். (யாழ். அக.)

குக்குலி kukkuli, n. <குக்கில். Crow pheasant; செம்போத்து. (யாழ். அக.)

குகதி ku-kati, n. <கு+. Lame person; முடவன். குகதிகள் குருடர் மூகர் (மேருமந். 351).

குகம் kukam, n. <guha. (யாழ். அக.) 1. Horse which has a fast pace; வேகமான கதியுள்ள குதிரை. 2. Fineness; நுட்பம். 3. Concealment; மறைவு.

குகலிதம் kukalitam, n. <kuharita. (யாழ். அக.) 1. Sound; ஒலி. 2. The voice of the Indian cuckoo; குயிலின் குரல்.

குகன் kukaṉ, n. <guha. Preceptor; குரு. (யாழ். அக.)

குகுரன் kukuraṉ, n. <குக்குரன். See குக்குரன். (யாழ். அக.)

குகூகண்டம் kukū-kaṇṭam, n. <kuhū-kaṇṭha. The Indian cuckoo; குயில். (யாழ். அக.)

குகை kukai, n. <guhā. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

குங்கியாஇஸ்தீங்கி kuṅkiyā-istīṅki, n. Clew lines; கப்பற் சதுரப்பாய்களின் கீழ்மூலைகளை மேலிழுப்பதற்குக் கட்டியிருக்குங் கயிறு. (M. Navi. 86.)

குங்குமக்குருவிக்கார் kuṅkuma-k-kuruvi-k-kār, n. <குங்குமம்+குருவி+. A kind of paddy; நெல்வகை. (A.)

குங்குமதூபம் kuṅkuma-tūpam, n. <id. +. Myrrh; வெள்ளைப்போளம். (பைஷஜ. 133.)

குச்சம் kuccam, n. perh. guccha. Flake; பொருக்கு. Pond.

குச்சி kucci, n. 1. Peacock-fan, a fern; மயிற்சிகைப்பூடு. (யாழ். அக.) 2. cf. kuñcikā. Key; திறவுகோல். Mod.

குச்சித்தமரத்தை kucci-t-tamarattai, n. <குச்சி+. Bilimbi tree; புளிச்சக்காய் மரம். Loc.

குச்சுநுழை-தல் kuccu-nuḻai-, v. intr. <குச்சு+. To frequent houses of ill fame; விபசாரி வீடு புகுதல். Loc.

குச்சுள் kuccuḷ, n. <குச்சு+. Room in the front portion of a house; வீட்டின் முன்பாகத்தி லுள்ள அறை. Tinn.

குசத்தி kucatti, n. perh. குசம். Potsherd; tile; ஓடு. (யாழ். அக.)

குசம் kucam, n. cf. kuśa. Backbiting; புறங்கூறல். (யாழ். அக.)

குசமசக்கு kuca-macakku, n. prob. குசம் +. (யாழ். அக.) 1. Falsehood; பொய். 2. Vain show; வீண் மயக்கு.

குசலன் kucalaṉ, n. <kuśala. 1. Wise man; அறிஞன். (யாழ். அக.) 2. Artful person; தந்திரசாலி. Loc.

குசலி kucali, n. <id. Artful woman; தந்திரமுள்ளவள். சுதைச்சிறுக்கிகள் குசலிகள் (திருப்பு. 267, புதுப்.).

குசும்பா kucumpā, n. <kusumbhā. Pink colour; வெண்மைகலந்த சிவப்பு. குசும்பா வேஷ்டி (யாழ். அக.).

குசும்பைமலர்மணி kucumpai-malar-maṇi, n. <குசும்பை+மலர்+. A kind of topaz; கோவரங்கப்பதுமராகம். (யாழ். அக.)

குசுமாகரம் kucumākaram, n. <kusumā-kara. (யாழ். அக.) 1. Flower garden; பூந்தோட்டம். 2. Spring; இளவேனில்.

குஞ்சரகரணம் kuñcara-karaṇam, n. <குஞ்சரம்+. (Astron.) Karacai, a division of time; கரசை என்னுங் கரணம். குஞ்சரகரண மென்ஞர் (பருளை. பள்ளு. 24).

குஞ்சரத்தானம் kuñcara-t-tāṉam, n. <id.+. Open space for training elephants; யானைச்சேண்டுவெளி. குஞ்சரத்தானத்து நின்றோர் குறுகி (பெருங். வத்தவ. 4, 48).

குஞ்சிக்கம்பு kuñci-k-kampu, n. <குஞ்சி +. A pendant from the waist-cord, worn by male children; தம்பித் தோழன். *Nāñ.*

குஞ்சுத்தலைப்பா kuñcu-t-talaippā, n. <குஞ்சு+. A kind of turban; தலைப்பாவகை. (யாழ். அக.)

குட்டப்புழுதியாக்கு-தல் kuṭṭa-p-puḻuti-y-ākku-, v. intr. <குட்டம் + புழுதி +. To be tumultuously playful; தும்மாள மடித்தல். *Tinn.*

குட்டபஸ்கி kuṭṭa-paski, n. <குட்டை +. Man of short stature; குள்ளன். *Loc.*

குட்டன் kuṭṭaṉ, n. <குட்டம். Young of an animal; விலங்கின் குட்டி. நாயின்வெங்கட் சிறு குட்டனை (கம்பரா. நகர்நீ. 117).

குட்டி kuṭṭi, n. Plantain shoot or sucker near the main tree; வாழைக்கன்று. (யாழ். அக.)

குட்டியம் kuṭṭiyam, n. <kudya. 1. Wall; சுவர். (யாழ். அக.) 2. Raised floor or platform; மேடை. குட்டியத் திருமருங்கும் (மேரு மந். 1063).

குட்டிவேல் kuṭṭi-vēl, n. <குட்டி +. A kind of acacia; வேலமரவகை. *Loc.*

குட்டுவம் kuṭṭuvam, n. A large brass vessel, cauldron; கொப்பரை. *Loc.*

குட்டை[1] kuṭṭai, n. cf. கூடை. A kind of basket; கூடைவகை. பெரிய பிரப்பங்குட்டையும் (குருகூர்ப். 25).

குட்டை[2] kuṭṭai, n. <T. *guḍḍa. Loc.* 1. Turban; தலைப்பாகை. 2. Cloth; துணி.

குட்டைக்குறுவை kuṭṭai-k-kuṟuvai, n. <குட்டை +. A kind of paddy; நெல்வகை. (A.)

குட்டையநெல் kuṭṭaiya-nel, n. perh. id. +. A kind of paddy; நெல்வகை. (A.)

குடக்குழி kuṭa-k-kuḻi, n. perh. குட +. Water pond; நீர்க்குண்டு. (யாழ். அக.)

குடங்கரை kuṭaṅ-karai, n. <குடம் +. Place for keeping water-pots; தண்ணீர்க்குடம் வைக்கும் இடம். (யாழ். அக.)

குடத்தி kuṭatti, n. Wolf; ஓநாய். *Pond.*

குடத்திநாய் kuṭatti-nāy, n. <குடத்தி +. A kind of dog; நாய்வகை. *Pond.*

குடந்தம் kuṭantam, n. prob. குடம். Roundness; திரட்சி. (அக. நி.)

குடநாழி kuṭa-nāḻi, n. prob. id. +. A tax on toddy; கள்வரி. (T. A. S. ii, 67.)

குடப்படை kuṭa-p-paṭai, n. <id. +. A horizontal section above the basement of the inner shrine of a temple; உட்கோவிலின் அடிமட்டத்திலுள்ள கட்டடப் பகுதி. (M. E. R. 143 of 1925.)

குடப்பாணா kuṭa-p-pāṇā, n. <id. +. A kind of pot; குடவகை. (யாழ். அக.)

குடம்பை kuṭampai, n. perh. குட. 1. Big tank; ஏரி. (அக. நி.) 2. cf. குரம்பை. Body; உடல். (யாழ். அக.)

குடரி kuṭari, n. cf. குடாரி. Elephant hook; யானைத் தோட்டி. (யாழ். அக.)

குடலைக்காளை kuṭalai-k-kāḷai, n. perh. குடலை +. Young bullock; இளங்காளை. (W.)

குடலையிட்டலி kuṭalai-y-iṭṭali, n. <id. +. A kind of rice-cake baked in steam; இட்டலி வகை. *Loc.*

குடலையேற்றம் kuṭalai-y-ēṟṟam, n. <id. +. A kind of piccottah; ஏற்றவகை. (W.)

குடவு kuṭavu, n. <குடை. *Kuṭai-k-kūttu*, a dance of God Kumāra; குமரனுடைய குடைக் கூத்து. (யாழ். அக.)

குடாபாகம் kuṭā-pākam, n. perh. *guḍa* + *pāka.* (Rhet.) A style of literary composition; செய்யுட்பாகவகை. (யாழ். அக.)

குடிக்காணி kuṭi-k-kāṇi, n. <குடி + காணி. Permanent tenancy, as of temple lands; சாசுவத உழவுப்பாத்தியம். *Tj.*

குடிக்காணியாட்சி kuṭikkāṇi-y-āṭci, n. <குடிக்காணி +. Inheritance, ancestral property; பிதிரார்ச்சித சொத்து. (P. T. L.)

குடிசிகை kuṭi-cikai, n. <குடி +. [M. *kuṭissika.*] Arrears of land revenue or rent; தீர்வைநிலுவை. *Loc.*

குடிசில் kuṭicil, n. <id. Hut; குடிசை. மனைவிபையிலாக் குடிசில் (நூற்றெட்டுத். திருப்புகழ். 98).

குடிசீலை kuṭi-cīlai, n. perh. கொடி +. Loin cloth; கோவணம். *Loc.*

குடிஞை kuṭiñai, n. 1. Bastion; கோட்டையின் ஏவறை. நெடுமெதிலுங் குடிஞைகளும் (நீலகேசி, 268). 2. Town, village; ஊர். (யாழ். அக.)

குடிநிலுவை kuṭi-niluvai, *n.* <குடி+. See குடிசிகை. (பணவிடு. 169.)

குடிநீங்காத்திருவிடையாட்டம் kuṭi-nīṅkā-t-tiruviṭaiyāṭṭam, *n.* <id.+நீங்கு-+ஆ neg.+. Endowment to a temple, of lands already in the occupation of cultivating tenants; பயிர்செய்யுங் குடிகளோடு கோவிலுக்கு அளிக்கப் பட்ட சர்வமானியம். (P. Insc. 224.)

குடிநீங்காத்தேவதானம் kuṭi-nīṅkā-t-tēvatāṉam, *n.* <id.+id.+. See குடிநீங்காத் திருவிடையாட்டம். (M. E. R. 45 of 1922.)

குடிப்படு-த்தல் kuṭi-p-paṭu-, *v. tr.* <id. +. To establish a family in good position; குடும்பத்தை நல்லநிலைமையில் நிறுத்துதல். குடிப் படுத்துக் கூழீந்தான் (ஏலா. 42).

குடிமுறை kuṭi-muṟai, *n.* <id.+. Household affairs; குடித்தனம். (யாழ். அக.)

குடியாட்சி kuṭi-y-āṭci, *n.* <id.+. 1. Domestic management; குடித்தனத்தை நடத் துகை. (யாழ். அக.) 2. Government by the people; democracy; குடியரசு. *Mod.*

குடியாட்டம் kuṭi-y-āṭṭam, *n.* <id.+. Domestic life; குடிவாழ்க்கை. (யாழ். அக.)

குடிலம் kuṭilam, *n.* <*kuṭila.* A pace of horse; குதிரை நடைவகை. (சுக்கிரநீதி, 72.)

குடிவாங்கு-தல் kuṭi-vāṅku-, *v. intr.* <குடி+. To stay; to reside; குடியிருத்தல். அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து (ஈடு, 1, 3, 9).

குடிவாரக்கம் kuṭi-vārakkam, *n.* <id.+. Cultivation expenses; பயிர் செய்வோருக்குக் கொடுக்கும் விதை கூலி முதலியன. குடிவாரக்க மாய்க் குடிமேல் வைத்தெழுதி (சரவண. பணவிடு. 138).

குடினை kuṭiṉai, *n.* A standard weight; குடிநாழி. குடினை எடைபொன் 30-ன் கழஞ்சு (S. I. I. vii, 400).

குடுக்கி kuṭukki, *n.* cf. குடுத்தா. Drawers; pants; காற்சட்டை. *Pond.*

குடுக்குக்குடுக்கெனல் kuṭukku-k-kuṭuk-keṉal, *n.* Onom. expr. of rattling noise; ஓரொலிக்குறிப்பு. (யாழ். அக.)

குடுகுடுப்பை kuṭukuṭuppai, *n.* 1. Mexican poppy; குருக்கு. *Loc.* 2. One who is over busy; அதிகச் சுறுசுறுப்புள்ளவன்.

குடும்பன் kuṭumpaṉ, *n.* The person who measures the extent of land under cultivation in a village; கிராமத்தில் சாதுபடியான நிலங் களை அளப்பவன். (Rd. M. 311.)

குடுமி kuṭumi, *n.* Bow; வில். (அக. நி.)

குடை-தல் kuṭai-, 4 *v. tr.* To file, grate; அராவுதல். அரங்குடைந்த அயில் (கம்பரா. கும்பகர். 22).

குடைகல் kuṭai-kal, *n.* <குடை-+. Grinding stone; ஆட்டுக்கல். *Loc.*

குடைமேற்குடை kuṭai-mēṟ-kuṭai, *n.* <குடை+மேல்+. A curl mark on cattle; மாட்டுச்சுழிவகை. (பெரிய. 15.)

குடையன்பருவதம் kuṭaiyaṉparuvatam, *n.* Brass; பித்தளை. (யாழ். அக.)

குடோரம் kuṭōram, *n.* <*kuṭhōra.* Harshness, cruelty; கடூரம். (யாழ். அக.)

குண்டம்[1] kuṇṭam, *n.* perh. குண்டு. Pig; பன்றி. (அக. நி.)

குண்டம்[2] kuṇṭam, *n.* <*kuṇḍa.* [T. *guṇṭa.*] Tank; குளம். (யாழ். அக.)

குண்டலரேகை kuṇṭala-rēkai, *n.* <குண் டலம்+. (Palmistry.) A line in palm of hand; இரேகைவகை. (திருவாரூ. குற.)

கைக்கிளைமருட்பா kaikkiḷai-maruṭpā, *n.* <கைக்கிளை+. A kind of stanza; மருட்பாவகை. (பாப்பா. 132.)

கைக்குநீர்கொள்(ளு)-தல் kaikku-nīr-koḷ-, *v. intr.* <கை+நீர்+. To urinate, pass urine; சிறுநீர்விடுதல். (யாழ். அக.)

கைக்குள் kai-k-k-uḷ, *adv.* <id.+. Immediately; உடனே. (யாழ். அக.)

கைக்கூச்சம் kai-k-kūccam, *n.* <id.+. Miserliness; உலோபத்தனம். *Loc.*

கைக்கெளிமை kaikkeḷimai, *n.* <id.+. Lightness; இலேசு. (யாழ். அக.)

கைக்கொள்(ளு)-தல் kai-k-koḷ-, *v. tr.* <id.+கொள்-. 1. To undertake; ஏற்று நிர்வகித்தல். *மதுராந்தக ப்ரஹ்மாதிராஜர் கைக்கொண்டு ரக்ஷித்தமையில்* (S. I. I. vii, 308). 2. To make one's own; உரிமையாக்குதல். *தெருவைக் கைக்கொண்டு நின்றார்* (சீவக. 457, உரை).

கைக்கோரணிகாட்டு-தல் kai-k-kōraṇi-kāṭṭu-, *v. intr.* <id.+கோரணி+. To be at the point of death; இறக்குந்தருவாயி லிருத்தல். *Loc.*

கைக்கோல் kai-k-kōl, *n.* <id.+. Sceptre; செங்கோல். *எழுமேதினிக்கும் கைக்கோல் செலுத்தும் குலோத்துங்கன்* (குலோத். கோ. 391).

கைகட்டு kai-kaṭṭu, *n.* <id.+. Batch, as of workmen; கூலியாட்களின் சேர்க்கைக் கூட்டம். *Loc.*

கைகம் kaikam, *n.* *Vakkirāntipāṣāṇam*, a mineral poison; வக்கிராந்திபாஷாணம். (யாழ். அக.)

கைகவி-த்தல் kai-kavi-, *v. tr.* <கை+. 1. To check, as by gesture; கைக்குறியால் அடக்குதல். *மற்று அவனைக் கைகவித்து* (பாரதவெண். 34, உரை). 2. To protect; அபயமளித்தல். *அஞ்சேலென்று கைகவியாய்* (திவ். பெரியாழ். 5, 3, 7).

கைகாண்(ணு)-தல் kai-kāṇ-, *v. intr.* <id.+. (யாழ். அக.) 1. To be proved; அத்தாட்சிப்படுதல். 2. To be completed; நிறைவேறுதல்.

கைகுலுக்கு-தல் kai-kulukku-, *v. tr.* <id. +. To shake hands; மகிழ்ச்சிக்குறியாக ஒருவர் கையை ஒருவர் பிடித்து அசைத்தல். *Mod.*

கைகுவி-த்தல் kai-kuvi-, *v. intr.* <id.+. To clap hands and dance; கொம்மைகொட்டுதல். (யாழ். அக.)

கைகூப்பு-தல் kai-kūppu-, *v. intr.* <id. +. See கைதுவி-. (யாழ். அக.)

கைகேசி kaikēci, *n.* See கைவீசி. (சு. வை. ர. 181.)

கைகொடு-த்தல் kai-koṭu-, *v. intr.* <கை +. (யாழ். அக.) 1. See கைதலுக்கு-. 2. To strike hands, as in concluding a bargain; கையடித்து உறுதிகூறுதல்.

கைகோவை kai-kōvai, *n.* <id.+. A process in goldsmith's craft; பொற்கொல்லர் தொழிலிடொன்று. (யாழ். அக.)

கைச்சங்கம் kai-c-caṅkam, *n.* prob. id.+. Snail; நாகரவண்டு. (யாழ். அக.)

கைச்சட்டை kai-c-caṭṭai, *n.* <id.+. Gloves; கைக்கவசம். (யாழ். அக.)

கைச்சம்பிரதாயம் kai-c-campiratāyam, *n.* <id.+. Dexterity of hand, skill in manual labour; கைச்சித்திரம். (யாழ். அக.)

கைச்சல் kaiccal, *n.* <கை-. Dislike; வெறுப்பு. (யாழ். அக.)

கைச்சனம் kaiccaṉam, *n.* Bristly trifoliate vine; புளிநறளை. (சித். அக.)

கைச்சி kaicci, *n.* perh. காய்ச்சி. (யாழ். அக.) 1. Coconut shell; half of a dried palmyra nut; சிரட்டை. 2. Snail; ஊமற்கச்சி.

கைச்சாய்ப்பு kai-c-cāyppu, *n.* <கை+. Back, as of a chair; anything to lean on; சாய்மானம். (யாழ். அக.)

கைச்செறி kai-c-ceṟi, *n.* <id.+. Gloves made of leather; தோலினாற் செய்த கையுறை. *கார்விற்செறி நாணெறி கைச்செறி கட்டி* (பெரியபு. கண்ணப்ப. 60).

கைசகர் kaicakar, *n.* Persons of the Vaṉṉiya caste; வன்னியர். (அக. நி.)

கைசிகன் kaicikaṉ, *n.* <*kaiśika*. The devotee Nampāṭuvāṉ, who sang in the *kaiśika* melody; நம்பாடுவான். (திவ். திருமாலை, 33, வ்யா. பக். 102.)

கைசியம் kaiciyam, *n.* <*kēśa*. Hair; கேசம். (யாழ். அக.)

கைசெய்-தல் kai-cey-, *v. intr.* To make a surgical operation; அறுத்து இரண சிகிச்சை செய்தல். *Nāñ.*

கைடவை kaiṭavai, *n.* <*Kaiṭabhā*. Durgā; துர்க்கை. (யாழ். அக.)

கைத்தல் kaittal, *n.* prob. கை-. A kind of vegetable curry; கறிவகை. *கரியல் பொடித்தூவல் கைத்தல்* (சரவண. பணவிடு. 274).

கைத்தலைப்பூண்டு kai-t-talai-p-pūṇṭu, *n.* prob. கை+தலை+. A variety of style plant; சிற்றெழுத்தாணிப்பூடு. (சித். அக.)

கைத்தவறு kai-t-tavaṟu, *n.* <id.+. Slip of the hand; கைப்பிழை. *Loc.*

கைத்தளை kai-t-taḷai, *n.* <id.+. Handcuff; கைவிலங்கு. *கைத்தளை நீக்கி யென்முன் காட்டு* (பட்டினத். பொது. 42).

கைத்தாமணக்கு kaittāmaṇakku, *n.* perh. கைப்பு+. Malabar nut; காட்டாமணி. (சித். அக.)

கைத்தொழும்பு kai-t-toḻumpu, *n.* <கை+. Manual service; கைத்தொண்டு. (யாழ். அக.)

கைதட்டு-தல் kai-taṭṭu-, *v. intr.* <id.+. To attain puberty; to be in menses, as signified by clapping of hands; பூப்பு எய்துதல். *Loc.*

கைதாங்கி kai-tāṅki, *n.* <id.+. Handle; கைப்பிடி. (யாழ். அக.)

கைதாழ்-தல் kai-tāḻ-, *v. intr.* <id.+. To be reduced in circumstances; செல்வநிலை குன்றுதல். *Loc.*

கைதூவாமை kai-tūvāmai, *n.* <id.+. A kind of weapon; படையின் விகற்பம். (அக. நி.)

கைதொடல் kai-toṭal, *n.* <id.+. Marriage; கல்யாணம். (யாழ். அக.)

கைந்நலம் kai-n-nalam, *n.* <id.+. See கைமலம். (யாழ். அக.)

கைந்நிலை kai-n-nilai, *n.* <id.+. Military camp; பாசறை. (தக்கயாகப். பக். 274.)

கைநன்றி kai-naṉṟi, *n.* <id.+. Gratitude; செய்ந்நன்றி. (யாழ். அக.)

கைநாட்டு kai-nāṭṭu, *n.* <id.+. Signature; கையெழுத்து. *கோவலனார் கைநாட்டைக் கொற்றவனுந் தான்பார்த்து* (கோவ. க. 25).

கைநிமிர்-தல் kai-nimir-, *v. intr.* <id.+. To grow up to adolescence; வயதாகி வளர்தல். *கைநிமிர்ந்த பிள்ளை. Tinn.*

கைநிமிர்த்தாதனம் kai-nimirttātaṉam, *n.* <id.+நிமிர்-+. A yogic posture; யோகாசன வகை. (தத்துவப். 108, உரை.)

கைநெகிழ்-தல் kai-nekiḻ-, *v. tr.* <id.+. To let slip; கைதவற விடுதல். *மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய்* (தாயு. பராபர. 334).

கைப்பணம் kai-p-paṇam, *n.* <id.+. Capital; மூலதனம். *Pond.*

கைப்பாணி kai-p-pāṇi, *n.* <id.+*pāṇi*. See கைக்காணம். *தானே வரக்கண்டுங் கைப்பாணி வாங்கியும்* (தஞ். சரசு. ii, 106).

கைப்பாணிப்பு kai-p-pāṇippu, *n.* <id.+. Estimating the weight of anything by hand; ஒரு பொருளைக் கையில் எடுத்து நிறுத்திடும் மதிப்பு. *Loc.*

கைப்பால் kai-p-pāl, *n.* <id.+. Milk not milked in the presence of the buyer but brought by the milkman in his can; பால் வாங்குவோர் எதிரில் பசுவைக் கறவாது முன்னரே கறந்து கொண்டுவந்த பால். *Madr.*

கைப்பிச்சை kai-p-piccai, *n.* <id.+. Handful of grain given in charity at the threshing-floor; களத்தில் தருமமாகக் கொடுக்கும் பிச்சை. (R. T.)

கைப்பிணக்கிடு-தல் kai-p-piṇakkiṭu-, *v. intr.* <id.+. To hold the hands of another in one's own hands; கைகோத்தல். அவர்களோடே கைப்பிணக்கிடுகை முதலான இவன் செய்யும் விஷமங்கள் வாசாமகோசர மாகையாலே (திவ். பெரியாழ். 2, 7, 4, வ்யா. பக். 395).

கைப்புரட்டு kai-p-puraṭṭu, *n.* <id.+. 1. Jugglery; சாலவித்தை. (யாழ். அக.) 2. Short loan by way of accommodation; கைமாற்று. *Loc.*

கைப்புடை kai-p-puṭai, *n.* <id.+. Armoured glove; கைப்புட்டில். *Pond.*

கைப்பொல்லம் kai-p-pollam, *n.* <id.+. Small piece; சிறு துண்டு. (யாழ். அக.)

கைபிடித்துப்பார்-த்தல் kai-piṭittu-p-pār-, *v. tr.* <id.+பிடி-+. To feel the pulse of a patient; நாடிபார்த்தல். *Tinn.*

கைம்பெண்சாதி kai-m-peṇ-cāti, *n.* <கைம்மை+. Widow; கைம்பெண்டாட்டி. *Pond.*

கைம்மாட்டாங்கு kai-m-māṭṭāṅku, *n.* Mark; தற்குறி. ஆளுடையானும் கைமாட்டாங்கா னமைக்கும் (S. I. I. vii, 406).

கைம்மாய்ச்சி kai-m-māycci, *n.* <கை+ perh. மாட்டு. Handcuff; கைவிலங்கு. (யாழ். அக.)

கைமலம் kai-malam, *n.* <id.+மூலம். cf. கைச்சலம். Cow that milks after having lost its calf; கன்றிறந்தபின் பால்கொடுக்கும் மாடு. *Loc.*

கைமறதி kai-maṟati, *n.* <id.+. See கைத்தவறு. (W.)

கைமாயவித்தை kai-māya-vittai, *n.* <id. +மாயம்+. Jugglery; செய்யமுடியாத காரியத்தைச் செய்வதாகச் சொல்லிச் செய்யுந் தொழில். *Pond.*

கைமிகு-தல் kai-miku-, *v. intr.* <id.+. To become uncontrollable; அளவுகடத்தல். (W.)

கைமிடுக்கு kai-miṭukku, *n.* <id.+. Ability; சாமர்த்தியம். என் கைமிடுக்காலே யறிந்து சொல்லுகிறேனல்லேன் (ரஹஸ்ய. 1351).

கைமுகம் kai-mukam, *n.* <id.+. (Jaina.) A mode of the passage of the soul when it leaves the body; உடலைவிட்டு உயிர்போதுங் கதிகளு ளொன்று. (சீவக. 948, உரை.)

கைமுறை kai-muṟai, *n.* <id.+. Dance; நிர்த்தனம். நின்று பண்ணுங் கைம்முறை தப்பா (சரவண. பணவிடு. 417).

கையழி-தல் kai-y-aḻi-, *v. intr.* <id.+. To be disabled; to be broken-hearted; செயலறுதல். கையழிந்து புலவர் வாடிய பசியராகி (புறநா. 240).

கையளிப்பு kai-y-aḷippu, *n.* <id.+. Handing over, as charge or possession; பிறரிடம் ஒப்பிக்கை. *Pond.*

கையற kai-y-aṟa, *adv.* <id.+அறு-. Utterly; முற்றும். இவன் கையற நசிக்கின்ற காலத்து (நீலகேசி, 187, உரை).

கையறம் kai-y-aṟam, *n.* <id.+. Great distress; பெருந்துன்பம். வாளமர்கட் கையறமாம் (பாரதவெண். 176).

கையறுகிளவி kaiyaṟu-kiḷavi, *n.* <கையறு-+. (Akap.) Theme describing the obstacles to the hero visiting the heroine; தாய்துஞ்சாமை நாய்துஞ்சாமை முதலாய காப்பு மிகுதி சொல்லி வரவுவிலக்குதலைக் கூறும் அகத்துறை. (களவியற். 99.)

கையாள் kai-y-āḷ, *n.* <கை+. Helping hand; உதவிசெய்வோன். *Colloq.*

கையாளி-த்தல் kai-y-āḷi-, *v. tr.* <id.+ அளி-. To hand over, as charge or possession; ஒப்படைத்தல். கிராமத்தார்வசம் கையாளிக்கையில் (T. A. S. v, 150).

கையாறு kai-y-āṟu, *n.* <id.+. Field channel; கண்ணிவாய்க்கால். காற்செய்யும் இதினுக்குப்படும் கையாற்றுக்கும் எல்லையாவது (S. I. I. vi, 10).

கையிருப்பு kai-y-iruppu, *n.* prob. id.+. Red Indian water-lily; செங்குவளை. (சித். அக.)

கையீடு kai-y-īṭu, *n.* <id.+இடு-. Receipt for remittance; பணஞ்செலுத்துகை. பதினெட்டாவது நியதி கையீடு ஒன்றினால் காசு (S. I. I. iv, 134).

கையுருவிச்சுவர் kai-y-uruvi-c-cuvar, *n.* <id.+உருவு+. Parapet wall; கைப்பிடிச்சுவர். (Pudu. Insc. 213.)

கையேற்பு kai-y-ēṟpu, *n.* <id.+. A tax; வரிவகை. (I. M. P. Cg. 524.)

கையொழுக்கம் kai-y-oḻukkam, *n.* <id. +. Unvarying course of conduct; perseverance; வேறுபாடின்றி ஒரே மாதிரியாக வொழுகுந் தன்மை. (W.)

கைர் kair, *adj.* <Arab. *khair.* Good; நல்ல. *Muham.*

கைரவாவிகம் kairavāvikam, *n.* Flax; புளிச்சைக்கீரை. (சித். அக.)

கைரவி kairavi, *n.* (சித். அக.) 1. Fenugreek; வெந்தயம். 2. Moon-flower; சந்திரகாந்தி.

கைராத்து kairāttu, *n.* <Arab. *khairāt.* Beggar, a term of abuse; ஒரு வசைமொழி. *Madr.*

கைராதம் kairātam, *n.* Chiretta; நிலவேம்பு. (சித். அக.)

கைரிகம் kairikam, *n.* Purple stramony; பொன்னூமத்தை. (சித். அக.)

கைரியத் kairiyat, *n.* <Arab. *kaifiyat.* Welfare; சௌக்கியம். *Loc.*

கைரொக்கம் kai-rokkam, *n.* <கை +. Ready money; கையிலுள்ள முதல். *Colloq.*

கைவர்த்தர் kai-varttar, *n.* prob. id. +. Bearers of palanquins, etc.; பல்லக்கு முதலியன தூக்குவோர். (ஈடு.)

கைவரப்பு kai-varappu, *n.* <id. +. Temporary earthen bank; தாற்காலிகமாக இட்ட சிறுமண்ணணை. *Loc.*

கைவளப்பம் kai-vaḷappam, *n.* <id. +. Bounty; கொடை. *கைவளப்பத்தை யுடைய தலைவன் (பெரும்பாண். 420, உரை).*

கைவளர்-தல் kai-vaḷar-, *v. intr.* <id. +. To spread; பரவுதல். *சேனையொடு கைவளர்ந்து சென்றது (பு. வெ. 6, 5). கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர* (S. I. I. v, 155).

கைவறுண்டி kaivaruṇṭi, *n.* A plant; சீனமிளகாய். (சித். அக.)

கைவாட்சம்பா kaivāṭ-campā, *n.* prob. கை + வாள் +. A kind of paddy; நெல்வகை. (யாழ். அக.)

கைவாரம் kai-vāram, *n.* <id. +. Cultivator's share of the produce for his tilling and manuring the soil; சாதுபடியில் செய்கைக்குரிய பங்கு. (யாழ். அக.)

கைவாளை kai-vāḷai, *n.* <id. +. A kind of saree; புடைவைவகை. (யாழ். அக.)

கைவிதை kai-vitai, *n.* prob. id. +. Fenugreek; வெந்தயம். (சித். அக.)

கைவிரிதவம் kai-viri-tavam, *n.* prob. id. + விரி- +. A kind of prickly pear; சேந்நாகதாளி. (சித். அக.)

கைவிரைச்சம்பா kai-virai-c-campā, *n.* prob. id. + விரை +. A species of *campā* paddy; கைவளச்சம்பா.

கைவிலை kai-vilai, *n.* <id. +. Current price; அப்போதை விலை. *பிடாகைதோறும் கைவிலைப்படிக்கு நாடோறும் தரவெழுதவும்* (S. I. I. viii, 139).

கைவிழுது kai-viḻutu, *n.* <id. +. Hand lead-line, used for sounding small depths in the sea; கடலில் ஆழங்குறைவாயுள்ள இடங்களில் ஆழத்தை அறிய உதவுங் கயிறு. (M. Navi. 71.)

கைவிளி kai-viḷi, *n.* <id. +. Calling one's attention by clapping hands or making signs; கைதட்டியேனும் சமிஞ்ஞைசெய்தேனும் அழைக்கை. (பெரியபு. கண்ணப்ப. 72.)

கைவினைக்குடி kaiviṉai-k-kuṭi, *n.* <கைவினை +. Artisan class; கைத்தொழில்வேலை செய்யும் இனத்தார். *உழவுகுடி கைவினைக்குடி காசாயக் குடியிற் கொள்ளும்* (S. I. I. v, 95).

கைவீச்சன் kai-vīccaṉ, *n.* <கை +. A sweet cake; பணிகாரவகை. (யாழ். அக.)

கைவீச்சு kai-vīccu, *n.* <id. +. Blow, stroke with the hand; அடி. (யாழ். அக.)

கைவீசி kaivīci, *n.* A herb, *Eclipta prostrata;* கையாந்தகரை. (சு. வை. ர. 181.)

கைவீடு kai-vīṭu, *n.* <கை + விடு-. Desertion, forsaking; விட்டு நீங்குகை. (குறள், 799, உரை.)

கைவெட்டு kai-vēṭṭu, *n.* <id. +. Small mortars set on a pole and used in pyrotechny; இடிகொம்பு. *Loc.*

கொ

கொக்கரி kokkari, *n.* cf. கொக்கரை. A kind of musical instrument; வாத்தியவகை. *கொக்கரி கிடுபிடி கொட்ட* (வள்ளி. கதை. Ms.).

கொக்காமணி kokkāmaṇi, *n.* cf. கொக்கு மணி. A kind of bead; மணிவகை. *வக்காமணி கொக்காமணி வாங்கலையோ ஆயாளோ.*

கொக்கான் kokkāṉ, *n.* A tree; மரவகை. (யாழ். அக.)

கொக்குக்காலி kokkukkāli, *n.* cf. கொக்கு. Mango; மாமரம். (சித். அக.)

கொக்குச்சத்தகம் kokku-c-cattakam, *n.* <id.+. Hook-shaped blade attached to a pole; அலக்கரிவாள். (J.)

கொக்குச்சம்பா kokku-c-campā, *n.* A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (Nels.)

கொக்குடம் kokkuṭam, *n.* Strychnine tree; எட்டி. (சித். அக.)

கொக்குமணி kokku-maṇi, *n.* See கொக்காமணி. வக்காமணி கொக்குமணிகளையும் (மதி. களா. ii, 139).

கொக்குமேனி kokkumēṉi, *n.* Blinding tree; தில்லைமரம். (சித். அக.)

கொங்கணிப்பூண்டு koṅkaṇi-p-pūṇṭu, *n.* A kind of weed; பயிரின் களையாகிய பூடுவகை. *Loc.*

கொங்கணியான் koṅkaṇiyāṉ, *n.* A fish; மீன்வகை. (யாழ். அக.)

கொங்களம் koṅkaḷam, *n.* <கொங்கணம். Language of the Konkan country; கொங்கண பாஷை. (யாழ். அக.)

கொங்காடை koṅkāṭai, *n.* <கொங்கு+. A head-gear peculiar to the people of the *koṅku-nāṭu;* கொங்காது தலைக்சட்டு வகை. (எங்களூர், 74.)

கொங்காரமாசுக்கீரை koṅkāramācu-k-kīrai, *n.* A herb; பிண்ணாக்குக்கீரை. (சித். அக.)

கொங்கான் koṅkāṉ, *n.* <கொங்கு. Ignorant person; அறிவிலி. *Tp.*

கொங்குமுளை koṅku-muḷai, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 132.)

கொங்குரை koṅkurai, *n.* <id.+. Gold, as obtained in Koṅku country; பொன். கொங்குரை யாற்றிலிட்டு (மதுரைக்க. 74).

கொங்குவேண்மாக்கதை koṅku-vēṇ-mā-k-katai, *n.* <id.+வேள்+மா+. The epic poem Peruṅkatai; பெருங்கதை. கொங்குவேண்மாக் கதை முதலியவற்றேடு . . . . ஒன்றுக்குவர் (இலக். கொத். பக். 14).

கொச்சங்காய் koccaṅkāy, *n.* Immature cocoanut; குரும்பைத் தேங்காய். *Nāñ.*

கொசலி kocali, *n.* See கொசவேலை. *Tp.*

கொசவேலை koca-vēlai, *n.* perh. கொசலி +. Cornice work; கட்டட எழுதகவேலை. *Loc.*

கொஞ்சக்குலம் koñca-k-kulam, *n.* <கொஞ்சம்+. Inferior caste; தாழ்ந்தகுலம். கொஞ்சக்குல மல்லவோ (வள்ளி. கதை. Ms.).

கொட்டகச்சி koṭṭakacci, *n.* cf. கொட்டங் காய்ச்சி. Cocoanut shell; சிரட்டை. (யாழ். அக.)

கொட்டகம் koṭṭakam, *n.* Toy house, built by children; சிற்றில். ஊரில் பெண்களாய்க் கொட்டகமெடுத்து விளையாடித் திரிகிறவர்களுடைய (திவ். பெரியாழ். 1, 2, 9, வ்யா. பக். 48).

கொட்டடைப்பன் koṭṭaṭaippaṉ, *n.* perh. கொட்டு+. A disease of cattle; மாட்டுநோய் வகை. (பெரியமாட். 62.)

கொட்டம் koṭṭam, *n.* House; வீடு. ஒரு கொட்டம் ஒழிச்சுக் குடுத்துருங்கோ (எங்களூர், 47).

கொட்டாகை koṭṭākai, *n.* cf. கொட்டகை. Shed; கொட்டில். (யாழ். அக.)

கொட்டாங்கச்சித்தாட்டுப்பத்திரி koṭṭāṅkacci-t-tāṭṭu-p-pattiri, *n.* <கொட்டங்கச்சி +. A kind of saree; சேலைவகை. *Loc.*

கொட்டாட்டுப்பாட்டு koṭṭāṭṭu-p-pāṭṭu, *n.* <கொட்டு+ஆட்டு+. Dancing and music; நிருத்த கீத வாத்தியங்கள். (பத்துப். பக். 107.)

கொட்டாப்பு koṭṭāppu, *n.* <கொட்டு-+. Mallet; கொட்டாப்புளி. (நாநார்த்த. 1048.)

கொட்டான் koṭṭāṉ, *n.* cf. கொட்டை. Spinning cotton; நூற்பதற்குத் தயாரித்த பஞ்சு. *Tinn.*

கொட்டியப்பூச்சி koṭṭiya-p-pūcci, *n.* A kind of worm, in crops; பயிரையழிக்கும் ஒரு வகைப்புழு. *Loc.*

கொட்டு-தல் koṭṭu-, 5 *v. tr.* To wink; கண் இமைத்தல். கொட்டாது பார்க்கிறான்.

கொட்டுச்செத்தல் koṭṭu-c-cettal, *n.* prob. கொட்டை+. Dried cocoanut; அறக்காய்ந்த தேங் காய். (யாழ். அக.)

கொட்டுத்தட்டு koṭṭu-t-taṭṭu, *n.* <கொட்டு- +. The central part of the *valantarai* of a *mirutaṅkam;* மிருதங்கத்திலுள் வலந்தரையின் நடுப் பாகம். (கலைமகள், xii, 400.)

கொட்டுப்புரி koṭṭu-p-puri, *n.* prob. கூட்டு- +. A small broom-stick made of harialli grass; சிறுதுடைப்பவகை. *Tinn.*

கொட்டுவான் koṭṭuvāṉ, *n.* <கொட்டு-. Hoe with a long handle; புற்செதுக்குங் கருவி வகை. *Loc.*

கொட்டுவேலை koṭṭu-vēlai, *n.* prob. id.+. Print on cloth; துணியில் அச்சடிக்கை. (சிற்பரத். முன். பக். 9.)

கொட்டை koṭṭai, *n.* A kind of paddy; நெல்வகை. (தண். கன. பள். பக். 62.)

கொட்டைக்கூலி koṭṭai-k-kūli, *n.* prob. கொட்டை+. A tax; வரிவகை. (S. I. I. viii, 139.)

கொட்டைப்பருந்து koṭṭai-p-paruntu, *n.* perh. id.+. Black kite; பருந்துவகை. *Loc.*

கொட்டைப்பாக்குத்தலைப்பா koṭṭai-p-pākku-t-talaippā, *n.* <கொட்டைப்பாக்கு+. A kind of turban; துஞ்சுத்தலைப்பா. (யாழ். அக.)

கொட்டைமுதல் koṭṭai-mutal, *n.* <கொட்டை+. (யாழ். அக.) 1. Seed grain; விதைமுதல். 2. Capital in a business; வியாபார முதல்.

கொட்டையரைஞாண் koṭṭai-y-araiñāṇ, *n.* <id.+. A child's ornament; குழந்தையணி வகை. (பெரியபு. சிறுத். 60.)

கொடரி koṭari, *n.* cf. தொடரி. Style plant; எழுத்தாணிப்பூடு. (சித். அக.)

கொடிக்கடமை koṭi-k-kaṭamai, *n.* prob. கொடி+. A tax; வரிவகை. (S. I. I. v, 330.)

கொடிக்கத்தரி koṭi-k-kattari, *n.* <id.+. A variety of brinjal; கத்தரிவகை. (சித். அக.)

கொடிக்கருணை koṭi-k-karuṇai, *n.* <id. +. A tuberous-rooted plant; கருணைவகை. *Loc.*

கொடிச்சி koṭicci, *n.* <id. Excreta of termites, in an ant-hill; புற்றஞ்சோறு. (யாழ். அக.)

கொடிச்சிங்கேரி koṭi-c-ciṅkēri, *n.* <id.+. Indian birthwort; கருடக்கொடி. (சித். அக.)

கொடிச்சித்தாமரை koṭicci-t-tāmarai, *n.* <id.+. Blue nelumbo; நீலத்தாமரை. (சித். அக.)

கொடிசை koṭicai, *n.* perh. கொடிறு. Cheek; கன்னம். (யாழ். அக.)

கொடித்தடக்கி koṭi-t-taṭakki, *n.* <கொடி +தடக்கி. Small projection near the toes of a dog; நாய்க்காலின் மேல் விரல். (யாழ். அக.)

கொடித்திருப்பாடகம் koṭi-t-tiruppāṭakam, *n.* <id.+. A woman's foot-ornament; மகளிர் காலணிவகை. (W.)

கொடிதிருப்பு-தல் koṭi-tiruppu-, *v. intr.* <id.+. To give a girl in marriage to a member of a family from which a girl has been taken in marriage; பெண்கொண்ட குடும்பத்தில் பெண்கொடுத்தல். *Brāh.*

கொடிநாரத்தன் koṭi-nārattaṉ, *n.* <id. +. See கொடிநாரத்தை. (சு. வை. ர. 166.)

கொடிநாரத்தை koṭi-nārattai, *n.* <id.+. A kind of citron; நாரத்தைவகை. (சித். அக.)

கொடிப்புடைவை koṭi-p-puṭaivai, *n.* <id.+. New cloth which relatives of a widow place on a clothes-line for use during the first year of her widowhood; விதவையானவளுக்கு முதல் வருஷ உபயோகத்திற்காகச் சுற்றத்தார் கொடியில் இடும் புதுச்சீலை. *Brāh.*

கொடிப்பூகம் koṭi-p-pūkam, *n.* <id.+. Cowslip creeper; கொடிச்சம்பங்கி. (சித். அக.)

கொடிபோடு-தல் koṭi-pōṭu-, *v. intr.* <id.+. To devise ways and means of appropriating; தன்னதாக்க வழிபண்ணுதல். (யாழ். அக.)

கொடிமுல்லை koṭi-mullai, *n.* <id.+. Eared jasmine; ஊசிமுல்லை. (சித். அக.)

கொடியாளன் koṭiyāḷaṉ, *n.* cf. கொடிய வீரன். *Kōṭācori-p-pāṣāṇam*, a prepared arsenic; கோடாசோரிப்பாஷாணம். (யாழ். அக.)

கொடியிறக்கம் koṭi-y-iṟakkam, *n.* <கொடி+. Concluding, finishing; முடிவுபண்ணுகை. (யாழ். அக.)

கொடுக்கன் koṭukkaṉ, *n.* [T. *koḍuku.*] Son; மகன். வயிரமேகனுர் கொடுக்கன் சிற்றண் புலியூர் நாடன் (S. I. I. viii, 32).

கொடுக்கு-தல் koṭukku-, 5 *v. tr.* cf. கொடுகு-. To cause one to shudder; நடுக்குதல். *Tinn.*

கொடுகிலை koṭukilai, *n.* Common cherry nutmeg; நதுதலிலை. (L.)

கொடுங்கரி koṭuṅ-kari, *n.* <கொடு-மை+. False witness; பொய்ச்சாட்சி. (யாழ். அக.)

கொடுங்காறல் koṭuṅ-kāṟal, *n.* <id.+. Horse-mackerel; சுதுப்புநாங்காறல். *Loc.*

கொடுங்கொடிச்சிலை koṭuṅ-koṭi-c-cilai, *n.* <id.+. cf. கொடுங்கோபிச்சிலை. Yellow ochre; மஞ்சட்கல். (யாழ். அக.)

கொடுநாவி koṭu-nāvi, *n.* <id.+. Ceylon leadwort; கொடுவேலி. (சித். அக.)

கொடுநோய் koṭu-nōy, *n.* <id.+. A disease of cattle; மாட்டுநோய்வகை. (பெரியமாட். 117.)

கொடுப்பரளை koṭupparaḷai, *n.* A disease of the mouth; வாய்நோய்வகை. (பரராச. i, 219.)

கொடுப்பனவு koṭuppaṉavu, *n.* <கொடு-. See கொடுப்பனை. (யாழ். அக.)

கொடுப்பனை koṭuppaṉai, *n.* <id. Giving a girl in marriage; பெண் கொடுக்கை. *Loc.*

கொடுப்பினை koṭuppiṉai, *n.* <id. See கொடுப்பனை. கொள்வினை கொடுப்பினை. *Loc.*

கொடுமுறுக்கு koṭu-muṟukku, *n.* <கொடு-மை+. Small fibrous risings on the smooth surface of a string; சிம்பு. (பத்துப். பக். 607, கீழ்க்குறிப்பு.)

கொடுவிழுதை koṭuviḻutai, *n.* A kind of paddy; பெருநெல்வகை. *Loc.*

கொண்டக்கரை koṇṭa-k-karai, *n.* <கொண்டம்+. Small bund; சிறுகரை. *Tp.*

கொண்டக்கிரி koṇṭakkiri, *n.* cf. கொண்டைக்கிரி. (Mus.) A melody-type; பண்வகை. (யாழ். அக.)

கொண்டபாரம் koṇṭa-pāram, *n.* <கொள்-+. Full load; நிறைபாரம். (யாழ். அக.)

கொண்டம் koṇṭam, *n.* prob. குண்டம். Dam; அணை. *Tp.*

கொண்டல்மிதித்தல் koṇṭal-mitittal, *n.* perh. கொந்தழல்+. Fire-walking; தீமிதிக்கை. (யாழ். அக.)

கொண்டிப்பணம் koṇṭi-p-paṇam, *n.* <கொண்டி+. Fine imposed for grazing cattle in prohibited areas; ஆடுமாடுகள் பட்டிமேய்தலுக்கிடுந் தண்டம். (W.)

கொண்டியம் koṇṭiyam, *n.* perh. கொள்-. Falsehood, lie; பொய்ச்சொல். (நாநார்த்த.)

கொண்டுதலைக்கழிதல் koṇṭu-talai-k-kaḻital, *n.* <id.+. (Akap.) Theme describing the elopement of the hero with his lady-love; தலைவியைத் தலைவன் உடன்கொண்டுபோதலைக் கூறுந் துறை. (தொல். பொ. பக். 64.)

கொண்டை koṇṭai, *n.* Hump; திமில். *Tj.*

கொண்டைக்கடலை koṇṭai-k-kaṭalai, *n.* <கொண்டை+. Bengal gram; கடலைவகை. *Loc.*

கொண்டைக்கோல் koṇṭai-k-kōl, *n.* <id.+. Boundary post; எல்லை குறிக்குங் கோல். அளக்கும் ப்ரதேசத்துக்குக் கொண்டைக்கோல் நாட்டுகிறுர் (திவ். திருநெடுந். 5, வ்யா.).

கொண்டைகிருட்டி koṇṭai-kiruṭṭi, *n.* <id.+. Hoopoe, a crested bird; கொண்டலாத்தி. (யாழ். அக.)

கொண்டோசனை koṇṭōcaṉai, *n.* A plant; பூடுவகை. தட்டிலாக் கொண்டோசனைக் கிழங்கு (தைலவ. விறலிவிடு. 407).

கொண்டோடி koṇṭōṭi, *n.* <கொள்-+ஓடு-. Rope fastening the pole to the beam of the picotta; ஏற்றத்தில் துலாவையும் அதன் கோடியையும் பிணிக்குங் கயிறு. (யாழ். அக.)

கொணமணப்பிள்ளை koṇamaṇa-p-piḷḷai, *n.* <குழமணம்+. A marriage ceremony in which the bride presents the bridegroom with a doll representing a child, which he returns back to her; திருமணச் சடங்கில் பிரதிமை யொன்றைப் பிள்ளையாகப் பாவித்துப் பெண் மாப்பிள்ளையிடங் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளுஞ் சடங்கு. *Loc.*

கொத்தாங்கொளுஞ்சி kottāṅ-koḷuñci, *n.* prob. கொற்றன்+. A plant; கொழிஞ்சிவகை. (பெரியமாட். 113.)

கொத்தான் kottāṉ, *n.* Snail; நத்தை. *Pond.*

கொத்துக்காரன் kottu-k-kāraṉ, *n.* <கொத்து+. 1. Mason; bricklayer; கொத்துவேலை செய்பவன். 2. Stone mason; கல்வேலை செய்பவன்.

கொத்துக்காரனுளி kottu-k-kāraṉ-uḷi, *n.* <id.+காரன்+. Gouge; உளிவகை. *Pond.*

கொத்துக்கீரை kottu-k-kīrai *n.* prob. id. +. A kind of dish; கறிவகை. *Nāñ.*

கொத்துச்சட்டி kottu-c-caṭṭi, *n.* <கொத்து+. A cluster of cups, used in serving food; பாத்திரவகை. *Colloq.*

கொத்துச்சரம் kottu-c-caram, *n.* <id. +. Strings of golden beads; பொன்மணியாலாகிய மாலை. (W.)

கொத்துப்பாசி kottu-p-pāci, *n.* <id.+. A kind of moss; பாசிவகையுளொன்று. *Loc.*

கொத்துமணி kottu-maṇi, *n.* <id.+. Cluster of bells; பலமணிகள் சேர்ந்த மணிக்கொத்து. *Loc.*

கொத்துளி kottuḷi, *n.* <கொத்து-+. A kind of chisel; உளிவகை. *Pond.*

கொதி koti, *n.* <கொதி-. Food-offering to the deity; பிரசாதம். (S. I. I. vii, 22.)

கொதியெண்ணி koti-y-eṇṇi, *n.* <கொதி- +. One who waits for meals; போசனத்துக்குக் காத்திருப்போன். (*யாழ். அக.*)

கொதுகுலம் kotukulam, *n.* perh. *kautū-hala.* Lisping; மழலை கொஞ்சுகை. (*யாழ். அக.*)

கொதுகுலி-த்தல் kotukuli-, *11 v. intr.* <கொதுகுலம். To melt; குழைந்துருகுதல். (*யாழ். அக.*)

கொந்தளம் kontaḷam, *n.* perh. *kuntala.* An ear-ornament; காதணிவகை. *காதுக்குக் கொந்தளம் அணிந்து* (*தமிழ்றி.* 64).

கொந்திக்காய் kontikkāy, *n.* Throat; மிடறு. *Loc.*

கொந்து kontu, *n.* Pollen; பூந்தாது. *கொந்து சொரிவன கொன்றையே* (*தக்கயாகப்.* 62).

கொப்பரைவெட்டு kopparai-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (*பண விடு.* 136.)

கொப்பு koppu, *n.* cf. *கப்பு.* A reddish colour; ஒருவகைச் சிவப்பு. (*விறலிவிடு.* 713.)

கொப்புவர்ணம் koppu-varṇam, *n.* <கொப்பு+. A kind of saree; சேலைவகை. *கொப்புவர்ணமாய்த்தீர்ந்த கொப்புவர்ணம்* (*விறலிவிடு.* 713).

கொப்புஜம்புல் koppu-jampul, *n.* prob. id.+. A kind of ear-ornament; காதணிவகை. (*தாசீல்தார்நா. பக்.* 40.)

கொம்பரை komparai, *n.* A disease in cattle; மாட்டுநோய்வகை. (*தஞ். சர.* iii, 119.)

கொம்பன் kompaṉ, *n.* <கொம்பு. A kind of fish; மீன்வகை. (*யாழ். அக.*)

கொம்பாபிள்ளை kompā-piḷḷai, *n.* <id.+ஆ-+. One born in an aristocratic family; அதிகாரக்குடியிற் பிறந்தோன். (*யாழ். அக.*)

கொம்பாஸ்பெட்டி kompās-peṭṭi, *n.* <E. *compass*+. Box of drawing instruments; படமுதலியன எழுதுதற் குதவுங் கருவிகளையுடைய சிறுபெட்டி. *Mod.*

கொம்பு[1]-தல் kompu-, *5 v. intr.* To try; முயலுதல். (*யாழ். அக.*)

கொம்பு[2]-தல் kompu-, *5 v. intr.* cf. கெம்பு-. To get angry; கோபித்தல். *ஈசன்மேற் கொம்பி* (*பஞ்ச. திருமுக.* 107).

கொம்மடி kommaṭi, *n.* A kind of water-melon; கொம்மட்டிவகை. *சிற்றவரைக் கொம்மடிகள்* (*தேசிகப்.* 18, 4).

கொய்-தல் koy-, *11 v. tr.* To take away; கவர்ந்துகொள்ளுதல். (*ஈடு,* 1, 4, 7.)

கொய்ச்சாளை koy-c-cāḷai, *n.* <கொய்+. A kind of fish; மீன்வகை. (*யாழ். அக.*)

கொய்ப்பசிரிக்கீரை koy-p-paciri-k-kīrai, *n.* <கொய்-+பசளை+. Seaside Indian saltwort; நீருமரி. (L.)

கொய்மீன் koy-mīṉ, *n.* <கொய்+. A kind of fish; மீன்வகை. *கொய்மீன் செப்பலி* (*குருகூர்ப்.* 20).

கொய்யா koyyā, *n.* prob. T. *koyyā.* A weaving instrument; நெய்வார் கருவிவகை. (*யாழ். அக.*)

கொய்யான் koyyāṉ, *n.* cf. *கோய்.* Earthen jar; மண்ணாலான பரணி. (*யாழ். அக.*)

கொய்யோ koyyō, *int.* An exclamation of victory; வெற்றிக்குறிப்புச் சொல். (*யாழ். அக.*)

கொர்னிசு cornicu, *n.* <E. Cornice; எழுதகவேலை. *Mod.*

கொரக்கை korakkai, *n.* [T. *guraka.*] Snoring; குறட்டை. (*நீலகேசி,* 375, *உரை.*)

கொரிகாமரம் korikā-maram, *n.* prob. கொறுக்கா+. Manilla tamarind; கொறுக்காப்புளி. (*சித். அக.*)

கொருவோடு koru-v-ōṭu, *n.* perh. குறு-மை +. Flat tile; தட்டோடு. *Madr.*

கொல் kol, *n.* 1. Iron; இரும்பு. *மின் வெள்ளி பொன் கொல்லெனச் சொல்லும்* (*தக்கயாகப்.* 550). 2. Metal; உலோகம். (*நாமதீப.* 318.)

கொல்லன் kollaṉ, *n.* <T. *golla.* Custodian of treasure; கஜானக்காரன். (P. T. L.)

கொல்லிச்சி kollicci, *n.* Fem. of கொல்லன். Woman of the blacksmith caste; கொல்லச் சாதிப் பெண். (*யாழ். அக.*)

கொலைவாளை kolai-vāḷai, *n.* perh. குலை+ வாழை. A kind of paddy; ஒருவகை நெல். *Tinn.*

கொவ்வைக்கனிமணி kovvai-k-kaṉi-maṇi, *n.* <கொவ்வை+கனி+. A kind of precious stone; கோவரங்கப்பதுமராகம். (*யாழ். அக.*)

கொழுக்கொடு-த்தல் koḻu-k-koṭu-, *v. intr.* <கொழு-+. 1. To be indulgent; இளக்காரங் கொடுத்தல். *நீ நியமியாமல் கொழுக்கொடுத் தன்றோ இப்படி இவன் தீம்பிலே தகணேற வேண்டிற்று* (*திவ். பெரியாழ்.* 2, 9, 2, *வ்யா. பக்.* 454). 2. To exalt; பெருமையுண்டாக்குதல். (*திவ். பெரியாழ்.* 2, 9, 2, *ஜீ.*)

கொழுகொழுப்பு kolukoluppu, *n.* <கொழு-+. *Loc.* 1. Luxuriance; செழுமை. 2. Flabbiness; ஊழற்சதை.

கொழுஞ்சி koluñci, *n.* *Nāy-vēḷai*, a sticky plant; நாய்வேளை. (சித். அக.)

கொழுந்திலை koluntilai, *n.* <கொழுந்து+. Tea leaf; தேயிலை. (சித். அக.)

கொழுந்துகிள்ளி koluntu-kiḷḷi, *n.* <id.+. Mischief-maker; மித்திரபேதஞ் செய்பவன். *Loc.*

கொழுந்தொட்டி kolun-toṭṭi, *n.* <கொழுமை+. A plant; பூவேகை. (யாழ். அக.)

கொழுப்புமடி koluppu-maṭi, *n.* <கொழுப்பு+. Fleshy udder of a cow, not yielding milk; பாலின்றித் தசை நிறைந்த மாட்டுமடி.

கொழுவாரம் kolu-vāram, *n.* <கொழு+. Cultivator's share of the produce; குடியானவனுக்குரிய வாரம். *மேல்வாரநீக்கிக் கொழுவாரத்தால் பூசைநடக்கும்படி* (S. I. I. viii, 234).

கொள்வரி koḷ-vari, *n.* <கொள்-+. A tax in kind; நெல்லாயவகை. (S. I. I. iv, 195.)

கொளமா koḷamā, *n.* Gum lac tree; தும்பாதிரி. (L.)

கொளுகொளு-த்தல் koḷukoḷu-, 11 *v. intr.* To be soft or loose; கொளகொளத்தல். (யாழ். அக.)

கொளுசு koḷucu, *n.* Knot; குழைச்சு. (யாழ். அக.)

கொளுமுதல் koḷu-mutal, *n.* <கொள்-+. cf. கொழுமீதி. Owner's share of the produce of a field after deducting the Government dues; நிலவருமானத்தில் சர்க்கார் தீர்வைபோகச் சுவான்தார் அடையும் பகுதி. (யாழ். அக.)

கொற்றி korri, *n.* Cow having a young calf; இளங்கன்றுப் பசு. (யாழ். அக.)

கொற்று korṟu, *n.* Wages in kind; தானியமாகப்பெறுங் கூலி. *பதினுற்கல நெல்லு கொற்று பெறுவதாகவும்* (S. I. I. v, 302).

கொற்றை korṟai, *n.* Blot, blemish, defect; கோத்தை. *ப்ரேமத்துக்குக் கொற்றையாகையாலே* (திவ். பெரியாழ். 2, 4, 1, வ்யா. பக். 310, அரும்.).

கொறுகொறு-த்தல் korukoru-, 11 *v. intr.* To snore; குறட்டைவிடுதல். (யாழ். அக.)

கொறுகொறுப்பு koru-koruppu, *n.* <கொறுகொறு-. Pestering; அலட்டுகை. (யாழ். அக.)

கொறுவாய் koruvāy, *n.* <கதுவாய். cf. ஒறுவாய். Broken rim or edge; உடைந்த விளிம்பு. *Tinn.*

கொன்னி-த்தல் konni-, 5 *v. intr.* <கொன்னு-. To stammer; திக்குதல். (யாழ். அக.)

கொன்னிப்பு konnippu, *n.* A disease; நோய்வகை. (பராச. i, 236.)

கொன்னு-தல் konnu-, 5 *v. intr.* To become famous; பெருமையுறுதல். (தணிகைப்பு. நாட். 140.)

கொன்னை konnai, *n.* prob. கொன். Contempt; இகழ்ச்சி. *கத்துருதாசியாகிக் கொன்னையுற் றிருந்தி* (வேதாரணி. சேடன். 7).

கொன்னைத்தெங்கு konnai-t-teṅku, *n.* <கொன்னை+. Barren cocoanut palm; காய்க்காத தெங்கு. *Nāñ.*

கோ

கோகபந்துகம் kōkapantukam, *n.* <*koka-bandhu*. Sun-flower; சூரியகாந்தி. (சித். அக.)

கோகம் kōkam, *n.* <*kōka*. A variety of date-palm; சிற்றீந்து. (நாநார்த்த.)

கோகருணம் kōkaruṇam, *n.* <*go-karṇa*. (நாநார்த்த.) 1. Span from tip of ring finger to tip of thumb; மோதிரவிரற் சாண். 2. A kind of snake; பாம்புவகை. 3. A kind of antelope; மான்வகை.

கோகலிவாழை kōkalivālai, *n.* Wild jasmine; காட்டுமல்லிகை. (சித். அக.)

கோகன்னம் kō-kannam, *n.* <கோ+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. *கோகன்னங் கேசரமேற் பாதம்* (தத்துவப். 108).

கோகிலப்பிரிய kōkila-p-piriya, *n.* <*kōkila-priya*. (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கோகிலவீசம் kōkilavīcam, *n.* Manjeet; மஞ்சிட்டி. (சித். அக.)

கோகிலானந்தம் kōkilānantam, *n.* <கோகிலம்+. Mango tree; மாமரம். (மூ. அ.)

கோகுலம்[1] kō-kulam, *n.* <கோ+. Temple; கோயில். (நாநார்த்த.)

கோகுலம்[2] kōkulam, *n.* <*gō-kula*. (நாநார்த்த.) 1. Cattleshed; கொட்டில். 2. Herd of cows; பசுக்கூட்டம்.

கோகோசனம் kōkōcanam, *n.* Bezoar; கோரோசனை. (மூ. அ.)

கோங்கந்தட்டம் koṅkan-taṭṭam, *n.* <கோங்கு+. A plate made like *kōṅku* flower; கோங்கம்பூ வடிவமாகச் செய்யப்பட்ட தாம்பாளம். *Loc.*

கோச்செய்-தல் kō-c-cey-, *v. intr.* <கோ+. To rule; அதிகாரஞ் செய்தல். *ஐவர் வந்து கோச்செய்து சமைக்க* (தேவா. 997, 6).

கோசகாரம் kōcakāram, *n.* (மூ. அ.) 1. Sugar-cane; கரும்பு. 2. Cocoanut tree; தென்னை.

கோசம் kōcam, *n.* <*kōśa.* Register of village lands; அடங்கற் கணக்கு. (P. T. L.)

கோசல kōcala, *n.* prob. *kōśala.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந்.)

கோசலரேகை kōcala-rēkai, *n.* prob. id. (Palmistry.) A line in palm of hand; கையி ரேகைவகை. (திருவாரூ. குற. Ms.)

கோசனகம் kōcaṉakam, *n.* (அக. நி.) 1. A plant growing in marshy places; கையாந்தகரை. 2. *Nila-k-kaṭampu*, a plant; நிலக்கடம்பு.

கோசாகாரப்புழு kōcākāra-p-puḻu, *n.* <*kōśa-kāra*+. Silkworm; பட்டுப்புழு. *பற்றருக் கோசாகாரப்புழுப்போல்* (சொரூபசாரம், 98).

கோசான் kōcāṉ, *n.* Membrum virile; கோசம். *Colloq.*

கோசு[1] kōcu, *n.* cf. Port. *cors.* Windward side of a ship; கப்பலின் காற்றுப்பக்கம். *Pond.*

கோசு[2] kōcu, *n.* 1. cf. *கோய்.* A kind of small perfume-box; பரணிச்செப்பு. (சரபேந்திர. குறவஞ்சி. 321.) 2. Hangings; தொங்கல். *Loc.*

கோட்டடி-த்தல் kōṭṭaṭi-, *v. intr.* <கோட்டு+. 1. To play a lone hand to win all the tricks in a card-game; சீட்டாட்டத்தில் எல்லாப் பிடிகளையுந் தனியே பிடிக்க முயலுதல். 2. To fail; தோற்றுப்போதல். *அவன் பரீட்சையில் கோட்டடித்துவிட்டான். Loc.*

கோட்டம் kōṭṭam, *n.* (அக. நி.) 1. Monkey; குரங்கு. 2. Tank; குளம். 3. Sheet of water; நீர்நிலை. 4. Field; வயல்.

கோட்டு kōṭṭu, *n.* <கோடு. Bundle of sheaves of paddy; நெல்லரியின் தொகுதி. *Colloq.*

கோட்டுப்பிடி-த்தல் kōṭṭu-p-piṭi-, *v. intr.* <கோட்டு+. To thresh the sheaves of paddy; நெல்லின் அரிகளையடித்தல். *Colloq.*

கோட்டை kōṭṭai, *n.* Earthen bin for storing paddy; நெற்குதிர். (நாநார்த்த.)

கோட்டைப்பப்பளி kōṭṭai-p-pappaḷi, *n.* <கோட்டை+. A kind of saree; சேலைவகை. *Loc.*

கோடகசாலை kōṭakacālai, *n.* A small plant, *Rungia repens;* பூவேகை. (மூ. அ.)

கோடகம் kōṭakam, *n.* Spurge gourd; பீர்க்கு. (நாநார்த்த.)

கோடங்கம் kōṭaṅkam, *n.* Coromandel ebony; கருங்காலி. (சித். அக.)

கோடம் kōṭam, *n.* <*kōṭa.* Person lame of one leg; ஒரு கால் முடம். (நாநார்த்த.)

கோடரம் kōṭaram, *n.* (அக. நி.) 1. Hair; மயிர். 2. Unguent; சாந்து.

கோடரவாலி kōṭaravāli, *n.* Margosa; வேம்பு. (சித். அக.)

கோடலி kōṭali, *n.* Potato plum of Mysore; தொருணை. (L.)

கோடாலிக்கொண்டை kōṭāli-k-koṇṭai, *n.* perh. குடலை+. See கோடாலிமுடிச்சு. *Tinn.*

கோடாலிமுடிச்சு kōṭāli-muṭiccu, *n.* perh. id.+. A mode of knotting the hair; தலைமயிர் முடிக்கு வகை. *Tj.*

கோடியெடு-த்தல் kōṭi-y-eṭu-, *v. tr.* <கோடி+. To repeat; திரும்பச் சொல்லுதல். (ஈடு, 10, 3, 1.)

கோடிரம் kōṭiram, *n.* <*kōṭira.* (நாநார்த்த.) 1. Mongoose; கீரி. 2. Cochineal; இந்திரகோபம்.

கோடீரம் kōṭīram, *n.* Indra's bow; rainbow; இந்திரன் வில். (சோதிட. அக.)

கோடைக்கட்டி kōṭai-k-kaṭṭi, *n.* <கோடை+. Summer boil; உஷ்ணத்தா லுண்டாங் கொப்புளம். *Loc.*

கோடைக்காந்தள் kōṭai-k-kāntaḷ, *n.* <id.+. White species of Malabar glory lily; வெண்காந்தள். (சித். அக.)

கோடைக்குறுவை kōṭai-k-kuṟuvai, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. *கோடைக் குறுவை குளவாளை செங்குறுவை* (நெல்விடு. 179).

கோடைக்கேப்பை kōṭai-k-kēppai, *n.* <id.+. A species of ragi; கேழ்வரகுவகை. (விவசா. 3.)

கோண்டன் kōṇṭaṉ, *n.* <*goṇḍa.* (நாநார்த்த.) 1. Low-born person; இழிபிறப்பினன். 2. One who has a large navel; பெருங் கொப்பூழன்.

கோண்டை kōṇṭai, *n.* <*ghōṇṭā.* Areca-palm; கமுகு. (யாழ். அக.)

கோணப்பார்வை kōṇa-p-pārvai, *n.* <கோணம்+. Squint eye; மாறுகண். *Loc.*

கோணல்சம்பா kōṇal-campā, *n.* perh. கோணல்+. A kind of paddy; நெல்வகை. (விவசா. 1.)

கோணல்வளைவு kōṇal-vaḷaivu, *n.* <id.+. Skew; வளைவுவகை. (கட்டட. நாமா. 16.)

கோணிக்கவாயன் kōṇikkavāyaṉ, *n.* A kind of paddy; நெல்வகை. (A.)

கோணிப்பட்டு kōṇi-p paṭṭu, *n.* perh. கோணி+. A kind of silk; பட்டுவகை. (S. I. I. viii, 233.)

கோணைப்பெருமான் kōṇai-p-perumāṉ, *n.* <கோணை+. Śiva in His *Ēkapāta* form; ஏகபாத சிவமூர்த்தம். (காஞ்சிப்பு. சிவபுண். 10.)

கோத்திரிகை kōttirikai, *n.* Bristly bryony; முசுமுசுக்கை. (சித். அக.)

கோதண்டவெள்ளம் kōtaṇṭa-veḷḷam, *n.* <கோதண்டம்+. See கோதண்டவெளி. (தக்கயாகப். 334, உரை.)

கோதண்டவெளி kōtaṇṭa-veḷi, *n.* <id.+. Śiva's third eye, in the forehead; நெற்றிக்கண். (தக்கயாகப். 334, உரை.)

கோதாரணம் kōtāraṇam, *n.* <*gō-dāraṇa.* (யாழ். அக.) 1. Plough; கலப்பை. 2. Spade, hoe; மண்வெட்டி.

கோதி kōti, *n.* <*gōdhi.* Forehead; நெற்றி. (நாநார்த்த.)

கோதுகம் kōtukam, *n.* Long zedoary; கச்சோலம். (சித். அக.)

கோதேரன் kōtēraṉ, *n.* <*godhera.* Protector, guardian; காவற்காரன். (யாழ். அக.)

கோந்துரு kōnturu, *n.* Duplicity; வஞ்சகம். (யாழ். அக.)

கோநசம் kōnacam, *n.* <*gō-nasa.* A kind of snake; பாம்புவகை. (யாழ். அக.)

கோப்பதவாரம் kō-p-pata-vāram, *n.* <கோ+பதம்+. Tax due to the king; அரசர்க்குரிய இறை. (T. A. S. ii, 82.)

கோப்பாட்டன் kō-p-pāṭṭaṉ, *n.* cf. கொட்பாட்டன். Grandfather's father; கொட்பாட்டன். (W.)

கோப்பியாதி kōppiyāti, *n.* <*gōpyādhi.* Pledge; ஈடு. (யாழ். அக.)

கோப்பிரண்டை kō-p-piraṇṭai, *n.* prob. கோ+. A kind of square-stalked vine; பிரண்டைவகை. *Tj.*

கோபத்திரம் kōpattiram, *n.* <*gōbhadra.* Fibre obtained from lotus stalk; தாமரை நூல். (மூ. அ.)

கோபதி kōpati, *n.* <*gō-pati.* Sun; சூரியன். (சோதிட. அக.)

கோபலீவர்த்தநியாயம் kō-palīvartta-niyāyam, *n.* <*gō+balīvarda*+. The illustration of the meaning of *kō* or 'cattle' being confined to 'cows' because immediately thereafter '*palīvarttam*' or 'bull' is mentioned; 'கோ' என்பது பசுவையுங் காளையையுங் குறிக்குமேனினும் அச்சொல்லுக்குப் பின் 'பலீவர்த்தம்' என்ற சொல் வருவதனால் அது பசுவையே குறிப்பதாகக்கொள்ளும் நியாயம். (திவ். பெரியாழ். 2, 1, 2, வ்யா. பக். 210.)

கோபாட்டமி kōpāṭṭami, *n.* <*gōpāṣṭamī. Aṣṭamī titi* in the bright half of the month Kārttikai; கார்த்திகை மாதத்துப் பூர்வபக்கத்து அட்டமி. (யாழ். அக.)

கோபாலசக்கரம் kōpālacakkaram, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 145.)

கோபிகாவசந்தம் kōpikā-vacantam, *n.* <*gōpikā*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 102.)

கோபிசாற்று-தல் kōpi-cāṟṟu-, *v. tr.* <கோபி+. To deceive; ஏமாற்றுதல். *Colloq.*

கோபிபோடு-தல் kōpi-pōṭu-, *v. tr.* <id. +. See கோபிசாற்று-. *Colloq.*

கோபுரம் kōpuram, *n.* <*gopura.* A kind of sedge; பெருங்கோரை. (நாநார்த்த.)

கோமணிக்குன்றம் kō-maṇi-k-kuṉṟam, *n.* <கோ+மணி+. Mythical hill containing bell-metal; வெண்கலமலை. (யாழ். அக.)

கோமளாஸ்தி kōmaḷāsti, *n.* <*kōmala+asthi.* Cartilage, tendon; முருந்து. (W.)

கோமாளி-த்தல் kōmāḷi-, 11 *v. intr.* <கோமாளி. To play the buffoon; to indulge in drollery; கோமாளித்தனஞ் செய்தல். *Pond.*

கோமுறை kō-muṟai, *n.* <கோ+. Revenue; அரசிறை. நாம் கொள்ளும் கோமுறைகளுமே (S. I. I. v, 312).

கோமூத்திரிகை kōmūttirikai, *n.* <*gō-mūtrikā.* A kind of grass; புல்வகை. (மூ. அ.)

கோயில்வாசி kōyil-vāci, *n.* <கோயில்+. Taxes due to the king; அரசர்க்குரிய இறை. (S. I. I. v, 357.)

கோயிற்கலஞ்செய்-தல் kōyir̲-kalañ-cey-, *v. intr.* <கோயில்+perh. அலம்+. To demolish a temple; கோயிலிடித்தல். மாந்தரைக் குழியுளுந்துதல் கோயிற்கலஞ் செய்தல் (நீலகேசி, 540).

கோயிற்கொத்து kōyir̲-kottu, *n.* <id.+. Temple or palace servants; கோயில் அல்லது அரண்மனைப் பணியாட்கள். (M. E. R. 1923-4, p. 103.) கோயிற்கொத் தடிமைத்தாசி இருக்குமனை (சரவண. பணவிடு. 192).

கோயிற்படி kōyir̲-paṭi, *n.* <id.+. Daily allowance for the expenditure of a temple; கோயிலிற்கிடைக்கும் நித்தியக்கட்டளை. (W.)

கோயிற்பிராகாரம் kōyir̲-p-pirākāram, *n.* <id.+. Churchyard; கிறிஸ்தவர் கோயிலுள் சவம்புதைக்கு மிடம். (கட்டட. நாமா. 5.)

கோயிற்பூனை kōyir̲-pūṉai, *n.* <id.+. Dissembler in religion; hypocrite; மதவேடதாரி. (W.)

கோயிற்றூக்கு kōyir̲r̲ūkku, *n.* <id.+. (Mus.) A variety of time-measure; தாளவகை. (சிலப். 14, 150, உரை.)

கோர்னீசு kōrṉīcu, *n.* See கோர்னிசு. *Loc.*

கோரகம் kōrakam, *n.* <*kōraka.* Cubeb; தக்கோலம். (நாநார்த்த.)

கோரணி kōraṇi, *n.* 1. Confusion; கோளாறு. கோரணிப்படுத்துமக் கொடியரோவலர் (இரக்ஷணிய. பக். 81). 2. Diversion; விநோதம். *Pond.*

கோரராசனம் kōrarācaṉam, *n.* <*ghōra-rāsana.* Jackal; நரி. (யாழ். அக.)

கோராதனம் kōrātaṉam, *n.* <*ghōrasana.* (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

கோரிதம் kōritam, *n.* <*kōrita.* Dust; துகள். (யாழ். அக.)

கோரைக்குச்சு kōrai-k-kuccu, *n.* <கோரை +. European bamboo reed; கோறுக்கை. *Loc.*

கோரைப்பல் kōrai-p-pal, *n.* <id.+. cf. கோரப்பல். Canine tooth; பல்வரிசையின் முன்னுள்ள கூர்மையான பல். (இங். வை. 9.)

கோல் kōl, *n.* 1. Pencil to paint the eye with collyrium; அஞ்சனக்கோல். (அக. நி.) 2. An unit of linear measure, of 24 feet; 24 அடியுள்ள நீட்டலளவை. (திவ். பெரியாழ். 3, 2, 6.)

கோல்டா kōlṭā, *n.* cf. குறடா. Whip; சிறு சவுக்கு. *Pond.*

கோல்நிறைகூலி kōl-nir̲ai-kūli, *n.* <கோல்+. A tax on articles measured by weight; வரிவகை. (S. I. I. iii, 266.)

கோல்வளை kōl-vaḷai, *n.* <id.+. A variety of bangles; வளைவகை. கோல்வளை, கழல்வளை, வரிவளை என்னுமாபோலே (திவ். பெரியாழ். 3, 4, 8, வ்யா. பக். 618).

கோலபுச்சம் kōlapuccam, *n.* <*kōla-puccha.* A kind of crane; நாரைவகை. (யாழ். அக.)

கோலம் kōlam, *n.* cf. தக்கோலம். Cubeb; தக்கோலம். (மூ. அ.)

கோலவல்லி kōla-valli, *n.* <கோலம்+. A creeper; கொடிவகை. (யாழ். அக.)

கோலிஞ்சி kōl-iñci, *n.* <கோல்+. A kind of ginger; மலையிஞ்சி. *Nāñ.*

கோவஞ்சி kōvañci, *n.* A kind of fish; மீன்வகை. கோவஞ்சிக்கடியன் பொதியன் (பருளை. பள்ளு. 16).

கோவணவர் kōvaṇavar, *n.* Superintendent of a temple; கோயில் விசாரணைக்கர்த்தர். (கோயிலொ. 65.)

கோவரங்கப்பதுமராகம் kōvaraṅka-p-patuma-rākam, *n.* cf. கோவரங்கு. A kind of *patumarākam;* பதுமராகவகை. (யாழ். அக.)

கோவிக்கல் kōvikkal, *n.* <கோவில். Palace; அரண்மனை. (T. A. S. v, 205.)

கோவிக்கீரை kōvi-k-kīrai, *n.* <E. *cabbage* +. cf. கோவிசு. Cabbage; முட்டைக்கோசு. *Pond.*

கோவிடாணம் kō-viṭāṇam, *n.* <கோ+. (Śaiva.) A handpose; முத்திரைவகை. (செந். x, 424.)

கோவிதன் kōvitaṉ, *n.* <*kōvida.* Expert; நன்குணர்ந்தோன். (பகவற். 3, 17.)

கோழி kōḻi, *n.* Indian wild olive; இடலை. *Loc.*

கோழிக்குறும்பான் kōḻi-k-kur̲umpāṉ, *n.* <கோழி+. Common purslane; கோழிக்கீரை. (சித். அக.)

கோழிக்கூட்டுப்பழம் kōḻi-k-kūṭṭu-p-paḻam, *n.* A species of plantain, as from Calicut; வாழைப்பழவகை. (W.)

கோழிப்பாம்பு kōḻi-p-pāmpu, *n.* <கோழி +. Winged serpent; துக்குடசர்ப்பம். (மேரு மந். 479, உரை.)

கோழிவிழுங்கல் kōliviluṅkal, *n.* A coin; நாணயவகை. (பணவிடு. 138.)

கோள் kōḷ, *n.* <கொள்-. *Nakṣatra;* நட்சத்திரம். (அக. நி.)

கோளகசிரிஷம் kōḷaka-cirisam, *n.* <கோளகம்+. Indian absinth; மாசிபத்திரி. (சித். அக.)

கோளம்பம் kōḷampam, *n.* Eclipse; கிரகணம். (சோதிட. அக.)

கோளவியூகம் kōḷa-viyūkam, *n.* <கோளம்+. Octagonal disposition of an army; எட்டுப் பக்கத்தும் முகங்களையுடையதாக அமைக்கும் படைவகுப்பு. (சுக்கிரநீதி, 339.)

கோளை[1] kōḷai, *n.* <*gōlā.* (சுாசார்த்த.) 1. Female companion; தோழி. 2. The river Godavari; கோதாவரி. 3. Realgar; மனோசிலை. 4. Water trough; நீர்ச்சால்.

கோளை[2] kōḷai, *n.* A kind of fish; மீன்வகை. கோளையாளல் (குருகூர்ப். 7).

கோற்கூலி kōr-kūli, *n.* <கோல்+. A tax; வரிவகை. (S. I. I. iv, 30.)

கோன் kōn, *n.* <கோ. (சோதிட. அக.) 1. Sun; சூரியன். 2. Moon; சந்திரன். 3. Jupiter; வியாழன்.

கோனிப்பூடு kōni-p-pūṭu, *n.* <கோனி+. Sunn hemp; சணல். (சித். அக.)

கோனை kōnai, *n.* Sound; ஒலி. (அக. நி.)

கோஷ்டிப்பு kōṣṭippu, *n.* <கோஷ்டம். See கோஷை. கொட்டிய டம்மார கோஷ்டிப்பும் (பணவிடு. 247).

கோஷணை kōṣaṇai, *n.* <*ghōṣaṇā.* See கோஷை. (W.)

கோஷை kōṣai, *n.* <*ghōṣa.* Loud noise; பேரொலி. (W.)

கோஸ் kōs, *n.* prob. E. *course.* (M. Navi. 83.) 1. Spanker; திறவல். 2. Fore-sail or main-sail; திருங்கற்றுசேர் வடசேர் எனப்படும் பாய்கள்.

கோஸ்பறுவான் kōsparuvāṉ, *n.* prob. E. *gaff-spar.* Gaff; கப்பலிற் பாயை இழுத்துக் கட்ட உதவும் அரைப்பறுவான். (M. Navi. 82.)

கௌ

கௌசிகதாரி kaucikatāri, *n.* <*kauśika.* Indian bdellium; குங்கிலியம். (சித். அக.)

கௌசிகம் kaucikam, *n.* (யாழ். அக.) 1. Cowry; சோகி. 2. Snake; பாம்பு. 3. Jupiter; வியாழன்.

கௌசிகாயுதம் kaucikāyutam, *n.* <*kauśikāyudha.* Rainbow; வானவில். (யாழ். அக.)

கௌசிகேயம் kaucikēyam, *n.* White species of rattlewort; வெண்கிலுகிலுப்பை. (சித். அக.)

கௌஞ்சிகன் kauñcikaṉ, *n.* <*gauñjika.* Goldsmith; பொன்வினைஞன். (யாழ். அக.)

கௌணாத்மா kauṇātmā, *n.* <*gauṇa+ātman.* Son, as a secondary self; புத்திரன். (விசாரசந். 305.)

கௌணிகம் kauṇikam, *n.* <*gauṇika.* That which is subordinate or secondary; முக்கியமில்லாதது. (சத். பிர. 3.)

கௌதுகம் kautukam, *n.* <*kautuka. Tāli,* the wedding badge worn by married women; தாலி. (யாழ். அக.)

கௌதூகலம் kautūkalam, *n.* Small balsam pear; மிதிபாகல். (சித். அக.)

கௌபலக்காய் kaupalakkāy, *n.* Chilly; மிளகாய். (சித். அக.)

கௌமுதம் kaumutam, *n.* <*kaumudā.* The month of Kārttikai; கார்த்திகை மாதம். (சோதிட. அக.)

கௌரி kauri, *n.* <*gaurī.* 1. Sacred basil; துளசி. (யாழ். அக.) 2. Earth; பூமி. (யாழ். அக.) 3. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 104.)

கௌரிலலிதம் kauri-lalitam, *n.* <*gauri-lalita.* Yellow orpiment; அரிதாரம். (யாழ். அக.)

கௌரீபுத்திரர் kaurī-puttirar, *n.* <*gaurī+putra.* Balijas, a sub-sect of Telugu Vaiśyas; தெலுங்கு வைசியருள் ஒரு சாதியினர். (M. N.A. D. i, 202.)

கௌரீமனோஹரி kaurī-maṉōhari, *n.* <id.+. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கௌலகம் kaulakam, *n.* Cubeb; வால்மிளகு. (சித். அக.)

கௌவியம் kauviyam, *n.* <*gavya.* Bezoar; கோரோசனை. (மூ. அ.)

கௌன்மிகன் kauṉmikaṉ, *n.* <*gaulmika.* Captain of a unit of 30 foot-soldiers; முப்பது காலாட்களுக்குத் தலைவன். (சுக்கிரநீதி, 73.)

ச

சக்கட்டம் cakkaṭṭam, n. Hair; மயிர். (யாழ். அக.)

சக்கந்தம் cakkantam, n. See சக்கட்டம். (யாழ். அக.)

சக்கரக்குளிகை cakkara-k-kuḷikai, n. <சக்கரம்+. A coin; நாணயவகை. (M. E. R. 1 of 1925.)

சக்கரகபிரஸங்கம் cakkaraka-pirasaṅkam, n. <cakraka+prasaṅga. (Log.) A defect in argume tation. See சக்கிரகம். (நீலகேசி, 391, உரை.)

சக்கரச்சக்கரம் cakkara-c-cakkaram, n. <சக்கரம்+. (Pros.) A variety of metrical composition; சித்திரகவிவகை. (யாப். வி. 497.)

சக்கரதானம் cakkara-tāṉam, n. <id. +. (Mus.) A difficult type of tāṉam; பாடுவதில் கஷ்டமாயுள்ள தானவகை. (கனம் கிருஷ்ணையர், 10.)

சக்கரதானர் cakkara-tāṉar, n. <id.+. (Śaiva.) A manifestation of Śiva; சிவபேதங்களு ளொன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 23.)

சக்கரப்பணம் cakkara-p-paṇam, n. <id. +. A coin; நாணயவகை. (M. E. R. 261 of 1929-30.)

சக்கரப்பாடியர் cakkara-p-pāṭiyar, n. <id.+. Oilmen; செக்கார். சக்கரப்பாடியர் குலமெய்த்தவமாயுள்ளார் (திருத். பு. 50).

சக்கரப்பிரதர் cakkara-p-piratar, n. <id. +prada. See சக்கரதானர். (சிவக். பிரபங். பக். 249.)

சக்கரவாகாதனம் cakkaravākātaṉam, n. <சக்கரவாகம்+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 107, உரை.)

சக்கரவாளம் cakkaravāḷam, n. <cakravāla. Boundary, limit; எல்லை. (யாழ். அக.)

சக்கரவேதனை cakkara-vētaṉai, n.<cakra +. A mode of torture; ஒருவகைச் சித்திரவதை. *Pond.*

சக்கராக்கினை cakkarākkiṉai, n.<śakra+. cf. சக்கிராக்கினை. (W.) 1. Arbitrary punishment inflicted by a despot; நியாயவிரோதமான தண்டனை. 2. The decree of a monarch; அரசனுணை.

சக்கராதிபம் cakkarātipam, n. <cakra+adhipa. Paramount power; சக்கரவர்த்தி யதிகாரம். புவிச்சக்கராதிபம் உடற்சோதரர்தாங் கொண்டிருப்பவும் (பாரதி. பாஞ்சாலி. i, 74).

சக்களி-தல் cakkaḷi-, 4 v. intr. To be fermented; to grow stale; சளிதல். (யாழ். அக.)

சக்கியன் cakkiyaṉ, n. <sakhya. Friend; தோழன். (R.)

சக்கிரகம் cakkirakam, n. <cakraka. (Log.) Arguing in a vicious circle; வளைய வளையப் பேசுகை. *Pond.*

சக்கிராடி cakkirāṭi, n. <cakrāṭa. (யாழ். அக.) 1. Deceiver; எத்தன். 2. Snake-charmer; பாம்பாட்டி.

சக்கிராதம் cakkirātam, n. Pig; பன்றி. (மூ. அ.)

சக்கிரிதம் cakkiritam, n. prob. cakrita. A pace of horses; குதிரைகதிவகை. (சுக்கிரநீதி, 72.)

சக்குப்பிடி-த்தல் cakku-p-piṭi-, v. intr. <T. saggu+. To grow mouldy; பூஞ்சாளம் பூத்தல். *Loc.*

சக்குப்பூ-த்தல் cakku-p-pū-, v. intr. <id. +. See சக்குப்பிடி-. (யாழ். அக.)

சகசம் cakacam, n.<saha-ja. (Phil.) Concomitant; கூடவுண்டானது. (சி. சி. 3, 4, சிவாக்.)

சகசிரதாரை cakacira-tārai, n. <sahasra +. 1. A garland of pearls; முத்துமாலைவகை. (தக்கயாகப். 106, உரை.) 2. A seive-like vessel used in abhiṣēka; அபிஷேகத்தில் உபயோகிக்கப் படுந் துளைகளுள்ள தட்டு. *Loc.*

சகடபாதை cakaṭa-pātai, n. <śakaṭa+. Highway; road for wheeled traffic; பெரும் பாதை. (W.)

சகதேவி caka-tēvi, n. <சகம்+. Lakṣmī; இலக்குமி. (யாழ். அக.)

சகபாடி cakapāṭi, n.<saha-pāṭhin. (Mus.) Accompanist; கூடப்பாடுவோன். (யாழ். அக.)

சகமாதா caka-mātā, n. <சகம்+. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சகமுனியா cakamuṉiyā, n. Gum scammony; மாமுதா என்னுங் கொடி. (M. M.)

சகராதனம் cakarātaṉam, n. prob. sakara +. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

சகரூபன் caka-rūpaṉ, n. <saha+rūpa. Brother; சகோதரன். (யாழ். அக.)

சகலாத்துக்கீரை cakalāttu-k-kīrai, n. prob. சகலாத்து+. Sorrel; கீரைவகை. (W.)

சகவாசி caka-vāci, n.<saha-vāsin. Associate; நண்பன். *Pond.*

சகளதத்துவம் cakaḷa-tattuvam, *n.* <*sakala*+. (Śaiva.) The function of God in which the principle of energy predominates over that of wisdom; கிரியைமிகுந்து ஞானங் குறைந்த ஈச்சுரதத்துவம். (சி. சி. 1, 65, ஞானப்.)

சகளபஞ்சகம் cakaḷa-pañcakam, *n.* <id. +. The five categories, viz., drink, fish, flesh, pose and coition, required in Sakaḷa worship of *makāviratar;* மகாவிரதருடைய சகளவுபாசனைக் குரிய மது மச்சிய மாங்கிச முத்திரை இணைவிழைச்சு என்பன. (தக்கயாகப். 51, உரை.)

சகாசீரகம் cakācīrakam, *n.* Caraway; சீமைச்சீரகம். (இந்துபா. 96.)

சகு caku, *n.* <Malay. *sagu*. Sago; சவ் வரிசி. (மூ. அ.)

சகுலகண்டம் cakula-kaṇṭam, *n.* <*śakula* +. A kind of fish; பொன்வண்ணமீன். *Pond.*

சங்கடை caṅkaṭai, *n.* prob. *saṅghaṭṭa*. The last of the three stages of a man's life; ஆயுட்காலத்தின் மூன்று பகுதிகளுள் கடைப்பகுதி. (W.)

சங்கதூதி caṅka-tūti, *n.* <*saṅga-dūtī*. Procuress; கூட்டிக்கொடுப்பவள். (யாழ். அக.)

சங்கதை caṅkatai, *n.* <*saṅgati*. News; சங்கதி. *Loc.*

சங்கபதம் caṅka-patam, *n.* <*śaṅkha*+. A treatise on Hindu law; தருமநூல்களு ளொன்று. (W.)

சங்கமலிங்கம் caṅkama-liṅkam, *n.* <*jaṅgama*+. Person belonging to the Jaṅgama sect; சங்கமவகுப்பினன். (W.)

சங்கரப்பாடியர் caṅkarappāṭiyar, *n.* See சக்கரப்பாடியர். (S. I. I. v, 144.)

சங்கரர் caṅkarar, *n.* <*saṃhāra*. Warriors; போர்வீரர். (யாழ். அக.)

சங்கருடம் caṅkaruṭam, *n.* <*saṅkarṣa*. Opposition; எதிரிடை. (யாழ். அக.)

சங்கலனம் caṅkalaṉam, *n.* <*saṅkalana*. Collecting; தொகுக்கை. நீர்வேலிச் சங்கரபண்டித ரவர்களாற் சங்கலனஞ் செய்யப்பட்டு . . . பதிப்பிக் கப்பட்டது (தாதுமாலை, முகப்புப்பக்கம்).

சங்கலோஷ்டம் caṅkalōṣṭam, *n.* prob. *saṅga*. (W.) 1. Sexual connection; புணர்ச்சி. 2. Illicit intercourse; கள்ளப்புணர்ச்சி.

சங்கற்பசிராத்தம் caṅkaṟpa-cirāttam, *n.* <சங்கற்பம்+. The *śrādda* performed without sacrificial oblations; அக்கினிகாரியமின்றிச் செய்யுஞ் சிராத்தம். *Brāh.*

சங்காதம் caṅkātam, *n.* <*saṅghāta*. A thing that always goes along with another thing; concomitant; கூடவருவது. வங்காரமு . . . மடந்தையரும் சங்காதமோ (கந்தரலங். 59).

சங்காராதனம் caṅkārātaṉam, *n.* <*saṃhāra*+. (Śaiva.) A yogic posture; யோகாசன வகை. (தத்துவப். 108, உரை.)

சங்கிதாமந்திரம் caṅkitā-mantiram, *n.* <*saṃhitā-mantra*. (Śaiva.) A group of mantras; மந்திரவகை. (தத்துவப். 70, உரை.)

சங்கிராமம் caṅkirāmam, *n.* <*saṅkrāma*. Hill path; மலைமேல் வழி. (யாழ். அக.)

சங்கிலிகரணம் caṅkili-karaṇam, *n.* <*saṅkalīkaraṇa*. Unnatural coition; இயற் கைக்கு மாறான புணர்ச்சி. (யாழ். அக.)

சங்கீதி caṅkīti, *n.* <*saṅgīti*. Conversation; சம்பாஷணை. (யாழ். அக.)

சங்குநகம் caṅku-nakam, *n.* *Nākuṇam*, an aromatic substance; நாகுணம் என்னும் வாச னைப் பண்டம். (நாகார்த்த. 435, உரை.)

சங்குப்பட்டினி caṅku-p-paṭṭiṉi, *n.* <சங்கு+. A kind of fast; ஒருவகை நோன்பு. *Loc.*

சங்குலிகயுத்தம் caṅkulika-yuttam, *n.* <*saṅkulika*+. Hand-to-hand fight; தொந்த யுத்தம். (வேதாரணி. பக். 124, குறிப்.)

சங்குவிரியன் caṅku-viriyaṉ, *n.* <சங்கு +. A variety of snake; பாம்புவகை. *Loc.*

சங்கைப்பாடு caṅkai-p-pāṭu, *n.* <சங்கை +படு-. Doubt, uncertainty; ஐயப்பாடு. எங்கள் குடியிருப்புச் சங்கைப்பா டென்னத்தகாது (தெய்வச். விறலிவிடு. 233).

சங்கையீனம் caṅkai-y-īṉam, *n.* <id +. Indecency, as in talk or conversation; அசப்பியம். அவன் சங்கையீனமாகப் பேசுகிறான். (W.)

சச்சிதானந்தவெளி caccitāṉantaveḷi, *n.* Rock-salt; கல்லுப்பு. (மூ. அ.)

சச்சை[1] caccai, *n.* 1. cf. சொச்சை. (அக. நி.) Liquid of thick consistency, as sandal paste; சேறிதழம்பு. 2. Jacket, coat; சட்டை.

சச்சை[2] caccai, *n.* cf. சர்ச்சரவு. Quarrel; சண்டை. சச்சைவருமுன்னே நடவென்றான் (தெய் வச். விறலிவிடு. 471).

சசவாதம் caca-vātam, *n.* <*śaśa*+. Epilepsy; முயல்வாதம். (மூ. அ.)

சஞ்சலம் cañcalam, *n.* <*cañcala.* (யாழ். அக.) 1. Wind; காற்று. 2. Lightning; மின்னல்.

சஞ்சலனம் cañcalaṉam, *n.* <*cañcalana.* Trepidation; அச்சத்தால் உண்டாம் நடுக்கம். (யாழ். அக.)

சஞ்சலைசீவகன் cañcalai-cīvakaṉ, *n.* perh. *cañcalā*+. Topaz; புஷ்பராகம். (யாழ். அக.)

சஞ்சனம் cañcaṉam, *n.* <*jhañjhana.* Tinkling of ornaments; அணிகளாலெழு மொலி. (யாழ். அக.)

சஞ்சாயகம் cañcāyakam, *n.* Bee; வண்டு. *சஞ்சாயகமங்குச் சார்ந்தால்* (கச்சி. வண்டுவிடு. 396).

சஞ்சாரம் cañcāram, *n.* <*sañcāra.* (யாழ். அக.) 1. Contagious disease; தொற்று வியாதி. 2. *Nāgaratna,* a fabulous gem; நாக ரத்தினம்.

சஞ்சாரிகன் cañcārikaṉ, *n.* <*sañcārika.* Ambassador, messenger; தூதன். (யாழ். அக.)

சஞ்சாவாதம் cañcāvātam, *n.* <*jhañjhā* +*vāta.* Wind and rain, stormy weather; காற்றும் மழையும். (யாழ். அக.)

சஞ்சி cañci, *n.* [T. *sañci.*] Bag, pouch; பை. *Loc.*

சஞ்சீவராயர் cañcīva-rāyar, *n.* <*sañjīva* +. Hanumāṉ; அனுமான். (M. E. R. 95 of 1923.)

பசுந்தாளெரு pacun-tāḷ-eru, *n.* <id.+ தாள்+. Green leaves, used as manure; தழையுரம். *Loc.*

பசுப்பு pacuppu, *n.* <பசு-. 1. Greenness; பசுமை. ஆற்றங்கரைப் பசுத்தா னக்கரையோ டிக்கரை யாய்த் தோற்றும் பசுப்பைத் தொடர்வுறுமே (பாடு. 29, நெஞ்சிற்.). 2. [T. *paśupu*] Greenish yellow; பசுமைகலந்த மஞ்சள் நிறம். (நாநார்த்த. 674.)

பசுபாகநியாயம் pacu-pāka-niyāyam, *n.* <பசு+. (Log.) A *nyāya;* நியாயவகை. (அபி. சிந். 613.)

பசுவன் pacuvaṉ, *n.* cf. *basava.* The boy in charge of the bull-worship in a *kōlāṭṭam* festival; கோலாட்டக் கொண்டாட்டத்திலே விருஷபபூஜை செய்யும் மாணி. *Loc.*

பசை pacai, *n.* A kind of lubricant for carts; உசவு. *Tj.*

பசைப்படம் pacai-p-paṭam, *n.* <பசை+. Cloth smeared with paste and prepared for painting; கஞ்சிபூசிப் படமெழுதத் தயாரித்த துணி. (பஞ்சதசப்பிர. பக். 2.)

பசைபிடி pacai-piṭi, *n.* <id.+. Sliminess, slipperiness; வழுவழுப்பு. *Loc.*

பசைமண் pacai-maṇ, *n.* <id.+. Clay; களிமண். *Pond.*

பஞ்சகண்டி pañca-kaṇṭi, *n.* <*pañcan*+. A kind of necklace; கழுத்தணிவகை. (T. A. S. ii, 68.)

பஞ்சகம்மியர் pañca-kammiyar, *n.* <id. +. The five castes of artisans; பஞ்சகம்மாளர். (சிற்பரத். முகவுரை, பக். 10.)

பஞ்சகிருத்தியம் pañca-kiruttiyam, *n.* <id.+. The five occupations, viz., agriculture, trade, weaving, writing and fighting; உழுதுபயிர்செய்தல் பண்டங்களைநிறுத்துவிற்றல் நூல் நூற்றல் எழுதுதல் படைகொண்டுகாரியம்பயிலுதல் ஆகிய ஐந்து தொழில்கள்.

பஞ்சசரம் pañca-caram, *n.* <id.+*sara*. A necklace of five strings; ஐந்து சரமுடைய தாழ்வடம். த்ரிஸரம் பஞ்சஸரம் ஸப்தஸரம் என்றாற் போலே சொல்லுகிற முத்து வடங்களையும் (திவ். அமலனாதி. 10, வ்யா. பக். 104).

பஞ்சசரன் pañca-caraṉ, *n.* <id.+*śara*. The God of Love; மன்மதன். கன்னல்விற் பஞ்சசர னுதியோர் (சிவக். பிரபந். பக். 247).

பஞ்சசன்மவாதனம் pañca-caṉma-v-ātaṉam, *n.* <id.+. A yōgic posture; யோகாசன வகை. பஞ்சசன்ம வாதனத்திடைப் பண்பொடமிருந்து (விநாயகபு. 80, 716).

பஞ்சசீலம் pañca-cīlam, *n.* <id.+. (Buddh.) The five rules of conduct, viz., *ahimcai, sattiyam, astēyam, piramacariyam, asaṅkirakam;* அஹிம்சை ஸத்தியம் அஸ்தேயம் பிரமசரியம் அஸங்கிரசம் ஆகிய ஐவகைப்பட்ட பௌத்த வொழுக்கம். (மணி. 21, 231, கீழ்க்குறிப்பு.)

பஞ்சட்டைக்கம்பு pañcaṭṭai-k-kampu, *n.* prob. பஞ்சு+அட்டை+. An instrument used in spinning; நூல் நூற்பதற்கேனும் பஞ்சு வேட்டு வதற்கேனும் உபயோகப்படுத்தும் ஒரு கருவி. *Nāñ.*

பஞ்சணகுலம் pañcaṇa-kulam, *n.* prob. *pañcan*+. The caste of Viśvakarmas; விசுவகர்ம குலம். (மங்களே. சிறப்புப்.)

பஞ்சதிரவியம் pañca-tiraviyam, *n.* <id.+. The five articles used in bathing an idol, viz., *mañcaḷ, mā, nellimuḷḷi, tiraviya-p-paṭṭai,* etc.; மஞ்சள் மா நெல்லிமுள்ளி திரவியப் பட்டை முதலிய அபிஷேக பண்டங்கள். (S. I. I. v, 86.)

பஞ்சநாதம் pañca-nātam, *n.* <id.+. The five kinds of musical instruments. See பஞ்சமாசத்தம். (பெரியபு. அதிபத். 19.)

பஞ்சநிம்பம் pañca-nimpam, *n.* <id.+. The five parts of the margosa; வேம்பினது ஐந்துறுப்புக்கள். (R.)

பஞ்சபட்சிபாஷாணம் pañca-paṭci-pāṣāṇam, *n.* prob. id.+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (W.)

பஞ்சபத்திரம் pañca-pattiram, *n.* <id. +. Offerings of food-stuffs, made along with cooked rice, to a deity; சுவாமிக்குப் படைத்தற்குரிய நைவேத்தியவகை. (S. I. I. iv, 141.)

பஞ்சபரிவர்த்தனம் pañca-parivarttaṉam, *n.* <id.+*parivarttana*. (Jaina.) The five conditions of one's activities, viz., *tiraviyam, kṣēttiram, kālam, pavam, pāvam;* உயிர் வியாபரிப்பதற்குரிய திரவியம் க்ஷேத்திரம் காலம் பவம் பாவம் ஆகிய ஐவகைப்பட்ட நிலைமைகள். (நீல கேசி, 1, உரை.)

பஞ்சபாண்டவர்முல்லை pañca-pāṇṭavar-mullai, *n.* <id.+. A shrub; செடிவகை. (பதார்த். ii, 116.)

பஞ்சமகர் pañca-makar, *n.* <id.+Persn. *muhra.* A way of ending a game in chess, when the total of pieces on both sides is five; சதுரங்க ஆட்டத்தில் இரு பக்கங்களின் காய்களுஞ் சேர்ந்து ஐந்தாவதால் ஆட்டம் முடிவுறுகை.

பஞ்சமகாயக்கியம் pañca-makā-yakkiyam, *n.* <id.+*mahā-yajña.* (Śaiva.) The five sacrifices, viz., *kaṉmayakkiyam, tapōyakkiyam, capayakkiyam, tiyāṉayakkiyam, ñāṉayakkiyam;* கன்மயக்கியம் தபோயக்கியம் சபயக்கியம் தியான யக்கியம் ஞானயக்கியம் என்ற ஐவகை யக்கியங்கள். (சி. சி. 8, 23, சிவாக்.)

பஞ்சமகாவிரதம் pañca-makā-viratam, *n.* <id.+*mahā-vrata.* (Jaina.) The five great vows of ascetics, viz., non-killing, truth-speaking, non-stealing, celibacy, and not taking gifts; அஹிம்சை சத்தியம் அஸ்தேயம் பிரம்மசரியம் அபரிக்கிரகம் என்ற துறவிகளுக்குரிய ஐம்பெரும் விரதங்கள். (மேருமந். முக. xv.)

பஞ்சமசுருதி pañcama-curuti, *n.* <*pañcama*+. (Mus.) Fifth note of the gamut; சப்தசுரங்களுள் ஐந்தாவது. (பரத.)

பஞ்சமணம் pañca-maṇam, *n.* <*pañcan* +. The five aromatics; பஞ்சவாசம். (பொதி. நி. 30.)

பஞ்சமவேதம் pañcama-vētam, *n.* <*pañcama*+. The Mahābhārata, considered as the fifth Vēda; ஐந்தாம் வேதமாகக் கருதப்படும் மகா

பாரதம். *பஞ்சமவேதமான மஹாபாரதத்தில் எழுதக் கூடாதிறே* (*திவ். பெரியதி.* 1, 1, *வ்யா. பக்.* 48).

பஞ்சமாசத்தம் pañca-mā-cattam, *n.* <*pañcan*+. The five drums, viz., *ceṇṭai*, *timilai*, *cēkaṇṭi*, *kai-t-tāḷam* and *kāḷam* or *tattaḷi*, *mattaḷi*, *karaṭikai*, *tāḷam*, *kākaḷam*; செண்டை திமிலை சேகண்டி கைத்தாளம் காளம் என்றும் தத்தளி மத்தளி கரடிகை தாளம் காகளம் என்றும் இருவித மாகச் சொல்லும் ஐவகைப் பறை. (T. A. S. v, 172.)

பஞ்சமுகம் pañca-mukam, *n.* <id.+. A kind of surgical instrument; சத்திரவைத்தியத்தி லுபயோகிக்கும் ஆயுதவகை. (*தஞ். சர.* iii, 40.)

பஞ்சமுத்திரை pañca-muttirai, *n.* <id.+. An ornament worn on the foot, consisting of pieces shaped like the five weapons of Viṣṇu; பஞ்சாயுத வடிவங்களாகச் செய்து சேர்த்த காலணி. (*சீகாழிக்.* 411.)

பஞ்சரட்டை pañcaraṭṭai, *n.* A kind of bird; பறவைவகை. (*தஞ். சர.* iii, 160.)

பஞ்சலத்தார் pañcalattār, *n.* perh. *pañcan.* The five artisan communities; பஞ்ச கம்மாளர். (I. M. P. Cg. 692.)

பஞ்சவர் pañcavar, *n.* <id. (Jaina.) The five groups of heavenly bodies, viz., *cantiraṉ*, *cūriyaṉ*, 7 *kōḷ*, 27 *nakṣatras* and the other stars; சந்திரன் சூரியன் ஏழுகோள்கள் இருபத்தேழு நட்சத்திரங்கள் ஏனைய நட்சத்திரங்கள் ஆகிய ஐவகைச் சோதிகள். (*தக்கயாகப். பக்.* 282.)

பஞ்சவாரம் pañca-vāram, *n.* <id.+. Land revenue due to government and payable in kind, being one-fifth of the tenant's share of the produce; கண்டுமுதலிற் குடியானவன் பங்கில் ஐந்திலொரு பாகமாகிய அரசிறை. (S. I. I. iii, 380.)

பஞ்சாங்கம் pañcāṅkam, *n.* <id.+. (Jaina.) The five elements constituting the sin of killing; கொலைப்பாவத்துக்குரிய ஐந்து உறுப்புக்கள். (*நீலகேசி*, 541, *உரை.*)

பஞ்சாணுவிரதம் pañcāṇu-viratam, *n.* <id.+ *அணு*+. (Jaina.) The five vows practised by laymen; சைனருள் இல்வாழ்வான் அனுஷ்டிக்கும் ஐந்து விரதங்கள். (*மேருமந். கதை.* 24.)

பஞ்சாரத்திருவிளக்கு pañcāra-t-tiru-viḷakku, *n.* perh. *பஞ்சரம்*+. A kind of light; விளக்குவகை. (S. I. I. v, 215.)

பஞ்சாலவச்சு pañcāla-v-accu, *n.* A coin; நாணயவகை. (I. M. P. Cm. 359.)

பஞ்சான் pañcāṉ, *n.* A kind of fish; மீன்வகை. *கோளையாளை லொஞ்சான் பஞ்சான்* (*குருகூர்ப்.* 7).

பஞ்சிகரன் pañcikaraṉ, *n.* <*pañjikāra.* One who prepares almanacs; பஞ்சாங்கங் கணிப்போன். *Pond.*

பஞ்சிகை pañcikai, *n.* perh. *pañcikā.* Journal; பத்திரிகை. *Loc.*

பஞ்சீகிருதம் pañcīkirutam, *n.* <*pañcī-kṛta.* That which is effected by *pañcīkaraṇam*; பஞ்சீகரணப்பட்டது. *பஞ்சபூதங்க ளொன்றோ டொன்று பஞ்சீகிருதமாய்க் கலந்து* (*வேதாந்தசா.* 45).

பஞ்சுபடு-தல் pañcu-paṭu-, *v. intr.* <*பஞ்சு*+. To become light or useless; to be valueless; எளிமையாதல். *பஞ்சபடு சொல்லனிவன்* (*தாயு. தேசோ.* 5).

பஞ்சைப்பனாதி pañcai-p-paṉāti, *n.* <*பஞ்சை*+. Useless person; vagabond; அனாதை. (*மதி. க.* ii, 61.)

பட்சம் paṭcam, *n.* <*pakṣa.* Leaning; சார்பு. (*சைவப்பிரகாசன.* 16.)

பட்டகம் paṭṭakam, *n.* <*paṭṭaka.* A piece of cloth; துணி. *பட்டகசாலையுள் பட்டகத்தை விரித்துக்கொண்டிருந்தனள்* (*ஸ்ரீபுராணம்.* Ms.).

பட்டசாலியன் paṭṭacāliyaṉ, *n.* cf. *பட்டாலியன்.* A class of weavers; நெசவுத் தொழிலாளிகளுள் ஒருவகையினன். (S. I. I. iii, 265.)

பட்டடைச்சட்டம் paṭṭaṭai-c-caṭṭam, *n.* <*பட்டடை*+. Sleeper; தண்டவாளம் முதலிய வற்றிற்கு அடியிலிடுங் கனத்த மரத்துண்டு. (C. E. M.)

பட்டடைப்பலகை paṭṭaṭai-p-palakai, *n.* <id.+. Wooden seat in a shop, for the shop-keeper; கடையில் வியாபாரிகள் உட்காரும் பலகை. *Loc.*

பட்டடைப்பாடு paṭṭaṭai-p-pāṭu, *n.* <id.+. Shortage in stored paddy, due to shrinkage, waste, etc.; பட்டடையிற் காணும் நெற் குறைவு. *சம்பாவிற் பட்டடைப்பா டென்றெழுதி* (*சரவண. பணவிடு.* 137).

பட்டடைவரி paṭṭaṭai-vari, *n.* perh. id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. v, 95.)

பட்டடைவாய்ச்சீட்டு paṭṭaṭai-vāy-c-cīṭṭu, *n.* <id.+. Ola memorandum stuck in a heap of harvested paddy, showing the quantity stored; வாயோலை. *பட்டடைவாய்ச்சீட்டெழுதுப்பார்* (*சரவண. பணவிடு.* 113).

பட்டப்பாழ் paṭṭa-p-pāḻ, *n.* prob. பட்டம் +. Waste land; சாகுபடியற்ற நிலம். (S. I. I. iv, 289.)

பட்டவஸ்திரம் paṭṭa-vastiram, *n.* <id. +. Royal robe; அரசர்க்குரிய உடை. (W.)

பட்டவாளிமரம் paṭṭavāḷi-maram, *n.* <படு-+. Dead tree; பட்டமரம். *Loc.*

பட்டன் paṭṭaṉ, *n.* perh. *bhaṭṭa.* Truthful man; சத்தியவாதி. (திவ். பெரியாழ். 1, 8, 11, வ்யா. பக். 182.)

பட்டாரிகை paṭṭārikai, *n.* <*Bhaṭṭārikā.* Durgā; துர்க்கை. (S. I. I. iii, 136, n.)

பட்டாவளப்பட்டு paṭṭāvaḷa-p-paṭṭu, *n.* A kind of silk; பட்டுவகை. (S. I. I. v, 103.)

பட்டிக்காடி paṭṭikkāṭi, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 67.)

பட்டிக்கால் paṭṭikkāl, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 67.)

பட்டிகைக்காணம் paṭṭikai-k-kāṇam, *n.* <பட்டிகை+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 352.)

பட்டிடுவான் paṭṭiṭuvāṉ, *n.* <படு-+இடு-. A term of abuse, meaning 'damned fellow'; ஒருவகை மொழி. இத்தனையும் வேண்டும் பட்டிடுவானுக்கு (ஈடு, 1, 2, ப்ர.).

பட்டித்தண்டம் paṭṭi-t-taṇṭam, *n.* <பட்டி +. A tax; வரிவகை. (M. E. R. 139 of 1912.)

பட்டிதின்(னு)-தல் paṭṭi-tiṉ-, *v. intr.* <id. +. See பட்டிபுகு-. பட்டிதின்று திரியுங் கன்றுபோலே (திவ். பெரியாழ். 1, 6, 6, வ்யா. பக். 123).

பட்டிநோன்பு paṭṭi-nōṉpu, *n.* <id. +. The festival of ceremonial boiling of rice on the *māṭṭu-p-poṅkal* day; மாட்டுப்பொங்கல். (எங்களூர், 89.)

பட்டிப்பொன் paṭṭi-p-poṉ, *n.* <id. +. A money tax; காசாயவகை. (S. I. I. iv, 195.)

பட்டிபாப் paṭṭi-pāp, *n.* <id. +. Sundry cesses; சில்லறை வரிகள். (R. T.)

பட்டிபுகு-தல் paṭṭi-puku-, *v. intr.* <id. +. To graze stealthily; to go astray; வேற்றுப் புலத்தில் மேய்தல். அயோக்ய விஷயாந்தரங்களில் பட்டிபுக்க வாஸனைகளை மாற்றுவிக்கவும் (ரஹஸ்ய. 507).

பட்டிமாறித்திரி-தல் paṭṭi-māṟi-t-tiri-, *v. intr.* <id. + மாறு-+. To go from place to place; ஊருராய்த் திரிதல். பாரமிறுகச் சுமந்து பட்டி மாறித்திரிந்த சீரும் (பஞ்ச. திருமுக. 1331).

பட்டிறைப்படு-தல் paṭṭiṟai-p-paṭu-, *v. intr.* perh. படு-+இறை+. To be in arrears of tax; அரசிறை செலுத்தப்படாது போதல். எங்களூர் பட்டிறைப்பட்டமையால் (S. I. I. vii, 40).

பட்டினக்கரையார் paṭṭiṉa-k-karaiyār, *n.* <பட்டினம்+. A sub-division of the Paḷḷar caste; பள்ளருள் ஒருவகையினர். *Tp.*

பட்டுக்குட்டை paṭṭu-k-kuṭṭai, *n.* <பட்டு +. Silk cloth, worn over the shoulder; பட்டு அங்கவஸ்திரம். *Pond.*

பட்டுத்துத்து paṭṭu-t-tuttu, *n.* <id. +. Cappadine, a sort of silk flock or waste; பட்டுப் பூச்சியின் கூட்டிலிருந்து பட்டுநூலை யெடுத்தபின் எஞ்சியிருக்குங் கழிவுபட்டு. *Pond.*

பட்டுரோஜா paṭṭu-rōjā, *n.* <id. +. A variety of red rose; சிவப்புநிறமுள்ள ரோஜாவகை. *Loc.*

பட்டுவலை pattu-valai, *n.* <id. +. A kind of net; வலைவகை. *Pond.*

பட்டுவாழை paṭṭu-vāḻai, *n.* <id. +. A species of big red plantain; வாழைவகை. *Loc.*

பட்டுறுமாலை paṭṭuṟumālai, *n.* <id. + உறுமால். See பட்டுக்குட்டை. *Pond.*

பட்டைக்கருப்பட்டி paṭṭai-k-karuppaṭṭi, *n.* <பட்டை+. A kind of jaggery; கருப்புக் கட்டிவகை. *Nāñ.*

பட்டைக்கிண்ணம் paṭṭai-k-kiṇṇam, *n.* <id. +. A kind of vessel; பாத்திரவகை. *Loc.*

பட்டைச்சட்டம் paṭṭai-c-caṭṭam, *n.* <id. +. Reeper; கூரையைத் தாங்குவதற்குக் கைமரத்தின்மேல் நீட்டுப்போக்கில்வைக்கும் மரச்சட்டம். *Madr.*

பட்டைதீர்-த்தல் paṭṭai-tīr-, *v. tr.* <id. +. To cut the facets, as of diamonds; வயிரம் முதலியவற்றைச் செதுக்கி வேலைசெய்தல். *Loc.*

பட்டைப்பலகை paṭṭai-p-palakai, *n.* <id. +. Mantel-piece; சுவரில் தொங்கவிடுந் தட்டுப்பலகை. *Madr.*

பட்டைப்பிதுக்கம் paṭṭai-p-pitukkam, *n.* <id. +. Entablature; தூணின் தலைமேற்பகுதி. *Pond.*

பட்டைப்புழு paṭṭai-p-puḻu, *n.* <id. +. Tapeworm; புழுவகை. (M. L.)

பட்டைப்பேன் paṭṭai-p-pēṉ, *n.* <id. +. An insect; பூச்சிவகை. (அபி. சிந்.)

பட்டோலைக்காசு paṭṭōlai-k-kācu, *n.* <பட்டோலை+. An ancient tax, in cash; காசாய வகை. (S. I. I. i, 89.)

படக்கு paṭakku, *n.* perh. படக்கெனல். Fire-works, crackers; பட்டாசு. *Nāñ.*

படகம் paṭakam, *n.* cf. பிடாகம். A measure of land; நிலவளவு. (I. M. P. Cg. 193, ft.)

படப்பாதி paṭa-p-pāti, *n.* perh. படு-+பாதி. Joining, in carpentry; மரப்பலகைகளைப் பொருத்துந் தச்சுவேலைவகை. (W.)

படர் paṭar, *n.* <படர்-. Cruelty; தறுகண்மை. படரெருமைப் பகட்டின்மிசை (தக்கயாகப். 463).

படலிகை paṭalikai, *n.* A measure of quantity; ஓர் அளவு. வெற்றிலை படலிகையால் ஒரு பற்று (S. I. I. iii, 10).

படவடி-த்தல் paṭa-v-aṭi-, *v. tr.* <படு-+. To vanquish; to lay low; தோற்பித்தல். வெறும் புறத்திலே படவடிக்கவல்ல கையிலே. . . . பாஞ்சஜந்யம் . . . திருவாழி இவற்றை யுடையராயிருக்கை (திவ். அமலனாதி. 7, வ்யா. பக். 83).

படாங்கழி paṭāṅ-kaḻi, *n.* <படாம்+. A kind of tax; வரிவகை. (S. I. I. ii, 352.)

படாம் paṭām, *n.* <படம். A piece of cloth, used as headdress; பரிவட்டம். படாம் பீடம் படுத்தே (ஞானதீக்ஷை. 3).

படி[1]-தல் paṭi-, *4 v. intr.* To be fit or suited; பொருந்துதல். வளை கைக்குப் படிந்திருக்கிறது.

படி[2] paṭi, *n.* A measure of *34 palam;* 34 பலங்கொண்ட ஒரு நிறை. (G. Tn. D. i, 238.)

படிகளை-தல் paṭi-kaḷai-, *v. tr.* <படி+. To undress, as an idol; விக்கிரகத்தின் அலங்காரத்தை நீக்குதல். *Loc.*

படிச்சட்டம் paṭi-c-caṭṭam, *n.* <id.+. Palanquin of an idol; விக்கிரகங்களை எடுத்துச் செல்லுங் கோயிற்சிவிகைவகை. (சிவக். பிரபந். பக். 237.)

படித்தளம் paṭi-t-taḷam, *n.* <id.+. Step of a staircase; படிக்கட்டு. ஓராம் படித்தளமாம் (கட்டபொம்மு. பக். 58).

படிப்பினை paṭippiṉai, *n.* <படி-. *Mod.* 1. Lesson; புத்திமதி. 2. Moral; நீதி.

படிமா paṭimā, *n.* <Pkt. *paḍimā* <*pratimā*. Example; illustration; திருட்டாந்தம். நம்மோடு ஸஜாதீயர்பக்கல் பரிமாறினதன்றோ நமக்குப் படிமா (ஈடு, 10, 4, 5).

படியளா-த்தல் paṭi-y-aḷa-, *v. intr.* <படி+. To supply articles of food for maintenance; ஜீவனத்திற்குரியனவற்றை யளித்தல். பல்லுயிருக்கெல்லாம் படியளக்கும் வேலவரே (சதிரைமலைப்பேரின்பக்காதல், 13).

படிவிஞ்சனம் paṭi-viñcaṉam, *n.* <படி+வியஞ்சனம். Articles other than rice for the preparation of food, as in a temple; நித்தியப் படித்தரமான வியஞ்சனப்பொருள். தேங்காய் பழம் உள்ளிட்ட படிவிஞ்சனங்களுக்கும் (S. I. I. iv, 129).

படிவிடை paṭi-v-iṭai, *n.* <படி-+. Snare; கண்ணி. *Pond.*

படிவு paṭivu, *n.* <id. See படிவிடை. *Pond.*

படிற்றொழுக்கம் paṭiṟṟoḻukkam, *n.* <படிறு+. Hypocritical conduct; போலி ஒழுக்கம். வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் (குறள், 221).

படுகால் paṭu-kāl, *n.* <படு-+. 1. Step; படி. செஞ்சுட் டிட்டிகைச் சுதைச்சுவர்ப் படுகால் (பெருங். உஞ்சைக். 40, 316). 2. *Mēkalai*, a girdle; மேகலை. ஏணிப் படுகால் (பரிபா. 10, 11).

படுகொலைக்காரன் paṭukolai-k-kāraṉ, *n.* <படுகொலை+. Cold-blooded murderer; assassin; கொடுங்கொலை செய்வோன். நீர்மை கேடனை அப் படுகொலைக்காரனால் (ஈடு, 10, 3, 1).

படுதண்டு paṭu-taṇṭu, *n.* <படு-+. Poles for carrying temple vehicles; திருவாதண்டு. *Loc.*

படுநிலம் paṭu-nilam, *n.* <id.+. Barren tract of land; விளையா நிலம். (R. T.)

படுபாதி paṭu-pāti, *n.* <id.+. Just half; சரிபாதி. அறுப்பம் புல்லாய் படுபாதிபோக (சரவண. பணவிடு. 144).

படுமுடை paṭu-muṭai, *n.* <id.+. Flesh of animals which died a natural death; தானே இறந்துபட்ட பிராணிகளின் ஊன். தகவுடையோருண்ணாப் படுமுடை தின்பார்க்கு (நீலகேசி, 332, உரை).

படுவாரி paṭu-vāri, *n.* <id.+. Spontaneous growth springing up from stray grains in the field after harvest; அறுவடையான பின் உதிர்ந்த நெல்லினின்றும் தானே உண்டாகும் பயிர். (R. T.)

படைநாயகம் paṭai-nāyakam, *n.* <படை+. Command of the army; சேனைத்தலைமை. (S. I. I. vii, 49.)

படைப்பணம் paṭai-p-paṇam, *n.* <id.+. An ancient tax; வரிவகை. (I. M. P. Tv. 40, A.B.)

படைப்புவரி paṭaippu-vari, *n.* <படைப்பு +. A kind of musical composition in which all the various elements are represented; இசைப் பாட்டுவகை. (சிலப். 7, 4-ம் பாட்டு, உரை.)

படையழிவு paṭai-y-aḻivu, *n.* <படை+. Crops destroyed by the march of troops; பயிர் களுக்குப் போர் வீரரால் உண்டாகுஞ் சேதம். (Pudu. Insc. 323.)

படையறு-தல் paṭai-y-aṟu-, *v. intr.* <id. +. To become subordinate or submissive; கீழ்ப்பட்டு அடங்குதல். (ஈடு, 1, 9, 9, ஜீ.)

பண் paṇ, *n.* prob. பண்ணு-. Land, field; வயல். (M. E. R. 12 of 1923.)

பண்குறுணி paṇ-kuṟuṇi, *n.* perh. பண் +. A tax; வரிவகை. (M. E. R. 442 of 1925.)

பண்டந்தாங்கி paṇṭan-tāṅki, *n.* <பண்டம் +. Table, shelf or other article of furniture, used as a stand; பண்டங்களை வைக்க உதவும் மேசை முதலியன. *Loc.*

பண்டப்பேழை paṇṭa-p-pēḻai, *n.* <id. +. Dresser; சமையற் சாமான்களை வைக்கும் பண்டந்தாங்கி. *Pond.*

பண்டவெட்டி paṇṭa-veṭṭi, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. v, 365.)

பண்டாடுபழநடை paṇṭāṭu-paḻa-naṭai, *n.* <பண்டு+ஆடு-+. Ancient, immemorial custom; நீண்டகாலமாக நடந்து வரும் வழக்கம். *பண்டாடுபழநடை இறுத்து வந்த தரத்திலே* (S. I. I. v, 142).

பண்டாரக்கண்காணி paṇṭāra-k-kaṇ-kāṇi, *n.* <பண்டாரம்+. Treasury officer; பொக்கிஷ அதிகாரி. *விற்குமிடத்துப் பண்டாரக்கண் காணி புறப்பட்டு விலை நிச்சயித்து* (S. I. I. viii, 42).

பண்டாரக்கல் paṇṭāra-k-kal, *n.* <id. +. Weight used by the Government Treasury; அரசாங்கப்பொக்கிஷத்தி லுபயோகிக்கும் நிறை. (S. I. I. iii, 295.)

பண்ணறையன் paṇṇaṟaiyaṉ, *n.* <பண் +அறு-. One who talks gibberish, gibberer; தெளிவாகப் பேச இயலாதவன். *மூக்கிழந்த பண் ணறையனுளும் பாராரோ* (நெல்விடு. 270).

பண்ணாட்டு paṇṇāṭṭu, *n.* <பண்ணை+ஆடு-. Authority; அதிகாரம். *வெள்ளைக்காரன் காலத்திலே தலைதலைக்குப் பண்ணாட்டு* (எங்களூர், 152).

பண்ணாடி paṇṇāṭi, *n.* <id.+id. Master; அதிகாரி. (எங்களூர், 16.) *ஆள் ஆளும் பண்ணாடி எருது ஆர் மேய்க்கிறது?*

பண்ணிக்கக்கூலி paṇṇikka-k-kūli, *n.* perh. பணிக்கு+. A tax; வரிவகை. (S. I. I. vi, 189.)

பண்ணையம் paṇṇaiyam, *n.* <பண்ணை. Farming; பண்ணைவைத்து நடத்தும் விவசாயம். (எங்களூர், 21.)

பணம் paṇam, *n.* <*paṇa*. Bet; பந்தயம். *சூதில் . . . வருக்கமார் பொருளனைத்தையும் பணத் திடைமாய்த்தே* (வேதாரணி. பலபத். 4).

பணம்பு paṇampu, *n.* [K. *pranambu.*] Bridge; பாலம். (ஸ்ரீபுராணம். Ms.)

பணவர்க்கம் paṇa-varkkam, *n.* <பணம்+. Tax payable in cash; காசாயம். (Insc.)

பணவாசி paṇa-vāci, *n.* <id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 122.)

பணாமுடி paṇā-muṭi, *n.* <*phaṇā*+. The hood of the cobra, as its crown; பாம்பின் படமுடி. *சோதிப் பணாமுடி யாயிரங் கொண்ட தொல் லறி வென்னுமொர் பாம்பின்மேல்* (பாரதி. பாஞ்சாலி, 1, 81).

பணாமுத்திரை paṇā-muttirai, *n.* <id.+. A handpose, in worship; முத்திரைவகை. (சைவாநு. வி. 18.)

பணி paṇi, *n.* <பணி-. Lowness; meanness; தாழ்ச்சி. (ஈடு, 10, 3, 4, ஜீ.)

பணிக்கு paṇikku, *n.* cf. பணிக்கம். *Pond.* 1. Detailed account or statement; விவரமான குறிப்பு. *நிலங்களின் பணிக்கு.* 2. Counsel; ஆலோசனை.

பணிக்கூடம் paṇi-k-kūṭam, *n.* <பணி+. Smithy; கொல்ல னுலைக்கூடம். (நாநார்த்த. 948.)

பணிக்கொத்து paṇi-k-kottu, *n.* <id.+. Cess collected for the maintenance of village servants; கிராம ஊழியக்காரருக்காக வாங்கும் வரி வகை. (S. I. I. v, 374.)

பணித்திருத்தம் paṇi-t-tiruttam, *n.* <id. +. Fineness of workmanship; வேலைப்பாட்டின் நேர்த்தி. *பணித்திருத்தத்தால் வந்தவழகு தோன்றி யிருக்கிறபடி பாராய்* (திவ். பெரியாழ். 2, 3, 2, வ்யா. பக். 281).

பணிபோ-தல் paṇi-pō-, *v. intr.* <id.+. To be engaged, as in a work; தொழில் புரிதல். *அவர்கள் சப்தாதி விஷயங்களிலே அன்யபரராய் அவற்றோடே பணிபோந்திருந்தார்கள்* (ஈடு, 10, 6, ப்ர. பக். 177).

பணிலம் paṇilam, *n.* Conch bracelets; சங்கினாலியன்ற கைவளைவகை. *கைப்பணிலந்தன்னைக் கழற்றிவிடுத்து* (சொக்க. உலா, 171).

பணிவிடைமடத்தாள் paṇiviṭai-maṭat-tāḷ, *n.* <பணிவிடை+. Lay sister; மடத்துத் துணைச்சகோதரி. *Pond.*

பணை paṇai, *n.* prob. பணை-. 1. Anvil; உலைக்களத்துப் பட்டடை. (குறள், 828, மணக். பக். 28.) 2. Tusk of an elephant; யானைத் தந்தம். மகரிகையு மிருபணைகளும் . . . ஒளிவிட . . . முடுகினகரிகளே (பாரத. பதினாறாம். 20).

பணையேர் paṇai-y-ēr, *n.* perh. பணம்+ஏர். Hired plough, dist. fr. *māṟṟēr;* கூலிக்குவிடும் ஏர். *Loc.*

பத்தடி pattaṭi, *n.* <பற்று+. Place, locality; இடம். எந்த பத்தடியிலிருந்து வருகிறாய்?

பத்தம்[1] pattam, *n.* cf. பற்றம். Mass, heap, collection; துவியல். தூற்றும்பத்தம் (பட்டினத்துப். கோயிற்றிரு. 2).

பத்தம்[2] pattam, *n.* cf. பத்தர். Eating vessel; உண்கலம். பத்தங்குடை செருப்புந்தொழு பாவீ (நீலகேசி, 328).

பத்தர் pattar, *n.* A part of *yāḻ;* யாழ் ஹேறுப்பு. பத்தருங் கோடு மாணியு நரம்புமென்று (சிலப். கானல். கட்டுரை).

பத்தல் pattal, *n.* See பத்தர். குளப்பு வழி யன்ன கவடுபடு பத்தல் (பொருந. 4).

பத்தாந்து pattāntu, *n.* <E. Patent; தான் நூதனமாக உண்டாக்கிய பொருளைப்போல் பிறர் செய்யாது தடுத்துத் தானே செய்து பயன் பெற தற்கு அரசாங்கத்தாரளிக்கும் உரிமை. *Loc.*

பத்தியவிளக்கம் pattiya-viḷakkam, *n.* <பத்தியம்+. Dietary; பத்தியமான ஆகாரமுறை. *Pond.*

பத்திரகடம் pattira-kaṭam, *n.* <*bhadra*+. Pot filled with water and sanctified by rites; பூர்ணகும்பம். (T. A. S. v, 162.)

பத்திராசனம் pattirācaṉam, *n.* <*bhadrā-sana.* Throne; சிங்காதனம். பத்திராசனங் கொண்டுள்ள பதிகளா (வீரநாரா. நூல்வர. 5).

பத்து pattu, *part.* 1. A prefix to numerals, meaning 'about'; எண்ணுக்கு முன் சேர்த்து 'உத்தேசமாக' என்னும் பொருளில் வருஞ் சொல். உண்டாலும் ஒரு காலே பத்தெட்டு நாளைக்கு உண்ணவுமாய் (திவ். திருநெடுந். 1, வ்யா.). 2. Card marked with ten pips, in playing cards; சீட்டுக் கட்டில் பத்துக்குறியுள்ள சீட்டினம். *Loc.*

பதசம் patacam, *n.* <*patasa.* (W.) 1. Bird; பறவை. 2. Moon; சந்திரன்.

பதபாளி pata-pāḷi, *n.* <*pada*+*pāli.* Word-sequence; சொற்களின் வரிசை. (விவேகசிந். பக். 6.)

பதரப்படு-தல் patara-p-paṭu-, *v. intr.* <பதர்-+படு-. To escape; தப்புதல். பதரப்படாமே பழந்தாம்பா லார்த்த (திவ். பெரியாழ். 1, 2, 9).

பதவளை pata-vaḷai, *n.* <பதம்+. Swelling in the joints; நெறிக்கட்டி. *Loc.*

பதாகினி patākiṉi, *n.* <*patākinī.* Army carrying banners; கொடிப்படை. நாயகி பதாகினிகளே (தக்கயாகப். 433).

பதிக்கினி patikkiṉi, *n.* <*pati-ghnī.* One who murders her husband; புருஷனைக் கொன்றவள். (W.)

பதிதரிராப்போசனம் patitar-irā-p-pō-caṉam, *n.* <பதிதன்+இரா+. The Lord's supper; இயேசுவின் கடைசி இராப்போஜனம். *Pond.*

பதிப்பெயர்-த்தல் pati-p-peyar-, *v. tr.* <பதி+. To relinquish; விட்டுநீக்குதல். உண்ணு நோன்போ டுயிர்பதிப்பெயர்ப்புழி (மணி. 14, 95).

பதிபந்தம் patipantam, *n.* <*prati-bandha.* Obstacle; தடை. வர்த்தமானப் பதிபந்தங் காண் (வேதா. சூ. 141).

பதிபாதமூலப்பட்டுடையார் pati-pāta-mūla-p-paṭṭuṭaiyār, *n.* <பதி+பாதம்+மூலம்+பட்டு+. A class of temple servants; கோயிற் பணியாளர்வகை. (S. I. I. ii, 111.)

பதியார் patiyār, *n.* <பதி. Temple servants; கோயிற் பணியாளர். (S. I. I. iv, 295.)

பதினறுமார் patiṉaṟumār, *n.* <பதினாறு. A temple committee in ancient days, consisting of sixteen persons; பதினறுவர் கொண்ட கோயில் விசாரணைச்சபையார். (T. A. S. iii, 191.)

பதினாறுவரிகருமம் patiṉāṟu-vari-karu-mam, *n.* <id.+வரி+. A method of calculation; கணிதவகையு ளொன்று. (யாப். வி. 528.)

பதுக்கம் patukkam, *n.* <பதுக்கு-. Snare; கண்ணி. *Pond.*

பதுப்பி-த்தல் patuppi-, 11 *v. tr.* cf. பதுக்கு-. To hide; மறைத்தல். பண்டைக் கோலத்தைப் பதுப்பித்திடும் பட்டாங்குரையாய் (வள்ளி. கதை. Ms.).

பதுமை patumai, *n.* <*padmā. Patuma-niti;* பதுமநிதி. (அபி. சிந்.)

பதுவாரம் patuvāram, *n.* A tax; வரி வகை. (S. I. I. viii, 214.)

பந்தயமரம் pantaya-maram, *n.* <பந்தயம்+. Greasy climbing pole; வழுக்குமரம். *Pond.*

பந்தர்ச்சேலை pantar-c-cēlai, *n.* <பந்தர் +. A kind of saree, as from Bunder, the modern Masulipatam; புடைவைவகை. (பஞ்ச. திருமுக. 1163.)

பந்தர்ப்புகையிலை pantar-p-pukaiyilai, *n.* <id. +. A variety of tobacco, as from Masulipatam; புகையிலைவகை. (மதி. க. ii, 194.)

பந்தாட்டு-தல் pantāṭṭu-, *v. tr.* <பந்து +. To tease; to vex; அலைத்து வருத்துதல். பந்தாட்டியே விடுவேனடி (குருகூர்ப். 89).

பந்திக்கட்டு panti-k-kaṭṭu, *n.* <பந்தி +. Dining hall; உணவருந்துவதற்கென்று அமைத்த கட்டிடம். உக்கிராணம் களஞ்சியம் பந்திக்கட்டு பண்ணை முதலிய எல்லா இடங்களின் விசாரணை வேலைகளின் (மீனாட். சரித். i, 36).

பந்திவழங்கு-தல் panti-vaḻaṅku-, *v. intr.* <id. +. To serve food; உணவுபரிமாறுதல். பந்தி வழங்கவிலை (கோவை. 15).

பப்பு-தல் pappu-, 5 *v.* perh. பப்பு. *intr.* To roam about; பாவித்திரிதல். சேரன் குலத்தனும் பப்பிப்போய படைஞன் (தியாக. லீலை. 14, 7).—*tr.* To eat; உண்ணுதல். பாரணமாய்த் தான்றேனே பப்பினன் (பஞ்ச. திருமுக. 2016).

பம்மாற்று pammāṟṟu, *n.* perh. Persn. *bīmnāk.* cf. பம்மாத்து. False show; பம்மாத்து. பம்மாற்றுக் காட்டிவந்த பாழ்ம்படரே (பஞ்ச. திருமுக. 617).

பமோஜிப் pamōjip, *adv.* <Persn. *bha* + Arab. *mūjib.* According to; conformably to; அதன்படி. (P. T. L.)

பயணஉத்தரவுச்சீட்டு payaṇa-uttaravu-c-cīṭṭu, *n.* <பயணம் + உத்தரவு +. Port clearance; கப்பல் துறைமுகத்தைவிட்டகலுமுன் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டு. (M. Navi.)

பயந்தான்கொள்ளி payantāṉ-koḷḷi, *n.* <பயம் +. Coward; பயங்கொள்ளி. *Loc.*

பயரப்பெறு-தல் payara-p-peṟu-, *v. tr.* prob. பெயர்- +. To resume, as by Government; அரசாங்கத்தாரால் திரும்ப எடுத்துக்கொள்ளப்படுதல். (T. A. S. iii, 167.)

பயற்றுருண்டை payaṟṟuruṇṭai, *n.* <பயறு +. A kind of sweet cake; பொரிவிளங்காய். *Loc.*

பயா payā, *n.* A kind of drum; தக்கா என்னும் முழவு. (கலைமகள், xii, 402.)

பயிர்கொளுத்து-தல் payir-koḷuttu-, *v. intr.* <பயிர் +. To cultivate; பயிர்செய்தல். எதப் பயிர்கொளுத்த மேற்பாடும் (சரவண. பணவிடு. 24).

பயிர்ச்செலவு payir-c-celavu, *n.* <id. +. Cultivation, husbandry; பயிர்த்தொழில். *Loc.*

பயிரடைப்பு payir-aṭaippu, *n.* <id. +. Tenancy; நிலத்தைப் பயிர்செய்ய ஒப்படைக்கை. பயிரடைப்பான நிலத்திலே (S. I. I. v, 373).

பயிரேற்று-தல் payir-ēṟṟu-, *v. tr.* <id. +. To cultivate; பயிர்செய்தல். பயிரேற்றி அனுபவிக்க (S. I. I. iv, 134).

பர்மாக்கொண்டை parmā-k-koṇṭai, *n.* perh. மருமா +. A mode of plaiting hair; மயிர்ப்பின்னல் வகை. *Loc.*

பரக்கூலி para-k-kūli, *n.* perh. புறம் +. Wages for carrying; சுமைகூலி. பரக்கூலிபட்டுக் கொண்டுவந்து (S. I. I. v, 497).

பரகசியம் parakaciyam, *n.* cf. பரசியம். Revealing or publishing secrets; அந்தரங்கச் சமாசாரத்தை வெளியிடுகை. (யாழ். அக.)

பரகுடி para-kuṭi, *n.* perh. பரம் +. Non-resident ryot farming land in a village; புறக்குடி. (G. Sm. D. I, ii, 283.)

பரகுரு para-kuru, *n.* <*para* +. Spiritual preceptor; ஞானசாரியன். (ஞானதீக்ஷை. 1.)

பரங்கிக்கள்ளவராகன் paraṅki-k-kaḷḷa-varākaṉ, *n.* <பரங்கி +. An inferior coin; மட்டமான நாணயவகை. (சரவண. பணவிடு. 206.)

பரங்கியாமணக்கு paraṅki-y-āmaṇakku, *n.* <id. +. Papaw; பப்பாளி. (M. M. 55.)

பரசிவைக்கியம் para-civaikkiyam, *n.* <பரம் + சிவம் +. Union of the individual soul with the Supreme Soul; சீவான்மாவுங் கடவுளும் ஒன்றுகை. (விவேகசூடா. 9.)

பரசூனியவாதம் para-cūṉiya-vātam, *n.* <id. + சூனியம் +. Egoism; மமகாரம். *Pond.*

பரதளவிபாடன் parataḷa-vipāṭaṉ, *n.* <*para-daḷa-vipāṭa.* 'Destroyer of enemy's forces', a military title; பகைப்படையை அழிப்பவன் என்று பொருள்படும் ஒரு விருது. பகைவீர வீரன் பரதளவிபாடன் (குழைக்காதர் திருப்பணிமாலை, 16).

பரதாகம் para-tākam, *n.* perh. *pari-tāpa.* Distress; வருத்தம். பார்த்தவுடனெங்கள் பரதாக மோர் வாக்கால் தீர்த்தருளும் (தெய்வச். விறலிவிடு. 75).

பரப்பிரமவிந்து para-p-pirama-vintu, *n.* <பரம் + பிரமம் +. Sublimate of mercury; வாலரசம். (மூ. அ.)

பரப்பு parappu, *n.* See பரம்பு. பரப்பில் காசும் செல்லும் நியோகம் எழுதி (S. I. I. vi, 29).

பரம் param, n. <para. Mendicant; பரதேசி. நீ கிருத்திகைதோறும் பத்துப் பரங்கட்குத் தவறுத அன்னம் போட்டுவோ (மதி. க. i, 180).

பரம்பர் parampar, n. cf. பறம்பர். A class of cultivators; உழவர் குடிவகை. அளவர் பள்ளிகள் பரம்பர் உட்பட உழுது இறுத்து (S. I. I. vii, 385).

பரம்பு parampu, n. Revenue account; வரிக்கணக்கு. பரம்பில் நெல்லுங்காசும் வெள்ளாளர் பக்கல் நியோகமெழுதிக் கொள்ள (S. I. I. vi, 27).

பரம்மக்கன்கல் parammakkan-kal, n. Sati stone; உடன்கட்டையேறியவளைக் குறிக்கும் அடையாளக்கல். (M. E. R. 192 of 1931-32.)

பரமகலை parama-kalai, n. <Parama+ kalā. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

பரமபதபடம் paramapata-paṭam, n. <பரமபதம்+. Board for a kind of backgammon; கட்டங்களிற் காய் வைத்தாடும் ஒருவகை விளையாட்டிற்குரிய படம். Loc.

பரமாணுவாதம் paramāṇu-vātam, n. <பரமாணு+. Atomic theory of the origin of the world; பிரபஞ்சம் அணுக்கூட்டத்தாலாகியது என்னும் நையாயிக மதம். (பிரபஞ்ச. வி. 28.)

பரரூபம் para-rūpam, n. perh. para+. Permutation of letters; எழுத்துக்களை மாறிச் சேர்த்து அமைக்கை. (R.)

பரவிந்து para-vintu, n. <id.+. (Śaiva.) Śakti in union with Śiva; சிவத்தோடு ஒன்றிய சக்தி. (சி. போ. பா. 223.)

பராக்கு parākku, n. <parāk. Diversion; கவனம் மாறுகை. Colloq.

பராசிதம் parācitam, n. <aparājitā. Viṭṭuṇukkirānti, a medicinal plant; விட்டுணுக்கிராந்தி. (நாமதீப. 324.)

பராத்தம் parāttam, n. cf. வராத்தம். Order; கட்டளை. (W.)

பராபரிப்பு parāparippu, n. <பராபரி-. cf. பராமரிப்பு. Supervision; மேற்பார்வை. பராபரிப்பாளன் (தண்டிகைகனகராயன்பள்ளு, குறிப்பு. 69).

பரார்த்தலிங்கம் parārtta-liṅkam, n. <parārtha+. Śiva liṅgam in a temple, of five kinds, viz., cuyampu-liṅkam, kāṇa-liṅkam, taivika-liṅkam, āriṭa-liṅkam and māṇuṭa-liṅkam; சுயம்புலிங்கம் காணலிங்கம் தைவிகலிங்கம் ஆரிடலிங்கம் மானுடலிங்கம் என்று ஐவகைப்பட்டதும் திருக்கோயிலிலுள்ளதுமான சிவலிங்கம். (சிவாலயதரிசன விதி, பக். 3.)

பராவிவை-த்தல் parāvi-vai-, v. tr. <பராவு-+. To make an offering to a deity in fulfilment of a vow; நேர்த்திக்கடனைக் கொடுத்தல். (S. I. I. viii, 379.)

பரிகம் parikam, n. A kind of spoon கரண்டிவகை. (E. T.)

பரிகருமம் pari-karumam, n. (Math.) A method of calculation; கணிதவகையு ளொன்று. (யாப். வி. 528.)

பரிகாரன் parikāran, n. <parikāra. Servant; வேலைக்காரன். மடத்துப் பரிகாரர்களுக்கும் (S. I. I. v, 189).

பரிகை parikai, n. perh. parigha. Guard; காவல். படைப்பரிகைத் துரகங்கள் (தக்கயாகப். 267).

பரிச்சேதம் pariccētam, n. <paricchēda. Small portion, part; சிறு பகுதி. Pond.

பரிசங்கிளத்தல் paricaṅ-kiḷattal, n. <பரிசம்+. (Akap.) Theme in which the lady's maid informs the hero of an impossibly high bride-price; தலைவியை மணத்தற்குரிய அருவிலையைத் தோழி தலைவனுக்கு உரைத்தலாகிய அகத்துறை. (களவியற். 115.)

பரிசம்[1] paricam, n. <sparśa. Hard consonant; வல்லெழுத்து. பரிசம் வல்லினப்பெயர் (போகத். 31).

பரிசம்[2] paricam, n. cf. புருஷம். Depth; ஆழம். நாலாள் பரிசம்.

பரிசவேதி parica-vēti, n. <sparśa+ vedhin. Transmuter; பரிசனவேதி. நீர் நம்முடைய பரிசவேதி என்று அருளிச்செய்து (குருபரம். பக். 484).

பரிசவேதைமணி paricavētai-maṇi, n. <பரிசவேதி+. An alchemic substance; இரசவாதத்திற்குரிய மருந்துவகை. (தஞ். சர. iii, 58.)

பரிசனைவைத்தியன் paricaṉai-vaittiyaṉ, n. prob. பரிசனை+. Quack doctor; போலிவைத்தியன். Pond.

பரிசை paricai, n. <pariṣahā. (Jaina.) The troubles endured for checking karma; கருமத்தைத் தடுத்தற்பொருட்டுப் பொறுக்கவேண்டுந் துன்பங்கள். ஆற்றல் பரிசை முதலாகிய வன்னவெல்லாம் (நீலகேசி, 125).

பரித்தம் parittam, n. <Pali. parittam <paritrā. Invocation to a deity for deliverance from calamity; கஷ்டநிவாரணத்தின் பொருட்டுச் செய்யும் ஸ்தோத்திரம். மோரிப்பரித்தம் (நீலகேசி, 1, உரை).

பரிதாபி paritāpi, *n.* <*paritāpa.* Sufferer; துன்புறுபவ-ன்-ள். பேதையேன் றன்னைப் பரிதாபி யாக்கலென் (சரபேந்திரபூபாலகுறவஞ்சி, 17, 1).

பரிது paritu, *n.* cf. பரிசு. Manner, mode; விதம். பட்டபரிது விடுபேறு அட்டிப்பேறுக (T. A. S. ii, 68).

பரிப்பிராசகர் parippirācakar, *n.* <*parivrājaka.* A class of ascetics; துறவியருள் ஒரு சாரார். (மேருமந். 75.)

பரிபிரமி-த்தல் paripirami-, *11 v. intr.* <*pari-bhrama.* To whirl round; சுழலுதல். சம்சாரத்துப் பரிபிரமிக்கின்றான் (நீலகேசி, 189, உரை).

பரிபுஷ்கரை paripuṣkarai, *n.* A kind of cucumber, *Cucumis madraspatanus;* வெள்ளரி வகை. *Pond.*

பரிமளவெண்ணெய் parimaḷa-v-eṇṇey, *n.* <பரிமளம்+. Consecrated oil, used in baptism; ஞானஸ்நானத்தில் உபயோகிக்குந் தைலம். *Chr.*

பரியநுயோச்சியோபேக்ஷணம் pari-yanuyōcciyōpēkṣaṇam, *n.* <*paryanuyojya+upēkṣaṇa.* (Log.) A defect in argumentation; தோல்வித்தானத்தொன்று. (செந். iii, 13.)

பரிவாரக்கொந்தம் parivāra-k-kontam, *n.* perh. பரிவாரக்கொத்து. Temple servants; கோயிற் பணியாளர். (S. I. I. iv, 492.)

பருக்கு-தல் parukku-, *5 v. tr.* Caus. of பருகு-. To increase; பெருக்குதல். (பாரத. i, 231.)

பருக்கை parukkai, *n.* <பரு-. Refuse, dregs; sediment; கோது. அதில் பருக்கை தட்டாத படி அதின் வாயிலே பிழியுமாய்த்து (திவ். பெரியதி. 1, 2, 5, வ்யா.).

பருங்கல் paruṅkal, *n.* perh. பருக்கு-. Fear; அச்சம். *Loc.*

பருதி paruti, *n.* <*paridhi.* Quoit; விளையாட்டுக்குரிய வளையம். *Pond.*

பருந்தடைப்பு paruntaṭaippu, *n.* <பருந்து+. Double bracket ( ); எழுத்துக்கள் எண்கள் முதலியவற்றை அடைத்துக் காட்டுவதற்கு இடும் ஓர் அடையாளக்குறி. *Mod.*

பருநடை paru-naṭai, *n.* <பரு-மை+. Swift walk, as of bull; வேகமான நடை. *Loc.*

பரும்பிடி parum-piṭi, *n.* <id.+. Extortion; அநீதமாய்ப் பொருள்பறிக்கை. *Pond.*

பரும்புடவை parum-puṭavai, *n.* <id.+. A kind of cloth; ஆடைவகை. பரும்புடவைப் பொதி ஒன்றுக்குக் காசு பத்து (S. I. I. viii, 233).

பருமிப்பு parumippu, *n.* <பருமி-. Fencing; சிலம்பம். *Pond.*

பருமுளைவராகன் parumuḷai-varākan, *n.* A coin; நாணயவகை. (M. E. R. 1923-4, p. 110.)

பருமைசெய்-தல் parumai-cey-, *v. tr.* <பருமை+. To repair; திருத்திச் செப்பனிடுதல். இம்மடைகளும் கரையும் பருமைசெய்கைக்கு (S. I. I. vii, 252).

பருவரு-த்தல் paruvaru-, *5 v. intr.* <பரு வா-. To be distressed in mind; மனம்வருந்துதல். இவட்கு உறுத்துமென்று பருவருத்திருப்பதுஞ் செய்யார் (குறள், 1127, மணக்.).

பருஷி-த்தல் paruṣi-, *11 v. tr.* <*paruṣa.* To chide; கடிதல். மெத்தெனப் பருஷித்ததற்காக வருநன்மையும் இல்லையன்றே (நீலகேசி, 537).

பல்சந்தி pal-canti, *n.* <பல்+. (அரு. நி.) 1. Sugar-cane; கரும்பு. 2. Bamboo; மூங்கில்.

பல்லா pallā, *n.* <புல்லா. A linear measure; நீட்டலளவைவகை. (W.)

பல்லி palli, *n.* <வல்லி. Root; வேர். (திவ். பெரியாழ். 3, 4, 2, வ்யா. பக். 594.)

பல்லிங்காஸனம் palliṅkāsaṉam, *n.* A posture of Jaina ascetics; சைனத்துறவியின் ஆசன வகை. (கனம்கிருஷ்ணையர், 3-4.)

பல்லிடுக்கி pal-l-iṭukki, *n.* <பல்+. Pincers to extract teeth; பல்லைப் பிடுங்குங் குறடு. *Pond.*

பல்லுவன் palluvaṉ, *n.* cf. பல்லவன். Mean person; இழிந்தோன். (நாமதீப. 178.)

பல்லூகம் pallūkam, *n.* <*bhallūka.* Bear; கரடி. (W.)

பல்வாங்கி pal-vāṅki, *n.* <பல்+. See பல்லிடுக்கி. *Pond.*

பல்வேவு pal-vēvu, *n.* <id.+. Tooth-ache; பல்நோய்வகை. (பாரத. i, 218.)

பலகாயம் pala-kāyam, *n.* <பல+. Sundry spices, as pepper, etc.; மிளகு கடுகு வெந்தயம் போன்ற கறிக்கு உதவும் பண்டங்கள். பலகாயம் நிசதி மிளகு ஆழாக்கும் கடுகு உழக்கும் (S. I. I. iii, 381).

பலகீரைப்பதார்த்தம் palakīrai-p-patārttam, *n.* <id.+கீரை+. A relish made of *kala-vai-k-kīrai;* கலவைக்கீரைக் கறி. *Pond.*

பலகீரைபறி-த்தல் palakīrai-paṟi-, *v. intr.* <பலகீரை+. To do mischief; தீங்குசெய்தல். *Colloq.*

பலகைசுரண்டி palakai-curaṇṭi, *n.* <பலகை+. Carpenter's scraping instrument; சீவுளி. *Loc.*

பலஞ்ஜீப்காயீ palañ-jīp-kāyī, *n.* <E. Flying jib guys; பலாஞ்ஜீப்பூம் மரத்தின் பக்க ஆதாரமாகக் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

பலஞ்ஜீப்மத்தான்காயீ palañ-jīp-mat-tāṉkāyī, *n.* <E. *flying* + E. *jib* + E. *martingale.* Flying martingale; பலாஞ்ஜீப்பூம் மரத்தின் கீழ்ப் புறம் ஆதாரமாகக் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

பலப்பிரமதனி pala-p-piramataṉi, *n.* <*bala* + *pramathanī.* One of *nava-šakti;* நவசக்திகளு ளொன்று. (அபி. சிந்.)

பலராசனம் palar-ācaṉam, *n.* <பலர் +. Sofa; மஞ்சம். *Pond.*

பலவரவை pala-varavai, *n.* <பல + வா-. Lands acquired bit by bit, in a village; பலவழி யிற் சில்லறையாக வந்த நிலங்கள். விக்கிரமசோழ நல்லூரில் பலவரவையான நிலத்து (S. I. I. viii, 29).

பலவிகரணி pala-vikaraṇi, *n.* <*bala* +. One of *nava-šakti;* நவசக்திகளு ளொன்று. (அபி. சிந்.)

பலாங் palāṅ, *n.* Clew-garnets; கப்பற் சதுரப் பாய்களைச் சுருட்டும்பொழுது அவற்றின் கீழ் மூலைகளைப் பறுவாணுக்கு இழுக்க உதவுங் கயிறு. (M. Navi.)

பலாஞ்ஜீப்பு palāñ-jīppu, *n.* <E. *flying* + E. *jib.* Sail tied to the flying-jib; கப்பலின் பலாஞ்ஜீப்பூம் என்ற உத்திரத்தில் விரிக்கப்படும் பாய். (M. Navi.)

பலாஞ்ஜீப்பூம் palāñ-jīppūm, *n.* <id. + E. *jib-boom.* Flying jib-boom; ஜீப்பூமிலிருந்து புறப்படும் உத்திரம். (M. Navi.)

பலாட்டியன் palāṭṭiyaṉ, *n.* <*balāḍhya.* Strong man; பலசாலி. *Loc.*

பலானிஜீப்பூம் palāṉi-jīppūm, *n.* See பலாஞ்ஜீப்பூம். (M. Navi.)

பலித்தாலம் pali-t-tālam, *n.* <பலி +. A kind of plate; தாம்பாளவகை. (S. I. I. iv, 8.)

பலியோச்சு-தல் pali-y-ōccu-, *v. intr.* <id. +. To offer sacred offerings; நிவேதனம் படைத்தல். (சிவக். பிரபந். பக். 136.)

பலீவர்த்தம் palīvarttam, *n.* <*balīvarda.* Bull; காளை. (திவ். பெரியாழ். 2, 1, 2, வ்யா. பக். 210.)

பலூத் palūt, *n.* Village servant; கிராம வேலையாள். (M. Sm. D. i, 278.)

பவநாமேசுவரன் pava-nāmēcuvaraṉ, *n.* <*bhava* + *nāman* +. A Rudra; உருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

பவப்ரிய pavapriya, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

பவம்[1] pavam, *n.* <*bhava.* A cant for eleven; பதினொன்றை யுணர்த்துங் குறிப்புச்சொல். மணிப் பவம் (தைலவ. தைல.).

பவம்[2] pavam, *n.* <பவமத்திமம். A stanza of four lines of equal number of *cīr;* பவமத்திமம். (யாப். வி. பக். 483.)

பவழத்திரி pavaḻa-t-tiri, *n.* <பவளம் +. A necklet made of coral; பவழமாலைவகை. (பெருங். மகத. 17, 163.)

பவளவடம் pavaḷa-vaṭam, *n.* <id. +. Wristlet of coral; பவளத்தாலான முன்கை வளை. மணிக்கட்டில் சாத்தின சிறுப்பவளவடமும் (திவ். பெரியாழ். 1, 5, 10, வ்யா.).

பவன் pavaṉ, *n.* <*Bhava.* A Rudra; உருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

பழக்கவழக்கம் paḻakka-vaḻakkam, *n.* <பழக்கம் +. Manners and customs; ஆசார விவகாரங்கள். *Colloq.*

பழங்கண்ணோட்டம் paḻaṅ-kaṇṇōṭṭam, *n.* <பழ-மை +. Sympathy felt on account of old and long acquaintance; நெடுநாட் பழக்கத் தால் நிகழும் இரக்கம். (குறள், 1292, உரை.)

பழங்கறி paḻaṅ-kaṟi, *n.* <id. +. Remnant of relishes, rehashed and preserved; முதனாட் சமைத்து மிஞ்சியதாய் மறுநாள் உபயோகத்திற்குப் பக்குவப்படுத்திய கறி. *Loc.*

பழங்காடி paḻaṅ-kāṭi, *n.* <id. +. Sour vinegar; மிகப்புளித்த காடி.

பழங்கிணறு paḻaṅ-kiṇaṟu, *n.* <id. +. Unused well; பாழான கிணறு. *Loc.*

பழங்கிணறுதூர்வாங்கு-தல் paḻaṅ-kiṇaṟu-tūr-vāṅku-, *v. intr.* <id. + கிணறு +. To talk about old and forgotten things; மறந்துபோன செய்திகளை நினைப்பூட்டிப் பேசுதல். *Loc.*

பழஞ்செய்க்கடன் paḻañ-cey-k-kaṭaṉ, *n.* <id. + செய் +. Unpaid balance of land revenue; நிலவரிப்பாக்கி. பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது (புறநா. 35).

பழந்தண்ணீர் paḻan-taṇṇīr, *n.* <id. +. Water allowed to stand overnight on cooked rice; நீராகாரம். *Colloq.*

பழம்பஞ்சாங்கம் paḻam-pañcāṅkam, *n.* <id. +. *Colloq.* 1. Old tale; பழைய கதை. 2. Old-fashioned person; பழையகாலத்து வழக்க வொழுக்கத்தையுடையவ-ன்-ள்.

பழம்புள்ளிமாடை palam-pulli-māṭai, *n.* <id.+புள்ளி+. An ancient coin; பழைய நாணயவகை. (S. I. I. iv, 291.)

பழமுதல்கண்காணி pala-mutal-kaṇkāṇi, *n.* <id.+முதல்+. Temple supervisor; கோயில் மேற்பார்வையாளன். (M. E. R. 1 of 1921.)

பழமுந்தினவெட்டு pala-muntina-veṭṭu, *n.* <id.+முந்து-+. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 141.)

பள்ளி paḷḷi, *n.* [M. *paḷḷi.*] Christian church; கிறிஸ்தவக் கோயில். *சவேரியார் கோயிற் பள்ளி.*

பள்ளிக்குன்று paḷḷi-k-kuṉṟu, *n.* <பள்ளி +. Mt. Kailās; கைலாச பருவதம். *பள்ளிக்குன்றும் விற்குன்று மொழிய* (தக்கயாகப். 536).

பள்ளிச்சிவிகை paḷḷi-c-civikai, *n.* <id.+. A kind of palanquin; பல்லக்குவகை. (S. I. I. iii, 271.)

பள்ளிசை paḷ-ḷ-icai, *n.* <பள்+. A dramatic poem, dealing with the life of Paḷḷas; பள்ளுப்பிரபந்தம். (*தண்டிகைக்கனகராயன் பள்ளு, குறிப்.* 3.)

பள்ளித்தோழன் paḷḷi-t-tōḻaṉ, *n.* <பள்ளி +. Schoolmate; ஒருசாலைமாணுக்கன். *Pond.*

பள்ளியுணர்-தல் paḷḷi-y-uṇar-, *v. intr.* <id.+. To wake up from sleep; துயில் நீங்குதல். *பள்ளியுணர்ந்தா னவனைப் பார்த்து* (பாரதவெண். 85).

பள்ளிவத்தன் paḷḷi-vattaṉ, *n.* <id.+ *varjya.* One who is unfit to enter a Buddhist monastery; பௌத்தப்பள்ளியிற் புகுதற்குத் தகுதியற்றவன். *பத்தின்மேலும் பழிசெய்யுமேற் பள்ளி வத்தன் கண்டீர்* (நீலகேசி, 247).

பள்ளிவிளாகம் paḷḷi-viḷākam, *n.* <id.+. cf. மடவிளாகம். Streets around a Jaina temple; சினாலயத்தைச் சுற்றியிருக்குந் தெருக்கள். (M. E. R. 415 of 1928-29.)

பள்ளிவெற்பு paḷḷi-veṟpu, *n.* <id.+. See பள்ளிக்குன்று. *பள்ளிவெற்பின் மாறுகோள் பெறுது* (தக்கயாகப். 371).

பள்ளேசல் paḷ-ḷ-ēcal, *n.* <பள்+. See பள்ளிசை. (குருகூர்ப். 2, 3.)

பளாயோக்கியம் paḷā-yōkkiyam, *n.* <பளா +. A term meaning 'very good'; 'மிகவும் நன்று' என்ற பொருளில் வழங்குஞ் சொல். *Loc.*

பளிங்கர் paḷiṅkar, *n.* A hill tribe; ஒருவகை மலைச்சாதியார்.

பளிங்கு paḷiṅku, *n.* Topaz; புஷ்பராகம். (S. I. I. ii, 204.)

பளியர் paḷiyar, *n.* cf. பளிங்கர். A hill tribe of the Western Ghats in Pāṇḍya country; பாண்டிநாட்டில் மேற்குமலைத்தொடரில் வசிக்கும் ஒருவகை மலைச்சாதியார். (G. Tn. D. i, 6.)

பற்கிட்டுநோய் paṟ-kiṭṭu-nōy, *n.* <பல்+ கிட்டு-+. Tetanus; தாட்கிட்டிசன்னி. *Loc.*

பற்சாரம் paṟ-cāram, *n.* <id.+. A disease; நோய்வகை. (பராச. i, 235.)

பற்பபாதன் paṟpapātaṉ, *n.* <*padma-pāda.* Viṣṇu, as having feet resembling lotus flowers; திருமால். *பரக்கவைத் தளந்து கொண்ட பற்பபாத னல்லையே* (திவ். திருச்சந். 32).

பற்றக்சார் paṟṟakcār, *n.* <E. *futtock.* Futtock shrouds; காவிமரத்தின் கயிறுகளை அடிமரத்தோடு இணைக்குங் கயிறு. (M. Navi.)

பற்றறு-த்தல் paṟṟaṟu-, *v. tr.* <பற்று+. To decide; தீர்மானித்தல். *வழக்குகளைப் பற்றறுத்து வருவேனுன் உன்னிடத்தில்* (கோவ. க. 42).

பற்று-தல் paṟṟu-, *5 v. intr.* To hold oneself in patience; to wait; பொறுத்தல். *சோறு சமையப் பற்றுமல்* (ஈடு, 1, 3, 1).

பற்றுக்கம்பு paṟṟu-k-kampu, *n.* <பற்று+. Peg planted in the levelling plank; பரம்புமரத்தில் ஊன்றுங் கழி. *Loc.*

பற்றுக்காவல் paṟṟu-k-kāval, *n.* <id.+. Watch for the lands; நிலக்காவல். *Nāñ.*

பற்றுப்பருக்கை paṟṟu-p-parukkai, *n.* <id.+. Grain of cooked rice; சோற்றுப்பருக்கை. *Loc.*

பற்றுப்பாடு-தல் paṟṟu-p-pāṭu-, *v. intr.* prob. id.+. To sing in accompaniment; வாரம் பாடுதல். (சிலப். 6, 19, அரும்.)

பற்றுப்பார்-த்தல் paṟṟu-p-pār-, *v. intr.* <id.+. To test by rubbing, as a piece of turmeric; உரைத்துப் பரிசோதித்தல். *ஊரிற் பெண்கள் தங்களுக்குப் பூசுகைக்கு மஞ்சள் அரைத்தால் பற்றுப்பார்ப்பது இவளுடம்பிலே யாய்த்து* (திவ். பெரியாழ். 3, 2, 2, வ்யா. பக். 536).

பற்றுப்பொதுக்காவல் paṟṟu-p-potu-k-kāval, *n.* <id.+. Watchman of the village lands; கிராமக்காவற்காரன். *Nāñ.*

பற்றுமுறி paṟṟu-muṟi, *n.* <id.+. Receipt; ரசீது. *பற்றுமுறி கொடுத்தோம்* (S. I. I. viii, 84).

பற்றுவரவுப்புள்ளி parṟuvaravu-p-puḷḷi, *n.* <பற்றுவரவு+. Customer; வழக்கமாகப் பண்டமுதலியன வாங்குபவன். *Loc.*

பற்றுவழி parṟu-vaḻi, *n.* <பற்று+. Running account; நேர்நாட் கணக்கு. *Loc.*

பற்றுவழிக்கணக்கு parṟuvaḻi-k-kaṇakku, *n.* <பற்றுவழி+. *Loc.* 1. See பற்றுவழி. 2. Ledger; பேரேடு.

பற்றுவழியா-தல் parṟu-vaḻi-y-ā-, *v. intr.* <id.+. To be paid out, as money due; செல்லவேண்டிய தொகையைக் கொடுத்தல். *Loc.*

பறத்து-தல் parattu-, *5 v. tr.* Caus. of பற-. To hasten; விரைவுபடுத்துதல். *வேலை சீக்கிரம் முடியவேண்டுமென்று பறத்துகிறார்.*

பறவை paravai, *n.* <பற-. Flying; பறக்கை. *பறவை தளருந் துறைவினை* (அகநா. 170).

பறவைச்சுழி paravai-c-cuḻi, *n.* <பறவை+. A curl mark, in horses; குதிரைச்சுழிவகை. *தனுவோராகிய பறவைச்சுழி* (தஞ். சர. iii, 118).

பறி-தல் paṟi-, *4 v. tr.* cf. பரி-. To pierce; to penetrate; ஊடுருவுதல். *பட்டுப்பறியும் படைவேல்* (சொக்க. உலா, 393).

பறிகால் paṟi-kāl, *n.* <பறி-+. Betel-vine garden; கொடிக்கால். *Loc.*

பறிகூடை paṟi-kūṭai, *n.* <பறி+. Baling basket; இறைகூடை. *Loc.*

பறிப்பு paṟippu, *n.* <பறி-. Plunder; extortion; கொள்ளை. *Pond.*

பறிபட்சி paṟi-paṭci, *n.* <id.+. Bird of prey; மாமிசம் உண்ணும் பறவை. *Pond.*

பறுவான்காசிலிங்கு paṟuvāṅkā-ciliṅku, *n.* <Hind. *parvān*+E. *sling*. Yard-sling; பறுவானைப் பாய்மரத்தோடு இணைக்க உதவுங் கயிறு அல்லது சங்கிலி. (M. Navi.)

பறைத்தறி paṟai-t-taṟi, *n.* prob. பறை+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. i, 91.)

பறைத்துடைவை paṟai-t-tuṭaivai, *n.* <id.+. Endowment for Pariahs; பறையர்க்கு விடும் மானியம். *ஊரில்விடும் பறைத்துடைவை உணவுரிமையாக்கொண்டு* (பெரியபு. திருநாளைப். 13).

பறைமை paṟaimai, *n.* perh. id. A village perquisite; கிராமசுதந்தரவகை. (Pudu. Insc. 271.)

பறையிறை paṟai-y-iṟai, *n.* perh. id.+. A tax paid in cash; காசாயவகை. (S. I. I. iv, 195.)

பன்சர் pañcar, *n.* cf. பஞ்சர். Waste land; தரிசுநிலம். (P. T. L.)

பன்மை paṉmai, *n.* A tax paid in cash; காசாயவகை. *பன்மையாலும் பண்டவெட்டியாலும் ஆளொன்றுக்குக் காசு பத்தாக* (S. I. I. v, 365).

பன்றியாழ்வார் paṉṟi-y-āḻvār, *n.* <பன்றி+. Viṣṇu in His Boar-incarnation; வராகாவதாரமூர்த்தி. (I. M. P. S.A. 380.)

பன்றியோடை paṉṟi-y-ōṭai, *n.* <id.+. Small channel; சிறுவாய்க்கால். *Loc.*

பன்னெறி paṉṉeṟi, *n.* <பல்+. Maxims on miscellaneous topics; பலபொருள்களைப்பற்றிக் கூறும் நீதிவசனங்கள். (நாலடி, அதி. 37.)

பனம்பற்று paṉam-paṟṟu, *n.* <பனை+. Palmyra tope; பனந்தோப்பு. (S. I. I. viii, 209.)

பனிச்சுடர் paṉi-c-cuṭar, *n.* <பனி+. Moon; சந்திரன். *பனிப்பகையைப் பனிச்சுடர் விட்டெறிப்பன* (தக்கயாகப். 485).

பனிநீர் paṉi-nīr, *n.* <id.+. The clear liquid at the top, when curd is allowed to settle; தயிர் முதலியன வடிந்தபின் மேலாக எஞ்சி நிற்குந் தெளிந்த நீர். *பனிநீருள்ளது வடித்துக் கட்டியாயிருக்கிற தயிரும்* (திவ். பெரியாழ். 2, 2, 2, வ்யா. பக். 250).

பனிப்பிரபை paṉi-p-pirapai, *n.* <id.+. Moonlight; நிலா. *பனிப்பிரபையிட் டவித்தே* (தக்கயாகப். 482).

பனைமூக்கன் paṉai-mūkkaṉ, *n.* <id.+. cf. பனைமூக்காரன். A kind of paddy; நெல்வகை. *நிறக்கும் பனைமூக்க னென்றும்* (நெல்விடு. 185).

பனைவடலி paṉai-vaṭali, *n.* <பனை+. Young palymra; வடலி. *Loc.*

பஸ்யதோஹரன் paśyatōharaṉ, *n.* <*paśyatō-hara*. Thief who steals even when a person is looking on; பார்த்துக்கொண்டிருக்கும் போதே திருடுவோன். (திவ். பெரியதி. 1, 1, 5, வ்யா. பக். 37.)

பஸ்கி paski, *n.* A kind of physical exercise which consists of sitting down and standing up alternately; தேகப்பயிற்சி வகை. *Mod.*

பஸ்தி pasti, *n.* Jaina temple; ஜினாலயம். (M. E. R. 1901, p. 2.)

பஸ்திசெய்-தல் pasti-cey-, *v. tr.* <பஸ்தி+. To improve; திருத்துதல். *Loc.*

பக்ஷகன் pakṣakaṉ, *n.* <*bhakṣaka*. Consumer; destroyer; அழிப்பவன். *ரக்ஷகனன்றிக்கே பக்ஷகனுனாலும் விடலாயோ உன் வடிவிருப்பது* (திவ். திருமாலை, 39, வ்யா. பக். 118).

பா

பாக்கம் pākkam, *n.* Small bundle; சிறுமூட்டை. ஆமணக்கங்கொட்டை வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும் பொதி ஒன்றுக்குக் காசு அரையும் பாக்கம் ஒன்றுக்குக் காசு காலும் (S. I. I. viii, 232).

பாகத்தியாகலக்ஷணை pāka-t-tiyāka-lakṣaṇai, *n.* <*bhāga*+*tyāga*+. (Gram.) A variety of *ilakkaṇai*, in which the primary sense of a word is partly discarded and partly retained; விட்டும்விடாதவிலக்கணை. (விசாரசங். 227.)

பாகம் pākam, *n.* <*bhāga.* Place, spot, region; இடம். *கன்னபாகமும் (பாரத. புட்ப.* 33).

பாகவதநம்பி pākavata-nampi, *n.* <பாகவதன்+. Vaiṣṇava devotee; விஷ்ணுபக்தன். (S. I. I. iv, 40.)

பாகவிஸ்தி pāka-visti, *n.* <பாகம்+. Partition; பாகப்பிரிவினை. *Tinn.*

பாகாயம் pākāyam, *n.* <U. *bāgāyat.* cf. *பாகாயதி.* Fenced plot of ground, fit for garden cultivation; தோட்டம்வைத்தற் கேற்றபடி வேலியடைப்புள்ள நிலம். *Loc.*

பாகியாங்கம் pākiyāṅkam, *n.* <*bāhya*+. (Phil.) The outer path; புறவழி. *பிரமத்தை யடைகிறதற்கு பாகியாங்கமென்றும் அந்தராங்கமென்று* மிரண்டங்கங்களுண்டு (வேதாந்தசா. 26).

பாகுடக்கவி pākuṭa-k-kavi, *n.* <Pkt. *pāhuḍa* <*prābhṛta*+. Dedicatory poem; காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் பாட்டு. (செந். vi, 335.)

பாகை pākai, *n.* <*bhāga.* The spot from which ichor flows in an elephant; யானையின் உடலில் மதநீர் ஊறுமிடம். *முகபாகை குதிபாய் கடாம் (தக்கயாகப்.* 3).

பாங்கு pāṅku, *n.* Palm-leaves, etc., required for constructing a sheep-pen; ஆட்டுக்கிடை மறிப்பதற்குரிய விரியோலை முதலியன. *Tinn.*

பாங்குநெல் pāṅku-nel, *n.* A kind of paddy; நெல்வகை. (விவசா. 2.)

பாசனாங்கம் pācaṉāṅkam, *n.* <*bhājana*+*aṅga.* A celestial tree, one of *kaṟpaka-taru;* கற்பகமரவகை. (*தக்கயாகப்.* 757, *உரை.*)

பாசு pācu, *n.* <E. *pass.* 1. Success, as in examinations; பரீட்சை முதலியவற்றில் தேர்ச்சி. (*பிரதாப. விலா.* 13.) 2. Gate-pass; permit; வெளியில் அல்லது உள்ளே செல்வதற்கோ சாமான் கொண்டுபோவதற்கோ கொடுக்கும் அனுமதிச் சீட்டு. *Colloq.*

பாஞ்சாலம் pāñcālam, *n.* <*pāñcāla.* One of the three literary styles, midway between *kauṭam* and *vaitaruppam;* கௌட வைதருப்ப ரீதிகளுக்கு இடைப்பட்ட காவிய ரீதி. (*சங்கற்பசூ. பக்.* 6.)

பாட்சிகன் pāṭcikaṉ, *n.* <*pākṣika.* Bird-catcher; fowler; பட்சிபிடிப்பவன். (W.)

பாட்டம் pāṭṭam, *n.* <பாடு. Wet lands held on a favourable assessment paid in grain; குறைந்த தானியத் தீர்வை செலுத்தி அனுபவிக்கும் நஞ்சை நிலம். (R. T.)

பாட்டமாளன் pāṭṭam-āḷaṉ, *n.* <பாட்டம்+. 1. Officer in charge of revenue collections; அரசிறையதிகாரி. (M. E. R. 101 of 1926-7.) 2. Cultivator, lessee; உழவுப் பாத்திய முடையவன். (T. A. S. iii, 167.)

பாட்டிராசி pāṭṭirāci, *n.* <பாட்டு+. The sign of the zodiac occupied by the sun at sunset; சூரியன் அஸ்தமிக்கும் இலக்கினம். *பாட்டி ராசியிற் புறப்படாதே.*

பாட்டிலேபோடு-தல் pāṭṭilē-pōṭu-, *v. tr.* <பாடு+. To place or lay down horizontally; பூமியுடன் ஒட்டி நேராகச் சார்த்துதல். *Loc.*

பாட்டு pāṭṭu, *n.* <id. Longitudinal layer, in brick-work; செங்கற்சுவர் எழுப்பும்போது நெடுக்காக வைக்கும் கல். *Loc.*

பாடண்டமதம் pāṭaṇṭa-matam, *n.* <*pāṣaṇḍa*+. Heretic religion; அவைதிகமதம். *புல்லும் பாடண்டமதானுபவங்கடமை (நூற்றெட்டுத். திருப்பு.* 7).

பாடம் pāṭam, *n.* prob. *pāṭha.* Utterance, word; வார்த்தை. *படிக்கலுற்ற பதகரின் பாடமே (நீலகேசி,* 537).

பாடவை-த்தல் pāṭa-vai-, *v. tr.* <பாடி-+. To celebrate the ceremony of *irutu-snāṉam* before a girl actually attains her age; இருதுவாத முன் ஒரு பெண்ணுக்கு இருது ஸ்நானச் சடங்கு செய்தல். *Brāh.*

பாடாலம் pāṭālam, *n.* <பாடலம். Trumpet-flower; பாதிரி. *பாடாலப் புட்பத்தனவாகிய பண்பு நாற்றம் (நீலகேசி,* 422).

பூட்டகக்கள்ளி pūṭṭakka-k-kaḷḷi, *n.* <பூட்டகம்+. Deceitful woman; வஞ்சகி. (குருகூர்ப். 51.)

பூட்டைக்கிணறு pūṭṭai-k-kiṇaṟu, *n.* <பூட்டை+. Well fitted with picottah, for irrigating fields; நீர்பாய்ச்சுதற்கு ஏற்றம் அமைந்த கிணறு. (S. I. I. iv, 194.)

பூட்டைக்குண்டிகை pūṭṭai-k-kuṇṭikai, *n.* <id.+. Basket for baling water; ஏற்றச்சால். பூட்டைக்குண்டிகைபோலே யேறுவ திழிவதாக (ரஹஸ்ய. 1366).

பூண்கட்டு-தல் pūṇ-kaṭṭu-, *v. tr.* <பூண்+. To make much of; போற்றுதல். இந்த ருசியைப் பூண்கட்டிக்கொள்ளத் தேடுகிறவர்கள் சழிக்கச் சொன்னால் கழியார்களிறே (ஈடு, 1, 6, 8).

பூண்சம்பா pūṇ-campā, *n.* perh. id.+. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (G. Tp. D. i, 132.)

பூதம் pūtam, *n.* <*bhūta.* 1. Vowel; உயிரெழுத்து. சுரம்பூதமா முயிரின்பெயர் (போகத். 10). 2. Huge hollow figure of a man or woman, carried in processions; வீதிவலம் வரும்போது தூக்கிச்செல்லும் மனித வடிவம். *Loc.*

பூதவுடல் pūta-v-uṭal, *n.* <பூதம்+. Body, as composed of the five elements; ஐம்பூதங்களாலாகிய உடம்பு. பூதவுடனிலையாது (வீரநாரா. பாயி. 21).

பூதன் pūtaṉ, *n.* <*pūta.* Purified soul; பரிசுத்தன். புனமயி லுமையொடும் புணர்ந்த பூதனே (வேதாரணி. விநாயக. 43).

பூதான்மா pūtāṉmā, *n.* <*bhūta*+. The state of soul, when it is associated with the five elements; பஞ்சபூதங்களோடு கூடியிருக்கும் ஆன்மநிலை. (சி. போ. பா. 6, 2, பக். 317.)

பூதி pūti, *n.* prob. *bhūti.* Gold; பொன். பூதி வெற்பென (வேதாரணி. சாலிகோ. 14).

பூதிவாதம் pūtivātam, *n.* <*pūtivāta.* Bael; வில்வம்.

பூநெட்டி pū-neṭṭi, *n.* <பூ+. Pith; வெண்கிடை. *Loc.*

பூநோன்பு pū-nōṉpu, *n.* <id.+. A festival observed by maidens on the third day of Poṅgal, in Koṅkunāṭu; கொங்குநாட்டில் பொங்கலின் மூன்றாம்நாள் கன்னிகைகள் கொண்டாடும் பண்டிகை. பூநோன்புக்குப் பூப்பறிக்கச் சென்று (எங்களூர், 159).

பூப்பொங்கல் pū-p-poṅkal, *n.* <id.+. See பூநோன்பு. (எங்களூர், 90.)

பூப்ஸானி pūpsāṇi, *n.* Zenana lady; கோஷாஸ்திரீ. (C. G.)

பூபதனப்பூப்புடம் pū-patana-p-pū-p-puṭam, *n.* <பூ+பதனம்+பூ+. A method of calcining medicine, one of *muppū-p-puṭam,* q.v.; முப்பூப்புடத்து ளொன்று. *Loc.*

பூம்மரம் pūm-maram, *n.* <E. *boom*+. Boom; கப்பற்பாய்களின் அடிப்பக்கத்தை விரிக்கவுதவும் பறுவான்வகை. (M. Navi.)

பூம்மாடு pūm-māṭu, *n.* <பூம் (onom.)+. Performing bull; பெருமாள்மாடு. *Tp.*

பூமம் pūmam, *n.* <*bhūman.* Abundance, plenty; மிகுதி. பூமச் சோதியருளால் (பாடு. 100, சாற்றுபறை).

பூமாலைகொண்டுசொரிதல் pūmālai-koṇṭu-corital, *n.* <பூமாலை+. A kind of votive offering to a temple; நேர்த்திக்கடன்வகை. *Nāñ.*

பூமிசக்கரம் pūmi-cakkaram, *n.* <பூமி+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

பூமிசம்பகம் pūmi-campakam, *n.* <id.+. False zedoary; நேர்ப்பிசின். (M. M.)

பூமிப்பிராட்டி pūmi-p-pirāṭṭi, *n.* <id.+. The Goddess of the Earth; பூமிதேவி. *பூமிப் பிராட்டியை எழுந்தருளுவித்து* (S. I. I. viii, 160).

பூமியாகாயச்சக்கரம் pūmi-y-ākāya-c-cakkaram, *n.* <id.+ஆகாயம்+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

பூமேனடந்தான் pū-mēṉaṭantāṉ, *n.* <பூ+மேல்+. Arhat; அருகக்கடவுள். (குறள், 3, உரை.)

பூமொக்குள் pū-mokkuḷ, *n.* <id.+. Chalice; பூசைப்பாத்திரம். *Pond.*

பூயஞ்சம்பா pūyañ-campā, *n.* A kind of *campā* paddy; சம்பா நெல்வகை. (விவசா. 2.)

பூர்ணயனம் pūrṇāyaṉam, *n.* <*pūrṇa* +. The four months, Paṅkuṉi, Cittirai, Puraṭṭāci and Aippaci; பங்குனி சித்திரை புரட்டாசி ஐப்பசி யாகிய நான்கு மாதங்கள். (பெரியவரு. 27.)

பூர்வகௌளம் pūrva-kauḷam, *n.* <*pūrva* +. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

பூர்வசென்மவாசனை pūrvaceṉma-vācaṉai, *n.* <பூர்வசன்மம்+. The effect of past karma; பழவினைத்தொடர்பு. *Colloq.*

பூர்வபக்ஷி-த்தல் pūrva-pakṣi-, *11 v. tr.* <*purva*+*pakṣa*. To state the opponent's views and arguments for the purpose of answering them; எதிர்வாதத்தைக் கூறுதல். *ஓரர்த்தத்தைத் தாயார் வார்த்தையாலே பூர்வபக்ஷித்து மகள் வார்த்தையாலே ஸித்தாந்திக்கிறது* (திவ். திருநெடுந். 18, வ்யா.).

பூர்வவாசனை pūrva-vācaṉai, *n.* <id.+. See பூர்வசென்மவாசனை. *Colloq.*

பூர்வாங்கம் pūrvāṅkam, *n.* <*pūrvāṅga*. (Mus.) Lower tetrachord of the octave; ஸ்தாயியிலுள்ள முதல் நான்கு ஸ்வரங்கள். (Mus. of Ind. 63.)

பூர்வாசாரம் pūrvācāram, *n.* <*pūrva*+ +*ācāra*. Ancient custom; பழைய வழக்கம். *பூர்வாசாரங்கொண்டு இறையிலியாக* (S. I. I. vi, 145).

பூர்வார்ஜிதம் pūrvārjitam, *n.* <id.+ *arjita*. Ancestral property; முன்னோர் ஈட்டிய பொருள். *நான் விடேன் விடேன் பூர்வார்ஜித பாகம்* (சர்வசமய. பக். 68).

பூர்விகசொத்து pūrvika-cottu, *n.* <பூர்விகம்+. See பூர்வார்ஜிதம். *Colloq.*

பூரணசூத்திரி pūraṇa-cūttiri, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

பூரணம் pūraṇam, *n.* cf. பூஞ்சணம். Mould, mildew; பூஞ்சாளம். *இந்தப் பண்டம் பூரணம் பிடித்துவிட்டது. Loc.*

பூரந்தொழுதல் pūran-toḻutal, *n.* <பூரம் +. cf. பூரங்கழித்தல். Ceremony of warding off evil eye from a pubescent girl, by waving coloured rice about her; பெண் இருதுவானபோது திருஷ்டிகழிக்குஞ் சடங்கு. *Loc.*

பூராயம் pūrāyam, *n.* (யாழ். அக.) 1. Priority in time; antiquity; பூர்வம். 2. Desire; விருப்பம்.

பூரி pūri, *n.* See பூரியரிசி. *Nāñ.*

பூரிக்குத்தலரிசி pūri-k-kuttal-arici, *n.* <பூரி+குத்து-+. Polished rice; நன்றாய்த் தீட்டிய அரிசி. (S. I. I. vi, 11.)

பூரிச்சேரல் pūri-c-cēral, *n.* <id.+perh. சொல். A kind of rice; அரிசிவகை. *திருப்புதிய தமுதுக்குப் பூரிச்சேரல்* (S. I. I. vii, 300).

பூரிநெல் pūri-nel, *n.* <id.+. Mixed paddy; கலப்பு நெல். (S. I. I. ii, 127.)

பூரியது pūriyatu, *n.* prob. id. That which is low; தாழ்வானது. *சீரியன வுள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும்* (குறள், 1206, மணக்.).

பூரியரிசி pūri-y-arici, *n.* <id.+. White, polished rice; வெள்ளையரிசி. *Nāñ.*

பூரு-தல் pūru-, *5 v. tr.* Corr. of பீறு-. To pierce; துளைத்தல். *Colloq.*

பூருவணம் pūruvaṇam, *n.* <பூர்வான்னம். Forenoon; முற்பகல். (விதான. குணகுண. 112, உரை.)

பூவாடைப்பானை pūvāṭai-p-pāṉai, *n.* <பூவாடை+. A pot in which the cloth offered to *pūvāṭai-k-kāri* at a *cumaṅkali-p-pirārttaṉai* is kept till the next *cumaṅkali-p-pirārttaṉai*; சுமங்கலிப்பிரார்த்தனையன்று பூவாடைக்காரிக்குச் சமர்ப்பிக்குஞ் சேலையை அடுத்த சுமங்கலிப்பிரார்த்தனைவரை சேமித்துவைக்கும் பானை. *Loc.*

பூவை pūvai, *n.* A variety of *kāyā*; காயாச்செடிவகை. *பூவையாவது காயாவின் அவாந்தர பேதமானுப்போலே* (திவ். பெரியாழ். 3, 4, 9, வ்யா. பக். 620).

பூனைக்காஞ்சி pūṉaikkāñci, *n.* <பூனைக் காஞ்சொறி. Small climbing nettle; பூனைக்காஞ் சொறி. (பச். மூ.)

பூஜாவாசி pūjā-vāci, *n.* <*pūjā*+. Term of respect; மரியாதைச் சொல். உத்தம்ய தை தோற்ற பூஜாவாசி சப்தங்களாலே சொல்லக் கடவதென்று பூர்வாசார்யர்கள் (திவ். திருநெடுந். 11, வ்யா. பக். 95).

பெ

பெட்டிபோடு-தல் peṭṭi-pōṭu-, *v. intr.* <பெட்டி+. To play on the harmonium; ஆர்மோனியத்தை வாசித்தல். *Mad.*

பெட்டிமோதிரம் peṭṭi-mōtiram, *n.* perh. id.+. A kind of ring; மோதிரவகை. *Pond.*

பெட்டியடி peṭṭi-y-aṭi, *n.* <id.+. Cashier; cash-keeper; ரொக்க வரவு செலவு செய்யுங் கணக்கப்பிள்ளை. *Nāṭ. Cheṭṭi.*

பெட்டு peṭṭu, *n.* [T. *beṭṭu.*] Esteem, regard; respect; கௌரவம். பெட்டுப் போகாமல் கேட்போ ரனைவருக்கும் (மதி. க. ii, 9).

பெட்பு peṭpu, *n.* <பெள்-. Protection; பாதுகாப்பு. (தொல். சொல். 338.)

பெண்டுவை-த்தல் peṇṭu-vai-, *v. tr.* <பெண்டு+. To keep as concubine; வைப்பாட்டியாகக் கொள்ளுதல். நீரிவளைப் பெண்டுவைத்துக் கொள்ளும் (தெய்வச். விறலிவிடு. 292).

பெண்ணாசி peṇ-ṇāci, *n.* prob. பெண்+. cf. பொன்னாசி. Bleeding nose; இல்லிமூக்கு. *Nāñ.*

பெண்பள்ளி peṇ-paḷḷi, *n.* <id.+. Nunnery; பெண்துறவிகள் தங்குமிடம். இம்மனையும் இக்கிணறும் பெண்பள்ளி யாவதாகவும் (S. I. I. vii, 24).

பெத்தபஞ்சாக்கரம் petta-pañcākkaram, *n.* <*baddha*+. A form of the mantra *namaccivāya;* பஞ்சாட்சரமந்திரவகை. (பஞ்சாக்கர மாலை, 21, உரை.)

பெத்திரிவீடு pettiri-vīṭu, *n.* <E. *factory* +. Factory; தொழிற்சாலை. (Ekoji's copper plate to the Dutch, 1676.)

பெயர்த்துக்கொடுக்கும்வலி peyarttu-k-koṭukkum-vali, *n.* <பெயர்-+கொடு-+. Preliminary labour pains, due to movements of the foetus; பிரசவவலிக்குமுன் சிறிதுசிறிதாக வலிக்கும் நோவு. *Loc.*

பெயர்த்துறை peyar-t-t-urai, *n.* <id.+. Repetition; அனுவாதம். (குறள், 944, உரை.)

பெயர்ப்போலி peyar-p-pōli, *n.* <பெயர் +. Word partaking of the nature of a noun; உரிச்சொல்வகை. (தொல். சொல். 297, சேனா.)

பெயரட்டவணை peyar-aṭṭavaṇai, *n.* <id.+. Index of names; பேரட்டவணை. *Loc.*

பெரட்டு peraṭṭu, *n.* Corr. of புரட்டு. Deception; புரட்டு. பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும் (கனம் கிருஷ்ணையர், கீர்த். 21).

பெரியகரடி periya-karaṭi, *n.* <பெரு-மை +. The Great Bear; சப்தரிஷிமண்டலம். *Pond.*

பெரியசம்பா periya-campā, *n.* <id.+. A kind of *campā* paddy, maturing in six months; ஆறு மாதத்திற் பயிராகும் சம்பாநெல் வகை. (விவசாய. 1.)

பெரியதேவர் periya-tēvar, *n.* <id.+. 1. The predecessor of a ruling king; ஆளும் அரசனுக்கு முன்ஆண்ட அரசன். (Insc.) 2. The sacred bull *Nandi;* நந்திதேவர். (பெரியபு. வெள். 44.)

பெரியமுதலியார் periya-mutaliyār, *n.* <id.+. The Vaiṣṇava saint Āḷavantār; ஆளவந்தார் என்னும் வைணவப்பெரியார். பெரியமுதலியார் . . . ஆதரிக்கும்படியான ஸ்ரீபராசர மஹர்ஷி (ரஹஸ்ய. 308).

பெரியவியாழக்கிழமை periya-viyāḻa-k-kiḻamai, *n.* <id.+. Maundy Thursday; ஈஸ்டர் பண்டிகையில் வரும் வியாழக்கிழமை. *Chr.*

பெரியிலாமிச்சை periyilāmiccai, *n.* cf. பெரொலுமிச்சை. Citron lemon, m. tr., *Citrus medica-limonum;* துரிஞ்சி. (L.)

பெருக்காலட்டை perukkāl-aṭṭai, *n.* prob. பெரு-மை+கால்+. A kind of leech; அட்டைவகை. *Loc.*

பெருக்குமாறு perukku-māṟu, *n.* <பெருக்கு-+. Broom; விளக்குமாறு *Loc.*

பெருகிலை perukilai, *n.* Pink-tinted heart-leaved glory tree; வெள்ளைக்கண்ணி. (L.)

பெருங்கடுகு peruṅ-kaṭuku, *n.* <பெரு-மை +. A kind of mustard; கடுகுவகை. *Loc.*

பெருங்கத்தரிசால் peruṅ-kattari-cāl, *n.* <id.+சத்திரி+. Candelabra; கிளைவிளக்குத் தண்டு. *Pond.*

பெருங்கரப்பான் peruṅ-karappāṉ, *n.* <id.+. A kind of eruption; கரப்பான்வகை. (தஞ். சர. iii, 92.)

பெருங்கிளையார் peruṅ-kiḷaiyār, *n.* <id.+. A sub-division of the Paḷḷar caste; பள்ளர்வகையினர். *Tp.*

பெருங்கீற்றுரூபாய் peruṅ-kīṟṟu-rūpāy, *n.* <id.+. An ancient coin; பழைய நாணய வகை. (சரவண. பணவிடு. 63.)

பெருங்குடி peruṅ-kuṭi, *n.* <id.+. Landlord; நிலச்சுவான். (Colas, ii, 389.)

பெருங்குரும்பை peruṅ-kurumpai, *n.* <id.+. (சங். அக.) 1. Costum; கோஷ்டம். 2. Long zedoary; பூலாங்கிழங்கு.

பெருந்தொடர் perun-toṭar, *n.* <id.+. (Gram.) Compound or complex sentence; எழுவாய் பயனிலை முடிந்த வாக்கியஞ் சிலவற்றைப் பிணைத்துநடக்குந் தொடர்ந்தவாக்கியம். (தொல். சொல். 42, சேனா.)

பெரும்பாடிகாவல் perum-pāṭi-kāval, *n.* <id.+. Chief watchman; தலைமைக்காவலாள். (M. E. R. 407 of 1921.)

பெரும்பேரன் perum-pēraṉ, *n.* <id.+. Great-grandson; கொட்பேரன். *Loc.*

பெருமத்தளி peru-mattaḷi, *n.* <id.+. A kind of drum; முழவம். (திவ். திருப்பள்ளி. 9, வ்யா.)

பெருமாப்பு perum-āppu, *n.* <id.+. Shooting stick. See ஆப்புத்தள்ளி. *Pond.*

பெருமுதியன் peru-mutiyaṉ, *n.* <id.+. A temple official; கோயில் அதிகாரிகளு ளொருவன். (T. A. S. iii, 166.)

பெருவரகு peru-varaku, *n.* <id.+. A kind of common millet; வரகுவகை. (விவசா. 4.)

பெருவரி peru-vari, *n.* <id.+. A tax in cash; காசாயவகை. (S. I. I. i, 87.)

பெருவரைமீன் peruvarai-mīṉ, *n.* perh. பெருவலை+. A fish. See அறிசா. (சங். அக.)

பெருவளவாய் peru-vaḷa-vāy, *n.* <பெருமை+வளம்+. Big channel; பேராற்றுக்கால். நாட்டெக்குப் பாயும் பெருவளவாயும் (S. I. I. ii, 54).

பெருவாயன் peru-vāyaṉ, *n.* <id.+. 1. Basket; கடகப்பெட்டி. *Loc.* 2. See பெருமத்தளி. (திவ். திருப்பள்ளி. 9, வ்யா.)

பெருவீடு peru-vīṭu, *n.* perh. id.+விடு-. Letting out cattle in the afternoon, for grazing; பிற்பகலில் மாடுகளை மேய்க்கவிடுகை. சிறுவீடன்றியே பெருவீடும் விடும்படியாய் (திவ். திருப்பள்ளி, 4, வ்யா.).

பெருவெள்ளம் peru-veḷḷam, *n.* <id.+. The Deluge; பிரளய வெள்ளம். உண்ணுதே பெருவெள்ளம் உண்ணுமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட கண்ணாளன் (திவ். பெரியதி. 2, 6, 7).

பெலி peli, *n.* perh. *bahis.* Banishment, excommunication; ஊருக்கு அல்லது சாதிக்குப் புறம்பாக்குகை. (W.)

பெள்-தல்[பெட்டல்] peḷ-, 9 *v. tr.* To protect; பாதுகாத்தல். பெட்டல் என்பது புறந்தருதல் (தொல். சொல். 332, இளம்பூ.).

பெற்பரோடி perparōṭi, *n.* Back-stays. See பிராந்தல். (M. Navi.)

பெறுமாதம் peṟu-mātam, *n.* <பெறு-+. The month of parturition; பேறுகாலம். *Rd.*

பெறுமுரி peṟu-muri, *n.* prob. id.+. Wages; சம்பளம். பரிகரத்தார் பெறுமுரியாகப் பெற்று (S. I. I. vii, 30).

பே

பேசாதிரு-த்தல் pēcātiru-, *v. intr.* <பேசு-+ஆ neg.+. To keep quiet; செயலற்றிருத்தல். வாத்யங்கள் வாய்த்தால் கூத்தாடுவொருடம்பு பேசாதிரா நிற்றே (திவ். பெரியதி. 1, 2, 1, வ்யா. பக். 59).

பேசுலம் pēculam, *n.* A plant, *Arum colocasia;* செடிவகை. *Loc.*

பேசுலி pēculi, *n.* See பேசுலம். *Loc.*

பேதவாதி pēta-vāti, *n.* <பேதம்+. Pluralist; கடவுள் சீவன் உலகு இவை வேறுபட்டன என்னுங் கொள்கையுடையோன். சார்வாகாதிகள் அனைவரும் பேதவாதிகள்; வைதாந்தி ஒருவரே அபேதவாதி (விவேகசிந். பக். 20).

பேதனம் pētaṉam, *n.* <*bhēdana.* Dividing; பகுப்பு. *Pond.*

பேதாபேதி pētāpēti, *n.* <*bhēdābhēdin.* Follower of the Bhāskara school of philosophy; பேதாபேத சித்தாந்த முடையோன். (திவ். திருச்சந். 1, வ்யா. பக். 9.)

பேதுரு pēturu, *n.* St. Peter; இராயப்பர் என்ற கிறிஸ்தவப் பெரியார்.

பேதைபாதம் pētai-pātam, *n.* perh. பேதம்+. An ornament for the leg of an idol; தெய்வத்தின் காலில் அணியும் அணிவகை. திருக்கழற்கீழிடும் பேதைபாதமும் (S. I. I. viii, 39).

பேதைமை pētaimai, *n.* Lack of discernment; உய்த்துணராமை. (தொல். பொ. 248, இளம்பூ.)

பேய்க்கதி pēy-k-kati, *n.* <பேய்+. (Buddh.) One of *ṣaṭ-kati,* q. v.; ஷட்கதியு ளொன்று.

பேய்த்தி pēytti, *n.* Fem. of பேய். Demoness; பேய்ச்சி. சிறுபேய் பெரும்பேய்த்தியைச் சென்றுபற்றும் (நீலகேசி, 8).

பேய்நரி pēy-nari, *n.* <பேய்+. Rabid fox; வெறிபிடித்த நரி. பேய்நாய் பேய்நரி முதலியவற்றின் கடிகளுக்கு (தஞ். சர. iii, 102).

பேய்ப்புகையிலை pēy-p-pukaiyilai, *n.* <id. +. A kind of tobacco; காட்டுப்புகையிலை. (சித். அக.)

பேய்முள்ளி pēy-muḷḷi, *n.* <id. +. Wild thorny plant; காட்டுமுள்ளி. (சித். அக.)

பேய்வரகு pēy-varaku, *n.* <id. +. Wild ragi; காட்டுவரகு. (சித். அக.)

பேய்வாதுமை pēy-vātumai, *n.* <id. +. Wild almond; வாதுமைவகை. *Loc.*

பேயின்சாப் pē-y-iṉcāp, *n.* <U. *bē-insāph.* Injustice, அநீதி. (P. T. L.)

பேயீடு pēy-īṭu, *n.* <பேய் +. A disease of children, attributed to the influence of evil spirits; பேயின் உபத்திரவத்தால் உண்டாவதாகக் கருதப்படும் பிள்ளைநோய். புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்றதென்கிறார் (திவ். பெரியாழ். 2, 5, 9, வ்யா. பக். 343).

பேயுடுப்பை pēy-uṭuppai, *n.* <id. +. A plant; செடிவகை. (விவசா. 6.)

பேர்க்கடமை pēr-k-kaṭamai, *n.* <பேர் +. A tax on individuals; ஆள்வரிவகை. (I. M. P. Cg. 529.)

பேர்கெட்டவள் pēr-keṭṭavaḷ, *n.* <id. +. Prostitute; விபசாரி. *Colloq.*

பேர்கெட்டவன் pēr-keṭṭavaṉ, *n.* <id. +. Rogue, scoundrel; அயோக்கியன். *Loc.*

பேர்வரி pēr-vari, *n.* <id. +. Poll tax; தலைவரி. (Colas, ii, 334.)

பேர்வாசி[1] pēr-vāci, *n.* <id. +. 1. Being only nominal; பேர்மட்டிலுள்ளது. பேர்வாசியே யாம்படி நாம் பண்ணிவைத்த இருவகைப்பட்ட கர்மங்களையும் போக்குவார் (ஈடு, 1, 6, 9). 2. Characteristics believed to be acquired by a child being named after a person; ஒருவன் பெயரை குழந்தைக்கிடுவதால் அதற்குண்டாவதாகக் கருதும் குணம். *Colloq.*

பேர்வாசி[2] pērvāci, *n.* Corr. of பேர்பாதி. Exactly half; சரிபாதி. *Colloq.*

பேரணி pēr-aṇi, *n.* <பெரு-மை +. 1. The prime cause; மூலகாரணம். பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போர்தார்கள் (ரஹஸ்ய. 260). 2. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

பேரழை-த்தல் pēr-aḻai-, *v. intr.* <பேர் +. To take the roll-call or attendance; ஆஜர்க்கணக்கெடுத்தல். *Pond.*

பேரிசை pēr-icai, *n.* <பெரு-மை +. (Poet.) A kind of poetic composition; ஐவகைப்பட்ட வெண்டுறைச்செந்துறையு ளொன்று. (யாப். வி. 538.)

பேரிராசி pēr-irāci, *n.* <பேர் +. See பேர்வாசி[1], 2. *Colloq.*

பேரிளமையார் pēr-iḷamaiyār, *n.* <பெரு-மை +. Middle-aged persons; நடுத்தர வயதினர். (M. E. R. 253 of 1925.)

பேருடைச்சிறப்பு pēr-uṭai-c-ciṟappu, *n.* <பேர் + உடை- +. Grant made to a child at its naming ceremony; நாமகரண காலத்தில் அளிக்கும் இறும். (S. I. I. iv, 121.)

பேருண்டம் pēruṇṭam, *n.* <*bhēruṇḍa.* Fear; பயம். (நாநார்த்த.)

பேளை pēḷai, *n.* Playing marbles; கோலிக்காய். *Colloq.*

பேறாளன் pēṟ-āḷaṉ, *n.* <பேறு +. One who collects tax by force; நிர்ப்பந்தித்து வரி தண்டுவோன். எங்களைப் பேறாளர் கையிலே காட்டிக் கொடுக்கையில் (Pudu. Insc. 323).

பேறு pēṟu, *n.* <பெறு-. 1. Creation; சிருஷ்டி. (ஈடு, 8, 10, 6.) 2. Result; முடிவு. பெருக்கிக் கழித்துப் பேறுகூறலும் (T. C. M ii, 2, 473).

பேனகத்தி pēṉa-katti, *n.* <E. *pen* +. Penknife; சிறுகத்திவகை. *Pond.*

பேனம் pēṉam, *n.* Opium; அபின். (நாமதீப. 393.)

பேஷ்கீ pēṣkī, *n.* Advance money; முன்பணம். (P. T. L)

பை

பைக்கே paikkē, *n.* [T. *paikam.*] Money; பணம். (P. T. L.)

பைங்கால்நிலம் pai-ṅ-kāl-nilam, *n.* prob. பை + கால் +. Wet field; நஞ்சைநிலம். பைங்கால் நிலத்தைப் பருமரக் காடென்று (சரவண. பணவிடு. 142).

பைங்கிணறு pai-ṅ-kiṇaṟu, *n.* <id. +. Small pond; குட்டை. (S. I. I. vii, 41.)

பைசாசபூமி paicāca-pūmi, *n.* <பைசாசம் +. One of the mythological divisions of the world; புராணங்கள் கூறும் பூமிகளு ளொன்று. (அபி. சிந்.)

பைசுன்யம் paicuṉyam, *n.* <*paiśuna.* Miserliness; உலோபம். *பைசுன்ய பண்பினர் (பாரு. 28, அடியவர்.).*

பைத்தியன் paittiyaṉ, *n.* <பைத்தியம். Madman; பைத்தியக்காரன். *Pond.*

பையை paiyai, *n.* perh. *paryāya.* Transformation; பரியாயம். *பட்டனவைப்பொருள் பையைகளே யென்னும் பான்மையினுல் (நீலகேசி, 389).*

பைரி pairi, *n.* Inspector of cattle; கால்நடைகளைப் பரிசோதிப்பவன். (மதி. க. ii, 13.)

பைவா-தல் [பைவருதல்] pai-vā-, *13 v. intr.* cf. பையெனல். To be distressed; துன்புறுத்தல். *பைவருங்கேளிரும் பதியும் கதறமெய் விடும்போது (கந்தரலங். 84).*

பொ

பொக்கணவன் pokkaṇavaṉ, *n.* <பொக்கணம். Śiva; சிவபிரான். (தஞ். சர. i, 79.)

பொக்கிசம் pokkicam, *n.* [K. *bokkasa.*] 1. Treasury; பொக்கிஷசாலை. 2. Office of a treasurer; பொக்கிஷவேலை பார்க்கும் உத்தியோகம். *பொக்கிசம் முத்திருளப்ப பிள்ளை* (I. M.P. Rd.).

பொக்கிப்பரு pokki-p-paru, *n.* perh. பொக்கு+. A kind of boil in the ear; செவிப் புண்வகை. (பரராச. i, 134.)

பொக்கிப்பிளவை pokki-p-piḷavai, *n.* perh. id.+. A kind of carbuncle; பிளவைவகை. (பரராச. i, 49.)

பொக்குமல்லி pokkumalli, *n.* perh. E. *bougainville.* A flowering plant, *Bougainvillaea;* பூச்செடிவகை. *Madr.*

பொக்குமுத்து pokku-muttu, *n.* <பொக்கு+. False pearl; சூதுமுத்து. *Loc.*

பொக்கை pokkai, *n.* cf. புற்கை. Porridge; மோர்க்கூழ். *Loc.*

பொகுட்டு pokuṭṭu, *n.* Cone; கூர்முனைக் கோபுரம் போன்ற வடிவு. (J. N.)

பொங்காரம் poṅkāram, *n.* perh. பொங்கு-+காரம். Ire; மிகுகோபம். *பூசலைப்பார்த்துப் பழைய பொங்காரந் தீராமல் (தெய்வச். விறலிவிடு. 479).*

பொடிக்காசு poṭi-k-kācu, *n.* <பொடி+. Bribe; கைக்கூலி. *நானாவித இமிசை செய்து பொடிக்காசு வாங்குகிறவிதங் காண்க (தாசில்தார்நா. பக். 90).*

பொடிமாஸ் poṭimās, *n.* 1. A kind of relish; வியஞ்சனவகை. *Loc.* 2. A confection; பக்ஷணவகை. (மதி. க. ii, 15.)

பொடியுழவு poṭi-y-uḻavu, *n.* <பொடி+. Dry ploughing, dist. fr. *toḷi-y-uḻavu;* புழுதிக் காலுழவு.

பொத்தல் pottal, *n.* <Fr. *bouteille.* Bottle; போத்தல். *Pond.*

பொதிக்கூலி poti-k-kūli, *n.* <பொதி+. Wages for carrying headloads; தலைச்சுமை யெடுத்தற்குரிய கூலி. (S. I. I. vi, 29.)

பொதிகாரம் poti-kāram, *n.* perh. பொதி-+. Caustic; காரமருந்து. *பொதிகாரமிட்ட புண் போல் (சரவண. பணவிடு. 109).*

பொதிகெளிறு poti-keḷiṟu, *n.* perh. பொதி+. A sea-fish; கடல்மீன்வகை. (J. N.)

பொதுக்கூட்டம் potu-k-kūṭṭam, *n.* <பொது+. Public meeting; பொதுஜனக்கூட்டம்.

பொதுக்கெனல் potukkeṉal, *n.* Onom. expr. of suddenness; ஜேரேரெனல். (அகநா. 39, உரை.)

பொதுநாயகம் potu-nāyakam, *n.* <பொது+. Universal sovereignty; எல்லாவற்றிற்குந் தலைமை. *பொதுநாயகம் பாவித்து இறுமாந்து (திவ். பெரியாழ். 4, 9, 4).*

பொதும்பல் potumpal, *n.* <id. General income; பொதுவருமானம். (J. N.)

பொதுமீக்கூற்றம் potu-mī-k-kūṟṟam, *n.* <id.+மீ+. Mt. Potiyil; பொதியில். (புறநா. 135, உரை.)

பொந்தன் pontaṉ, *n.* A sea-fish, attaining one foot in length, with black and white spots; கடல்மீன்வகை. (J. N.)

பொம்மாசு pommācu, *n.* cf. பொம்மன் மாசு. Pomelo; பம்பளிமாசு. *Loc.*

பொம்மைச்சீட்டு pommai-c-cīṭṭu, *n.* <பொம்மை+. Playing cards; விளையாட்டுச் சீட்டு. *Loc.*

பொம்மைவாசாப்பு pommai-vācāppu, *n.* <id.+. Puppet show; பொம்மலாட்டம். *Pond.*

பொய்க்காய்வு poy-k-kāyvu, *n.* <பொய்+. Temporary estrangement; நிலையில் வெறுப்பு. (குறள், 1246.)

பொய்செய்-தல் poy-cey-, *v. intr.* <id. To prove false; உண்மையற்று ஒழுகுதல். *காரியத்தில் வந்தால் மெய்செய்வாரைப் போலே பொய்செய்து நிலைக்கட்டும் (ஈடு, 10, 4, 5).*

பொய்வெட்டு poy-veṭṭu, *n.* <id.+. A defect in coins; நாணயக்குற்றவகை. (சரவண. பணவிடு. 67.)

பொர்மா pormā, *n.* <Fr. *Forme.* Forme; எழுத்துக்கோத்த அச்சுச்சட்டம். *Pond.*

பொரிவாயன் pori-vāyaṉ, *n.* perh. பொரி +. A sea-fish, white, attaining seven inches in length; கடல்மீன்வகை. (J. N.)

பொருட்பெற்றி poruṭ-peṟṟi, *n.*<பொருள் +. Essential or underlying truth, reality; தத்துவம். (குறள், 34, அதி. அவதா.)

பொருத்தச்சுவடி porutta-c-cuvaṭi, *n.* <பொருத்தம்+. Treatise on carpentry; தச்சநூல். *Nāñ.*

பொருமல் porumal, *n.* <பொருமு-. Impatience; மிக்க ஆதுரம். பொருமலை நானெங்கே யடக்குவேன் (தெய்வச். விறலிவிடு. 239).

பொருள்புரிநூல் poruḷ-puri-nūl, *n.* <பொருள்+புரி-+. Treatise on polity; அர்த்த சாத்திரம். (பெருங். உஞ்சைக். 32, 1.)

பொருள்வழு poruḷ-vaḻu, *n.* <id.+. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. 525.)

பொருளியல்புரைத்தல் poruḷ-iyalp-uraittal, *n.* <id.+இயல்பு+. Indication of the subject-matter of a treatise; வத்துநிர்த்தேசம். (சி. போ. பா. மங். பக். 1.)

பொல்லாங்கன் pollāṅkaṉ, *n.* <பொல்லாங்கு. Mischievous person; துஷ்டப்புக்காரன். (யாழ். அக.)

பொல்லாது pollātu, *n.* <பொல்லா-மை. Emaciation; thinness, as of body; spoilt condition; உடல் முதலியன கேடுற்ற நிலை. நீ இப்படிப் பொல்லாதாயிருப்பானே னென்ன, நாம் நோயாய்க் கிடந்தோம் கண்டீரேயென்று (சங்கற்பநி. 205, உரை.)

பொல்லாநிலம் pollā-nilam, *n.* <id.+. Cremation ground; மயானம். உங்களைப் பொல்லா நிலத்திலே யிடுவதற்கு முன்னம் (திவ். திருப்பல். 4, வ்யா. பக். 50).

பொல்லாப்பு pollāppu, *n.* <id. Objection; ஆட்சேபனை. இக்காணிக்குப் பொல்லாப்புச் சொல்லில் (Pudu. Insc. 327).

பொலபொலவெனல் pola-pola-v-eṉal, *n.* Onom. expr. signifying (a) crumbling, as of earth; பொலுபொலேனல். (சுசசங். 2.): (b) looseness; நெகிழ்ந்திருத்தற் குறிப்பு. *Tj.*

பொலிமுறைநாகு poli-muṟai-nāku, *n.* <பொலி+முறை+. Heifer fit for covering; பொலியக்கூடிய பக்குவமுள்ள கிடாரி. (S. I. I. iv, 102.)

பொற்கெனல் porkeṉal, *n.* cf. பொருக்கெனல். Onom. expr. of suddenness; விரைவுக்குறிப்பு. பொற்கென் றெழுந்து முத்தந்தந்து (கனம் கிருஷ்ணையர், கீர்த். 17).

பொற்பலகை poṟ-palakai, *n.* <பொன்+. Ornamental plank for carrying idols; விக்கிரகங்களையெடுத்துச் செல்லுதற்குரிய அலங்காரப் பலகை. பொற்பலகை யேறிவந்து பூங்கோயி லெய்தினன் (சிவக். பிரபந். தஞ்சைப்பெருவுடையாருலா, 312).

பொற்பாளை poṟ-pāḷai, *n.*<id.+. A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

பொற்பின்னல் poṟ-pinnal, *n.* <id.+. Waist-band woven of gold threads; பொற்கம்பியாற் பின்னிய அரைஞாண். திருவரையில் சாத்தின பொற்பின்னலும் (திவ். பெரியாழ். 1, 7, 3, வ்யா. பக். 142).

பொற்பூ poṟ-pū, *n.* prob. id.+. An ancient tax; பழைய வரிவகை. (M. E. R. 217 of 1927-8.)

பொன்காண்(ணு)-தல் poṉ-kāṇ-, *v. intr.* <பொன்+. To test the quality of gold; மாற்றுக்காணுதல். பொன்காண்பார்க ளாகவும் (S. I .I. vi, 149).

பொன்தாழை poṉ-tāḻai, *n.* <id.+. Yellow aloe; மஞ்சட்டாழை. (சித். அக.)

பொன்பண்டாரவாசல் poṉ-paṇṭāra-vācal, *n.* <id.+பண்டாரம்+. Treasury; பொக்கிஷம். (M. E. R 681 of 1919.)

பொன்வர்க்கம் poṉ-varkkam, *n.* <id.+. Money taxes; பணமாக வாங்கும் வரிகள். பல பொன்வர்க்கமும் (S. I. I. iv, 79).

பொன்வன்னமீன் poṉ-vaṉṉa-mīṉ, *n.* <id.+வன்னம்+. A kind of fish; மீன்வகை. *Pond.*

பொன்னரளி poṉ-ṉ-araḷi, *n.* <id.+. Common yellow trumpet-flowered tree; நாகசெண்பகம். (B.)

பொன்னுகம் poṉ-ṉ-ākam, *n.* <id.+. cf. பொன்னுடம்பு. Pudendum muliebre; பெண்குறி. (சங். அக.)

பொன்னிப்பிளவை poṉṉi-p-piḷavai, *n.* perh. id.+. A kind of carbuncle; பிளவைவகை. (பராரச. i, 49.)

பொன்னுருவிமாலை poṉ-ṉ-uruvi-mālai, *n.* <id.+உருவு-+. A kind of necklace; கழுத்தணிவகை. பொன்னுருவிமாலைதனைக் கழற்றியெறிவேன் (கோவ. க. 18).

பொன்னொத்தமலர்ப்பூண்டு poṉ-ṉ-otta-malar-p-pūṇṭu, *n.* <பொன்+ஒ-+மலர்+. Chrysanthemum; சாமந்தி. *Pond.*

போ

போக்கறு-த்தல் pōkkaṟu-, *v. tr.* <போக்கு+. To make no default; முட்டின்றிச் செய்தல். கோயில் தேவைகளும் சந்திராதித்தவரை போக்கறப்பாருகச் சிலாலேகை பண்ணிக்கொடுத்தோம் (S. I. I. iv, 102). கடமைத் தட்டுப் போக்கறுக்க வேணுமென்று மகாசபையோம் சம்மதித்து (S. I. I. viii, 165).

போக்கறுதி pōkkaṟuti, *n.* <id.+. Want of an alternative; புகலின்மை. முன்பு பலபடியுஞ் சொன்னதனையே போக்கறுதியாற் பின்புஞ் சொல்லுகின்றேன் (நீலகேசி, 392, உரை).

போக்கிச்சொல்(லு)-தல் pōkki-c-col-, *v. intr.* <போக்கு-+. To deal with, in a latter place; பின்னர்க் கூறுதல். அவை இரண்டு திணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும் (நேமிநா. 41, உரை).

போக்கியம் pōkkiyam, *n.* (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவி வகை. (யாப். வி. 497.)

போக்கு[1] pōkku, *n.* <போ-. Conduct; நடத்தை. அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு (ஈடு, 1, 4, 7).

போக்கு[2]-தல் pōkku-, *5 v. tr.* Caus. of போ-. To teach; கற்பித்தல். ஆசார்யன் போக்கின வையேயாகிலும் தத்ஸந்நிதியிலே சொல்லக்கடவதல்ல (திவ். திருநெடுந். 13, வ்யா.).

போக்குச்செய்-தல் pōkku-c-cey-, *v. tr.* <போக்கு+. To sell; விற்றல். போக்குச்செய்து பொன் வரக்காட்டுக (Insc.).

போக்குநீக்கு pōkku-nīkku, *n.* <id.+. 1. Amiability; சௌமிய குணம். *Loc.* 2. Kind-heartedness; அவிரக்கம். *Colloq.*

போககாமி pōka-kāmi, *n.* <*bhōga*+*kāma*. Worldly person; உலகவின்பத்தை விரும்புபவ-ன்-ள். (ஞானபூசா. 10, உரை.)

போகபூமி pōka-pūmi, *n.* <id.+. Place for enjoyment of the fruits of karma, dist. fr. *karuma-pūmi;* கருமபலத்தை அனுபவித்தற்குரிய பிரதேசம். இதுதான் நவகண்டமாய் அதில் எட்டுக் கண்டமும் போகபூமியாய் ஒன்பதாம் கண்டமான பரத கண்டம் கருமபூமியா யிருக்குமென்றபடி (திவ். திருச்சந். 8, வ்யா. பக். 27).

போகி pōki, *n.* <*bhōgin.* (வாணர்த்த.) 1. Trader; வியாபாரி. 2. Barber; நாவிதன்.

போங்கு pōṅku, *n.* <T. *pōṅgu.* Ear-ring; கடுக்கன். (விறலிவிடு. 369.)

போட்கன் pōṭkaṉ, *n.* Deceit; கபடம். அவன் பக்கலுள்ளது போட்கனாகவுமாம் (ஈடு, 1, 5, ப்ர).

போட்டாபோட்டி pōṭṭāpōṭṭi, *n.* Redupl. of போட்டி. Rivalry; competition; contest; போட்டி. பந்தயமென்பதும் போட்டாபோட்டி என்பதும் . . . பெருத்துப்போயிற்று (மதி. க. ii, 146).

போட்டு-தல் pōṭṭu-, *5 v. tr.* Corr. of புகட்டு-. To cause to drink, as liquid food; புகட்டுதல். குழந்தைக்குப் பால் போட்டினுள். *Colloq.—intr.* To suffer from small pox; வார்த்தல். அம்மை போட்டியிருக்கிறது.

போட்டுடை-த்தல் pōṭṭuṭai-, *v. tr.* <போடு-+. To expose; to make public; வெளிப்படுத்துதல். *Colloq.*

போடியார் pōṭiyār, *n.* Farmer; குடியானவன். (J. N.)

போடு pōṭu, *n.* <போடு-. Stroke; அடி. அன்றேயோர் போடா யறைய வெழுங்கால் (பஞ்ச. திருமுக. 745).

போத்தி pōtti, *n.* <Arab. *fauti.* Deceased person; இறந்துபோனவ-ன்-ள். ஆஜரிருக்கும் குடி போத்தி யென்னவும் (தாசீல்தார்நா. 69).

போதககுரு pōtaka-kuru, *n.* <*bōdhaka*+. Preceptor who explains the purport of the šāstras; சாத்திரார்த்தத்தைப் போதிக்குங் குரு. (விவேகசிந். பக். 28.)

போதனுமுறை pōtaṉā-muṟai, *n.* <*bhōdhanā*+. Method in teaching; கல்வி கற்பிக்கும் நெறி. *Mod.*

போதா-தல்[போதருதல்] pō-tā-, *v. tr.* <போ-+. To leave aside; விலக்குதல். மேற்கூறப்பட்டவற்றோடு வையாது இத்துணையும் போதந்துவைத்த தென்னை யெனின் (தொல். சொல். 3, உரை).

போதி-த்தல் pōti-, *11 v. intr.* <*bōdha.* To have inclination; விருப்பமுண்டாதல். போதித்த போது வருவேன். *Nāñ.*

போதிகைப்பலகை pōtikai-p-palakai, *n.* <போதிகை+. (Arch.) Entablature; தூணின் தலையில் வைக்கும் பலகை. *Pond.*

போதியல் pōtiyal, *n.* <id. See போதிகைப் பலகை. *Loc.*

போதுபோக்கு pōtu-pōkku, *n.* <போது +. Play; pastime; விளையாட்டு. தோளைக்கழித்துத் தலையைச்சரித்துப் போதுபோக்காக நின்றுகொண்டபடி (ஈடு, 1, 6, 7).

போய்வா-தல்[போய்வருதல்] pōy-vā-, *v. intr.* <போ-+. To go; போதல். *Colloq.*

போயண்டன் pōyaṇṭaṉ, *n.* cf. போயி. Palanquin bearer; சிவிகை சுமப்போன். *Pond.*

போயிண்டன் pōyiṇṭaṉ, *n.* See போயண்டன். *Pond.*

போர்க்கத்தி pōr-k-katti, *n.* <போர் +. Sword; வாள். *Pond.*

போர்ச்சயப்பாவை pōr-c-caya-p-pāvai, *n.* <id. + சயம் +. The Goddess of Victory; வீரலட்சுமி. (S. I. I. i, 100.)

போர்த்தனிப்பூவை pōr-t-taṉi-p-pūvai, *n.* <id. + தனி +. See போர்ச்சயப்பாவை. (S. I. I. iii, 115.)

போரா pōrā, *n.* Bale of cotton; பஞ்சுப் பொதி. *Loc.*

போரிகட்டு-தல் pōri-kaṭṭu-, *v. intr.* <போரி +. To compete; to rival; போட்டிபோடுதல். (M. Navi.)

போலும் pōlum, *part.* <போல்-. Particle expressing doubt; ஐயப்பாட்டைக் குறிக்குஞ் சொல்.

போஷியபுத்திரன் pōṣiya-puttiraṉ, *n.* <*pōṣya* +. Adopted son; சுவீகாரபுத்திரன். *Pond.*

பௌ

பௌகண்டம் paukaṇṭam, *n.* <*paugaṇḍa*. Period in the life of a child, between the ages of six and ten; ஆறு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைப்பருவம். (விசாரசந். பக். 343.)

பௌஷியம் pauṣiyam, *n.* <*bhavṣyat*. The future; வருங்காலம். பௌஷியப் பிரதிபந்தம் (பஞ்சதசப். பக். 84).

ம

மக்கட்கதி makkaṭ-kati, *n.* <மக்கள் +. (Buddh.) Birth, as a human being, one of *ṣaṭ-kati*, q.v.; ஷட்கதியு ளொன்று.

மக்கணாயனார் makkaṇāyaṉār, *n.* <id. +. King's son; இராசகுமாரன். (M. E. R. 104 of 1916-C.)

மக்கல் makkal, *n.* <மக்கு-. Rotten straw; muck; கூளம். *Loc.*

மக்கள்வழி makkaḷ-vaḻi, *n.* <மக்கள் +. Patriarchal system of inheritance; மக்கட்டாயம். *Loc.*

மக்காரெட்டி makkāreṭṭi, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 58-59.)

மக்கிரி makkiri, *n.* Big basket; பெரிய கூடை. (எங்களூர், 91.)

மக்கினம் makkiṉam, *n.* <*magna*. 1. Immersion; அழுந்துகை. மக்கினம் பட்டுள்ளே மருவி யிருந்தாண்டி (பட்டினத்துப். பக். 235). 2. Disgrace; அவமானம். அந்தச்சபையில் அவன் மக்கினப்பட்டான்.

மக்ரிபு makripu, *n.* <Arab. *maghrib*. Prayer at sunset; மாலைத் தொழுகை. *Muham.*

மகப்படி maka-p-paṭi, *n.* perh. *mahat* +. An item of expenditure in a temple; கோயிற் படித்தரச்செலவுவகை. (S. I. I. iv, 289.)

மகப்பு makappu, *n.* prob. id. Greatness; பெருமை. மகப்புருவந்தானே மதிக்கில் (திவ். இயற். 4, 29).

மகர்நோன்பு makarnōṉpu, *n.* Corr. of மகாநோன்பு. Festival of *navarāttiri*; நவராத்திரிப் பண்டிகை. *Loc.*

மகர்நோன்புச்சாவடிக்கறுப்பு makar-nōṉpu-c-cāvaṭi-k-kaṟuppu, *n.* A kind of dark-coloured saree, with yellow silk border; மஞ்சட்பட்டுக் கரையும் கறுப்புநூல் உடலுமுடைய புடைவைவகை. *Loc.*

மகரச்சாயம் makara-c-cāyam, *n.* Dark-red dye; கருஞ்செந்நிறச்சாயம். (W.)

மகரமுத்திரை makara-muttirai, *n.* <மகரம் +. A kind of hand-pose; முத்திரைவகை. (சைவாநு. வி. 20.)

மகரவாய் makara-vāy, *n.* <id. +. Spout, shaped like the mouth of the *makaram* fish; மகரமீனின் வாய்போலச் செய்யப்பட்ட நீர்த்தூம்பு. (சிலப். 5, 150, உரை.)

மகரூர் makarūr, *n.* <Arab. *muqarrar*. That which is fixed or established; உறுதியாக்கப்பட்டது. (P. T. L.)

மகாகாளை makā-kāḷai, *n.* <*mahā-kālā*. One of *nava-niti*; நவநிதியு ளொன்று. (அபி. சிந். 940.)

மகாசப்தமி makā-captami, *n.* <மகா+. The seventh day in the bright fortnight of the lunar month of *mākam;* இரதசப்தமி. (பஞ்.)

மகாசூசிகை makā-cūcikai, *n.* <id.+. Small-pox; பெரியம்மை. (தஞ். சர. iii, 68.)

மகாதேவர்திருமஞ்சனம் makātēvar-tirumañcaṉam, *n.* <மகாதேவர்+. The submarine fire; வடவாமுகாக்கினி. (தக்கயாகப். 379, உரை.)

மகாதோரணம் makā-tōraṇam, *n.* <மகா+. A kind of temple lamp; கோயில்விளக்கு வகை. (M. E. R. 608 of 1916.)

மகாநியோகம் makā-niyōkam, *n.* <id.+. Royal command; அரசனது ஆணை. மகாநியோகமும் புறப்பட்டு (S. I. I. iv, 152).

மகாப்பட்ட makā-p-paṭṭa, *adv.* <id.+படு-. Very big; மிகப்பெரிய. *Pond.*

மகாப்பிரதானன் makā-p-piratāṉaṉ, *n.* <id.+. Commander-in-chief; தலைமைச் சேனாபதி. (M. E. R. 497 of 1926.)

மகாபலம் makā-palam, *n.* <*mahā-phala.* Bael; வில்வம்.

மகாபூதகடிதானம் makāpūtakaṭitāṉam, *n.* A kind of gift; தானவகை. (S. I. I. vii, 21.)

மகாபூரணசந்திரோதயம் makāpūraṇa-cantirōtayam, *n.* <மகா+பூரணம்+. A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 68.)

மகாமிருத்துயஞ்சயம் makā-miruttu-yañcayam, *n.* <id.+. A mantra; ஒரு மந்திரம்.

மகாயானம் makā-yāṉam, *n.* <*mahā-yāna.* A school of Buddhism; பௌத்தசமய வகை. (நீலகேசி, 342, உரை.)

மகாவித்வான் makā-vitvāṉ, *n.* <*mahā-vidvān.* A title meaning 'great scholar'; பெரும்புலவன் என்னும் பட்டம்.

மகாவேணு makā-vēṇu, *n.* <மகா+. A great number; ஒரு பேரெண். (கணக்கதி. 80.)

மகிமைச்சங்கம் makimai-c-caṅkam, *n.* <மகிமை+. Legion of honour; பிரான்சு தேசத்துள்ள ஒருசார் பட்டதாரிகளின் சங்கம். *Pond.*

மகிமைச்சவை makimai-c-cavai, *n.* <id.+. See மகிமைச்சங்கம். *Pond.*

மகிமைநாடா makimai-nāṭā, *n.* <id.+. Ribbon indicating a title or dignity; பட்டம் பதவிகளுக்கு அறிகுறியாக அணியும் நாடா. *Pond.*

மகிமைப்பட்டாளம் makimai-p-paṭṭā-ḷam, *n.* <id.+. Grand chancellery; அரசாங்க சபைவகை. *Pond.*

மகிழம்பூத்தேன்குழல் makiḻam-pū-t-tēṉkuḻal, *n.* <மகிழ்+பூ+. A kind of cake; மகிழம்பூப்பணிகாரம்.

மகிழிசை makiḻ-icai, *n.* <மகிழ்-+. (Pros.) A kind of *centuṟai-p-pāṭṭu;* செந்துறைப்பாட்டின் ஒரு வகை. (யாப். வி. 538.)

மகுடரேகை makuṭa-rēkai, *n.* <மகுடம்+. A line in the palm of hand, indicating prosperity; செல்வவளத்தைக் குறிக்குங் கைமிரேகை வகை. (சிவக். பிரபந். பக். 342.)

மகுமூது makumūtu, *n.* <Arab. *Muhammad.* The Prophet Mahomed; முகம்மது நபிகள். (மஸ்தான். 122.)

மகுளிபாய்-தல் makuḷi-pāy-, *v. intr.* <மகுளி+. To become hard, as an arable land after heavy rains; பெருமழையால் நிலம் இறுகிவிடுதல். *Loc.*

மகேந்திரக்கணை makēntira-k-kaṇai, *n.* prob. *mahēndra*+. A kind of disease; கணைநோய்வகை. (பராச. ii, 179.)

மங்கஞ்சம்பா maṅkañ-campā, *n.* A kind of *campā* paddy, maturing in seven months; ஏழுமாதத்திற் பயிராகக்கூடிய சம்பாநெல்வகை. (விவசா. 2.)

மங்களபௌளம் maṅkaḷapauḷam, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மங்குநார் maṅku-nār, *n.* <மங்கு-+. Fibre of plants, dry and decayed; மக்கி உலர்ந்த நார். (திவ். அமலனாதி. 8, வ்யா. பக். 91.)

மச்சவிளக்கம் macca-viḷakkam, *n.* <மச்சம்+. Treatise on marine zoology; மீன்களைப் பற்றிய நூல். *Pond.*

மச்சாவி maccāvi, *n.* cf. மச்சான்வி. Elder sister's husband; தமக்கையின் புருஷன். சங்குமுத்துசெட்டி யிவளுக்கு மச்சாவி (தெய்வச். விறலிவிடு. 434).

மச்சாழ்வி maccāḻvi, *n.* See மச்சாவி. (M. E. R. 479 of 1917-B.)

மச்சிகம் maccikam, *n.* <மஞ்சிகன். Barber's work; நாவிதத் தொழில். (நீலகேசி, 280.)

மச்சிகன் maccikaṉ, *n.* cf. வைசிகன். Trader; வர்த்தகன். மச்சிகனெழுந்து கம்பவாணனை மகிழ்ந்துபோற்றி (திருவிரிஞ்சைப். வழித்துணை. 42).

மச்சு maccu, *part.* Corr. of மற்று. An expletive; ஓர் அசைநிலை. மச்சிது செய்தார் யாரே (பெரியபு. கண்ணப். 108).

மசகு macaku, *n.* <மசகு-. Mental delusion; திகைப்பு. நெடு மசகு புகுந்தின்றே (உப தேசகா. சிவபுண். 156).

மசறி macaṟi, *n.* A kind of fish; மீன் வகை. நெற்றலி யசலை மசறி (குருகூர்ப். 20.)

மசிமை macimai, *n.* <*mahimā*. Greatness; பெருமை. மசிமையிலீ கூறைதாராய் (திவ். நாய்ச். 3, 9).

மசிலி macili, *n.* <U. *manzil*. Stage in a journey; பாதையில் தங்கிச்செல்லுங் கெடி. (P. T. L.)

மசினை macinai, *n.* Hemp; சீமைச்சணல். *Pond.*

மஞ்சக்குளிப்பான்பணம் mañca-k-kuḷi-p-pāṉ-paṇam, *n.* <மஞ்சள் + குளி- +. A kind of coin; நாணயவகை. (Tr. Rev. M. ii, 217.)

மஞ்சகீடம் mañca-kīṭam, *n.* <மஞ்சம் +. Bug; மூட்டை. (நாநார்த்த. 1048.)

மஞ்சட்கடுதாசிகொடுத்தல் mañcaṭ-kaṭutāci-koṭuttal, *n.* <மஞ்சள் + கடுதாசி +. Becoming insolvent; கடன் இறுக்க முடியாது பாப்பராதுகை. *Colloq.*

மஞ்சட்கிலுகிலுப்பை mañcaṭ-kilu-kiluppai, *n.* <id. +. A kind of rattlewort; பெருங் கிலுகிலுப்பை. (சித். அக.)

மஞ்சட்குளி-த்தல் mañcaṭ-kuḷi-, *v. intr.* <id. +. To lead a fashionable life; இடம்பமாய் வாழ்தல். கொஞ்சி நீ மஞ்சட்குளிக்கிறாய் (பஞ்ச. திருமுக. 1217).

மஞ்சட்கோங்கு mañcaṭ-kōṅku, *n.* <id. +. Common caung; கோங்கமரம். (சித். அக.)

மஞ்சட்சோளம் mañcaṭ-cōḷam, *n.* <id. +. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

மஞ்சட்டாழை mañcaṭṭāḻai, *n.* <id. +. A kind of aloe; தாழைவகை. (சித். அக.)

மஞ்சட்டிச்சேலை mañcaṭṭi-c-cēlai, *n.* <மஞ்சிட்டி +. A kind of saree; சேலைவகை. (S. I. I. vii, 22.)

மஞ்சணீர்த்தகப்பன் mañca-ṇīr-t-takappaṉ, *n.* <மஞ்சள் + நீர் +. Adoptive father; சுவீகாரபிதா. *Pond.*

மஞ்சணீர்த்திருவிழா mañcaṇīr-t-tiru-viḻā, *n.* <id. + id. +. The spring festival; வசந்தோற்சவம். (யாழ். அக.)

மஞ்சரி mañcari, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

மஞ்சள்முளை mañcaḷ-muḷai, *n.* <மஞ்சள் +. Paddy seedling, one or two days old; இரண்டோருநாளான நென்முளை. *Nāñ.*

மஞ்சள்முளைக்கிடை mañcaḷ-muḷai-k-kiṭai, *n.* <id. + முளை +. Penning sheep in a field where paddy has been sown recently; விதைத்து இரண்டோருநாள் சென்றபின் வயலிலிடும் ஆட்டுக்கிடை. *Nāñ.*

மஞ்சள்லவணம் mañcaḷ-lavaṇam, *n.* <id. +. A kind of salt; உப்புவகை. (தஞ். சர. iii, 132.)

மஞ்சளி-த்தல் mañcaḷi-, 11 *v. intr.* <id. To turn yellow; மஞ்சணிறமாதல். கண்கள் மஞ்சளித்து (அசுவசா. 88).

மஞ்சனை mañcaṉai, *n.* Kamela dye; கபிலப்பொடி. (L.)

மஞ்சாம்பரம் mañcāmparam, *n.* prob. மஞ்சள் + அம்பரம். A flowering plant; பூச்செடி வகை. *Madr.*

மஞ்சிட்டம் mañciṭṭam, *n.* <*mañjiṣṭha*. Redness; சிவப்பு. (உரி. நி.)

மஞ்சூரம் mañcūram, *n.* Barbadoes tree; மஞ்சாடிமரம். மஞ்சூர மிலக்கங்கொண்டு (வீரவன. உமையாண். 20).

மஞ்சொட்டி mañcoṭṭi, *n.* A kind of herb; பூடுவகை. (குருகூர்ப். 45.)

மட்டக்கார் maṭṭa-k-kār, *n.* <மட்டம் +. A coarse kind of paddy; மட்டநெல்வகை. (M. M. 146.)

மட்டக்கோணம் maṭṭa-k-kōṇam, *n.* <id. +. cf. மட்டுக்கோணம். Right angle; நேர் கோணம். (M. Navi.)

மட்டக்கோலூசி maṭṭa-k-kōl-ūci, *n.* <id. + கோல் +. A surgical instrument; சத்திர வைத்தியத்தில் உபயோகிக்கும் ஆயுதவகை. (தஞ். சர. iii, 40.)

மட்டசனம் maṭṭacaṉam, *n.* <மட்டு + அசனம். See மட்டுணவு. *Pond.*

மட்டடக்கு-தல் maṭṭaṭakku-, *v. tr.* <id. +. To bring down one's pride; கருவமொடுக்குதல். மண்டை தள்ளிப்போகாதே மட்டடக்க வருவாள் நாளை (கோவ. க. 88).

மட்டப்பரப்பு maṭṭa-p-parappu, *n.* <மட்டம் +. Plane surface; மேடு பள்ள மில்லாத சமமான இடம். *Loc.*

மட்டப்பூ matta-p-pū, *n.* <id.+. A pendant in a jewel; அணியுறுப்புக்களு ளொன்று. (S. I. I. ii, 184.)

மட்டமுக்கோணம் matta-mukkōṇam, *n.* <id.+. Right-angled triangle; நேர்கோண முடைய முக்கோணம். *Mod.*

மட்டாசனம் maṭṭācaṉam, *n.* <id.+. See மட்டுணவு. *Pond.*

மட்டிச்சகலாத்து maṭṭi-c-cakalāttu, *n.* <மட்டி+. A kind of coarse cloth, used in packing; மூட்டைகட்ட வுதவும் முரட்டுத்துணிவகை. *Pond.*

மட்டிவைத்தல் maṭṭi-vaittal, *n.* <id.+. Mark made with cow-dung on sheaves of paddy left unthreshed on the threshing floor; களத்தில் அடிபடாமலிருக்குங் கதிர்க்கற்றைகட்குச் சாணியால் இடுங் குறி. *Loc.*

மட்டுணவு maṭṭuṇavu, *n.* <மட்டு+. Moderation in eating and drinking; மிதமாக வுண்கை. *Pond.*

மட்டை maṭṭai, *n.* Corpse; பிணம். *Pond.*

மட்டைவிழுதல் maṭṭai-viḻutal, *n.* <மட்டை+. Death; சாவு. *Loc.*

மடக்கம் maṭakkam, *n.* <மடக்கு-. 1. Set-back; frustration; பலிக்காமை. நம்முடைய நோக்கங்களுக்குத் தடையும் மடக்கமும் விக்கினமும் உண்டு (நித்தியானு. பக். 25). 2. Subsidence, as of fever; நோய் மட்டுப்படுகை. *Nāñ.*

மடக்குத்தசபின்னம் maṭakku-t-taca-piṉṉam, *n.* <மடக்கு+. (Arith.) Recurring decimal; ஒருவகைத் தசபின்னம். *Mod.*

மடக்குவட்டி maṭakku-vaṭṭi, *n.* <மடக்கு-+. Compound interest; வட்டிக்கு வட்டி. *Loc.*

மடக்கோலை maṭakkōlai, *n.* <id.+. Ola, written and folded; எழுதி மடக்கிய ஓலை. பாண்டவர்கள் தூதுவிடுகிறபோது கட்டிவிட்ட மடக்கோலை (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 71).

மடங்குவட்டி maṭaṅku-vaṭṭi, *n.* <மடங்கு-+. See மடக்குவட்டி. (செல்வவிருத்திவிளக்கம், பக். 111.)

மடபதி maṭa-pati, *n.* <மடம்+. Head of a mutt; மடாதிபதி. (சேக்கிழார்பு. 59.)

மடம் maṭam, *n.* cf. *mūḍha*. Incorrect knowledge; பொருண்மையறியாது திரியக்கோடல். (தொல். பொ. 248, இளம்.)

மடமட்டி maṭa-maṭṭi, *n.* <மடம்+. Utter fool; முழுமட்டாள். *Colloq.*

மடிநாய் maṭi-nāy, *n.* <மடி+. Lap-dog; சிறுநாய்வகை. *Pond.*

மடிப்பு maṭippu, *n.* <மடி-. Assessment for second crop; இரண்டாம்போகத்திற்கு விதிக்கப்பட்ட தீர்வை. (R. T.)

மடிவலை maṭi-valai, *n.* prob. id.+. A double net to catch small fish; சிறுமீன்களைப் பிடிக்க உதவும் வலைவகை. *Loc.*

மடு maṭu, *n.* prob. மடு-. Udder, especially of a cow; பசு முதலியவற்றின் முலையிடம்.

மடுவிடு-தல் maṭu-viṭu-, *v.* <மடு+. *intr.* 1. To form a pool, as in a river bed; மடுவுண்டாதல். *Loc.* 2. To be specially attached to; விசேஷப் பற்றுண்டாதல். ஸ்ரீ குலசேகரப்பெருமாளிடத்திலே . . . எம்பெருமானார் மடுவிட்டிருப்பது (திவ். பெருமாள். தனியன், வ்யா. பக். 2).—*tr.* To let a calf suck its mother; தாய்ப்பசுவின் மடுவிற் பால் குடிக்கும்படி கன்றை விடுதல். *Loc.*

மடைகழி-த்தல் maṭai-kaḻi-, *v. intr.* <மடை+. To open a sluice; மதகுதிறத்தல். *Pond.*

மடைகிடாய்முக்கந்தன் maṭai-kiṭāy-mukkantaṉ, *n.* <id.+. Purveyor of provisions to officers on circuit, in Ramnad; இராமநாதபுரஞ்சீமையிற் கிராமங்களைச் சுற்றிப் பார்க்கவரும் மேலதிகாரிகளுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் கொடுக்கும் அதிகாரி. (Rd. M. 313.)

மடைநில்-தல் [மடைநிற்றல்] maṭai-nil-, *v. intr.* <id.+. To be able, as a cow, to be milked whenever and wherever required; பால் கறக்கும் இடங்கடோறும் பசு மடுச்சுரந்து கறக்கத் தேற்றதாதல். இந்த மாடு மடைநிற்காது. *Madr.*

மண்காட்டு-தல் maṉ-kāṭṭu-, *v. tr.* <மண்+. To defeat; தோற்பித்தல். *Loc.*

மண்டபக்கொத்து maṇṭapa-k-kottu, *n.* <மண்டபம்+. Temple servants; கோயிற் பணியாளர். (M. E. R. 644 of 1922.)

மண்டபவீடு maṇṭapa-vīṭu, *n.* <id.+. House with vaulted roof; கமான்வடிவில் அமைந்த மேற்றளமுடைய வீடு. *Loc.*

மண்டலமுதலியார் maṇṭala-mutaliyār, *n.* <மண்டலம்+. Chief officer ruling over a *maṇṭalam*; மண்டலத்தையாளும் அரசாங்கத் தலைவர். (Colas. ii, 254, 584.)

மண்டலமுதன்மை maṇṭala-mutaṉmai, *n.* <id.+. Leadership of a *maṇṭalam*; மண்டலத்தையாளும் உத்தியோகம். (S. I. I. v, 156.)

மண்டற்சிங்காய் manṭar-ciṅkāy, *n.* Shining leaved soap-pod; வெள்ளிண்டு. (L.)

மண்டிதம் manṭitam, *n.* < *maṇḍita*. Decoration; அலங்காரம். *திருமணி மாாபா குண்டல மண்டித* (நூற்றெட்டுத். திருப்பு. 65).

மண்டிலவரங்கம் manṭila-v-araṅkam, *n.* <id.+. Circus tent; வேடிக்கை காட்டும் அரங்கம். *Pond.*

மண்டு manṭu, *n.* Corr. of *மன்று*. Raised platform under a tree; பொதுவிடம். *வாடுமுக முடன் வந்ததென்ன மண்டிலே கூடியே நொந்ததென்ன* (கட்டபொம்ம. பக். 6).

மண்டைதுள்ளு-தல் manṭai-tuḷḷu-, *v. intr.* <மண்டை+. To be haughty; செருக்கு மிகுதல். *மண்டைதுள்ளிப்போகாதே* (கோவ. க. 88).

மண்டையவியன் manṭaiyaviyaṉ, *n.* < *māṇḍavya*. Person belonging to *māṇḍavya gōtra;* மாண்டவிய கோத்திரத்தான். (M. E. R. 87 of 1925.)

மண்ணகுண்டம் maṇṇa-kuṇṭam, *n.* <மண்+. Raised, earthen platform, as in a fortification; மண்ணாற் செய்த அட்டாலை. (யாழ். அக.)

மண்ணச்சூலை maṇṇaccūlai, *n.* A disease of horses; குதிரைநோய் வகை. (தஞ். சர. iii, 183.)

மண்ணறுவான் maṇṇaṟuvāṉ, *n.* <மண் +அறு-. A term of abuse; ஒரு வசைச்சொல். (தெய்வச். விறலிவிடு. 492).

மண்ணறை-தல் maṇ-ṇ-aṟai-, *v. tr.* <id.+. To plaster with mud; மண்பூசுதல். *சாத்திக் கதவடைத்துத் தாள்பூட்டி மண்ணறைந்தார்* (கோவ. க. 5).

மண்ணாந்தை maṇṇāntai, *n.* Python; வெண்ணாந்தை. *Tinn.*

மண்பாடு maṇ-pāṭu, *n.* <மண்+. Earthen mound or bank; ridge of earth; மண்போட்டுச் செய்த வரம்பு. *எரிகரை மண்பாட்டுக்குக் கிழக்கும்* (S. I. I. iv, 97).

மண்மதில் maṇ-matil, *n.* prob. id.+. A tax; வரிவகை. (M. E. R. 1929-30, p. 87.)

மண்வைப்புப்புடம் maṇ-vaippu-p-puṭam, *n.* <id.+வை-+. A mode of calcination, one of *muppu-p-puṭam;* முப்புப்புடத்தொன்று. (தைலவ. தைல. பக். 9.)

மணப்பொங்கல் maṇa-p-poṅkal, *n.* prob. மணம்+. First day of the Poṅgal festival; தைப்பொங்கல் விழாவில் முதல்நாட்பொங்கல். (எங்களூர், 90.)

மணல்முள்ளங்கி maṇal-muḷḷaṅki, *n.* <id.+. A kind of radish; முள்ளங்கிவகை. (சங். அக.)

மணவாட்டுப்பிள்ளை maṇa-v-āṭṭu-p-piḷḷai, *n.* <மணம்+ஆள்-+. See மணவாட்டுப் பெண்பிள்ளை. (திவ். பெரியாழ். 3, 8, 4, வ்யா. பக். 749.)

மணவாட்டுப்பெண்பிள்ளை maṇa-v-āṭṭu-p-peṇ-piḷḷai, *n.* <id.+id.+. Bride; மணமகள். *மாமியாரான யசோதைப்பிராட்டி இவளைக் கண்டுகந்து மணவாட்டுப்பெண்பிள்ளை யென்று ஸத்கரிக்குமோ* (திவ். பெரியாழ். 3, 8, 1, வ்யா. பக். 735).

மணவாளப்பிள்ளை maṇavāḷa-p-piḷḷai, *n.* <மணவாளன்+. Bridegroom; மணமகன். (பெரியபு. தடுத்தாட். 27.)

மணவாளன் maṇa-v-āḷaṉ, *n.* <மணம்+ ஆள்-. Master, lord; தலைவன். *செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள* (குமர. பிரபந். முத்துக். 11).

மணற்கொட்டகம் maṇaṟ-koṭṭakam, *n.* <மணல்+. Toy-house of sand, in children's play; சிறுவர் விளையாட்டாக மணலால் அமைக்குஞ் சிறுவீடு. *ஓரானை மணற்கொட்டகத்தைச் சிதறினாற் போலே அனுயாஸேந அழித்து* (திவ். திருநெடுந். 28, வ்யா.).

மணற்சீனி maṇaṟ-cīṉi, *n.* <id.+. A kind of sugar; சர்க்கரைவகை. (சித். அக.)

மணற்பாகு maṇaṟ-pāku, *n.* <id.+. Fine sugar; துளைவுச் சீனி. (நாமதீப.)

மணிக்கல் maṇi-k-kal, *n.* <மணி+. Gem; இரத்தினக்கல். *மிகுமொளி மணிக்கல்* (ஞானபூசா. 26).

மணிக்கலன் maṇi-k-kalaṉ, *n.* <id.+. Ornament set with jewels; இரத்தினாபரணம். *பரிசட்டமு மிலங்கு மணிக்கலனு நல்கி* (S. I. I. iii, 217).

மணிக்கிராமம் maṇi-k-kirāmam, *n.* perh. *vaṇij*+. Mercantile guild; வணிகர் குழு வகை. (M. E. R. 598 of 1926.)

மணிச்சூத்திரம் maṇi-c-cūttiram, *n.* <மணி+. Clock; கடிகாரம். *Pond.*

மணித்தியாலம் maṇi-t-tiyālam, *n.* <id. +. Hour; ஒருமணி நேரம். *Pond.*

மணிப்பயறு maṇi-p-payaṟu, *n.* <id.+. A kind of gram; பயறுவகை. *Loc.*

மணிப்பவளம் maṇi-p-pavaḷam, *n.* <id. +. Coral; நற்பவளம். *மண்பவளத்தை மணிப் பவளமென்றும் (சரவண. பணவிடு. 204).*

மணிப்பாம்பு maṇi-p-pāmpu, *n.* <id. +. A kind of snake; பாம்புவகை. *Pond.*

மணிமலை maṇi-malai, *n.* <id. +. Rocky hill; மண்சேறியப்பெறாத பாறைகளாலான மலை. *தாறுகள் விருக்ஷங்களுண்டாம்படி மண்செறிந்த மலை யன்றிக்கே யிருக்கும் மலைகளை மணிமலை யென்னக் கடவதாய் (திவ். பெரியாழ். 3, 2, 3. வ்யா. பக். 539).*

மணிமாறு-தல் maṇi-māṟu-, *v. intr.* <id. +. To trade in gems; இரத்தினவியாபாரஞ் செய்தல். *மணிமாற வந்திடத்தே மாதரசே வாலாமோ (கோவ. க. 96).*

மணையில்வைத்துப்பாடு-தல் maṇaiyil-vaittu-p-pāṭu-, *v. tr.* <மணை + வை- +. To decorate and set on a platform, as a girl on auspicious occasions, and sing songs; பெண்ணை அலங்கரித்து மணையிலிருத்திச் சுபம்பாடுதல்.

மத்தளிப்பு mattaḷippu, *n.* <Arab. *matlab.* cf. மத்தலபு. Intention, object; எண்ணம். *Loc.*

மத்தான்காயி mattāṉkāyi, *n.* <E. Martingale; ஜீப்பூம் மரத்திற்குக் கீழ்ப்புறத்தில் ஆதார மாக உள்ள கயிறு அல்லது சங்கிலி. (M. Navi.)

மத்திமத்தான் mattimattāṉ, *n.* <மத்திமம். Person belonging to the Buddhist sect of *mādhyamika;* மாத்யமிகன். *வாணுளாறக்கின்ற மத்தி மத்தார் வழிமாற்றுவமே (தேசிகப். 5, 14).*

மத்திமம் mattimam, *n.* <*madhyama.* (Poet.) *Śānta Rasa,* the sentiment of tranquility; நடுவுநிலைமை யென்னுஞ் சுவை. (தொல். பொ. 245, இளம்பூ.)

மத்திமவிம்சதி mattima-vimcati, *n.* <id. +. The second period of 20 years from *carvacittu* to *parāpava* in the Jupiter cycle; அறுபது வருஷக் கணக்கில் சர்வசித்து முதல் பராபவ வருஷம் வரையுள்ள இடையிருபது வருஷங்கள். (பஞ்.)

மத்தியம் mattiyam, *n.* <*madhya.* Earth; பூமி.

மத்தியானரேகை mattiyāṉa-rēkai, *n.* <மத்தியானம் +. The great circle passing through the zenith and the northern and southern points of the horizon; வானுச்சியை அடிவானத்தின் வடக்குத்தெற்கு மூலைகளோடு சேர்க்கும் வட்டக்கோடு.

மத்ஸ்யதுவாதசி matsya-tuvātaci, *n.* <*matsya* +. The *tuvātaci titi* of the bright fortnight of the lunar month of *mārkkaciram;* மார்க்கசிர மாதத்துச் சுக்கிலத் துவாதசி. (பஞ்.)

மதகு mataku, *n.* The mythical mountain *cakkaravāḷam;* சக்கரவாளகிரி. *மதகோடி யுலகேழு மணநாற (தக்கயாகப். 3).*

மதயாணி matayāṇi, *n.* A kind of flower plant; செடிவகை. (புட்ப. 29.)

மதனகாந்தச்சேலை mataṉa-kānta-c-cēlai, *n.* prob. மதனன் + காந்தம் +. A kind of saree; புடைவைவகை. (பஞ்ச. திருமுக. 1161.)

மதாந்தன் matāntaṉ, *n.* <*mada* + *andha.* One who is blind with arrogance; செருக்குடையவன். *செல்வத்தின் மதாந்தராகி (சானந்தகணே. நரக. 17).*

மதிதெரிகலை mati-teri-kalai, *n.* <மதி + தெரி- +. The day after the new moon, when the crescent is scarcely visible; சினீவாலி. (அரு. நி.)

மதில்தேவை matil-tēvai, *n.* <மதில் +. A tax; வரிவகை. (S. I. I. vii, 63.)

மதிள் matiḷ, *n.* Wall, as round a fort; மதில். *மதிளிலங்கை யழித்தவனே (திவ். பெருமாள். 8, 9).*

மதிளிடு-தல் matiḷ-iṭu-, *v. tr.* <மதிள் +. 1. To surround by fortifications; சுற்றும் அரணுக மதிற்சுவ ரெழுப்புதல். 2. To protect; பாதுகாத்தல். *சில தார்மிகர் மதிளிட்டு நோக்கப் பெற் றோமிறே (திவ். திருநெடுந். 9, வ்யா.).*

மதிஞாயன் matiṉāyaṉ, *n.* <மதில் + நாயன். Officer in charge of a fort; கோட்டைத்தலைவன். (T. A. S. ii, 68.)

மதுர்பேணி matur-pēṇi, *n.* prob. *madhura* +. A kind of sweet cake; பதர்பேணி. *மாமதுரமிக்க மதுர்பேணி (பஞ்ச. திருமுக. 1836).*

மதுராந்தகன்மாடை maturāntakaṉ-māṭai, *n.* <மதுராந்தகன் +. An ancient coin; பழைய நாணயவகை. *நாகைகள் கைக்கொண்ட மதுராந்தகமாடையோ டொக்கும் பொன் (S. I. I. iii, 164).*

மதோதகம் matōtakam, *n.* <*madhu* +. Hydromel, mixture of honey and water; தேனும் நீருங் கலந்தது. *Pond.*

மெய்செய்-தல் mey-cey-, *v. intr.* <மெய் +. 1. To be true; to be faithful; உண்மையுடன் நடத்தல். காரியத்தில் வந்தால் மெய்செய்வாரைப் போல பொய்செய்து தலைக்கட்டும் (ஈடு, 10, 4, 5, பக். 141). 2. To accomplish a thing; காரியம் நிறைவேற்றுதல். தொடங்கின காரியத்தை மெய் செய்து வரவேண்டாமா?

மெய்தாங்கி mey-tāṅki, *n.* <id.+தாங்கு-. Seat; ஆசனம். (M. E. R. 343 of 1923.)

மெய்ப்பு meyppu, *n.* <id. Ostentation; ஆடம்பரம். ஆணுவ மெய்ப்பாகச் செப்பாதே (குரு கூர்ப். 89).

மெய்மட்டு meymaṭṭu, *n.* See மெய்மட்டுக்காணி. (S. I. I. v, 233.)

மெய்மட்டுக்காணி meymaṭṭu-k-kāṇi, *n.* <மெய்மட்டு+. Right of beating the small drum, as an accompaniment to dancing; நட்டுவத்துக்கு மிருதங்கம் அடிக்கும் உரிமை. (S. I. I. v, 232.)

மெரவணை meravaṇai, *n.* <மரவணை. Procession; ஊர்வலம். *Loc.*

மெழுக்கடிகள் mel̲ukkaṭikaḷ, *n.* <மெழுக்கு +. Servants who clean the floor, in a temple; கோயிலை மெழுகிச் சுத்தஞ் செய்வோர். (S. I. I. v, 248.)

மெழுக்குப்புறம் mel̲ukku-p-pur̲am, *n.* <id.+. Rent-free *inam* land, granted for sweeping and washing the floor, in a temple; கோயில் மெழுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம். (M. E. R. 17 of 1930-31.)

மெழுகூட்டு-தல் mel̲ukūṭṭu-, *v. tr.* <மெழுகு+. To cover up, as with wax; மூடி மறைத்தல். நிஷித்த த்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுகூட்டின வோபாதியிறே (ஈடு, 1, 2, 1).

மெழுமெழு-த்தல் mel̲umel̲u-, 11 *v. intr.* To be soft to the touch; மெதுவாதல். மிடறு மெழுமெழுத்தோட (திவ். பெரியாழ். 3, 2, 6).

மே

மேகநாதக்குளிகை mēka-nāta-k-kuḷikai, *n.* A medicinal pill; குளிகைமருந்துவகை. (தஞ். சா. iii, 189.)

மேகயோனி mēka-yōn̲i, *n.* <மேகம்+. Smoke; புகை. (பரி. அக.)

மேகலாரேகை mēkalā-rēkai, *n.* <*mēkhalā*+. Equator; பூமத்தியரேகை. *Mod.*

மேகவன்னப்பட்டு mēka-van̲n̲a-p-paṭṭu, *n.* <மேகம்+வன்னம்+. Shot silk; பலவர்ணங் களைக் காட்டும் பட்டுத்துணிவகை. மேகவன்னப்பட்டு மேற்கட்டி (பத்ம. தென்றல்விடு. 40).

மேகாரக்குறிஞ்சி mēkāra-k-kur̲iñci, *n.* cf. மேகராகக்குறிஞ்சி. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மேசகல்யாணி mēcakalyāṇi, *n.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

மேசபௌளி mēcapauḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

மேசம் mēcam, *n.* (வை. மூ.) 1. Disease; நோய். 2. Chebulic myrobalan; கடுக்காய்.

மேட்டேற்றம் mēṭṭēṟṟam, *n.* <மேடு+. High land; மேட்டுநிலம். (S. I. I. iii, 288.)

மேடுகல்லு-தல் mēṭu-kallu-, *v. intr.* <id.+. To level down, by digging up the high ground; மேட்டுநிலத்தை வெட்டிச் சமமாக்கு தல். (S. I. I. vii, 277.)

மேதாவிலாசம் mētā-vilācam, *n.* <*mēdhā*+*vilāsa*. Genius; மிக்க இயற்கை யறிவு. *Mod.*

மேமூட்டைபோடு-தல் mē-mūṭṭai-pōṭu-, *v. intr.* <மேல்+மூட்டை+. To deceive; ஏமாற்றுதல். *Colloq.*

மேமூட்டையாசாமி mē-mūṭṭai-y-ācāmi, *n.* <id.+id.+. Cheat; வஞ்சகன். *Colloq.*

மேய்ச்சற்றலை mēyccaṟṟalai, *n.* <மேய்ச்சல்+. Pasture land; meadow; மேய்ச்சற்றரை. கன்றுகளுக்கு மேய்ச்சற்றலை பார்க்கையாலும் (திவ். பெரியாழ். 3, 3, 4, வ்யா. பக். 570).

மேராழி mērāḻi, *n.* A tax in money; காசாயவகை. (S. I. I. iv, 195.)

மேல்காயர் mēl-kāyar, *n.* <மேல்+perh. Persn. *kār*. Superstructure; கட்டடத்தின் மேற் கோப்பு. *Loc.*

மேல்பீட்டி mēl-pīṭṭi, *n.* <id.+. Breast of a garment; சட்டையின் மேற்பாகம். *Loc.*

மேல்விலங்கு mēl-vilaṅku, *n.* <id.+. (Gram.) Sign of *i*, *ī*, in vowel-consonants; உயிர்மெய்களில் இகர ஈகாரங்களைக் குறிக்க மெய்கள் மேல் இடும் குறியீடு. (தொல். எழுத். 17, உரை.)

மேலடி mēl-aṭi, *n.* <id.+. Tax paid in kind; தானியமாகச் செலுத்தும் இறை. (T. A. S. vi, 41.)

மேலத்து mēlattu, *n.* perh. id.+prob. U. *hadd*. Superior airs; பெருமிதம். மிகமேலத்தாய்ப் பேசிவெளிப் பகட்டாய் (பஞ்ச. திருமுக. 970).

மேலாமரம் mēlāmaram, *n.* A kind of fishermen's instrument; பட்டினவரின் கருவி வகை. (அபி. சிந்.)

மேலாவலை mēlāvalai, *n.* A kind of fishing net; மீன்பிடிக்கும் வலைவகை. (அபி. சிந்.)

மேலாள் mēl-āḷ, *n.* <id.+. *Loc.* 1. Caste Hindu; நாற்சாதியு ளொன்றைச் சேர்ந்தவன். மேலாளா? கீழாளா? 2. Overseer, supervisor; கண்காணிப்போன்.

மேலெழ mēleḻa, *adv.* <மேலெழு-. Superficially, on the surface; மேலுக்கு. மேலெழச் சிறிது கலங்கிற்றாகிலும் (ஈடு, 1, 4, 3, வ்யா. பக். 183).

மேலெழுத்து mēl-eḻuttu, *n.* <மேல்+. 1. Senior clerk; தலைமை யெழுத்தாளன். (M. E. R. 565 of 1926.) 2. Signature of a superior officer approving the order of his subordinate; கீழ் அதிகாரியின் உத்திரவை அங்கீகரித்து மேல் அதிகாரி இடுங் கையெழுத்து. 'ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லாமப்படியே' என்று கண்களாலே மேலெழுத்திட்டுக் கொடுக்கும் (ஈடு 10, 6, 1).

மேலைநெற்றி mēlai-neṟṟi, *n.* <id.+. The third eye of Śiva on His forehead; சிவபிரானது நெற்றிக்கண். இறைவர்தம் மேலைநெற்றி விழிக்க (தக்கயாகப். 334).

மேலோசனை mēl-ōcaṉai, *n.* <id.+யோசனை. Foresight; முன்யோசனை. (தெய்வச். விறலிவிடு. 80.)

மேலோடு-தல் mēl-ōṭu-, *v. intr.* <id.+. To attack, rush against; எதிர்த்துத்தாக்குதல். மெய் சொல்லா விராவணனை மேலோடி யீடழித்து (தேவா. 158, 2).

மேலோலை mēl-ōlai, *n.* <id.+. 1. Letter of authority; அதிகாரமளிக்குஞ் சீட்டு. 2. Covering letter; மேற்கடுதாசி.

மேவுபர்சாத்கணக்கு mēvuparcāt-kaṇakku, *n.* <Hind. *men* + Hind. *barsāt*+. Record of rainfall; மழைபெய்த அளவைக் காட்டுங் கணக்கு. (P. T. L.)

மேற்கருமம் mēṟ-karumam, *n.* <மேல்+. Want, need; குறை. அவர்களுக்குண்டாகிய மேற் கருமம் அந்தக் காரியப்பேர்களாலே தீர்க்கப்பட்டாற் போல (சங்கற்பநி. 2, உரை, பக். 24).

மேற்கோண்மலைவு mēṟkōṇ-malaivu, *n.* <மேற்கோள்+. (Rhet.) A defect in poetic composition; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

மேற்கோள் mēṟ-kōḷ, *n.* <மேல்+. Set purpose; உறுதிப்பாடான நோக்கம். ஒழியாமலுலகுய்யக் கொள்வனென்னு மேற்கோளுடையான் (நீலகேசி, 188, உரை).

மேற்பயிர் mēṟ-payir, *n.* <id.+. Corn, large vegetables and trees; மரம் செடி முதலியன. (R.).

மேன்படை mēṉ-paṭai, *n.* <id.+. Reserve force; மூலபலம். (R.).

மேன்பாட்டுக்குரு mēṉpāṭṭu-k-kuru, *n.* <மேன்பாடு+. High priest; பிரதான குரு. *Pond.*

மேனடைநீர் mēṉaṭai-nīr, *n.* <மேல்+நடை+. Surplus water; அதிகப்படியாகவுள்ள நீர். மேனடைநீர் பாயவும் (S. I. I. iii, 411).

மேனத்து mēṉattu, *n.* See மேலத்து. *Tinn.*

மேனாம்பு mēṉāmpu, *n.* perh. மேல் + நா + வம்பு. Harsh word, offensive language; அவமதிச்சொல். கண்டாற் புலவரை மேனாம்பு பேசுங் கசடர் (பெருந்தொ. 1336).

மேனிச்சம்பா mēṉi-c-campā, *n.* <மேனி +. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (தமிழன்.)

மேஜாடு mējāṭu, *n.* prob. மேஜை +. Goat; ஆடு. வருகிற போகிற சில துரைகளுக்குக் கொழுத்த மேஜாடும் (தாசில்தார்நா. பக். 8).

மேஷசிருங்கி mēṣa-ciruṅki, *n.* <*mēṣa* + *śriṅgī*. Wormkiller; ஆடுதின்னாப்பாளை.

மேஷவிஷாணிகை mēṣa-viṣāṇikai, *n.* <id. + *viṣāṇi*. See மேஷசிருங்கி.

மை

மை mai, *n.* Ignorance; அஞ்ஞானம். மைதபு ஞான மனத்திடையொன்றும் (பாகவத. 8, வாமனாவ. 32).

மைகோதி mai-kōti, *n.* prob. மயிர் +. Comb; சீப்பு. சுவரின்மேல் மைகோதியும் ஈர்கோலி யுமே கிடக்கின்றன (எங்களூர், 127).

மைந்து maintu, *n.* Child; பிள்ளை. (திவ். பெரியாழ். 1, 1, 8, வ்யா. பக். 16).

மைப்பு maippu, *n.* Rottenness, as of wood; மரம் முதலியன உளுத்திருக்கை.

மைப்பேறு-தல் maippēṟu-, *v. intr.* <மைப்பு +. To become rotten, as wood; மரம் முதலியன உளுத்துப்போதல்.

மையக்கவர்ச்சி maiya-k-kavarcci, *n.* <மையம் +. Centripetal force; ஒரு பொருளின் சுற்றெல்லைக்குட்பட்ட அணுக்கள் அப்பொருளின் மையத்தை நோக்கி நெருங்குஞ் சக்தி. *Mod.*

மையநாட்டம் maiya-nāṭṭam, *n.* <id. +. Gravitation; ஒருபொருளை மற்றொருபொருள் இழுக்கும் ஆகருஷணசக்தி. *Mod.*

மையநூக்கம் maiya-nūkkam, *n.* <id. +. Centrifugal force; ஒரு பொருளின் மத்தியிலுள்ள அணுக்கள் அப்பொருளின் சுற்றெல்லையை நோக்கிப் போதுஞ் சக்தி. *Mod.*

மையுறிஞ்சி mai-y-uṟiñci, *n.* <மை +. Blotting paper; மையொற்றி. *Mod.*

மொ

மொக்கட்டையீனம் mokkaṭṭai-y-īṉam, *n.* Disrespect; மதிப்புக்கேடு. (யாழ். அக.)

மொச்சம் moccam, *n.* cf. மோசம். Plantain; வாழை. (சங். அக.)

மொசுகுமொசுகெனல் mocuku-mocukeṉal, *n.* Onom. expr. of being resonant; நாதம் நிரம்புதற் குறிப்பு. மொசுகுமொசுகென் றிருக்கிற நாதத்தை யுடைத்தா யிருக்கையாலும் (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 71).

மொசுமொசெனல் mocumoceṉel, *n.* Expr. signifying luxuriant growth; செழித்து வளர்தற்குறிப்பு. மொசுமொசென்று வளர்ந்த பெரிய வடிவும் (திவ். அமலனாதி. 9, வ்யா. பக். 103).

மொட்டூசி moṭṭūci, *n.* <மொட்டு +. Pin; குண்டூசி. *Loc.*

மொட்டைக்கட்டை moṭṭai-k-kaṭṭai, *n.* <மொட்டை +. Nakedness, nudity; அம்மணம். *Tp.*

மொட்டைக்கோதுமை moṭṭai-k-kōtumai, *n.* <id. +. A kind of wheat; கோதுமை வகை. (விவசா. 3.)

மொட்டைத்தனம் moṭṭai-t-taṉam, *n.* <id. +. 1. Shaven condition, as of head; முண்டிதம். *Pond.* 2. Foolishness; அசட்டுத் தனம். *Loc.*

மொட்டைப்பையன் moṭṭai-p-paiyaṉ, *n.* <id. +. Boy of bad conduct; துர்நடத்தை யுள்ள சிறுவன். *Tp.*

மொண்டளியன் moṇṭaḷiyaṉ, *n.* A kind of sea-fish; கடல்மீன்வகை. *Loc.*

மொத்தி motti, *n.* cf. மொத்தை. Dull-witted woman; புத்தியில்லாதவள். *Tp.*

மொதக்கெண்டை motakkeṇṭai, *n.* cf. மதுக்கெண்டை. A kind of *keṇṭai* fish; கெண்டை மீன்வகை. (R.)

மொய் moy, *n.* 1. Beauty; அழகு. மொய்ய கலத்துள் ளிருப்பாள் (திவ். திருநெடுந். 19). 2. Country fig; அத்தி. (சங். அக.)

மொய்ப்பு moyppu, *n.* prob. மொய்-. Crowd, multitude; கூட்டம். *Pond.*

மொயின்சாபிதா moyiṉ-cāpitā, *n.* <மொயின் +. List of revenue establishment; அரசிறை யுத்தியோகஸ்தர் பட்டி. (G. Sm. D. I, i, 283.)

மொழமொழவெனெல் mola-mola-v-enal, *n.* Onom. expr. of being smooth and soft; வழவழப்புக்குறிப்பு. *தரை மொழமொழ வென் றிருக்கிறது. Colloq.*

மொழிக்கறுப்பன் moli-k-karuppan, *n.* A kind of paddy; நெல்வகை. (*விவசா.* 2.)

மொழுக்கட்டை molu-k-kattai, *n.* perh. முழு-மை +. Stout person; தடித்தவ-ன்-ள். *Loc.*

மொழுமன் moluman, *n.* cf. முழுமல். Grain escaping unbroken in the process of grinding; அரைக்கும்போது சிதைவுபடாது விழும் முழுத்தானியம். *Loc.*

மொழுமொழுவெனெல் molu-molu-v-enal, *n.* Expr. of being plump; கொழுத்திருத் தற்குறிப்பு. *மாடு மொழுமொழு வென்றிருக்கிறது.*

மொறமொற-த்தல் moramora-, *11 v. intr.* To be rough or stiff; முறுமுறுப்பாதல்.

மொஹசல் mohacal, *n.* See மோசல்.

மொஹதர்பா mohatarpā, *n.* <மோதரிபா. Tax on profession; தொழில்வரி. (C. G.)

மோ

மோக்கிசம் mōkkicam, *n.* <*mōkṣa.* 1. Liberation; விடுதலை. *முன்னுண்ட வல்வினை பின் னுண்டு வாராமே மோக்கிசமாகவே* (*பாடு.* 121, *ஆண்டார்.*) 2. See மோக்கிழம்.

மோக்கிழம் mōkkilam, *n.* <*mokṣa.* Salvation; மோட்சம். (T. A. S. vi, 49.)

மோகமுத்திரை mōka-muttirai, *n.* prob. *mōha*+. A hand-pose; முத்திரைவகை. (*சைவ. வி.* 17.)

மோகலி mōkali, *n.* <Persn. *mugal.* Mogul; மோகலாயன். (*பிரதாப. விலா. பக்.* 131.)

மோகவர்ணச்சேலை mōkavarṇa-c-cēlai, *n.* prob. மேகவர்ணம்+. A kind of saree; புடைவைவகை. (*பஞ்ச. திருமுக.* 1160.)

மோகன்டால் mōkan-ṭāl, *n.* A kind of confectionery; தித்திப்புப்பண்ட வகை. *Mod.*

மோகனம் mōkanam, *n.* <*mōhanīya.* (Jaina.) A karma; மோகனீயம் என்னுங் கருமம்.

மோசல் mōcal, *n.* <Arab. *mohassil.* 1. Detention; surveillance; தப்பியோடாதபடி இடுங் காவல். 2. Guard in charge of a person under arrest; பிடிபட்டவனைக் காக்குங் காவற்காரன்.

மோசு mōcu, *n.* Tender jack-fruit; பலாப்பிஞ்சு. *Loc.*

மோட்சகாமி mōṭca-kāmi, *n.* <*mōkṣa*+. One who desires liberation; மோட்சத்தை விரும்புபவன். (*ஞானபூசா.* 10, *உரை.*)

மோட்டடைப்பன் mōṭṭaṭaippaṉ, *n.* <மோடு+. A decorated piece of plank, placed on both sides of the ridge of a roof; கூரை முகட்டின் இருபக்கங்களிலும் வைக்கப்படுஞ் சித்திர வேலைப்பாடுடைய பலகையடைப்பு. *Nāñ.*

மோட்டுச்சரம் mōṭṭu-c-caram, *n.* <id.+. Ridge-piece; முகட்டுவளை. *Mad.*

மோதி mōti, *n.* <Hind. *mōdī. Loc.* 1. Stake-holder in a chit fund; சீட்டுநடத்தும் கரைசுவான். 2. Servant in a mosque; பள்ளி வாசலிற் பணிசெய்பவன்.

மோதிரமெடுத்தல் mōtiram-eṭuttal, *n.* <மோதிரம்+. A ceremonial function in a marriage, which consists in the bride and the bridegroom competing in taking out their rings dropped in a pot of turmeric water; விவாகத்தில் மணமகனும் மணமகளும் தத்தம் மோதிரங்களைக் கூறைச்சாலிலுள்ள மஞ்சணீரில் போட்டு ஒருவரை யொருவர் முற்படக் கைவிட்டு அம்மோதிரங்களை யெடுக்குஞ் சடங்கு. *Loc.*

மோதிசூர்லாடு mōticūr-lāṭu, *n.* <Hind. *mōticūr*+. A kind of sweet cake; ஒருவகைப் பணிகாரம். (*இந்துபாக.* 311.)

மோர்சா mōrcā, *n.* <Persn. *mōrcā.* Place constructed to mount cannon; பீரங்கி வைக்கு மிடம். *Pond.*

மோர்வியம் mōrviyam, *n.* A kind of reed-pipe; முகவீணை. *மோர்வியமும் காணியாகக் கொடுத் தோம்* (S. I. I. v, 233).

மோரி mōri, *n.* <Pkt. *mōra* <*mayūra.* Peacock; மயில். *மோரிப்பரித்தம்* (*நீலகேசி,* 1, *உரை*).

மோனம்பாட்டம் mōnam-pāṭṭam, *n.* A tax; வரிவகை. (S. I. I. iv, 106.)

ய

யமனிகைப்புடவை yamanikai-p-puṭavai, *n.* <யமனிகை+. Curtain; இடுதிரை. (S. I. I. v, 307.)

யமுனா yamuṉā, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக. பக்.* 103.)

யா

யாகப்ரிய yākapriya, *n.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

யாத்திரி yāttiri, *n.* <*yātrika*. Traveller; one who goes on voyages; தரைமார்க்கமாகவாவது கடல்மார்க்கமாகவாவது பிரயாணம் செய்பவன். (M. Navi.)

யாத்திரைபோதல் yāttirai-pōtal, *n.* <யாத்திரை+. Ceremonial setting out of the bridegroom as a pilgrim, just before the celebration of the marriage; மணமகன் விவாகச் சடங்கின்முன் பரதேசயாத்திரையாகச் செல்லுகை. *Loc.*

யாதினிக்குல்லி yātinikkulli, *n.* Arrack; சாராயம். (சித். அக.)

யாப்புவழு yāppu-valu, *n.* <யாப்பு+. (Rhet.) A defect in poetic composition; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

யாபேரும் yāpērum, *pron.* Corr. of யாவரும். All; எல்லாரும். *Colloq.*

யாருந்தின்னாமூலி yārun-tinnā-mūli, *n.* <யார்+தின்-+ஆ neg.+. A kind of herb; ஒரு வகை மூலிகை. (மூ. அ.)

யானைக்கத்தளை yānai-k-kattaḷai, *n.* <யானை+. A species of *kattaḷai* fish; கத்தளை மீன்வகை. (W.)

யானைக்கரணம் yānai-k-karaṇam, *n.* <id.+. (Astrol.) The *karaṇam* known as *karacai*; கரசைக்கரணம். சோமவாரமும் திரிதி நாமயோகமும் யானைக்கரணமும்பெற்ற திருவோண நக்ஷத்ரத்து (T. A. S. v, 122).

யானைக்கால்வணக்கிப்பூடு yānai-k-kāl-vaṇakki-p-pūṭu, *n.* <id.+கால்+வணக்கு-+. Cows' thorn; நெருஞ்சில். (மூ. அ.)

யானைப்பந்து yānai-p-pantu, *n.* prob. id. +. A game; விளையாட்டுவகை. (தஞ். சர. i, 529.)

யு

யுக்திமொழி yukti-moḻi, *n.* <*yukti*+. Epigram; கட்டுரை நயம்படக்கூறும் வசனம். *Pond.*

யுக்திவாக்கியம் yukti-vākkiyam, *n.* <id. +. See யுக்திமொழி. *Pond.*

யூ

யூகாட்சரம் yūkāṭcaram, *n.* prob. *ūha*+*akṣara*. Secret language or code; இரகசிய வெழுத்து. *Pond.*

யூதக்கல் yūta-k-kal, *n.* <யூதன்+. Jew-stone; மருந்தாக உபயோகிக்கும் ஒருவகைக் கடற் பண்டம். *Loc.*

யோ

யோகபூசை yōka-pūcai, *n.* <யோகம்+. Contemplation of God Śiva as the Light of Knowledge; சிவபெருமானை அறிவின் ஒளியாகத் தியானிக்கை. உறைந்தோ ரொளியதாக்கி யொடுங் கிடின் யோகபூசை (ஞானபூசா. 14).

யோகம் yōkam, *n.* <*yōga*. (Jaina.) Activity relating to mind, body and word; மனோவாக்குக் காயங்களின் வியாபாரம். (நீலகேசி, 427, உரை.)

யோகாங்குலிநியாயம் yōkāṅkuli-niyāyam, *n.* <*yōga*+*anguli*+. (Log.) A nyāya; நியாயவகை. பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங் குலிநியாயம்போலப் புணரா (பி. வி. 26, உரை, பக். 49).

யோகிதண்டம் yōki-taṇṭam, *n.* <யோகி+. Rattan; பிரம்பு. (மூ. அ.)

யோகினிசாலம் yōkiṉi-cālam, *n.* <*yōginī* +. The magic art of showing the *yōkiṉi*, by worshipping Śakti in the cremation ground; மயானத்திற் சக்தி உபாசனையால் யோகினிகளைக் காண்பிக்கும் வித்தை. (சௌந்த. ஆனந். 30, உரை.)

யோத்திரம் yōttiram, *n.* A medicinal drug; ஒருவகை மருந்துப்பண்டம். (மூ. அ.)

யௌ

யௌவனஸ்தன் yauvaṉa-staṉ, *n.* <*yauvana*+*stha*. Youth; இளவயதினன். (தென். இந். க்ஷேத். பக். 60.)

ர

ரகுப்தி rakupti, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

ரகுப்பிரிய raku-p-piriya, *n.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரங்கம் raṅkam, n. <E. Rangoon; இரங்கோன். Loc.

ரங்குபர்லா raṅkuparlā, n. A game of chance, played with cards; ஒருவகைச் சூதாட்டம். (கலைமகள், No. 54, 531.)

ரங்கூன்மல்லிகை raṅkūṉ-mallikai, n. A kind of jasmine; மல்லிகைவகை. Loc.

ரசசிந்தாமணி raca-cintāmaṇi, n. <ரசம் +. A medicinal preparation; மருந்துவகை. (தஞ். சர. iii, 31.)

ரசதைலம் raca-tailam, n. <id.+. Honey; தேன். (பரி. அக.)

ரசிகப்ரிய racikapriya, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரசிதம் racitam, n. <rajata. Silver; வெள்ளி. ரசிதஞ் சொன்னபாத்திரம் (நீதிசாரம், 6).

ரசிதவேமம் racita-v-ēmam, n. prob. racita+. A medicinal preparation; மருந்து வகை. (தஞ். சர. iii, 43.)

ரஞ்சனி rañcaṉi, n. A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

ரஞ்சான் rañcāṉ, n. <Arab. ramazān. The ninth Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் ஒன்பதாவது மாதம். (பெரியவரு. 28.)

ரணகாளி raṇa-kāḷi, n. <ரணம்+. Bugle; ஊதுகொம்புவகை. (தாசீல்தார்நா. பக். 49.)

ரணவீரி raṇa-vīri, n. A village goddess; ஒருகிராமதேவதை. (பஞ்ச. திருமுக. 671.)

ரத்தபேதி ratta-pēti, n. <ரத்தம்+. Dysentery; வயிற்றுளைச்சல். Loc.

ரத்னாங்கி ratṉāṅki, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரதகாரன் rata-kāraṉ, n. <ratha-kāra. Carpenter, coach-builder; தச்சன். (I. M. P. Tp. 715.)

ரப்பிசானி rappicāṉi, n. <Arab. rabiuth-zānī. The fourth Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் நான்காவது மாதம். (பெரியவரு. 28.)

ரப்பிலவ்வல் rappilavval, n. <Arab. rabiul-awwal. The third Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் மூன்றவது மாதம். (பெரியவரு. 28.)

ரவிசு ravicu, n. cf. rava. Noise; இரைச்சல். ரவிசு பண்ணாதே. Loc.

ரவைசல்லா ravai-callā, n. <ரவை+. A kind of cloth; துணிவகை. ரவைசல்லா தான்முடி நலமாகக் கொண்டுவந்தார் (கோவ. க. 37).

ரஜப் rajap, n. <Arab. rajab. The seventh Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் ஏழாவது மாதம். (பெரியவரு. 28.)

ரக்ஷணம் rakṣaṇam, n. <rakṣaṇa. Protection; பாதுகாப்பு.

ரா

ராக்கடை rākkaṭai, n. <ராக்கடி. A head-ornament, worn by women; ராக்கடி. (தாசீல்தார்நா. பக். 40.)

ராக்கினி rākkiṉi, n. <rajñī. Queen; இராணி. விக்டோரிமகா ராக்கினியார் மெச்சுநரபாலன் (பஞ்ச. திருமுக. 56).

ராகவர்த்தனி rāka-varttaṉi, n. <rāga+. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ராசமம் rācamam, n. (பரி. அக.) 1. Thorny plant; முள்ளி. 2. cf. இராசயுகம். Silvery leaved apeflower; பாலை.

ராசவாணன் rāca-vāṇaṉ, n. <rajan+. A kind of paddy; நெல்வகை. மாராசவாண னென்றும் வாள்சுருணை வாலன் (நெல்விடு. 189, 190).

ராசாங்கம் rācāṅkam, n. <rājāṅga. Kingship; அரசு. ராசாங்கத்திலமர்ந்தது வைதிக சைவம் (தாயு. ஆகார. 10).

ராசிபாளையன்பணம் rācipāḷaiyaṉ-paṇam, n. A coin; நாணயவகை. (M. E. R. 225 of 1927-8.)

ராசிபொன் rāci-poṉ, n. prob. ராசி+. A coin; நாணயவகை. (M. E. R. 303 of 1924.)

ராசிரோசன்குளிகை rācirōcaṉkuḷikai, n. A coin; நாணயவகை. (M. E. R. 15 of 1924-c.)

ராப்பு rāppu, n. Safety; பந்தோபஸ்து. வீடு அவாந்தரையாயிருக்கிறது; ராப்பில்லை. Madr.

ராமதுவாதசி rāma-tuvātaci, n. <rāma +. The dvādaśi tithi of the bright fortnight of the lunar month Jyēṣṭā; ஜ்யேஷ்ட மாதத்து சுக்கிலபட்சத்துத் துவாதசி. (பஞ்.)

ராமபாணம் rāma-pāṇam, n. <id.+. A kind of paddy; நெல்வகை. சீராம பாணமென்றும் சீர்த்தி படைத்ததல்லால் (நெல்விடு. 190).

ராமளி rāmaḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

ராயில் rāyil, *n.* Bastion; கொத்தளம். *Pond.*

ராஜக்கட்டி rāja-k-kaṭṭi, *n.* <ராஜன்+. Carbuncle; ராஜபிளவை. (மதி. க. i, 190.)

ராஜகீயம் rājakīyam, *n.*<*rājakīya*. Good government; நல்லாட்சி. இப்போது ஒட்டர்க்குக் காலமின்றியே ராஜகீயமாய் (S. I. I. iv, 140).

ராஜகோபாலசக்கரம் rājakōpāla-cakkaram, *n.* A gold coin; பொன்னுணயவகை. (M. E. R. 14, 15 of 1920-21-A.)

ராஜமுதலிகள் rāja-mutalikaḷ, *n.* <*rājan* +. Ministers and chieftains; தலைமை யதிகாரிகள். ராஜாக்கள் விட்டும் ராஜமுதலிகள் பொன்னிட்டும் (S. I. I. vi, 28).

ராஜராஜன்காசு rājarājaṉ-kācu, *n.* A coin; நாணயவகை. (I. M. P. Tj. 862.)

ராஜராஜன்பழங்காசு rājarājaṉ-paḻaṅ-kācu, *n.* See ராஜராஜன்காசு. (I. M. P. Tp. 106.)

ராஜன் rājaṉ, *n.* <*rājan*. King; அரசன்.

ராஜஸ்வம் rāja-svam, *n.*<id.+. King's property; அரசனுடைய சொத்து. (Colas, ii, 425.)

ரி

ரிங்கின்கயிறு riṅkiṉ-kayiṟu, *n.* <E. *rigging*+. Rigging; கப்பல்களின் பாய்களை விரிக்கவுஞ் சுருக்கவும் உதவுங் கயிறு. (M. Navi.)

ரிஷபதீபம் riṣapa-tīpam, *n.* <*ṛṣabha*+. A kind of temple lamp; கோயில்தீபவகை. (தமிழ்விடு. முகவுரை, பக். 12.)

ரிஷபதேவர் riṣapa-tēvar, *n.* <id.+. The holy bull Nanti; நந்திதேவர். (M. E. R. 215 of 1924.)

ரிஷபப்ரிய riṣapa-priya, *n.* prob. id.+. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரிஷபவாகனதேவர் riṣapa-vākaṉa-tēvar, *n.* <id.+*vahana*+. 1. Śiva, as riding a bull; சிவபெருமான். 2. See ரிஷபதேவர். (M. E. R. 182 of 1925.)

ரு

ருசரகம் rucarakam, *n.* Nitrogen; நீர்ஜீவ மூலம் என்னும் இலவண வாயு. (விவசா. ரசா. 8.)

ருத்திரகணப்பெருமக்கள் ruttira-kaṇa-p-perumakkaḷ, *n.* <*Rudra*+. A class of Śaiva devotees; ஒருசார் சிவனடியார். (I. M. P. S.A. 762.)

ருத்திரம் ruttiram, *n.* Wiry indigo; சிவனார்வேம்பு. (பரி. அக.)

ரூ

ரூபபரிணமம் rūpa-pariṇāmam, *n.*<*rūpa* +. Metamorphosis; உருமாற்றம். *Mod.*

ரூபாவதி rūpāvati, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரூபி-த்தல் rūpi-, *11 v. tr.*<*rūpa*. To state metaphorically; to metaphorize; உருவகப்படுத்துதல். மேகத்தை ஆனையினுடைய ஸ்தானேயாகவும் . . . . ரூபித்துக்கொண் டருளிச்செய்கிறார் (திவ். பெரியாழ். 3, 5, 4, வ்யா. பக். 638).

ரெ

ரெபம் repam, *n.* cf. இரம்பிலம். Black pepper; மிளகு. (பரி. அக.)

ரே

ரேகை rēkai, *n.* A coin; நாணயவகை. (I. M. P. S.A. 115.)

ரேணு rēṇu, *n.* <*rēṇu*. Dust; பொடி.

ரோ

ரோகநிதானசாஸ்திரம் rōka-nitāṉa-cāstiram, *n.* <*rōga*+. Pathology; ரோகத்தின் தன்மையை உணர்த்துஞ் சாஸ்திரம். *Mod.*

ரோசாம்பரம் rōcāmparam, *n.* A flowering plant; பூச்செடிவகை. *Madr.*

ரௌ

ரௌத்திரி rauttiri, *n.* <*raudrī*. A śakti, one of *nava-catti;* நவசத்தியு ளொன்று. (அபி. சிந்.)

ல

லங்காடி laṅkāṭi, *n.* <Arab. *laṅgar*. Rake; கெட்டநடத்தையுடையவன். அவன் வெறும் லங்காடி. *Loc.*

லதாங்கி latāṅki, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

லந்தர் lantar, *n.* <E. Lantern; விளக்கு. தகர லந்தர்க் கடைமுதலாய் (பஞ்ச. திருமுக. 1192).

லம்பாடி lampāṭi, *n.* Quarrelsome woman; வம்புக்காரி. *Colloq.*

லயம் layam, *n.* <*laya.* Entire absence; சிறிதுமின்மை. *போதகம் என்னிடம் லயமே (சர்வ சமய. பக்.* 8).

லவ்வோலவ்வோவெனல் lavvō-lavvō-v-eṉal, *n.* cf. லபோலபோவெனல். Expr. of beating one's mouth with palm of hand, in sorrow; துயரத்தால் வாயிலடித்துக்கொள்ளுதற் குறிப்பு. *யாசகத்துக்கோடியலைந்து லவ்வோலவ்வோ வென்று* (பஞ்ச. திருமுக. 233).

லவணசாரம் lavaṇa-cāram, *n.* <*lavaṇa* +. Chlorine; மூலரசாயனப்பண்டவகை. *Mod.*

லவாஜமா lavājamā, *n.* Bag and baggage; மூட்டைமுடிச்சு. (P. T. L.)

லவுரான் lavurāṉ, *n.* Shrouds in a sail; கப்பற்பாய் மரங்களில் உச்சியிலிருந்து அடிவரைக்கும் நேராய்க் கட்டப்படுங் கயிறுகள். (M. Navi.)

லக்ஷணக்காரன் lakṣaṇa-k-kāraṉ, *n.* <லக்ஷணம்+. 1. Grammarian; இலக்கணம் வல்லவன். 2. One who is expert in *cāmuttirikā-cāttiram;* சாமுத்திரிகா சாத்திரம் வல்லவன். (*தமிழறி.* 13.)

லக்ஷணம் lakṣaṇam, *n.* <*lakṣaṇa.* Deed; சாசனப்பத்திரம். *இப்படி லக்ஷணம் பண்ணிக் குடுத்து லக்ஷணப்படி கல்வெட்டுவித்தோம்* (S. I. I. viii, 15).

லக்ஷார்ச்சனை lakṣārccaṉai, *n.* <*lakṣa*+. Worship by performing *sahasranāmārccaṉai*, a hundred times; நூறுமுறை ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்கை.

லக்ஷி-த்தல் lakṣi-, *11 v. tr.* Corr. of ரக்ஷி-. To protect; இரட்சித்தல். (*தஞ். சர.* ii, 207.)

லக்ஷியலக்ஷணபாவசம்பந்தம் lakṣiya-lakṣaṇa-pāva-campantam, *n.* <*lakṣya*+. One of *campanta-t-tirayam;* சம்பந்தத்திரயங்களு ளொன்று. (*வேதாந்தசா.* 79.)

லா

லாகரி lākari, *n.* prob. *lahari.* Blissful experience; ஆனந்தானுபவம். *பரமானந்த லாகரியைக் கொடுக்கிறதாயும்* (*வேதாந்தசா. பக்.* 85).

லாண்டோ lāṇṭō, *n.* <E. Landau; மேற் கூட்டைத் திறந்துமூட வசதியுள்ள வண்டிவகை. *Pond.*

லி

லிங்காவட்டம் liṅkāvaṭṭam, *n.* Rib-piece, as in a shed; வரிச்சல். *Madr.*

லிபி-த்தல் lipi-, *11 v. tr. & intr.* <*lipi.* To write; எழுதுதல். *வம்பு லிபித்தானயன்* (*சங்கர. அந்தாதி.* 11.)

லு

லுச்சா luccā, *n.* <Hind. *luccā.* That which is vulgar or obscene; ஆபாசமானது. *இன்னம் எனுமக்கு லுச்சாப் பேச்சிது* (*தாசில்தார்நா. பக்.* 70).

லெ

லெச்சம் leccam, *n.* <*lakṣa.* Lakh; லக்ஷம். (*சிவக். பிரபந். சரபேந்.* 59.)

லே

லேபம் lēpam, *n.* <*lēpa.* Smearing; லேபனம். *கடித்தவாயில் . . . லேபஞ் செய்தாலும்* (*தஞ். சர.* iii, 103).

லோ

லோகாயதிகன் lōkāyatikaṉ, *n.* <*lōkāyata.* (Phil.) Materialist. See உலோகாயதன். (*சமி, முதல் ஸ்ரீய: பதி, அவ. பக்.* 51.)

லோகோக்தி lōkōkti, *n.* <*lōkōkti.* Popular saying; பழமொழி. *உன்செவியில் புண்ணைக் குறிக்கொண்டிரு என்றிறே லோகோக்தியும்* (*திவ். பெரியாழ்.* 2, 3, 1, *வ்யா. பக்.* 275).

லௌ

லௌத்துவம் lauttuvam, *n.* <*laghu-tva.* Disgrace; அவமானம். *லௌத்துவஞ் சேருமன்றே* (*நீதிசாரம்,* 65).

வ

வக்கட்டை vakkaṭṭai, *n.* Lean animal; மெலிந்த பிராணி. *Loc.*

வக்கிரகண்டி vakkira-kaṇṭi, *n.* <*vakra*+ *kaṇṭha.* Vessel with a long neck, used in distilling; still; திராவகம் வடிக்க வுதவும் நீண்ட கழுத்துள்ள பாத்திரம். *Pond.*

வகுப்பு vakkuppu, *n.* <வகு-. Class; பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைத் தரந்தரமாகப் பிரிக்

தும் பிரிவு. ஒரே வகுப்பி லாங்குக் கலைபயின்றோ மல்லவா (பஞ்ச. திருமுக. 432).

வகுளாபரணம் vakuḷāparaṇam, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 47.)

வகைகாரன் vakai-kāraṉ, *n.* <வகை+. Clever man; கெட்டிக்காரன். நீயாமெம் வித்தை வெகு மாயவித்தை கண்டாய் வகைகாரா (நெல்விடு. 240).

வகைப்பேறு vakai-p-pēṟu, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. vi, 29.)

வகையறு-த்தல் vakai-y-aṟu-, *v. tr.* <id. To settle, as a dispute; வழக்குத்தீர்த்தல். எங்களில் நாங்கள் பொருந்தி வகையறுத்துக் கொண்டோம் (S. I. I. viii, 156).

வங்கக்களங்கம் vaṅka-k-kaḷaṅkam, *n.* <வங்கம்+. A medicinal preparation; மருந்து வகை. (தஞ். சர. iii, 79.)

வங்கணம் vaṅkaṇam, *n.* Propriety; தகுதி. எனை ஆதரித்தல் வங்கணமே (சர்வசமய. பக். 67.)

வங்குல் vaṅkul, *n.* Spleen tree; மரவகை. (L.)

வங்கை vaṅkai, *n.* Mischief; சேஷ்டை. சங்கையில்லாமலே வங்கைகள் செய்தாரே (கனம் கிருஷ்ணையர், கீர்த். 40).

வச்சளம் vaccaḷam, *n.* <*vatsala.* Affection, as towards a child; வாற்சல்யம்.

வசக்கு-தல் vacakku-, *5 v. tr.* <வயக்கு-. To improve, as land; நிலத்தைத் திருத்துதல். கட்டை பறிச்சு வசக்கி (S. I. I. v, 307).

வசநீக்கம் vaca-nīkkam, *n.* <வசம்+. Dispossession; கைவசமிருந்ததை நீக்குகை. *Pond.*

வசம்புவாசா vacampuvācā, *n.* Pepper; மிளகு. (வை. மூ.)

வசமொழிக்கை vacam-oḻikkai, *n.* <வசம் + ஒழி-. See வசநீக்கம். *Pond.*

வசைவு vacaivu, *n.* Fault; blemish; குற்றம். (திவ். பெரியாழ். 3, 4, 2, வ்யா. பக். 594.)

வட்டக்கோரை vaṭṭa-k-kōrai, *n.* prob. வட்டம்+. A kind of grass; புல்வகை. (நாநார்த்த. 128.)

வட்டச்சக்கரம் vaṭṭa-c-cakkaram, *n.* <வட்டம்+. (Poet.) A kind of metrical composition; சித்திரக் கவிவகை. (யாப். வி. பக். 497.)

வட்டச்சொச்சவியாபாரம் vaṭṭa-c-cocca-viyāpāram, *n.* <id.+சொச்சம்+. Money-changer's trade; நாணயமாற்று முதலிய தொழில். *Pond.*

வட்டம்போர் vaṭṭam-pōr, *n.* <வட்டு+. Dice-play; சூதுபோர். (தொல். எழுத். 418, இளம்பூ.)

வட்டமணியம் vaṭṭa-maṇiyam, *n.* <வட்டம்+. The office of revenue collection in a division; வட்டத்துஊர்களில் வரிவசூலிக்கும் வேலை. (R. T.)

வட்டை vaṭṭai, *n.* 1. Field; வயல். (J. N.) 2. Large tract of forest; பெருங்காடு. *Loc.* 3. Direction; திக்கு. எட்டுவட்டையிலும் வந்தார்கள். *Loc.*

வடகாவிசேர் vaṭa-kāvi-cēr, *n.* prob. Hind. *baḍā*+. Main top-sail; வடகாவிமரத்திற் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடகாவிடஸ்தூர் vaṭa-kāvi-ṭastūr, *n.* <id.+. Main top mast studding sail; வடகாவி மரத்திலிருக்கும் டஸ்தூர். (M. Navi.)

வடகாவிமரம் vaṭa-kāvi-maram, *n.* <id. +. Main-top mast; வடமரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பகுதி. (M. Navi.)

வடசவர்சவாய் vaṭa-cavar-cavāy, *n.* <id.+. Main-top-gallant stay; வடசவர் மரத்திற்கு முற்பக்கத்தில் ஆதாரமாகக்கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

வடசவர்சேர் vaṭa-cavar-cēr, *n.* <id.+. Maintop-gallant-sail; வடசவர் மரத்தில் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடசவர்டஸ்தூர் vaṭa-cavar-ṭastūr, *n.* <id +. Main top-gallant studding sail; வடசவர் மரத்திலிருக்கும் டஸ்தூர். (M. Navi.)

வடசவர்பறுவான் vaṭa-cavar-paṟuvāṉ, *n.* <id.+. Main-top-gallant yard; வடசவர் மரத்தின் குறுக்கே போடப்படும் பறுவான். (M. Navi.)

வடசவர்பிராந்தல் vaṭa-cavar-pirāntal, *n.* <id.+. See வடசவர்பெற்பறோடி. (M. Navi.)

வடசவர்பெற்பறோடி vaṭa-cavar-peṟpa-rōṭi, *n.* <id.+. Main top-gallant backstays; வடசவர் மரத்திற்குப் பக்க ஆதாரமாய்க் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

வடசவர்மரம் vaṭa-cavar-maram, *n.* <id. +. Main-top-gallant mast; வடமரத்திலுள்ள காவிமரத்துக்கு மேலுள்ள பகுதி. (M. Navi.)

வடசவர்லவுரான் vaṭa-cavar-lavurāṉ, *n.* <id.+. Main-top-gallant shrouds; வட

சவர்மரத்துக்கு ஆதாரமாகக்கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

வடசேடி vaṭa-cēṭi, *n.* <வடக்கு+. The northern range of the mythical silver mountain; வெள்ளிமலையின் வடசாரி. (தக்கயாகப். 371.)

வடசேர் vaṭa-cēr, *n.* prob. Hind. *baḍā* +E. *sail.* Main sail; கப்பலின் வடமரத்தில் விரிக்கப்படும் பாய். (M. Navi.)

வடடவர்சேர் vaṭa-ṭavar-cēr, *n.* <id.+ E. *tower*+. Main royal sail; வடடவர் மரத்திற் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடடவர்மரம் vaṭa-ṭavar-maram, *n.*<id. +id.+. Main royal mast; வடமரத்தின் உச்சிப் பாகம். (M. Navi.)

வடதுருவசக்கரம் vaṭa-turuva-cakkaram, *n.* <வடக்கு+துருவம்+. Arctic circle; பூமியின் வடகோடியிலுள்ள குளிர்ச்சியான மண்டலத்தை வரையறுக்குஞ் சுற்றுரேகை. (M. Navi.)

வடமரம் vaṭa-maram, *n.* prob. Hind. *baḍā*+. Main mast; கப்பலின் நடுவிலிருக்கும் பாய்மரம். (M. Navi.)

வடும்பு vaṭumpu, *n.* Tie-beam; சாத்துமரங்களின் குறுக்கே போடுங் கழி. *Loc.*

வண்டாளை vaṇṭāḷai, *n.* A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

வண்ணக்கன் vaṇṇakkaṉ, *n.* Manager; காரிய நிர்வாகி. *Loc.*

வண்ணாத்தி vaṇṇātti, *n.* Myna; நாகணவாய்ப்புள். *Pond.*

வண்ணாரம் vaṇṇāram, *n.* <*varṇakāra.* Work of a dhoby or washerman; வண்ணான் தொழில். வண்ணாரந்தன்னா மச்சிகமே (நீலகேசி, 280.)

வண்ணானைக்கும்பிட்டார் vaṇṇāṉai-k-kumpiṭṭār, *n.* <வண்ணான்+. St. Cēramāṉ-perumāḷ; சேரமான்பெருமாணயனூர். ஆண்டார் வண்ணானைக்கும்பிட்டார் எழுந்தருளி (S. I. I. vii, 321).

வணக்குமார் vaṇakkumār, *n.* perh. வண்ணக்கர். Temple accountant; கோயில் மணியகாரர். (I. N.)

வணை-த்தல் vaṇai-, *11 v. tr.* To pour, as water from a pot; தண்ணீர் ஊற்றுதல். *Rd.*

வத்தா vattā, *n.* Barber; நாவிதன். வத்தாவொருகத்தியினாலே வைக்கின்ற மயிர்ச்சிகையன்று (பாடு. 76, சிகை. 1).

வத்திநயினி vattinayiṉi, *n.* Fainting, delirium; மயக்கம். (சித். அக.)

வத்திரதாரு vattiratāru, *n.* Roselle; செம்புளிச்சை. (பச். மூ.)

வத்துபேதம் vattu-pētam, *n.* <வத்து+. (Jaina.) Doctrine which affirms both existence and non-existence; அஸ்திநாஸ்திவாதம். வத்து பேதங் கூறுமொழாத குழக்கன்றினுக்கு (நீலகேசி, 403).

வத்தைச்சீட்டு vattai-c-cīṭṭu, *n.* <வத்தை +. Bill of lading; கப்பலில் ஏற்றவாவது கரையில் இறக்கவாவது வத்தையில் போடப்படுஞ் சரக்கோடு கொடுத்தனுப்புஞ் சீட்டு. (M. Navi.)

வந்தரியர் vantariyar, *n.* Fem. of வந்தரர். A class of goddesses, inhabiting the heaven; மேலுலகத்திலுள்ள வியந்திர ஸ்திரீகள். சுந்தரியர் வந்தரியர் (மேருமந். 1032).

வமிசாட்டவணை vamicāṭṭavaṇai, *n.* <வமிசம்+. Genealogy; வமிசாவளி. *Pond.*

வய-த்தல் vaya-, *12 v. tr.* cf. *vaśa.* To wish for; to desire; விரும்புதல். வயந்தே யுமக்காட் செய்து (தேவா. 946, 7).

வயற்சூலம் vayaṟ-cūlam, *n.* <வயல்+. (Astrol.) *Nakṣatras,* which are inauspicious for tilling; உழவுக்காகாத நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 178.)

வயிரப்படையோன் vayira-p-paṭaiyōṉ, *n.* <வயிரம்+. Indra, as the wielder of thunderbolt; இந்திரன். வயிரப்படையோன் முதலமரர் (காசிக. தேவர்கள் அகப். 10).

வயிரவுருக்கு vayira-v-urukku, *n.* <id. +. That which melts or dissolves diamond; வைரத்தை உருக்கக்கூடிய பொருள். வயிரவுருக்கானது அரக்கையுருக்கச் சொல்லவேணுமோ (திவ். திருநெடுந். 22, வ்யா. பக். 205).

வயிறுவாழ்-தல் vayiṟu-vāḻ-, *v. intr.* <வயிறு+. 1. To have enough of food; வேண்டும் உணவு உடையவனாதல். ஸ்வக்ருஹத்தில் ஜீவநமற்று வயிறுவாழாமல் செய்கிறானன்றே (திவ். பெரியாழ். 2, 9, 3, வ்யா. பக். 457). 2. To make a living; உயிர்வாழ்தல். *Loc.*

வர்ணம் varṇam, *n.* <*varṇa.* Degree of fineness, as of gold; மாற்று. கைங்கர்யைகப்ரயோஜனராயிருக்குமவர்களுடைய பரமைகாந்தித்வம் ஷோடசவர்ணஸ்வர்ணத்தோடொக்கும் (ரஹஸ்ய. 846).

வர்த்தகம் varttakam, *n.*<*vardhaka.* That which increases or promotes; விருத்திசெய்வது. இது ஆயுள் வர்த்தகம்.

வர்த்தகன் varttakaṉ, *n.* <*vardhaka.* Promoter; one who helps to increase or promote; விருத்தியாக்குவோன். உத்பக்ஷையான பக்திக்கு வர்த்தகர் ஆர் (ஈடு, முதல் ஸ்ரீய:பதி, அவ. பக். 94).

வர்த்திப்பு varttippu, *n.* <வர்த்தி-. Increase; பெருக்கம். *Pond.*

வரக்கூலி vara-k-kūli, *n.* <வா-+. Hire or rent for carrying paddy, etc.; நெல் முதலியன எடுத்து வருவதற்குள்ள வண்டிச்சத்தம். (S. I. I. viii, 5.)

வரத்து varattu, *n.* <id. 1. Genealogy; lineage; வமிசாவளி. ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது (திவ். அமலனாதி. 1, வ்யா. பக். 24). 2. Chirping of lizard indicating the arrival of guests; விருந்து வரவைக் குறிக்கும் பல்லிச்சொல். (கௌளி சா. 2.) 3. Order; உத்திரவு. நிலநிவந்தஞ்செய்ய வரத்துத் தருகவென்ன (S. I. I. vii, 482).

வரம்பழிதரிசு varampaḻi-taricu, *n.* <வரம்பு+அழி-+. Waste land; பாழ்நிலம். (Pudu. Insc. 224.)

வரவுசெலவு varavu-celavu, *n.* <வரவு+. *Colloq.* 1. Income and expenditure; வருமான முஞ் செலவும். 2. Ledger entry; பேரேட்டிற் செய்யும் பதிவு.

வரவோலை varavōlai, *n.* <id.+. Letter of invitation; அழைப்புக் கடிதம். வரவேண்டு மென்று சொல்லி வரவோலை அனுப்புவித்தார் (கோ வை. க. 17).

வராகசம்மாரர் varāka-cammārar, *n.* <வராகம்+. A manifestation of Śiva; சிவபெருமானது மூர்த்தங்களு ளொன்று. (காஞ்சிப். சிவபுண். 31.)

வராகபணம் varāka-paṇam, *n.* <id.+. A coin; நாணயவகை. (S. I. I. viii, 87.)

வராகமுத்திரை varāka-muttirai, *n.* <id.+. A hand-pose, in worship; கரமுத்திரை வகை. (சைவாநு. வி. 18.)

வராகன்புள்ளிக்குளிகை varākaṉ-puḷḷi-k-kuḷikai, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (M. E. R. 1922-23, p. 114.)

வராங்கம் varāṅkam, *n.* perh. *varāṅga.* The body of a celestial being; வானவரின் சரீரம். (R.)

வராணி varāṇi, *n.* Wedge-leaved ape-flower; பாலை. (வை. மூ.)

வரி vari, *n.* (Pros.) A kind of musical composition, pertaining to dance; கூத்திற்குரிய வெண்டுறைப்பாட்டு ளொருவகை. (யாப். வி. பக். 538.)

வரிக்கற்றாழை vari-k-kaṟṟāḻai, *n.* <வரி+. A kind of aloe; கற்றாழைவகை. (சித். அக.)

வரிக்கற்றை vari-k-kaṟṟai, *n.* prob. id.+. Bundle of straw, etc., suitable for roofing; கூரை வேய்தற்குதவும் புற்கற்றை முதலியன. வரிக் கற்றை இடுமடத்து (S. I. I. vi, 29).

வரிக்காம்பு vari-k-kāmpu, *n.* <id.+. Pile of harvested tobacco plants; அறுத்த புகையிலைச் செடியின் அடுக்கு. *Tinn.*

வரிக்காய் vari-k-kāy, *n.* <வரி+. cf. வரிக் கடுக்காய். A species of chebulic myrobalan; கடுக்காய்வகை. (M. M.)

வரிக்குமரி vari-k-kumari, *n.* <id.+. See வரிக்கற்றாழை. (சங். அக.)

வரிசை varicai, *n.* Cultivator's share of produce; பயிர்விளைவில் உழவனுக்குரிய பங்கு. வரி சைக்கு உழும் (நேமிநா. சொல். 17, உரை).

வரிசையார் varicaiyār, *n.* prob. வரிசை. Elder brother's wife; அண்ணன் மனைவி. *Loc.*

வரிவளை vari-vaḷai, *n.* <வரி+. A kind of bangles; வளையல்வகை. கோல்வளை கழல்வளை வரிவளை யென்னுமாபோலே (திவ். பெரியாழ். 3, 4, 8, வ்யா. பக். 618).

வரீக்கு varīkku, *n.* (Mus.) A kind of grace in music; இசைக்கமகவகை. (பூர். சங். எ.)

வருக்கை varukkai, *n.* A kind of fish; மீன்வகை. திருக்கை வருக்கை (குருகூர்ப். 7).

வருணப்பிரியை varuṇappiriyai, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

வருத்தமானம் varuttamāṉam, *n.* A mathematical treatise, not now extant; இறந்து பட்ட ஒரு கணிதநூல். (யாப். வி. பக். 528.)

வருவு-தல் varuvu-, 5 *v. tr.* perh. வகுவு-. To open, as one's mouth; திறத்தல். கப்பியமே யென்று வாய் வருவுதலின் (நீலகேசி, 375, உரை).

வரைக்கெண்டை varai-k-keṇṭai, *n.* <வரை+. Carp; கெண்டைமீன்வகை. (நாநார்த்த.)

வல்லவன் vallavaṉ, *n.* <*vallabha.* The Western Caḷukya king; மேலைச்சளுக்கிய அரசன். (Insc.)

வல்லூரி vallūri, *n.* Pig; பன்றி. (சங். அக.)

வல்லை vallai, *n.* (பச். மூ.) 1. Battle of Plassey tree; புனமுருங்கை. 2. Palas-tree; முருக்கு.

வலங்கையிடங்கைமகன்மை valaṅkai-y-iṭaṅkai-makaṉmai, *n.* <வலங்கை+. An ancient tax; பழையவரிவகை. (S. I. I. v, 365.)

வலசை[1] valacai, *n.* Hamlet; உட்கிடைக் கிராமம். *Loc.*

வலசை[2] valacai, *n.* cf. வரிச்சல். Lath; வரிச்சல். மூங்கில் வலசைகள் 25 விழுக்காடு சுமை கட்டி (மதி. க. ii, 173).

வலஞ்சியர் valañciyar, *n.* prob. *vaṇij.* The Vaiśya community; வைசியர். (M. E. R. 505 of 1922.)

வலம் valam, *n.* perh. *vara.* That which is excellent; சிரேஷ்டம். வணக்கொடு மாள்வது வலமே (திவ். திருவாய். 1, 3, 8).

வலவன் valavaṉ, *n.* <வலம். Person on the right side; வலப்பக்கத்துள்ளவன். *Loc.*

வலவன்பாடி valavaṉ-pāṭi, *n.* <வலவன் +. *Tinn.* 1. One who accompanies the singer playing the *vil* in *villuppāṭṭu*, sitting on his right side; வில்லுப்பாட்டில் விசுகோற்காரனுக்கு வலப் பக்கத்திலிருந்து பாடுபவன். 2. Sycophant; ஒத்துப் பாடுவோன்.

வலவாய்வாங்கு-தல் vala-vāy-vāṅku-, *v. tr.* <வலம்+வாய்+. To break with spade the portion of the field near its ridge where ploughing is not feasible; வயல் வரப்பினருகில் உழமுடியாது கிடக்கும் இடத்தை மண்வெட்டியால் வெட்டி உழவு பதமாக்குதல். *Nāñ.*

வலிச்சம் valiccam, *n.* prob. வலி-. Grimace; வலிப்புக்காட்டுகை. *Loc.*

வலுக்கொள்(ளு)-தல் valu-k-koḷ-, *v. tr.* <வலு+. To take forcibly; பலாத்காரமாக எடுத்துக்கொள்ளுதல். நிலத்தை வலுக்கொண்டு (சரவண. பணவிடு. 184).

வழக்காடி vaḻakkāṭi, *n.* perh. விளக்கு+. Lighthouse; விளக்குக்கூடு. *Pond.*

வழக்காரம் vaḻakkāram, *n.* <வழக்கு. Dispute; சச்சரவு. மணவாளப் பிள்ளையுடன் வழக் காரம் நன்றுச்சே (வள்ளி. கதை. Ms.)

வழக்குமுறி vaḻakku-muṟi, *n.* <வழக்கு+. Complaint; பிராது. (M. E. R. 257 of 27, p. 117.)

வழங்கு-தல் vaḻaṅku-, 5 *v. intr.* To frequent; நடமாடுதல். *Loc.*

வழிகாட்டி vaḻi-kāṭṭi, *n.* <வழி+. Directory; பொதுமக்களுக்கு வேண்டிய வியாபாரம் தொழில் முதலியவற்றையும் முக்கியஸ்தர்களைப்பற்றி யும் விவரமாகத் தெரிவிக்கும் நூல். *Pond.*

வழிச்சந்தி vaḻi-c-canti, *n.* <id.+. Junction of roads; தெருக்கள் கூடுமிடம். *Pond.*

வழிச்செவ்வை vaḻi-c-cevvai, *n.* <id.+. Road; சாலை. போகிற வழிச்செவ்வைகளில் (S. I. I. v, 138).

வழிசொல்(லு)-தல் vaḻi-col-, *v. intr.* <id.+. To make arrangements, as for payment of debts; வகைசெய்தல். கடனுக்கு வழி சொன்னாற் கைச்சாத முண்டேன் (கோவ. க. 52).

வழித்திருடன் vaḻi-t-tiruṭaṉ, *n.* <id.+. Highway robber; வழிப்பறி செய்பவன். *Pond.*

வழிநடைக்கிடும்பணம் vaḻinaṭai-k-k-iṭum-paṇam, *n.* <வழிநடை+இடு-+. Road cess; வரிவகை. (S. I. I. vii, 47.)

வழிப்பணி vaḻi-p-paṇi, *n.* <வழி+. Laying and repairing roads, being the labour of a person sentenced to rigorous imprisonment; கடுங்காவல் தண்டனையாகக் குற்றவாளிக்கு விதிக்கப் படும் பாதை செப்பனிடுகை முதலிய வேலை. *Nāñ.*

வழிபாடுசெய்-தல் vaḻipāṭu-cey-, *v. intr.* <வழிபாடு+. To serve a great person, guessing his wishes; கருத்தறிந்து அடிமை செய்தல். (திவ். திருப்பள்ளி. 5, வ்யா. பக். 31.)

வழிமொழி vaḻi-moḻi, *n.* <வழி+. (Rhet.) A figure of speech; அணிவகை. (யாப். வி. பக். 511.)

வழு vaḻu, *n.* Dirt or mucus, as on the body of a calf just yeaned; கன்று முதலானவை பிறக்கும்போது காணப்படுஞ் சவ்வு முதலியன. வழு நுகர்ந்தாதரவொடு கன்றுகள் (நூற்றெட்டு. திருப்பு. 67).

வழுக்கைப்பயல் vaḻukkai-p-payal, *n.* <வழுக்கை+. Young boy; சிறுவன். *Tinn.*

வழுத்தரவு vaḻu-t-taravu, *n.* <வழு+தரு-. Decline, fall; வழுவிவீழ்கை. ப்ரபாதஸமயத்து உதிதனுகிய ஆதித்யனுக்கு அஸ்தமயம்போல ஆயு ரவஸானகாலத்து வழுத்தரவு ஸகல தேவர்கட்கும் ஸாதாரணமேயாகும் (ஸ்ரீபுராணம், Ms).

வழுது vaḻutu, *n.* cf. பழுதை. Stubble; அரிதாள். *Pond.*

வழுமெனல் vaḻum-eṉal, *n.* Onom. expr. of (a) smoothness; வழவழப்புக் குறிப்பு;

(b) being silent and secretive; தெரிந்துந் தெரியாதவன்போல் அடக்கமாயிருத்தற் குறிப்பு.

வளக்குவெல்லி valakkuvelli, *n.* A plant; பூடுவகை. (தெய்வச். விறலிவிடு. 405.)

வளகு valaku, *n.* <வளம். Fertility; செழிப்பு. *வளகுபெறு பண்பைத் திருமலையும்* (இலஞ்சி. முருகனுலா, 133).

வளர்த்து-தல் valarttu-, *5 v. tr.* To stretch as a thing, on the ground; கிடத்துதல். *தயிலத்தோணி வளர்த்துமினென்னச் சொன்ஞன்* (கம்பரா. உயுத்த. இராவணன்சோகப். 61).

வளரிக்கை valarikkai, *n.* <வளர்-. Talkativeness; வளர்த்துப் பேசுகை. *வளரிக்கையாலே வம்பிலே போகுதென் வாணுள்* (வள்ளி. கதை. Ms.).

வளைக்காச்சுமணி valai-k-kāccu-mani, *n.* <வளை+. A kind of bead; சங்குமணி. (சிவரக. அபுத்தி. 5.)

வளைப்புக்கிட-த்தல் valaippu-k-kita-, *v. tr.* <வளைப்பு+. 1. To besiege; to pester a person by surrounding him and not allowing him to escape; வெளியில் தப்பவிடாது சூழ்ந்துகொள்ளுதல். (திவ். பெருமாள்தி. 9, 2, வ்யா. பக். 126.) 2. To lie down, vowing not to get up unless one's request is granted; to sit dharna; பழிகிடத்தல். *ஸ்ரீபரதாழ்வானை வளைப்புக்கிடக்கவிட்டுப் போந்து கடற்கரையிலே வளைப்புக்கிடந்தாற்போலே* (திவ். அமலனுதி. 3, வ்யா.).

வளைமணிவடம் valai-mani-vatam, *n.* <வளை+. A string of beads; அக்குவடம். *திருவரையிற் சாத்தின வளைமணிவடமானது* (திவ். பெரியாழ். 1, 7, 8, வ்யா. பக். 150).

வளையல் valaiyal, *n.* <வளை-. Fetters; கைவிலங்கு. (T. C. M. ii, 2, 531.)

வற்கெனவு varkenavu, *n.* prob. வன்-மை. Beauty; அழகு. *ஸ்வர்ணம் என்னும் வஸ்துவில் வற்கெனவும் வசஞ்செய்தலு முதலாயின அனுவிருத்த ஸ்வபாவம்* (நீலகேசி, 380, உரை).

வற்பனை varpanai, *n.* A species of ragi; கேழ்வரகுவகை. (விவசா. 3.)

வறட்கணம் varat-kanam, *n.* <வறள்+ A kind of wasting disease; கணைநோய்வகை. (பாலவா. 41.)

வறட்சேதம் varat-cētam, *n.* <id.+. Loss to growing crops on account of drought; மழையின்மையால் பயிர் விளையாமை. (P. T. L.)

வன்பா-தல் vanpā-, *11 v. intr.* <வன்பு+. To become hard; கடினமாதல். *வன்பாயிருப்பது பிறிதில்லை* (குறள், 1063, மணக்.).

வன்பாட்டம் van-pāttam, *n.* <வன்-மை+. Fixed rent in kind due under a lease-deed which does not provide for any relief against loss due to drought; தீய்வு கரிவு காலத்திலும் குறையாமல் அளக்கவேண்டிய குத்தகை நெல். *பதினுறுகலனே தூணியாக வன்பாட்டம் அளக்கவும்* (S. I. I. v, 90.)

வன்மி vanmi, *n.* <வன்மம். Spiteful person; துவேஷபுத்தியுள்ளவன். *காயிபாசெனுமோர் வன்மி* (இரக்ஷணிய. பக். 51).

வன்னசாஸ்திரம் vanna-cāstiram, *n.* <வன்னம்+. Science relating to colours; வர்ணங்களைப்பற்றிய சாஸ்திரம். *Pond.*

வன்னிசிகரம் vanni-cikaram, *n.* <வன்னி +. Cock's-comb; சாவற்சூட்டுப்பண்ணை. *Pond.*

வனசம் vanacam, *n.* <*panasa.* Jack tree; பலா. *வனசக் கனியொ டர்தண் வாழையே* (அலங்காரச்சிந்து, 12).

வனப்பு vanappu, *n.* (Mus.) A tune; இசைவகை. *பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பெனும் வண்ணவிசை* (பெரியபு. ஆனாய. 28).

வனப்புள் vana-p-pul, *n.* prob. வனம்+. Shepherd koel; சாதகபட்சி. (வள்ளசத்தியஞான. 25.)

வனமுருங்கை vana-murunkai, *n.* <id. +. Wild Indian horse-radish; காட்டுமுருங்கை. (நாநார்த்த.)

வனஸ்பதி vanaspati, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

வனைகோல் vanai-kōl, *n.* <வனை-+. Painter's brush; படந்தீட்டுங் கருவி. *செம்பொற் படாமும் வனைகோலும் வாங்கினுள் நம்பி வடிவெழுத* (அழகியநம்பியுலா, 147).

வஸ்துகிருத்தியம் vastu-kiruttiyam, *n.* <*vastu*+. Building work; கட்டடவேலை. *வஸ்துகிருத்தியம் எப்பேர்ப்பட்டதும்* (T. A. S. iii, 216).

வா

வாக்கின் vākkin, *n.* <E. Wagon; பண்டங்களேற்றும் ரயில்வண்டி. *Mod.*

வாக்கு vākku, *n.* Manner, nature; விதம். *என் இன்னும் ஒருவாக்காயிருக்கிறுய்* (பிரதாப. விலா. 105).

வாக்குநிச்சயம் vākku-niccayam, *n.* <வாக்கு+. Ceremonial confirmation of marriage agreement; நிச்சயதாம்பூலம். *Loc.*

வாகதீஸ்வரி vākatīsvari, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

வாகனக்கவி vākaṉa-k-kavi, *n.* <வாகனம் +. Stanza eulogising the *vākaṉam* carried during temple festivals; கோயில் திருவிழாக்களில் மூர்த்தி எழுந்தருளும் வாகனத்தின் சிறப்பைப் பற்றிப் பாடுஞ் செய்யுள். (மீனாட். சரித். i, 125.)

வாகனமாலை vākaṉa-mālai, *n.* <id.+. See வாகனக்கவி. (மாறனலங். முகவுரை. 22.)

வாகுப்தார் vākup-tār, *n.* prob. Arab. *waqf* +. Person in possession; அனுபோகஸ்தன். *Madr.*

வாங்கு vāṅku, *n.* <Hind. *bāṅk.* Billhook; அரிவாள். கைகளில் வாங்கு பிடித்திருக்கின்றனர் (எங்களூர், 32).

வாசகப்பா vācaka-p-pā, *n.* <வாசகம்+. Comedy; கேலிநாடகம். *Pond.*

வாசகப்பாங்கு vācaka-p-pāṅku, *n.* <id. +. Good style; நல்ல உரைநடை. திருத்தமான வாசகப்பாங்காயும் (மாலுமிசா. முகவுரை).

வாசமாற்றம் vāca-māṟṟam, *n.* <வாசம் +. Emigration; புறநாட்டிற் குடியேறுகை. *Pond.*

வாசல்காரியம் vācal-kāriyam, *n.* <வாசல் +. Officer who carries out royal orders; அரசன் ஆணையை நிறைவேற்றும் உத்தியோகஸ்தன். (M. E. R. 33 of 1928-9.)

வாசல்நிர்வாகம் vācal-nirvākam, *n.* <id. +. See வாசல்காரியம். திருநெல்வேலி வாசல் நிர்வாகம் . . . தொழிற்படுத்தி (தெய்வச். விறலிவிடு. 77).

வாசல்பணம் vācal-paṇam, *n.* <id.+. An ancient tax; பழையவரிவகை. வாசல்பணம் உள்பட்ட கடமை (S. I. I. i, 93).

வாசல்முதலி vācal-mutali, *n.* <id.+. See வாசல்காரியம். (M. E. R. 293 of 1928-9.)

வாசவுப்பு vāca-v-uppu, *n.* <வாசம்+. Rock-salt; கல்லுப்பு. (சித். அக.)

வாசனைவாக்கியம் vācaṉai-vākkiyam, *n.* <வாசனை+. Benediction; வாழ்த்து. வல்லோர் வகுத்த வாசனைவாக்கியம் பல்லோர் பகர (பெருங். உஞ்சைக். 34, 27).

வாசாப்பு vācāppu, *n.* See வாசகப்பா. *Pond.*

வாசியோகம் vāci-yōkam, *n.* prob. வாசி +. A kind of *yōga;* யோகவகை. மூலக்கனலை வாசியோகத்தா லெழுப்பி (கோபாலகிருஷ்ணபாரதி, 95).

வாசிலிங்கரு vāciliṅkaru, *n.* Stem of a plant; தண்டு. (மூ. அ.)

வாசுகி vācuki, *n.* Seed; விந்து. (மூ. அ.)

வாட்டி vāṭṭi, *n.* The bull at the farthest end from the pole in the centre of the threshing-floor in treading corn; களமடிக்குங் கடைசிப் பிணையல்மாடு. *Loc.*

வாடகம் vāṭakam, *n.* <*bhāṭa.* Rent; வாடகை. *Loc.*

வாடாவிளக்கு vāṭā-viḷakku, *n.* <வாடு-+ ஆ neg.+. Perpetually burning lamp; நந்தா விளக்கு. *Tinn.*

வாணம் vāṇam, *n.* cf. வானம். Excavation for laying foundation; கடைகால். *Tinn.*

வாணன் vāṇaṉ, *n.* A kind of paddy; நெல்வகை. மலைமுண்டன் வாணன் (நெல்விடு. 186).

வாணி[1]-த்தல் vāṇi-, 11 *v. tr.* <பாணி-. To form, make; அமைத்தல். மன்னுதிரு வெண் மணலை வாணித்து (இலஞ்சி. முருகனுலா, 37).

வாணி[2] vāṇi, *n.* Flesh of the head of cattle, etc.; ஆடு மாடுகளின் தலைமாமிசம். (மூ. அ.)

வாதமடக்கி vāta-maṭakki, *n.* <வாதம்+. Windkiller, l. sh., *Clerodendron phlomoides;* மரவகை. (L.)

வாதுகவி vātu-kavi, *n.* <வாது+. Verses of poets competing in a literary contest; பந்தய மீட்டுப் புலவர்கள் பாடுங் கவி. திருமலைராயன் முன் சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரும் (ஆராய்ச். பக். 327).

வாதுபாட்டு vātu-pāṭṭu, *n.* <id.+. Song set for competition; போட்டிப் பரீட்சையில் பாடும் இசைப்பாட்டு.

வாமனூல் vāmaṉūl, *n.* <வாமன்+. The Buddhist works; பௌத்தநூல். வாமனூலின் மறைபொருளல்லவோ (நீலகேசி, 244).

வாய்க்கடைப்புகையிலை vāy-k-kaṭai-p-pukaiyilai, *n.* <வாய்+கடை+. Quid; வாயிலே மென்று அடக்கிக்கொள்ளும் புகையிலை யுருண்டை. *Pond.*

வாய்க்காற்சடைச்சி vāykkāṟ-caṭaicci, *n.* <வாய்க்கால்+. Malabar catamint; வெதுப்படக்கி. (சங். அக.)

வாய்க்கிலை vāy-k-k-ilai, *n.* <வாய்+. Betel leaf; வெற்றிலை. (சரவண. பணவிடு. 304.)

வாய்க்குடுமி vāy-k-kuṭumi, n. <id.+. Beard; தாடி. Colloq.

வாய்க்கேட்பார் vāy-k-kēṭpār, n. <id.+. Personal secretary, as to a king; அரசன் முதலியோரது வாய்மொழிகேட்டுக் காரியம் நிர்வகிக்கும் அதிகாரிகள். (S. I. I. ii, 353.)

வாய்கூசுதல் vāy-kūcutal, n. <id.+. Being ashamed to use indecent words; தீச்சொற்கள் பேசுவதில் அருவருப்புக் கொள்ளுகை. Colloq.

வாய்ச்சேதி vāy-c-cēti, n. <id.+செய்தி. 1. Casual mention; பேச்சுவாக்கு. நாடியதை வாய்ச்சேதியா யுரைக்க வாயெடுக்கு முந்தி (பஞ்ச. திருமுக. 1198). 2. Oral communication; ஆள் மூலமாகச் சொல்லியனுப்புஞ் செய்தி.

வாய்ப்பொருத்து vāy-p-poruttu, n. <id.+. Joint, as of two planks; மூட்டுவாய். கதவின் வாய்ப்பொருத்து விலகிவிட்டது.

